www.tamilarangam.net

# சக்தி

மே 97

8



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Poobalasingham Book Depot

**Book - Sellers, Stationers, News Agents, Publishers**
**Importers & Exporters**

Trust Complex,
340, Sea Street,
Colombo 11
*Phone : 422321, 337313*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


*இணை ஆசிரியர்கள்:*
பரராஸ் வாரித்தம்பி
அன்ரனி பால்ராஜ்

*உதவி ஆசிரியர்:*
சிவ. வரதராஜன்


*முகப்போவியம்:*
வாசுகி ஜெய்சங்கர்
சசி. மகரிஷி
சிவ. வரதராஜன்
நன்றியுடன்
எம். கே. ஹுசைன்
அ. மாற்கு
அருந்ததி சபாநாதன்

*கணணி அச்சுக்கோர்ப்பு:*
முபா. ஹமீட் – ஜெமீல்.
ஜன்னா, பிரதான வீதி,
மருதமுனை.

*முன்னட்டை பதிப்பு:*
யுனி ஆர்ட்ஸ்

*அச்சுப்பதிப்பு:*
இளம்பிறை ஓப்செற்,
மருதமுனை.

*வெளியீட்டாளர்:*
களம் ஃபவுண்டேஷன்
சார்பாக
திருமதி. வி. சிவயோகம்.


***கவிதைகள் 16***
சோலைக்கிளி
மருதமுனை எம்.விஜிலி
துளசி
ஜெயசீலன்
கல்லூரன்
சு. வில்வரெத்தினம்
மஜீத்
என். சண்முகலிங்கன்
சி. ஜெய்சங்கர்
வாசுதேவன்
கொற்றவை
ஆகர்ஷியா
ஆழியான்

***கட்டுரைகள் 7***
கா. சிவபாலன்
கே.எஸ். சிவகுமாரன்
சி. ஜெய்சங்கர்
அருந்ததி சபாநாதன்
கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்
சி. சிவசேகரம்
பாலசுகுமார்

***சிறுகதைகள் 3***
சிவ. வரதராஜன்
மு.பொ.
ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

***குறுநாவல் 1***
சண்முகம் சிவலிங்கம்

***மற்றும்***
உங்கள் குரல்
கிறுக்கல்
எனது பக்கம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உங்கள் தாகம்

களம் 7 வலு கலாதியாக வாய்த்திருக்கின்றது. "மண்வாசனையோடு எழுதுவது எனக்குப் பிடித்தமில்லை" என்று அடித்துக் கூறும் வ. அ. வின் சங்கிலி கதையில் மண்வாசனை பொலிகிறது.

அன்ரனிபால்ராஜ் யார் ஐயா! அவரின் ஒவ்வொரு பந்தியும் - ஒரு மிதிவெடியின் அதிர்வளவு அதிர்ச்சியை ஊட்டுகின்றது. குஞ்சு மேனனும் தமிழ் நாட்டு ஜென்டில் மேன்களும் பலே! பலே!!, தமிழ் மக்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா?

இவன் நம்மட வாசுதேவன் வாழ்வு பற்றி அப்படியொரு கவிதை எழுதிப்போட்டானே! இந்த ரமழான் மாதத்தின் தாகத்தோடு அவன் கவிதை படித்த தாகமும் இணைந்து எனக்கு மாயத்தாகம் ஏற்பட்டு விட்டது. வாசுதேவன் தொடர்ந்து தாகம் தருவானா?

களம்; மூன்றாவது மனிதன் இரண்டும் நமது இரு கண்கள் போல் பாதுகாப்போம்! பயப்படவேண்டாம்.

மெய்தான் இக்பால் இவ்வளவு விடயங்களை - இத்தனை வருடங்களாக ஞாபகப்பட்டறையில் புதைத்து வைத்திருக்கின்றாரே! அவரைத் தொடரச் சொல்லுங்கள். கிழக்கிலங்கை இலக்கிய வரலாறாகவும் அவரின் நினைவுகள் மலரட்டும். நம் போன்றவர்களுக்கு அது அறு சுவை.

ஓட்டமாவடி — **எஸ். எல். எம். ஹனீபா**

இனிமேல் களம் எனக்கு அனுப்ப வேண்டாம், அனுப்ப வேண்டாம். உங்களுடைய பத்திரிகையில் உள்ள விடையங்கள் யாருக்காக? உங்கள் பத்திரிகையில் வெளிவரும் கவிதைகளின் அர்த்தம் என்ன? "கவிதை" என்னவென்றாவது புரியுமா? வாயில் வந்தபடி கிறுக்குவதெல்லாம் கவிதைதானா? சிந்தித்துச் செயல்படுங்கள்.

திருமலை வீதி, மட்டக்களப்பு — **ச. பிறான்சிஸ்**
**இளைப்பாறிய அதிபர்**

சரஸ்வதி, கலைவாணி, கலைச்செல்வி, தமிழ் முரசு, மரகதம், மாணிக்கம் சுடர், களனி, அஞ்சலி என அக்காலச் சிற்றேடுகளின் தரத்தைவிடவும், களம் பலபடி உயர்வுதான். எனினும் காலத்திற்கேற்ப , நேரிடையான கருத்துக்களும் உடனே வாசகர்களுக்குச் சட்டென முகம் பார்ப்பது போல் விளங்கக்கூடிய கலை இலக்கியப் படைப்புக்களே இப்போ ரசனையூட்டுகின்றன.

மருதமுனை — **எஸ். எல். ஏ. லத்திப்**

களத்தின் 7வது இதழில் பல நல்ல படைப்பாளிகளது ஆக்கங்கள் வந்துள்ளமை குறித்து மகிழ்ச்சி. தொடர்ந்து வருவனவற்றின் தரம் பற்றிய நம்பிக்கைக்குக் களம் 7 இடமளிக்கிறது.

மு. பொன்னம்பலத்தின் விமர்சனம் தொடர்பாகச் சிறிது எழுத வேண்டுகிறேன். என்னுடைய கவிதைகளின் தரம் பற்றி எவரது மதிப்பீடும் அவரது அளவுகோல்களின்பாற்பட்டது. மு. பொ. கொஞ்சம் பரிவாகவே எழுதியுள்ளார் என எண்ணுகிறேன். கவிதைகளில் நுண்ணுணர்வும் ஆதமார்த்தத் தளமும் பற்றிய அவரது பார்வை எனது பார்வையினின்று வேறுபட்டது. கவிதை வாசிப்பின் விளைவானவை, என்றே நினைக்கிறேன். ஐம்பதுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட இலக்கிய எழுச்சிகள் உரிய காலகட்டங்களில் ஏற்பட்ட சமுதாய விழிப்புணர்வு இலக்கியம் பற்றிய பார்வை, போராட்டத்திற்கான தேவை போன்ற பல காரணங்களின் விளைவானவை. எண்பதுகள் காட்டிய பாய்ச்சல் ஏன் அதே வேகத்தில் தொடரவில்லை, என்ற கேள்வி முக்கியமானது. தொண்ணூறுகளின் சமுதாய நெருக்கடியினின்று எழுதுகிற பல கவிதைகளில் விரக்தியும் துயர உணர்வும் மிகுதி. போராட்ட உணர்வுள்ள கவிதைகள் இன்றும் வருகின்றன. ஆயினும் எண்பதுகளின் நடுப்பிற் பகுதிகளில் வந்தவற்றுடன் ஒப்பிடத்தக்க நிசமான உணர்வு இல்லை எனலாம். எனவே , கேள்விகட்கான விடைகளைக் கவிஞர்கட்குட் தேடாமற் சமுதாயச் சூழலுக்குட் தேடுவது கூடிய பயன் தரும்.

போரின் முகங்களின் இறுதிப் பகுதி உட்படச் சில கவிதைகள் அவசரகதியில் எழுதப்பட்டுச் செப்பனிட்ட தன்மையை இழந்து நிற்பதாக மு. பொ. கூறுவது பற்றிச் சொல்வதற்கு விரும்பவில்லை. ஆயினும் அவர் காணுகிற இக்குறைபாடு அவை பற்றி விமர்சித்த நண்பர் ஒருவர் கவிதைகள் மொழிபெயர்ப்புக் கவிதைகளை நினைவூட்டுவதாகக் கூறியதை நியாயப்படுத்தவும், அவரால் பயன் படுத்தப்பட்டுள்ளது. அந்த நண்பர் (மதுசூதனன்) கூட்டத்தில் என் முன்னிலையிற் கூறிய அக்கருத்தைப், பின்னர் நேரிற் கண்டபோது, தயவு செய்து ஒரு சில உதாரணங்கள் தந்து விளக்கும்படி கேட்ட போது எதையுமே கூற முடியாது தடுமாறினார்.

தமிழாக்கங்களையே நான் இப்போது இரண்டு கட்டங்களிற் செய்கிறேன. முதலில் நேரடியாக மொழிபெயர்க்கிறேன். பின்பு அதைத் தமிழ் மொழி நடைக்கேற்றவாறு சீர்படுத்துகிறேன். கவிதைகள் என எதையுமே நான் ஆங்கிலத்தில் எழுதியதில்லை. என் ஆங்கிலப்புலமை வெகு சராசரியானது. எவ்வாறாயினும் அயற் கவிதைகளுடனான பரிச்சயம் ஒவ்வொருவரதும் செய்யுள் நடைமீது ஏதோவகையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆயினும் இதுகூட மொழிபெயர்ப்புத் தன்மையைக் காட்டுவதற்கு நியாயமில்லை. மொட்டையாகக் கருத்துக்களைக் கூறுவதைவிட, எவ்வளவு கடுமையாகவேனும் அவற்றை ஆதாரங்களுடன் முன்வைப்பது படைப்போர்க்கும் படிப்போர்க்கும் பயன்தரும்.

மதுசூதனன் தனது மடலில் யாரோ சுயபரிசீலனை ஒன்றை மேற்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார். ஏனோ யாரென்று கூறத் தவறிவிட்டார். விமர்சனத்துறையில் நாம் பாரிய சாதனைகளைச் செய்தவர்கள் போல ஒரு ஐதிகம் கட்டமைக்கப்பட்டுள்ளதாகவும் அது சற்று உடைத்துப் பார்க்க வேண்டியது எனவும் அவர் கூறுகிறார். விமர்சனத் துறையைப் பொறுத்தவரை , ஈழத்து முற்போக்கு விமர்சகர்கள் தமிழகத்தினரைவிட அதிகம் பங்கெடுத்துள்ளனர் , என்பதை நான் நினைவூட்ட அவசியமில்லை. இன்றுங்கூட கட்டமைத்தல் கட்டுடைத்தல், மறுவாசிப்பு, மறுகண்டுபிடிப்பு, மீள்கட்டமைப்பு, நூல் பிரதி என்றெல்லாம் தமிழ் நாட்டில் ஜல்லியடித்துக்கொண்டிருக்கிறார்கள். விமர்சனமும் ஆக்க இலக்கியமும் வெறுமனே சாதனைகள் பற்றியவை அல்ல. அவை சமூகத்தையும் அதில் மனிதரது இருப்பையும் விளக்கிக்கொள்வது பற்றியன. இந்த வகையிலே ஈழத்தின் முற்போக்கு இலக்கிய இயக்கம் (தயவுசெய்து இதை எந்தச் சங்கத்துடனும் குழப்ப வேண்டாம்) 1970 களுடாகவும் பங்களித்துள்ளது.

சிறு பத்திரிகைகள் பற்றிக் கருதும் போது, ஈழத்துச் சஞ்சிகை உலகின் பெருவாரியான ஏடுகள் (மல்லிகை, சிரித்திரன் உட்பட) தமிழகத்தின் சிறு சஞ்சிகைகளிற் தரமான பலவற்றையே ஒத்தவையாக இருந்தன. 1950கள் வரை இருந்த ஈழத்து இலக்கியத் துறையுடன் அதற்குப் பின் உருவானதை ஒப்பிட்டால் ஈழத்தின் விமர்சனத்துறையினதும் சஞ்சிகைகளதும் பங்களிப்பின் பெறுமதியை உணரலாம். இன்று ஏற்பட்டுள்ள ஒரு தேக்கத்தின் காரணங்களை அறிய, 1970 களிலிருந்து எழுச்சி பெற்ற சில சிந்தனைப் போக்குகளை அறிவது ஒருவேளை உதவலாம்.

*சி. சிவசேகரம்* — *இலண்டன்*

www.tamilarangam.net

களம் -7 கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. வாசகர் தம் விமர்சனங்களும் அவற்றை ஒட்டிய புதிய வடிவமைப்பும் விலை குறைப்பும் நன்று. ஆக்கங்கள் செறிவானவை.

அன்ரனிபால்ராஜின் கிறுக்கலில் ஒரு சிறு திருத்தக் கிறுக்கல்.

நவமணி'யில் ஆசிரியராக திரு. கே. எஸ். சிவகுமாரன் அவர்கள் இப்போது இல்லை.

வடக்கில் ஓடும் மண்ணெண்ணெய் மோட்டார் இயந்திரங்களை பெற்றோல் துளி விட்டு ஸ்ராா்ட் செய்வது போல இது யதார்த்தம்.

**கிருளப்பனை** **மாலவை வரோதயன் -**

...ஒரு முழுமையான சமூக அக்கறையுள்ள படைப்புக்களைத் தாங்கி வரும் இதழ், அதன் வரலாற்றுப் பணியாக , அது வெளிவரும் சம காலத்திலுள்ள கூர்மையான சமூக முரண்பாட்டைப் பிரதிபலிக்கும்போது , எதிர் கொள்ள வேண்டிய தடைகள் இன்னும் மிகையானவையே. .......

"தமிழ்க் கலைகளின் தன்மை தொடர்பாக" என்னும் சிவசேகரத்தின் கட்டுரை ஒரு ஆரோக்கியமான விவாதத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன். என்னைப் பொறுத்தவரை சில கருத்துக்களோடு உடன்பாடு இருந்த போதிலும் பார்ப்பனீயத்தோடு சமரசம் செய்து கொள்ளும் , போக்கிலேயே எழுதியுள்ளார். அவர் சொல்வது போல எல்லாமே தமிழிலிருந்துதான் வந்தது என்று பெருமைப்படுவது தமிழின் வளர்ச்சிக்குச் செய்யும் பெரும் துரோகம். அதேபோல் தமிழிலிருந்து களவாடிய இசையே கர்நாடக இசை என்னும் ஆதாரபூர்வமான உண்மையை மறைப்பதும் துரோகம்தான்.

தெலுங்குப் பார்ப்பாளரான தியாகராயர் தமிழகத்திலே வாழ்ந்தாலும், தமிழிசையைக் களவாடி அவர் தனது தாய் மொழிப்பற்றோடு தெலுங்கிலேதான் எழுதி வைத்துள்ளார் என்பது வரலாறு. தனது வாழ்நாளில் ஒரேயொரு தடவை திருப்பதிக்குப் போய் வந்ததாகவும், அதைத் தவிர தெலுங்கு நாட்டிற்கே சென்றதில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஆதிக்க சக்திகளால் சிதைக்கப்பட்ட, உழைக்கும் மக்களுக்கான தமிழிசையை வளர்த்தெடுக்க சகல ஆதிக்க சக்திகளை நாம் சூட்சுமமாக இனங்காண்பதிலேயே தங்கியுள்ளது.

தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னன் தியாகராயரைத் தனது அவையிலே பாடும்படி கேட்டபோது, எந்த மன்னனின் அவையிலும் நான் பாடமாட்டேன். எனது இசை ராமனுக்கு மட்டுமே அடிமை என்று கூறிவிட்டு ஒரு பாட்டெழுதினாராம். "நிதி சால சுகமா ராமா நீ சன்னதி சேவ சுகமா" அதிகமாகப் பணம் கிடைப்பது சுகமா ராமா?, உன்னுடைய சன்னதியில் சேவை செய்வது சுகமா?, என்பது தமிழ்ப் பொருள். இதே பார்ப்பனீயங்கள் தங்களுக்கு வசதியாக இதை மறந்துவிட்டு . சிந்து பைரவியில் இளையராஜா ஒரு பாட்டுக்கு ராகத்தை மாற்றிவிட்டார். என்பதற்காக, தியாகராயர் ஒரு பாட்டுக்கு ஒரு ராகம் என்று வரையறுத்துள்ளார். இளையராஜா தான்தோன்றித் தனமாக மாற்றுகின்றார் என்று போர்க்கொடி உயர்த்தினார்கள் என்றால் தமிழிசையை யாரிடமிருந்து மீட்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வது சிரமமல்ல. கர்நாடக இசைக்குத் தமிழிலே பாட்டெழுதுவதால் தீர்ந்து விடக்கூடிய பிரச்சினையல்ல இது. கர்நாடக சங்கீதமும் இன்று ஒரு முட்டுச் சந்தியில் நிற்கின்றது.

**பிரான்ஸ்** **தேவா.**

"அக்கரைப்பற்று - கல்முனை பிரதேச தமிழ் , முஸ்லிம் கலாசார உறவை வலுப்படுத்தும் களமாக 'களம்' அமைவுறவேண்டும்......." என்னும் ஜெயபாலனின் வேண்டுகோள் ஆத்மசுத்தமானது.

அ. ஸ. அப்துள்ஸமது அவர்களை பெரியவர் என்று கண்ணியப்படுத்தி எழுதியிருந்தார், மற்றுமொரு பெரியவரான ஜெயபாலன் அவர்கள். ஒரு கிளிக்குஞ்சு களத்தின் முகவரிக்கு எழுதிய கடிதத்தில்.... ' அ. ஸ. வையும், சசியையும் நண்பர்கள் என்று தோளில் கைபோட்டதோடு , தேய்ந்த எழுத்துக்கள் என்றும் எழுதி தம் விசாலம் இல்லாத விலாசத்தை விலாசப்படுத்தி இருந்தது. அ. ஸ. பேனா தூக்கிய காலத்தில் இந்தக் குஞ்சுவின் கருகூட கருப்பையில் கருக்கட்டி இருக்காது. நரிவாலெடுத்து கடல் ஆழம்பார்க்க முனையும் இந்தக் குருத்துக்களது கூற்றுக்கெல்லாம் 'களம்' களமமைத்துக் கொடுப்பது நல்லதா என்பதைப் பரிசிலிக்க வேண்டி இருக்கிறது. தமது வெளியீட்டில் இடம் கொடுத்துவிட்டு இன்னொருவரது இதழில் இடம் கொடுக்க வேண்டாம் என்று எழுத இந்தத் தேய்பிறைகளுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது.

வ. அ. இராசரத்தினம் எழுதிய 'சங்கிலி' சிறுகதை என்னைக் கவர்ந்தது. கிறிஸ்துவுக்குமுன் - கிறிஸ்துவுக்குப்பின்' என்பதைப்போல 'குழப்பத்திற்குமுன், குழப்பத்திற்குப்பின்' என்ற கால ஓட்டத்துக்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குழப்பத்திற்கு முன்னும் - பின்னுமாக ஒரு விவசாயி பெறும் அனுபவிப்புக்களையும், அவலங்களையும் பின்னல் செய்து மிக அழகாக (கே. எஸ். சிவகுமாரனின் கருத்துப்படி) களிப்பூட்டல் செய்திருக்கிறார் வ. அ.

காலத்தின் தேவை கருதி 'ஊழி' சிறுகதையைப் பிரசுரித்தமைக்கு நன்றி. நாமும் ஊழிக் காலத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கதையில் வரும் 'ஜாஹாீர்பக்ஷி' பாத்திரம் எனக்கு இங்கே, நெல்லை, க. பேரன், காவலூர் ஜெகநாதன், பாண்டியூரான், வி. ஆனந்தன் முதலானோரை ஞாபகப்படுத்திற்று. ஈழத்தின் ஊழியில் உயிரைப் பறிகொடுத்த கலைவாதிகள் இவர்கள்.

வி. ஆனந்தனின் மட்டக்களப்பில் நவீன கவிதை கட்டுரையை வாசிக்க அவர் பேசுவதைப் போலிருந்தது எனக்கு. அவர் பத்திரிகைகளில் எழுதியதைவிட அரங்குகளில் பேசியவைதான் அநேகம்.

கே. எஸ். சிவகுமாரன் சொல்லும் 'களிப்பூட்டல்' அருவருக்கத்தக்க ஒன்றல்ல. கருத்துக் கனதியானது.

கவிஞர் ஏ. இக்பாலின் 'மலரும் நினைவுகள்' நிறைவைத் தந்தது. இக்பாலின் மலரும் நினைவுகளில் வரும் சாடல்களும், குத்தல்களும் நாகரிகமானவை.

'புதிய பாய்ச்சல்' என்பது, கோழி முட்டையை உடைத்துக் கொண்டு குஞ்சு வெளிவருவதைப்போல், தனது பழைய உருவ, உள்ளடக்கங்களை உடைத்துக் கொண்டு புதுத்தளத்துக்கு ஏறுவதாகும். என்று கூறுகிறார் மு. பொ. அப்படி உடைத்துக்கொண்டு ஏறிய புதுத்தளக்காரர் யார் என்பதை நாம் இனிமேல்தான் இனம் காண வேண்டுமா? அல்லது இனம் காணப்பட்டுள்ளனரா? அதையும் நமது மு. பொ. தான் சொல்ல வேண்டும். ஏனெனில் பூனைக்கு மணி கட்டும் பொறுப்பை, பணியை நிறைவேற்றியவர் அவர்தானே. (சரிபார்க்க)

'அன்ரனிபால்ராஜ்' இன் 'கிறுக்கல்' அலாதியானவை. வேறு சஞ்சிகைகளில் வாசித்த 'கிறுக்கல்' களை விட, இவரது கிறுக்கல்கள் விசயமுள்ளவை. கிறுக்கல் வளரட்டும்.

சண்முகம் சிவலிங்கம் அவர்களுடைய "உள்வெளி" - கவிதை நினைவில் நிற்கிறது. காரணம் வாசிப்பு பல முறைகள் நிகழ்ந்திருக்கிறது. 'இருண்மை' கவிதைகள் என்று சொல்வது இப்படித்தான் இருக்குமோ?

பாரதியின் சகாப்தம் முடிவடைந்து விட்டது. இது மகாகவி ருத்ரமூர்த்தியின் சகாப்தம் என்று, எழுதியவர் சண்முகம் சிவலிங்கம். "மகாகவி"யும் இப்படி இருண்மை 'க்குள் இடரவில்லையல்லவா? அப்படியானால் இது யாருடைய யுகம்?

எஸ். ஜெயசங்கரின் - "தெற்கில் வெற்றி ஆரவாரம் செய்தார்கள். உங்களிடம் இனிய வார்த்தை பேசினாலும் , அவர்களை நம்பாதீர்! - இனிய வார்த்தைகளுடன் வாட்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன" - கவிதைவரிகளும் எச். எம். பாறூக்கின் "தெற்கிலிருந்து வடக்கே எங்கே இந்த சமாதான ஒற்றுமை கடைசி வண்ணாத்தியின் கையில் ஒரு நெருப்புக்குச்சி இருந்ததைக் காணவில்லையா என்றார்." - என்ற வரிகளிலும் புலப்படும் ஒற்றுமையையும் உண்மையையும் உற்றுணர்ந்து பார்த்தேன். சங்கரும், பாறூக்கும் ஒருவரை ஒருவர் காலம் தாழ்த்தி இருந்தால், அவரை இவர் பற்றினார் என்றல்லவா நமது இலக்கிய உலகம் ஒப்பாரி வைத்திருக்கும்.

வ. ஜ. ச. ஜெயபாலன் - இந்தப் பெயரை எங்காவது பிரசுரங்களில் பார்த்தால் "யாழ் முஸ்லிம்களின் வெளியேற்றம், தமிழ், முஸ்லிம் உறவின் அவசியம், அகதிகளின் அல்லல்" இவைகளில் எதையாவது ஒன்றைப் பற்றி எழுதியிருப்பார். என்ற மனப்பதிவு வாசகர்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

களத்தில்' சோலைக்கிளியின் பெயரும் ஊத்தைக் குளிப்பெண் பாப்பாவாகி வந்துள்ளது. "மூக்குப்பீ, மூக்குச்சளி, பீ, சூத்தாம்பிட்டி, பீச்சும்பு, பனங்கொட்டை, பாம்பு, நரம்பு, ஓணான், உடும்பு, பல்லி, நாய், பேய்" இப்படிச் சொற்களை ஒரு 'டப்பா' வில் போட்டுக் குலுக்கி வரிசைப்படுத்தினால் 'சோலைக்கிளி'க்கும் கவிதை பிறந்து விட்டது. அதை விளங்கினால் அவர் கவிதை ஆற்றலுள்ள, அறிவுள்ள வாசகர், விளங்காவிட்டால் கவிதை ஆற்றலை, அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டிய வாசகர்.

**ஒலுவில்** **அன்புடீன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களம் அருமையாக வந்திருக்கின்றது. உறவினர் ஒருவர் இந்திய சஞ்சிகை என்று பார்த்த மாத்திரத்திலேயே மதிப்பிட்டார். அவர் மதிப்பீடு பொதுவானது. இந்தியத் தரத்தோடு இப்பொழுது ஒப்பிடவேண்டியது அவசியமில்லை , என்று கருதுகின்றேன். அவர் மதிப்பிட்டது பார்வைத் தரத்தையே. பண்புத் தரம்தான் ஒரு சஞ்சிகையின் முக்கியம். இங்கு இரண்டு வகையான தரங்களும் இயன்றளவு பேண முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை நோக்குகையில் உளமாரப் பாராட்ட விரும்புகின்றேன். ஏனைய எல்லாவகையான சஞ்சிகைகளிலிருந்தும் களத்தை வேறுபடுத்தும் தனித்துவ அம்சங்கள் யாவை? இந்தத் தனித்துவத் தரத்தையும் இரண்டு வகையாக நோக்கலாம். 1) அமைப்புத் தனித்துவம்.
2) உள்ளடக்கத் தனித்துவம்.

இந்த வகையில் இரண்டொரு ஆக்கங்கள் இந்தத் தனித்துவப் பண்பு நோக்கிய பாதையில் சிலது இடறுகற்களாக உள்ளன. இது உள்ளடக்கத் தனித்துவம் சார்ந்த அம்சமாகும். இவ்வாக்கியங்களைக் குறிப்பிட்டு இங்கு சொல்லாததற்கு மன்னிக்கவும்.

இனி அமைப்புத் தனித்துவம், பொதுவான இன்றைய சஞ்சிகைகளையே குறிப்பாக நவீன சஞ்சிகைகளைப் பிரதிபலிக்க முயல்கின்றது. ஆனாலும், அருமையாக உள்ளது. இதிலும் தனித்துவத்தை கட்டியெழுப்ப முயல்வீர்கள் என்ற நம்பிக்கை உண்டு.

கல்முனை-04 எச். எம். பாறூக்.

நவமணிப் பத்திரிகையின் முதல் 7 வாரப் பத்திரிகையின் இதழ்களுக்கு மாத்திரமே நான் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினேன். அதன் பின்னர் விலகி விட்டேன். களம் இதழுக்குத் தொடர்ந்து எழுத விருப்பம் எழுதுவேன். தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் களம் பற்றிக் குறிப்பிட்டேன். பார்க்க ஆவலாயிருக்கின்றார்கள். பழைய பிரதிகள் உட்பட சில இதழ்களை அனுப்பி வையுங்கள்.

கொழும்பு-06 கே. எஸ். சிவகுமாரன்.

தங்களது 7வது இதழான களத்தின் தரம் சிறப்பானது. கவிதைகள் அபாரம். எங்களது ஒரு அபிப்பிராயம் களத்தில் சிறுவர்களுக்கான ஒரு பக்கத்தினையும், மகளிருக்கான ஒரு பக்கத்தையும் ஒதுக்குவீர்களா?

மட்டக்களப்பு மலர், சுதா.

களம் ஏழாவது இதழ் படித்தேன். அச்சமைப்பு எழுத்துக்கள் கருத்தைக் கவர்ந்தன. உரம் சேர்த்தது பிரசவ வேதனையின் மூர்க்கத்தனங்களை ஜீரணித்து பிள்ளை பெற்றவள் அதை அழிக்க, இழக்க விரும்புவாளா? ஊழி சிறுகதையில் இவ்வாறுதான் எழுத்தாளர் ஜாஹூர் பக்ஷவைச் சித்தரித்துள்ளார். இந்தக் கதையைப் படித்தபோது என் இதயமும் தீப்பற்றிக்கொண்டது. அழகான நடையில் கச்சிதமாகக் கதையை நகர்த்தும் பாங்கு அற்புதம்தான்.

நண்பர் வீ. ஆனந்தனின் கட்டுரையைப் படித்தபோது என் கண்கள் பனித்து விட்டன. மனித நேயத்தின் தலைமகனை இழந்து விட்டோம் என்ற தவிப்புத்தான். இலக்கியத்தை, எழுத்தை மனித குல மேம்பாட்டுக்காக பயன் படுத்தியவர். அவரிடம் நாம் அதிதமாகவே எதிர்பார்த்தோம். அதற்குள் காலன் வந்து விளையாடிவிட்டான்! ஏ. இக்பாலின் கட்டுரையிலிருந்து அதிகமான தகவல்களைப் பெற முடிந்தது.

மு. பொன்னம்பலம் அவர்களின் கட்டுரை ஆழமான பார்வையின் விகசிப்பாகும். திருஷ்டிகளை நுண்ணியமாக அணுகி ஆராய்வதன் மூலம் அதன் பலம் பலவீனம் ஆகியவற்றை வாசகனுக்கு எளிதாக்கித் தருகின்றார். சோலைக்கிளி பற்றிய அவரின் ஆராய்ச்சி எனக்கு உடன்பாடானதே.

புன்னகை வேந்தன் மருதமுனை.

காத்திரமான களம் எம். கே. எம். ஷகிபிடமிருந்து கிடைத்தது. ஆறாவதிலிருந்து ஏழாவதற்கு ஒரு படி உயிர்ப்பு வந்திருக்கிறது.

பிரயோசனமான ஆக்கங்கள் சுமந்து வந்திருக்கிறது. களத்தின் கண்ணூறோ என்னவோ கே. எஸ். சிவகுமாரன் தற்பொழுது நவமணியில இல்லை.

எழுத்துப் பிழைகள் களத்தின் வளர்ச்சிக்கு நஞ்சு "சிவசேகரம்" என்ற அந்த மனிதரின் பெயரையே கொச்சையாக்கியிருக்கின்றீர்கள்.

தங்களின் கள வளர்ச்சிக்கு வாசகர் வட்டங்களை அதிகமாக்க வேண்டும்.

அக்குறணை இளைய அப்துல்லாஹ்.

டிசம்பர் 96 இதழ் நன்றாக இருக்கிறது. காத்திரமான கட்டுரை, கதைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் சஞ்சிகை நடாத்துவதிலுள்ள கஷ்டங்களை உங்கள் கணக்கறிக்கை காட்டுகிறது. என்ன செய்யலாம்' எழுத்து' போன்ற சஞ்சிகைகளே தாக்குப் பிடிக்க முடியாமற் போயிற்று.

அக்கரைப்பற்று-01 அ. ஸ. அப்துல் ஸமது.

காலச் சுவட்டை நினைவூட்டுகிற அட்டை. களத்தின் பின்னால் கோடுகளை நீக்கி விட்டு எழுத்தை மட்டும் பாவித்தால் நல்லது என்பது என் அபிப்பிராயம். உள்ளே, கம்பியூட்டரின் அனேக தமிழ் எழுத்து வடிவங்கள் ரசனையின்றிப் பாவிக்கப்பட்டிருக்கிறது. இடைவெளிகளாய்ப் பக்கங்கள் விரயமாக்கப்பட்டுள்ளது. வாசகர் கடிதங்களுக்குப் பாவிக்கப்பட்டிருக்கிற எழுத்தை சற்றுப் பெரிதாக்கி விடயதானங்களுக்குப் பாவித்திருக்கலாம். கவிதைகளுக்கு வேண்டுமானால், வேறு குழுவெ களைப் போடலாம். கவிதைகள் குழப்பம் தருகிற ஒழுங்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவை தொழிநுட்பம் சார் பிரச்சினைகள்தான். நம் துரதிர்ஸ்டம் கலையாற்றலுள்ளவர்கள் கம்பியூட்டர் Type Setter களாக இல்லாதிருப்பதே. ஒரு கலை, இலக்கிய சஞ்சிகை என்றபடியாலும், வடிவமைப்புடன் சம்மந்தப்பட்டவன் என்பதாலுமே நான் இதைக் கூடுதலாய் எதிர்பார்க்க வேண்டியுள்ளது. வடிவமைப்பு தொடர்பில் நாம் பிறநாட்டு, அல்லது தமிழகத்துச சஞ்சிகைகளை பிரதிபண்ணினால் கூட பரவாயில்லை. எமக்கு விடயங்கள் புறத்தேடலில் இருந்துதானே கிடைக்கின்றன.

நாரகேன்பிட்டி எம். கே. எம். ஷகீப்.

களம் 7 பார்த்ததுமே வியந்து போனேன். ஆறைவிட இரட்டிப்புத் தரமாய் அமைந்திருந்தது. நிச்சயமாய் களத்தின் சேவை இன்றைய இலக்கிய நிலைக்கு மிக முக்கியமானதொன்று. ஆகவே களம் பற்றி வானொலி, பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதோடு பல ஊர்களிலும் விற்பனை முகவர்கள் ஏற்படுத்துவதன் மூலம் களத்தின் நல் நோக்கம் மக்களைச் சென்றடைய ஏதுவாயிருக்கும். விளம்பரம் என்னும்போது நீண்ட நாட்களுக்குத் தேவையில்லை. இரண்டு மூன்று இதழ்களுக்குப் போதுமானது.

புத்தளம் எம். ஸாலிஹ் அஸீம்.

47 Norman avenue
Woodgreen,
London 22.5 ES,
10.03.97.

அன்புள்ள களம் ஆசிரியருக்கு,

இத்துடன் "நாடகங்கள் தொடரும்" என்ற தலைப்பில் ஒரு சிறுகதை அனுப்புகிறேன் பிடித்தால் பிரசுரிக்கவும். எங்களூரிற் பிறந்த சிலரிடம் பத்திரிகைக்குத் நிதி கொஞ்சம் கேட்க யோசித்திருக்கிறேன்.

அன்புடன்


லண்டன் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரவைப்போல இனி விவசாயி



எல்லோர் மனங்களும்
இப்படிப் பசுமையாய், பரந்து, பசுமையாய்
ஆகும் காலம் வரும்.
இந்த வயல் வெளி மாதிரி!

குழந்தைக் காற்று தவழ்ந்து விளையாடும்
ஆகா..... வேளாண்மை ஓலைகளின் தொங்கலிலே.
மூன்று சக்கரத்தில
சின்னச் சைக்கிள் வாங்கிக் கொடுக்க
மகிழ்ந்திருப்போன் போல,
நெல் விதைத்தோன்
ஓரிடத்தில் கொக்குகளை
எண்ணிக்கொண்டு ரசித்தபடி உயிர்த்திருந்தான்
அவ்விடத்தில் ஒரு மரமும்!
பாதி முடி வெட்டி.
சடையாய், மீதி முடியை வளர்த்தபடி, துளிர்த்து.

என் நெஞ்சம் இறங்கி
கொஞ்சம் நீர் அழைந்து விளையாடிந்
பின்னர் இணைந்து என்னோடு.
அதன் உடம்பு முழுக்க புது இரத்தம்!
தலைக்கு
உற்சாகம் பொங்கி,
இந்த வயல்வெளி எங்குமே
பறக்கும் தும்பிகளாய் என்னை மாற்றி
தானும் நடந்தது கைவீசி.

ஒரு பூங் கதிரில்
சிகப்பு யானைத் தும்பியாய்
நான் - அமர்ந்து, எழுந்தேன்.
அவ்வளவும் இனிமை!

விளை
நிலத்தை இப்படியாய் வரம்புகளால், வரம்புகளால்,
கூறு போட்டவர்கள் ஒழிக!
இரவு - வானத்தில் வரம்பிட்டா விதைக்கிறது
அழகுத் தாரகையாம் முத்தை ?
வீசி எறிகிறது பொதுவாய்!
முகம், கறுத்த நிறமாக இருந்தும்.

காலை புசிக்கிறது!
இரவு
விளைத்த விண்மீனை!
ஊர் எங்கும் பொன் வெயிலால் சோடித்து!

இரவைப்போல இனி விவசாயி வரவேண்டும்.

05-03-1997



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## செத்துப்போன ஒழுங்கை

பேயறைந்தாற் போல
நிசப்தமாய் -
நீண்டு நெளியும்
ஒரு முடக்கு ஒழுங்கை:

அப்பிப்போன முகங்களோடு
மனிதங்கள் -
புனிதங்கெட்டு -
நகருக்குள் - ஏன்....?
நகர்ந்து மறைகிறார்கள்?!

பொதிகள் சொருகி
ஒரு கதியுமற்று
கதி கலங்கியவாறும்...
இந்த நஞ்சு யுத்தத்தால்
பிஞ்சு உள்ளங்களும்
கெஞ்சி ஒதுங்கும்!

தூரத்து புகைக்கோலம்
கரி மண்டலமாய்
கலைந்து பரவும்
தெரு மருங்கினில் குருட்டு வெளவால்கள்
தலைகீழாய்த் தொங்கும்!

நாற்றமெடுக்கும்
ஊற்றுக் கிணற்றடிமேல்
காக்கைக் கூட்டம்
தூள் பறத்தும்.

இப்படித்தான்
ஒவ்வொரு நடுநிசிக்குப்பின்னும்
ஒற்றை வெடிகளோடு
செத்துப்போகிறது
அந்த ஒழுங்கை!

**- மருதமுனை எம். விஜிலி -**

## ஒற்றைப்பனை

நீ
வரமாட்டாய்
என்றான பின்பும்
நீ
எனக்கென்று
இல்லையென்றான பின்பும்
ஓர் எதிர்பார்ப்பு
தன் காயத்தையே
நக்கிக் கொள்ளும்
ஒரு நாயைப் போல
மனசு வெட்டிக் கொள்ளும்
என் வரையில்
ஒரு அழகிய கனவு
கலைந்து போய்விட்டது.
எனினும்
விழிக்குள்
நேற்றைய நிகழ்வுகளின்
எச்சங்கள்
பந்தாய்ச் சுருண்டு
நெஞ்சுக் குழியை அடைக்கும்.
ஏதோ ஞாபகங்கள்.....
படலையால் எட்டி
வீதியைப் பார்ப்பேன்
வீதியின் திருப்பத்தில்
நீ
அடிக்கடி சுட்டிக்காட்டும்
அந்த "ஒற்றைப்பனை"
மனசு மெலிதாக
அதிரும்
ஆனாலும்
எனக்குத் தெரியும்
நீ வரமாட்டாய்.
இலட்சியங்களுக்காய்ப் புறப்பட்டவன்
எங்கனம் திரும்புதல் கூடும்.
அந்த "ஒற்றைப் பனை"
மனசு மெலிதாக
அதிரும்
இனிமேல் நானும்
ஒற்றை தானோ....?

**— துளசி —**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தர்மு சிவராமு (பிரேமில்)

## ஒரு கண்ணோட்டம்

- காசிநாதர் சிவபாலன் -



தமிழ்க் கவிதையின் தவிர்க்கமுடியாத முன்னேற்றமாக புதுக்கவிதைகள் பிறந்தன என்பர்.

"எழுத்து" ஆசிரியர் சி.சு. செல்லப்பா, தமது "சுவை" இதழில், "அறிவாலும், உணர்ச்சியாலும் ஆன ஒரு மனப் பாவனையை நொடிப் பொழுதில் தெரியக் காட்டுவதுதான் படிமம். சொற்களால் கருத்து மயமாக அதிகம் வளர்க்காமலும் ஒரே வர்ணனையாகத் தீட்டாமலும் காட்சிகளை பாவனையால் சித்திரமாக எழுப்புவது படிமம். எழுதிக் குவிப்பதைவிட ஒரு படிமத்தை அறிமுகப்படுத்தினால் போதும்" என்பது படிமத்தை அறிமுகப்படுத்திய "அமெரிக்க கவி எஸ்ரா பவுண்டின்" அடித்துச் சொன்ன கருத்து. படிமப் பிரயோகம் தமிழ் கவிதைத் துறையில் புதுக் கவிதை இயக்கம் வரையில் உவமையணியைத் தூக்கலாக் கொண்டுதான் இருந்திருக்கிறது. பெரும்பாலும் புதுக் கவிதைதான் உருவகத்துக்கு முன்னிடம் கொடுத்திருக்கிறது. பாரதி, பிச்சை மூர்த்தியிலிருந்து புதுக்கவிதை ஆரம்பம். பாரதிக்குப் பின், உவமை உருவகங்களை பிச்சைமூர்த்தி நூதனமாகப் பயன் படுத்தி புதுவித படிமங்களைக் கையாண்டார் புதுக்கவிதை இயக்கத்தில். அதே இயக்கத்தில், சி.மணியின் படிமப் பாங்கு வேறுவித நூதனமாக இருந்தது. மற்றொரு நூதன பாணியை சிவராமு கையாண்டிருக்கிறார். அவர் கையில் சொல்லும் பொருளும் புதுவித் கலப்பும், சேர்மானமும் ஒன்றிப்பும் கொண்டு அசாதாரண உருவகப் படிமங்கள் பிறந்தி ருக்கின்றன. புதிய, சுயமான, சோதனை முயற்சியான கருத்துக் களை, படிமங்களை, தற்கால கவிதைத் துறையில் கையாண்ட தனித்தன்மைக் காரராக ஆக்கும் அளவுக்கு அவரது சாதனை இருக்கிறது, என்றார்.

இழக்கிறாய், ("உணர்ச்சி எனும் கோயில்" யாழ் - 15-7/8,1957) போன்ற கட்டுரைகளுடனும், கார்ட்டுன் கதை, கவிதைகளுடனும், தொடங்கிய தர்முவின் எழுத்துப்பணி, "எழுத்து" இரண்டாம் ஆண்டு முதல் ஏடான பதின்மூன்றாம் இதழில் வெளிவந்த அவரின் முதல் கவிதையான பின்வரும் "நான்" உடன் வியாபித்தது.

ஆரின்றாள் என்னை?
பாரீன்ற பாரிடத்தே
ஊரீன்று உயிர்க்குலத்தின்
வேரீன்று வெறும் வெளியாய்
ஒன்றுமற்ற பாழ் நிறைந்து
உருளுகின்ற கோலமெல்லாம்
அன்று பெற்று விட்டவளென் தாய்
வீடெதுவோ எந்தனைக்கு.

ஆடு (ம்) அரன்தீ விழியால்
மூடியெறித் துயிர றுத்த
காடு ஒத்துப் பேய்களன்றி
ஆருமற்ற சூனியமாய்
தளமற்ற பெருவெளியாய்
கூரையற்று நிற்பது என் இல்!
யாரோ நான்? -ஓ! ஓ!
யாரோ நான் என்றதுக்கு

குரல் மண்டிப் போனதென்ன?
தேறாத சிந்தனையும்
மூளாது விட்டதென்ன?
மறந்த பதில் தேடி இன்றும்
இருள் முனகும் பாதையிலே
பிறந்திருந்து ஓடுவதோ நான்?

தன் விஷயகுணம் படிமத்தை மீறியது. படிமம் இந்த விஷேச குணத்தின் வெளித் தோற்றம்தான், என்பது தர்முவின் கருத்து.

"எழுத்து" காலக் கவிஞர்களில் பலர் புதுக்கவிதை என்ற பரிமாணத்தை உருவத்தில் நேர்ந்த மாற்றமாகவே கருதினர். சிலர் மட்டுமே அது உணர்வு நிலையில் (Sersilulity) ஏற்பட்ட மாறுதல் என்று நம்பினர். தர்முசிவராமு, எஸ்.வைத்தீஸ்வரன், பசுவய்யா (சு.ரா), மூவரையும் இந்த நம்பிக்கையின் வாரிசுகள் எனலாம், என அண்மைக்கால விமர்சகர் ஒருவர் குறிப்பிடுகிறார். அவர் மேலும், அனுபவமும் கருத்தும் இணைந்த ஒரு படிமம்தான் கவிதை என்கிறார்.

தமது இல்லத்துக்கு அருகாமையிலே இருந்த திருகோணமலை இ.கி.மி. இந்துக் கல்லூரி மாணவப் பருவத்தில த. அமரசிங்கத்தை ஆசிரியராகக் கொண்ட "யாழ்" கையெழுத்துச் சிற்றேட்டில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தலே சுதந்திரம், உணர்ச்சி வசப்படுகிறாய் என்றால், நீ சுதந்திரத்தை

ஓவியர், சிற்பி, கவிஞர், கதாசிரியர், விமர்சகர், ஆண்மீக வாதி, நாடகாசிரியர், எண்சாத்திர நிபுணர், சோதிடர் எனப்பல முகங்கள் கொண்டவர் தர்மு. ஆங்கிலத்திலும் சிறப்பாக எழுதக் கூடியவர். டெல்லியிலிருந்து வெளிவந்த இந்திய ஆங்கிலப் பத்திரிகைகளான Guest, Thought போன்றனவற்றில் இவரின் ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. கண்டி, பிரஞ்சு கலாசார நிலையத்தில் தனிமனித ஓவியக் கண்காட்சியை நடாத்திய இவருக்கு பிரஞ்சு மொழியிலும் ஓரளவு பரிச்சயமுண்டு.

தர்முசிவராமுவின் கவிதைகள் பற்றி ஆய்வு செய்து கால சுப்பிரமணியன் அவர்கள் 1988 வாக்கில் திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றார். பின்னர் தர்முசிவராமுவின் அநேகமான ஆக்கங்களையும் அவர் பற்றியதுமான விடயங்களையும் வெளியிடும் பணியைக் பாலசுப்பிரமணியம் தொடர்ந்து செய்துள்ளார். "அவரைத் தமிழ்ச் சிறுகதையின் திருமூலர் என்று சொல்ல வேண்டும். கற்பனையின் எல்லைக் கோட்டில் நின்று வார்த்தைக்குள் அகப்பட மறுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்களையும் மடக்கிக் கொண்டுவரக் கூடியவர் அவர் ஒருவரே என்று புதுமைப்பித்தனால் கூறப்பட்ட மௌனியின் சிறுகதைத் தொகுதியான "மௌனிகதைகள்" 1967 வாக்கில் முதன் முறையாக வெளியான போது, அத்தொகுப்புக்கு நீண்டதொரு முன்னுரையை தர்மு எழுதியிருந்தார். தொடக்க காலத்தில், மௌனியை மிகவும் வியந்து எழுதிய சிவராமு பின்னர் மறுகணிப்பில் அவர் உன்னதமான நிகழ்வல்ல என்று கூறியுள்ளார்.

தமது "மேல் நோக்கிய பயணம்" எனும் நீண்ட கவிதையில், கவிதை பற்றி, தர்மு சிவராமு பின்வருமாறு கூறுகிறார்.

கவிதை எழுத
வாழ்வினூடே
ஓடும் தர்க்கத்தின்
இழைய உணரும்
திறன் வேண்டும்
அதன் விளைவு
தார்மீக உணர்வாகி
வீரியத்தின் உலையில்
உருகிப் பிழம்பின்
நிலையை எய்திப்பின்
எழுத்தில் வரவேண்டும்.

சி.சு. செல்லப்பாவின் பார்வையில்,

தர்முசிவராமு தான் எடுத்துக் கொண்ட தலைப்புப் பொருள்களுக்கு ஏற்ப, வாழ்வின் எல்லாத் துறைகளிலிருந்தும் உவமானப் பொருட்களைத் தேர்ந்தெடுப்பதுடன் அதற்குரிய தனி விஷேச குணங்களைப் பொறுக்கி இணைப்பதுடன் சாதாரண, அசாதாரணப் பொருட்களை அவற்றின் இயல்பான அதேவிதத் தன்மைகள், தன்பார்வையில் அவற்றிற்கு ஏற்றும் புதுத்தன்மைகள் இவற்றைக் கொடுத்து படிமங்களை ஆக்குகிறார்.

தர்முவின் புதுக் கவிதைகளுள் பின்வரும் கவிதைகள் குறிப்பாகக் கூறப்படவேண்டியவை.

ககனப் பறவை
நீட்டும் அலகு
கதிரோன் நிலத்தில்
எறியும் பார்வை
கடலுள் வழியும்
அமிர்த தாமரை
கடவுள் ஊன்றும்
செங் கோல்
(மின்னல் - 38வது இதழ் - எழுத்து)

"சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது......"

"காலக் குளத்தே
நாளை நேற்றென்றே
அது யேன் புரள்கிறது?
"இன்று" எனும் கலத்துளிகள்
வீசி விழுவதனால்......
சேற்றில் விழுந்த சொற்கள்
தானிய மாயின
புற்றரை மீது பூக்களாயின

இப்படி அவரின் பல கவிதைகளைக் கூறிக் கொண்டே போகலாம்.

கவிஞராகத் திகழ்ந்த தர்முவின் நாடகம், முக்கியமாக பேராதனையிலும், மொரட்டுவைப் பல்கலைக் கழகத்திலும் பின்னர் லண்டனிலும் மேடையேறியது. அவர் 1972 வாக்கில் டெல்லியில் எழுதிய "நட்சத்திரவாஸி" எனும் நாடகம், அவருக்கு மிக்க புகழை ஈட்டிக் கொடுத்தது. பாலேந்திரா, கண்ணாடி வார்ப்புக்கள், போன்ற தழுவல் நாடகங்களையும் இந்திரா பார்த்தசாரதியின் "மழை" போன்ற நாடகங்களையும் மேடையேற்றியிருந்தும் தர்முவின் நாடகப்பிரதி அக்காலத்திலே "அபத்த சாயலுடன் கூடியதும் மோடித் தன்மைகளையும் கொண்டு அரங்கின் வாய்புக்களை நன்கறிந்த ஒரு ஈழத்து நாடகாசிரியரின் சுயபடைப்பாகத் திகழ்ந்தது.


தர்முசிவராமு திருகோணமலை இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்த இளம் பராயத்திலேயே தம் கவிதைகள், கட்டுரைகள் மூலம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருந்து அத்துறைகளிலும் ஓவியம் போன்ற துறைகளிலும் தகமைபெற்றவராக இனம்காணப்பட்டார். "எழுத்து" காலங்களில் தம் ஆற்றலை ஒருங்கிணைத்து, கவிதை, கட்டுரை, விமர்சனத்துறையில் கூடிய அளவில் குறுக்கீடுகள் இன்றி அவருடைய ஆற்றலை சிதறடிக்கும் சச்சரவுகள் இன்றி ஈடுபட்டுவந்தார். பின்னர், தொடர்ந்த காலப்பகுதியில், பல தனிமனிதர்களுடனான முரண்பாடுகளுக்கும் பார்ப்பனீய எதிர்ப்பு போன்ற விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததினால் அவர் செய்திருக்கக் கூடிய பல ஆக்க முயற்சிகள் தடைப்பட்டது. என்று சிலர் கருதும் அதே வேளையில் அந்த முரண்பாடுகள் அவரது இலக்கிய நேர்மையினூடாக எழுந்த முரண்பாடே தவிர வெறும் தனிமனித தாக்குதல்கள் மட்டுமல்ல எனப் பிறகும் கருதினார். தர்மு தனது வாழ்க்கையின் எந்த இக்கட்டான கட்டத்திலும் தாம் சரியென வகுத்துக் கொண்ட கொள்கைகளைப் பொறுத்தவரையில் எவ்விதத்திலும் பண வசதிகளைப் பெறுவதற்கோ, புகழை நாடியோ விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்தார். "நீங்கள் எல்லாம் 9 மணியிலிருந்து 5 மணியிலான தொழிலை நம்பி வாழும் துணிவற்றவர்கள்" என்று ஒரு முறை கூறினார். "தர்முசிவராமுவைத் திறமையற்றவர் என நான் ஒதுக்கவில்லை. ஆனால் அவரது சமுதாய உணர்வின் போதாமை, பல விஷயங்களை ஆழமாக அணுக முடியாமல் அவரை மறித்துவிட்டது என்பது என் கணிப்பு" என அவரின் திருமலை இந்துக் கல்லூரியின் சகபாடியும், பின்னர் கவிஞர் விமர்சகர் எனப் பரிணமித்தவருமான ஒருவர் தமது தாயகம் - 4, 1984ம் ஆண்டுக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அதற்குப் பிந்திய காலத்தைய தர்முவின் பல படைப்புக்கள் அவரின் அக் கருத்தினை மாற்றக் கூடிய வகையில் அமைந்தன எனக் கொள்ளலாமா?

'குமாரன் ஆசான்' நினைவுப் பரிசு கேரளத்தில் கிடைப்பது தவறினாலும், 1995ம் ஆண்டுக்கான 'புதுமைப்பித்தன் சாதனை வீறு' தர்மு சிவராமுவிற்குத் தமிழகத்தில் தரப்பட்டது. விருது வழங்குரையில், வே. மு. பொதியவெற்பன். "சமூக உணர்வுடனும், வரலாற்று ஓர்மையுடனும் இடதுசாரி, பகுத்தறிவு, தலித்தியக்கப் படைப்புக்களை அணுகுகிற சனநாயகப் பார்வைத் தெளிவு பிரேமிளுக்குரியதாகும்" எனக் குறிப்பிட்டது இங்கு மனங்கொள்ளத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# நத்தைச் சுகம்

நத்தைச் சுகம் எறும்புக்குத் தெரியுமா? இது ஒரு காலத்தில் கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் கேள்வி. உண்மைதான் இன்று நானிந்த பின்னல் குலைந்த கதிரைக்குள் ஏறக்குறைய ஒரு மணி நேரமாகக் குந்திக் கிடக்கின்றேன். ஒரு பிடித்துவைத்த பிள்ளையாரை எனக்கு நானே ஞாபகப் படுத்திக் கொண்டு. கவிஞர் சொன்னதுபோல இந்த நத்தைச் சுகம் எவ்வளவு ஆறுதல் தருகிறது. மனசுதான் எவ்வளவு நிதானப்பட்டிருக்கிறது. வாழ்வின் மீதுள்ள வெறுப்பும் பெரும்பங்கு தணிந்து போயிருக்கிறது. வாழ்தல் என்பதே இந்த நத்தைச் சுகமாகிவிடுதல் கூடாதா?

இன்று பகல் முழுக்க நாயலச்சல். கல்முனை நகர்ப்புறமையம். கச்சேரி, மருதமுனைக் கடைத்தெரு எனத் திரிந்தலைந்துவிட்டு வீட்டுக்கு வந்தேன். மதியம் சாப்பிட்ட கையோடே தங்கையை ஏற்றிக்கொண்டு கல்முனை ரியூட்டரிவரை போகவேண்டியிருந்தது. மீண்டும் அவளின் கிளாஸ் முடிந்ததும் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு வந்தேன்.

யார்ரோ உறவுக்காரர்கள் கொண்டுவந்ததாகச் சொல்லி அம்மா இரண்டு மூன்று லட்டுத் தந்தா. கூடவே ஒரு இஞ்சிபோட்ட தேத்தண்ணியும் தந்தா. குடித்து முடிக்குமுன்னமே குமணனும் வந்தான். பெரும்பாலும் நான்தான் அவனைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்குப் போவது வழக்கம். இன்றைக்கு என்னுடைய தாமதத்தால் அவனாகவே வந்திருக்க வேண்டும். இருவரும் பிரதான வீதியை நெருங்கிக் கொண்டிருக்கும்போதே ஏனைய நண்பர்களும் வந்து இணைந்து கொண்டனர்.

இப்படித்தான் நானும் நண்பர்களும் சேர்ந்துகொண்டு இந்தப் பாண்டிருப்பின் மணல்குவிந்த தெருக்களிலெல்லாம். ஆளுக்கொரு சைக்கிளில் அலைந்து திரிவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறு ஒவ்வொரு றோட்டாலும் வந்து திரும்புகையில் எங்களில் யாராவது ஒருத்தன் தெருவால் போகும் ஒருத்தியின் நடையைக் காட்டி, "அங்க பாருங்கடா அவள்ற நட பொறிவ பனையோலையில் கிளிநடக்கிறமாதிரி" என்பான். எல்லோரின் கண்ணும் அவளின் நட அசிலைப் பார்க்கும். பிறகு கொல்லென்று சிரிப்போம். இப்படியாகப் போய்க் கொண்டிருக்கின்ற போது இன்றைக்குக் காலம் கூடாத ஒருவன் வருவான். மீண்டும் எங்களில் யாராவது ஒருவன் அவனைக் காட்டி "இந்தா வாறவனைப் பாருங்கடா" எல்லோரும் விழிபிதுங்கப் பார்ப்போம். "ஏன் இவனுக்கு என்னடா நல்லாத்தானே இருக்கான்" என்று நானே சிலநேரம் கேட்பேன். "இவன் பெரிய கம்சன்டா" என்பான்.

"கம்சன்" என்றால் ஒருவகைக் குறியீடு. அந்த விசயத்தில் (பெண் விசயத்தில்) கில்லாடி என்று அதற்குப் பொருள். பிறகு நாங்கள் தூண்டித்தூண்டிக் கேட்போம். ஒன்றும் விடாமல் அவனைப் பற்றி தனக்குத் தெரிந்தலெல்லாம் சொல்வான். விசயம் பெரிசுதாண்டா. இவன் கம்சன் இல்ல. கம்சன் வர்க்கம் என்று சொல்லிச் சிரிப்போம்.

சிலநேரம், கடற்கரைக் கிறவல் வீதியில் அல்லது குமணனின் வீட்டுப் படலை முன்பாக கூடிநின்று மேதாவித்தனமாய் எதையாவது விவாதித்துக் கொள்வோம். இவைகள்தான் எங்கள் நீண்டகாலப் பொழுதுபோக்கென்று சொல்லக்கூடியது.

வளமையாக குமணனின் வீட்டின்முன் நீண்டு படுக்கிற கருந்தார் வீதிதான் நாங்கள் க்குட் நைற் (Goodnight) சொல்லிக்கொண்டு பிரிந்து செல்கின்ற இடமாயிருக்கிறது. முந்தநாள் நடந்த ஒரு கோரச் சம்பவம் இரண்டு நாட்களாய் வழமையைவிட முன்னதாகவே நாங்கள் கலைந்துபோக காரணமாயிருந்தது.

பாண்டிருப்பிலிருந்து கல்முனைக்குப் போயிருந்த எனது தரவடிப் பெடியன்கள் இருவரை காக்கி உடைக்காரர்கள் கரும்புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கண்டபடி சுட்டுத்தள்ளியிருந்தார்கள். இன்றைய இந்தப் போர்ச் சூழலில் இதுவெல்லாம் நாளாந்த நிகழ்வுகள்தான். என்றாலும், இது எமக்கருகில் நடந்த சம்பவமாகையால் எங்களை ஒரு பாரிய அச்சக் குழிக்குள் தள்ளிவிட்டிருந்தது.

நாளைக்கு இதே கதியே எங்களுக்கும் நடக்கலாம். நான்கூட எங்காகிலும் ஒரு தெருப்புழுதியில் நாலைந்து புல்லுத் தொட்டங்களுக்கு மத்தியில் இரத்தத்தில் குளித்தபடி கிடந்தாலும் யாரும் ஆச்சரியப்பட எதுவுமே இருக்காது.

என் அம்மா தன் தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு எத்தனை நாளைக்குத்தான் கதறிக் கதறி அழுவாள். அப்பா எத்தனை நாளைக்குத் தின்னாமல், குடியாமல் மனம் நொந்து திரிவார். கூடப்பிறந்த தம்பி கொதித்தெழுந்துதான் என்ன செய்துவிடப் போகிறான். தங்கைகள் மூவரும் எடுத்ததற்கெல்லாம் சிணுங்குவதுபோல இதற்கும் ஒருமுறை அழுதுவிட்டுப் போவார்கள். நண்பர்கள் கொஞ்ச நாளைக்கு அனுதாபப்பட்டுப் பேசுவார்கள். அவன் என்னை விரும்பினால் போகிறான், என்னை இந்தச் சமுகம் பிழைகூறிவிடக் கூடாது என்று விலகி விலகிப் போகிற அவள் சிலநேரம் ஒருகாதால் கேட்டு மறுகாதால் விட்டுவிடுவாள்.

ஏனென்றால், காலம் அதுதான். இதுபோல் எத்தனை மரணங்களை நாங்கள் இதுவரையில் சந்தித்திருப்போம். எல்லாமே பழகிப்போனவைகள்தானே. எனக்குச் சரியாக ஞாபகமில்லை. நானினைக்கிறேன் . தொண்ணூறின் கடைசியாகத்தானிருக்க வேண்டாம். என் மிகமிக நெருங்கிய சினேகிதனொருவனை காடையர்கள் கண்டபடி அடித்து நொருக்கிவிட்டு அரைகுறை உயிரோடு டயர்போட்டு எரிச்சிப் போட்டார்களாம்.

ஆனால், என்மனசு அவனுக்காக பெரிசாய் அழுததாகவோ, அனுதாபப் பட்டதாகவோ தெரியவில்லை. ஏன், அண்மையில் புற்றுநோய் வந்து பல மாதங்கள் வருந்திச் செத்துப்போனாரே போடியரப்பா, அவரின் சாவுகூட என்னை எதுவும் செய்துவிடவில்லைதானே? அவர் என்னிலும், தம்பியிலும் எவ்வளவு சீவனை வைத்திருந்தார். பேரன் பேரன் என்று சாவாரே?

அவரின் மரணச் சடங்கன்று பொண்டுகளெல்லாம் கட்டிப்புடிச்சி ஒப்பாரி வச்சார்களே! கேவலம் எனக்கு ஒருதுளி கண்ணீர்தானும் வரவில்லையே!

கொடிய வெறிபிடித்தவர்களுக்கு மட்டுமல்ல எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கும் இதயம் எவ்வளவு கடினப்பட்டுப் போய்விட்டது. எத்தனை ஆன்மீக நெறிகள் இருந்தென்ன எங்களை மாற்றியமைக்க இவைகள் தவறித்தானே போய்விட்டன.

இருந்தாலும் நிலைமை தெரிந்தும்கூட சொல்லுக்கேளாம அநியாயமாச் செத்துப்போனானே பாவி. என்று ஊரார் சொல்வார்களே! அதுதான் நாங்கள் இன்றுகூட ஆறுமணிக்கு முன்னதாகவே கலைந்து திரும்பவேண்டியிருந்தது.

வீட்டுக்கு வந்த எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் பொத்திப் பொத்தி வைத்திருக்கின்ற ஐந்தாறு கவிதைப் புத்திகங்களை எத்தனை முறைதான் வாசித்துத் தள்ளுவது. வாசித்து வாசித்து ரசனை அற்றுப்போன கவிதைப் புத்தகங்களாக அவைகள் தள்ளப்பட்டிருந்தன.

எழுந்துபோய் ஒருமுறை முகத்தைக் கழுவுவோமா, இல்லையா என்ன மனசு இழுபறிப்பட்டுக் கொள்கிறது. இப்படியாக நத்தைச் சுகமடையும் என் முன்னே எங்கள் தாயதிச் சொத்து அமர்ந்திருக்கிறது. அதுதான்! மோட்டுவட்டையைப் பார்த்தபடி ஓலை ஒரு புறமும், தகரம் மறுபுறமுமாக வேயப்பட்டன. சின்னஞ்சிறிய வீடு. இது ஒரு யாகசாலையின் தோற்றத்தை எனக்கு ஞாபகப்படுத்தத் தவறுவதில்லை.

ஒரு சிமிழிலாம்பு மட்டும் வெளி மேசையின் மீதிருந்தபடியே குருடுபற்றி எரிகிறது. அம்மா புஸ்பாக்காவின் வீட்டுக்குப் போய்விட்டார். தம்பி இரவு ஏழு மணியாகியும் இன்னும் வீடுவந்து சேர்ந்தபாடில்லை. தங்கைகள் மூவரும் சாமியறைக்குள் படிப்பதாக பாசாங்கு காட்டிக்கொண்டு புளியங்கொட்டை தெறித்து விளையாடுவது எனக்குப் புரிகிறது.

என் தலைக்குமேலே குடைவிரித்து நிற்கிற மாமரத்தின் சடைப்பிலிருந்து ஒரு பழுத்த இலை தொப்பென்று விழுகிறது. முற்றத்தில் நீண்டு வளர்ந்த நொசிமரங்கள் அசைகின்றன. மருதமுனை பக்கமிருந்து இஷாக் கால பாங்கோசைகள் ஒருசில விநாடி வித்தியாசங்களோடும், உயர்ந்த, தாழ்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிர்வுகளோடும் காதுகளை வந்து அடைகிறது.

இதற்கிடையில் என் நத்தைச் சுகத்துக்கு வேட்டு வைத்தாற்போல் நுளம்பு கினுகினுக்கத் தொடங்கி விட்டது. இந்தநாட்களில் நுளம்பு விளைந்தாற்போல் ஒன்றுமேயில்லை என எண்ணும்போதே ஒரு நுளம்பு தன் விளையாட்டைக் காட்டிவிட்டது.

இடுப்பில் கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்து நுளம்பு குத்திய என் குண்டிப் பகுதியை ஒரு முறை தடவிப்பார்த்துக் கொண்டேன். சற்றுப் பலமான தாக்குதல்தான்.

ஆனால், அதையும் தாண்டி காரணமில்லாமலே ஒரு சினிமாப் பாடலை முணுமுணுத்துக் கொண்டிருக்கிறேன். படீ.. படீ... துவக்குச் சத்தம் மாரியம்மன் கோயில் பக்கமாகத்தான் கேட்டதுபோல இருந்திச்சி. தொடர்ந்தும் கேட்கலாம் என்ற சந்தேகத்தில் செவி கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான். அந்த இரண்டே இரண்டு சிங்குள் வேட்டுக்கள்தான். படையினர் வந்திருப்பாங்கள். அதைக்கண்டு பயந்ததுகள் ஓடியிருக்கும். என நானே ஒரு முடிவுக்கு வருகிறேன்.

சித்திரா அண்ணன்ட 'ரைகர்' தொடக்கம் ஊரிலுள்ள எல்லா நாய்களுமே ஒப்பாரிவைக்க ஆரம்பித்து விட்டன. சிலநேரம் இந்த நாய்க் கெளைய உசிரோட மடுவொண்டுக்க போட்டு மூடோணும் போல தோணும். ராவையில படுக்க வழியில்ல.

வெடிச்சத்தம் கேட்டு அம்மா ஓடி வருகிறாள். இப்பகேட்டது துவக்கு வெடியில்லா தம்பி? ஓ துவக்கு வெடிதான் என நான் பதிலுக்குச் சொன்னதும்,

"இவன் எங்க போய்த் தொலைஞ்சானோ தெரியலையே" அம்மா தம்பிமீது எரிந்து விழுகிறாள். அவவின் குரலில் கோபம் மட்டுமன்றி பிள்ளைப் பாசம் கூடத் தெரிகிறது. எங்க இருவராலயும் அவவுக்குப் பெரிய தொல்லை. எல்லா ரவுண்டப்பிலையும் எங்களச் சாச்சிப்போட்டுருவானுகள். ஒரு சின்ன முகதாச்சினகூடக் காட்டமாட்டானுகள். பாவம் அம்மா, நெஞ்சுக்குத்தோட அவவும் பின்னால எடுபட்டிருவாவு. அன்றொரு நாள் சுரேசிர அம்மாவும் இதைத்தானே சொன்னாவு. "இவனுகள் இரண்டு பேராலயும் எனக்குத் தின்றது குடிக்கிறதுகூட உடம்பில ஒட்டுதில்ல மனே" இன்றைக்கு இந்த வடக்குக் கிழக்கில இருக்கிற தாய்மாரெல்லாம் இப்படித்தானே கஸ்டப்படுகுதுகள். இப்படியாக அவர்கள்மீது எனக்கு அனுதாபம் வருகிறது.

பிறகு கொஞ்ச நேரத்தால ஊரே வாயடைத்துப்போய் கிடக்குது. நாய்களெல்லாம் கத்திப்பார்த்துவிட்டு படுத்துவிட்டதுபோல. இலைகள் அசைகிற சத்தத்தைக்கூடக் காணோம்.

திடீரென்று அம்மா வாய்திறக்கிறா; "உங்கள எந்தளவில தம்பி எடுப்பாங்களாம்" நான் எதைக் கேட்கிறாவோ தெரியாதே என சற்றுத்தடுமாறி பின் தெளிவடைகிறேன். அம்மா கெம்பசுக்கு (Campas) எப்ப எடுப்பாங்க என்றுதான் கேட்கிறாவு போல.

வாறமாசம் இரண்டாம் திகதி என்றொரு கதையம்மா. என்று சொல்லிவிட்டு ஒரு கைப்புக் குளிசையை சப்பிவிழுங்கிவிடுகிற உணர்வினைப் பெறுகிறேன்.

காரணம், என்னை இந்தப் பல்கலைக்கழக வாழ்க்கையோ, அது தொடர்பான நிகழ்வுகளோ பெரிதாய் கவர்ந்ததாகவோ, திருப்திப படுத்தியதாகவோ தெரியவில்லை. நான் அரைக்காச்சட்டைப் பையனாய் ஐந்தாமாறாம் வகுப்பு படிக்கக்குள்ள அதிலிருந்த பற்றும், நான் காட்டின வேகமும் இப்போ நினைத்துப் பார்க்கும்போது மெய்சிலிர்க்க வைக்கிறது.

அந்த நேரம் அடிக்கடி ஹர்த்தால் போடுவார்கள். வெலிக்கடைச் சிறைச்சாலையில் வீர மரணமடைந்த குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு முதலாம் ஆண்டு நினைவஞ்சலி தொடர்பாக ஹர்த்தால் போட்டதாக ஒரு ஞாபகம். அன்றைக்கு அம்மா "இன்றைக்கு ஹீர்த்தாலாம் நீ பள்ளிக்குப் போகவேண்டாம்" என்று தடுத்தாவு. ஆனா நான் விடல கத்திக்குளறி எப்படியோ பள்ளிக்கூடம் வரைக்கும் போனேன். அங்க பெரிசா பிள்ளைகள் வரல. சுரேஸ், ஜோதியன் இப்படி நாலஞ்சு பிள்ளைகள்தான் வந்திருந்தார்கள். ஆனா ரீச்சமாரெல்லாம் வந்திருந்தாங்க. பஸ்செல்லாம் குட்டிமணிரதும், ஜெகன்டதும் போட்டோ போட்ட போஸ்டர் ஒட்டியிருந்தார்கள். எங்களுக்கெண்டா இதெல்லாம் புதினமாகத்தான் இருந்தது அன்னேரம்.

ஆனா இப்ப பல்கலைக்கழகத்துக்குப் போற பிரயாணத்தை நினைச்சாலே பயமாக்கிடக்கு. ஏழெட்டெடத்த இறங்கி ஏறணும். ஒன்றரை மணித்தியாலங்களில் போகவேண்டிய பயணத்தை நாலரை மணித்தியாலங்கள் விழுங்கும். அப்படியெண்டாலும் பரவாயில்ல. ஏதோ பாவாத்துமாக்கள் மாதிரி பவ்யமாய் ஏறி இறங்கி ஏறுவெயிலில் நிரையில நிண்டு என் அடையாளத்தை நிரூபித்த பின்னர் வேக்கெல்லாம் திறந்துகாட்டிப் போகணும். சில நேரம், என் பேனா மூடியைக்கூட திறந்து காட்ட வேண்டும். என்னவும் சயனைட் வச்ச பென்னாக இருக்குமென்றாக்கும். அதுமட்டுமா என்ன முன்னூறு பஸ் ஓடினாலும் "சாகக்காணும் இந்த பஸ் நெருக்கம்" என முகஞ்சுழித்துக் கொள்கின்ற சனநெரிசல். மேலும் சொன்னால், பல்கலைக்கழக விடுதியிலே தருகிற சாப்பாடு.

இதுதவிர எங்கள் ஓய்வுறக்கங்களை உதறித்தள்ளிவிட்டு விரிவுரைகள் பற்றி எடுக்கவேண்டிய குறிப்புக்கள். இப்படியே இன்னும் பல காரணங்களை மனசு அடுக்கிக்கொண்டே போகிறது. எனக்கு மட்டுமா? எல்லா மனிதர்களுக்கும் தன்னை வருத்தி அல்லது தன்னிடமுள்ள ஒன்றை இழந்துதான் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் வாழ்வின்மீது வெறுப்பு வந்து குவிவது தவிர்க்க முடியாததுதானே.

போனவருசம் முதலாம் வருட மாணவனாக இருந்தபோது குந்தியிருந்து படிக்கிற பொறுமை இருக்கல்ல. கடசி நேரத்தில பரீட்சைக்கு என்னைத் தயார் படுத்தினதை நினைக்கும்போது யாரோ உச்சி மண்டையில ஆணியறைகின்றனர். அப்படிப் படித்துப் பரீட்சை எழுதியிருந்தாலும் கொத்துக்கொறை இல்லாம தப்பிவிடுவேனா என்று ஒரு சின்னச் சந்தேகம் இருக்கத்தான் செய்யுது.

இந்த மூன்றுமாத விடுமுறையில இரண்டு மாதங்கள் அரட்டையடிப்போடே கழிந்துபோய் விட்டது. ஆக்கபூர்வமான எதுவும் செய்ததாக நினைவில்ல. இப்போது யாராவது என்னிட்ட வந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"முகாமைத்துவம் (Managment) என்றால் என்ன? அதன் வளர்ச்சிப்போக்குப் பற்றிக் கொஞ்சம் சொல்" என்றால், எனக்கொரு மண்ணும் தெரியாது. எல்லாமே பரீட்சைக்கு எழுதிய கையோடே இருந்த இடம் தெரியாம மறந்து போச்சு.

இப்படித்தான் என்னைப்போல மாணவர்கள் எல்லோரும் இன்றைய நாட்களில் பரீட்சைக்காகத்தான் படிக்கிறார்கள் என்றால் அது மெய்தான். அறிவுக்காகப் படிக்கிறதென்றால் அது அபூர்வம்தான்.

அடுத்து வரும் வினாடியில்கூட எம் அருகில் ஏதேனும் நிகழ்ந்துவிடலாம். எனும் இந்த உறுதியில்லாத காலத்தில் அறிவுக்கெண்டு படிச்சாப்போல மூளையில இருக்கவாபோகுது.

ம்...இப்போது தாளவட்டுவான் சோதனைச் சாவடிப் பக்கமாக துப்பாக்கி கொக்கரிக்கிறது. எனக்கு ஒரு சங்கிலித்தொடரை ஞாபகப்படுத்திக் கொண்டு. வீட்டின் முன் வாசற்படியில் குந்திக்கொண்டு தலையில் ஈர் உருவிக்கொண்டிருந்த அம்மா மெல்ல எழுந்து கொள்கிறா. "வெடிதான் எப்பபாத்தாலும் வெடிதான் என்றைக் குத்தான் இந்தப் புதினமெல்லாம் முடிவுக்கு வரப்போகுதோ" ஒருவித எரிச்சலோடு முணுமுணுத்துக்கொண்டு வீட்டுக்குள் போகிறா. பின் வாங்கடி புள்ளைகள் சாப்பிட என அழைக்கின்ற அம்மாவின் குரல் கேட்கிறது.

என் கடைசித்தங்கை எப்போது இந்தப் புத்தகத்தை மடக்கி வைக்கலாம் என்று எதிர்பார்த்திருந்தவள்போல், புத்தகத்தை மூடி மேசையின்மீது போட்டுவிட்டு அவளும் குசினிப் பக்கமாக நகர்கிறாள்.

என் மனசோ மீண்டும் தேவையில்லாத விடயங்களை கந்தப்பாக்கத் தொடங்குகிறது. நான் "அஞ்சு"வைக் கண்டு ஏறக்குறைய இரண்டு வாரங்களா வதிருக்கும். இப்பொழுதெல்லாம் அவளை தற்செயலாக எங்காலும் கண்டாத்தான். முன்பென்றால் இதற்கொரு நேரசூசியே என் மனசிலிருக்கும்.

இத்தனை மணிக்கு இன்ன இடத்திற்குப்போனா தரிசனம் கிட்டும், என்பதை ஒரு கணணியைப்போல என்னால் துல்லியமாகச் சொல்ல முடிந்திருக்கும். ஆனால் அது எல்லாம் வெறும் வீண்வம்பு எனத்தான் இப்போது எனக்குப் படுகிறது.

நான் அவளுக்குப் பின்னால் சுற்றுவது பற்றி அறிந்த என் உறவுக்காரர் யாரோ ஒருவரிடம் கதைத்தது எனக்கு நினைவுக்கு வருகிறது. கூடவே ஒரு சின்ன சிரிப்பையும் இழுத்துக்கொண்டு.

"………பிடிச்சி மூத்திரம் பெய்யத் தெரியாதாம் அதுக்குள்ள லவ்வாம்" இதுதான் அவர் கதைத்திருந்தது. எனக்கு அதைக் கேட்டதும் எனக்குள்ளே சிரிப்பதா அல்லது அவர்முன் ஒரு நரசிம்மனைப்போல் நின்று நாலுவார்த்தை கதைச்சிவிட்டு வருவதா.

என்னால் சிரிப்பதைத் தவிர எதுவுமே செய்துகொள்ளமுடியாத தர்மசங்கடம். காரணம், என்வயது. நான் சரியான வழியில் போனாலும் சந்தேகத்தோடு பார்க்கின்ற முதிர்ந்த மூஞ்சிகள் இருக்கத்தான் செய்கின்றன.

நான் ஏதாவது செய்து அது அப்பாவிற்குத் தெரியவந்தா அவரின் முக விறைப்பிலேயே எனக்குக் காய்ச்சல் வரலாம். ஏனென்றால் தன்னுடைய வளர்ப்பில் எவரும் குறை கூறுவதைத் தாங்கிக்கொள்ளத் தெரியாத மனிதரவர். அதற்காகநான் சிறுபிராயத்திலிருந்த போது அடிக்கொருதரம் கம்பெடுத்து வீசியவரல்ல. தன் பார்வையாலேயே எங்களைத் தண்டித்துவிடுவார். ஆனால்

இப்பொழுதெல்லாம் அதில் ஒரு சின்ன மாற்றம். நான் ஏதாவது வம்புகளில் மாட்டிக்கொண்டால் குறைந்தது இரண்டு நாளைக்காவது என் முகம் பார்க்கமாட்டார். வாமகன் போமகன் என்று எதுவுமே பேசமாட்டார்.

எனக்கு இதைவிட அவர் நெருப்புத் தணலள்ளி என் உள்ளங்கையில் வைத்திருக்கலாம் போல தோன்றும். நான் அவளை விரும்பியதை அறிந்த எத்தனை பெடியன்கள் எதுவுமே தெரியாதவர்கள் போலவும் நேற்றுத்தான் சாடையாகக் கேள்விப்பட்டவர்கள் போலவும் என்னைக்கண்டு விசாரிப்பார்கள். பிறகு எங்காவது போய் அள்ளிவைத்துக் கதைத்திருப்பார்கள்.

அவர்களை காணும்போது பாரதி சொன்னதுபோன்று அவர்கள் முகத்தில் காறித் துப்பவேண்டும் என நினைப்பேன். பின் அது பெரிய ஆபத்தில் என்னை மாட்டிவிடலாம் என்பது, என்னுள் துளிர்விடும். காரணம் அவர்கள் சிலநேரம் காக்கிச்சட்டைக்காரர்களிடம் அகப்பட்டு சற்று கூடக்குறைய வாங்கி முடிந்தால் தனக்கு விரோதமானவர்களையெல்லாம் புலிகள் என்று காட்டிக் கொடுப்பது வளமையானதுதானே.

சுற்றிச்சுற்றி சுப்பர்ர வாடிதான் என்பது போல மீண்டும் மீண்டும் அதே சிக்கலுக்குள்ளேயே மாட்டிக்கொள்ள நேரும். ஒரு கரும் பச்சை வாகனம் அவனையும் ஏற்றிக்கொண்டு வந்து எங்கள் படலை முன்னாடி நிற்கலாம். பிறகு கேட்கவா வேண்டும் சாப்பாட்டு வகைகளை. ஏற்கனவே ஒரு முறை வாங்கி முடிந்த அனுபவம் பேசி முடித்தது.

"டப்" இது நான் நுளம்படிக்கிற சத்தம். இதோட எத்தனை நுளம்பை அடித்து முடித்திருப்பேனென்று எனக்கே தெரியாது. இந்த நத்தைச்சுகம் இதுவரைக்கும் போதும். இந்தக் கதிரைக்குள் இன்னும் கொஞ்ச நேரம் குந்தியிருந்தால், இருக்கிற ரத்தத்தையும் நுளம்புக்கிளைகள் உறுஞ்சி எடுத்திரும். மெல்ல எழுந்து இடுப்பை நிமிர்த்தி எங்கள் படலை முன்பாக பார்வையைச் செலுத்துகிறேன். என்றோ ஒருநாள் இந்தியச் சிப்பாய்கள் பிரகாசைச் சுட்டுச்சாகடித்த இடத்தில் ஒரு நாய் நின்று கொண்டு ஊளையிடுகிறது. இந்த நாய்க்கு என்ன நடந்ததோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையாள சினிமா

கே.எஸ். சிவகுமாரன்

கடந்த ஜனவரி 10ஆந் திகதி முதல் 20ஆந் திகதிவரை, கேரள மாநிலத்தின் தலைநகரான திருவனந்தபுரத்திலே, இந்திய மத்திய அரசின் தகவல் ஒலி/ஒளி பரப்புத்துறை அமைச்சு ஏற்பாடு செய்த 28ஆவது அனைத்துலகத் திரைப்பட விழா இடம்பெற்றது. இத்திரைப்பட விழாவின் ஓர் அம்சமாக மலையாளத் திரைப்படங்களின் பின்னோக்குக் காட்சிகள் இடம்பெற்றன. இதனை Retrospective என்பர்.

முதன்முதலாக மலையாள மொழியில் எடுக்கப்பட்ட படத்தின் பெயர் Vigatha Kumaran, ஆண்டு 1928. எனவே சுமார் 70 வருட வரலாறு மலையாளச் சினிமாவிற்கு உண்டு. இந்தத் திரைப்பட விழாவில், 1933 முதல் 1995 வரை தயாரிக்கப்பட்ட படங்களில் சில முக்கியமான படங்கள் காட்டப்பட்டன. இப்படங்களில் ஓரிரண்டு மாத்திரமே இலங்கையில் காட்டப்பட்டுள்ளன. "மார்த்தாண்ட் வர்மா" என்ற படம் 1933ல் தயாரிக்கப்பட்டது. கழகம் என்ற படம் 1995ல் வெளியாகியது.



சந்தோஷ் சிவன்

மலையாளத்தில் நல்ல திரைப்படங்கள் உருவாகியுள்ளன. அடூர் கோபாலகிருஷ்ணன் போன்ற மலையாள நெறியாளர்கள் உலகப் புகழ் பெற்றவர்கள். மலையாள மக்களின் திரைப்பட ரசனை, தமிழ் மக்களின் திரைப்பட ரசனையைவிட மேம்பட்டது. மலையாள மக்களுள் 100 சதவிகிதமானவர்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். பகுத்துப் பார்க்கும் பக்குவம் பெற்றவர்கள். கலைத்துவமாகத் திரையில் கதைசொல்லத் தெரிந்தவர்கள். ஆழ்ந்த சமூகப் பிரக்ஞை கொண்டவர்கள்.

மலையாளத் திரைப்படங்கள் கடந்த 20 ஆண்டுகளாக முக்கியத்துவம் பெற்று வருகின்றன. இதற்கான காரணங்களில் ஒன்று, இப்படங்களின் தயாரிப்புக்கு கேரள மாநில அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஆற்றிவரும் பெரும் பங்காகும். 1975ல் நிறுவப்பட்ட இந்தக் கூட்டுத்தாபனம் இந்தியாவின் தென் மாநிலங்களில் முதற் தடவையாக அதி தொழில்நுட்ப சாதனங்களை அறிமுகப்படுத்தி வந்திருக்கின்றது. மது அம்பாட், சந்தோஷ் சிவன், ஸனி ஜோஸப் போன்ற மலையாள ஒளிப்பதிவாளர்களுக்கு கேரளத்தில் மாத்திரமன்றி இதர மாநிலங்களிலும் செல்வாக்கு அதிகம் உண்டு.

இந்தியாவிலேயே சிறந்த ஒலிப்பதிவுக் கலையகம் சித்ராஞ்சலி என்ற கலையகம் எனக்கூறப்படுகின்றது. இது இந்தக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமானது. மற்றும் இற்றைக் காலவரையிலுமான நவீன அதிநுட்ப தொழிற்பாட்டுச் சாதனங்கள் யாவும், இங்கு கிடைக்கின்றன. முன்னர் எல்லாம் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலேயே மலையாளப் படங்கள் தயாரிக்கப்பட்டன. இப்பொழுது இவை யாவும் சித்ராஞ்சலி கலையகத்தில் உருவாகின்றன.

திருவனந்தபுரம் திரைப்பட விழாவிலே காண்பிக்கப்பட்ட பின்னோக்கு மலையாளப் படங்களாவன; மார்த்தாண்ட வர்மா,நீலக் குயில், News paper boy, Bhargafi Nilayam, செம்மீன், இருட்டின்ர ஆத்மாவு, அனுபவங்கள், பளிச்சக்கால், நிர்மால்யம், அஷ்வத்தாமா, எஸ்தப்பன், எலிப்பத்தாயம், அடமின்ர வாரியெல்லு, திகைலாஸ்சா நல்ல திவசம், அம்மா அறியன், உப்பு, Rusmini, ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொண்ணு, ஒரு வடக்கன் வீரகதா Fadha, உன்னிக் குட்டன் ஜோலி கிட்டி, ஒரு தூவல் பக்ஷிகள், பிறவி, அமரம், கிலுக்கம், மகரம், மணிச்சித்ரதாழு, சம்மோஹனம், சுக்ருதம், தெய்வத்தின்ர விக்ருதிக்கல், கழகம், ஓர்மகள் உந்தயிரிக்கணம்.

இந்தப் படங்களில் சில குறிப்பிடத்தக்க மகத்தான படங்கள். நீலக்குயில், இலங்கையில் 50 களின் பிற்பகுதியில் காட்டப்பட்டது. பி. பாஸ்கரன், ராமு கர்யாட் ஆகியோர் இணைந்து நெறிப்படுத்திய படம். உயர்ந்த சாதிமானாகிய ஸ்ரீதரன் நாயர், நீலி என்ற ஹரிஜன பெண்ணைக் கெடுத்துவிட்டான். அவள் குழந்தையொன்றைப் பெற்றுவிட்டு இறந்து போனாள். அந்தக்



அடூர் கோபாலகிருஷ்ணன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஜெயராஜ்

குழந்தையை நாயர் என்ற தபாற்காரன் எடுத்து வளர்த்து வருகிறான். கிராமிய மக்கள் இந்தச் செயலைக்கண்டு அதிர்ச்சியடைகின்றனர். பின்னர் ஸ்ரீதரன் நாயர், குழந்தையில்லாத தன் மனைவியிடம் தான் தான் அந்த ஹரிஜன் குழந்தையின் தந்தை என்று, உண்மையை ஒப்புவிக்கிறான். வைதீக குடும்ப வாழ்வில், சாதி வேறுபாடுகளையப்படுவதைக் காட்டும் இந்த முற்போக்குப் படம் 1994ல் வெளியாகியது.

வைக்கம் முகம்மது பஷீர் திரைக்கதை எழுதித் திரை நாடகம் எழுதிய படம். "பார்கவி நிலையம்" நெறியாளர் ஏ. வின்சன்ட், பிரேம் நஸீர், மது, விஜய நிர்மலா போன்றவர்கள் இதில் நடிக்கிறார்கள். இது ஓர் மர்மக் கதை.

தகழி சிவசங்கரம் பிள்ளையின் நாவலைத் தழுவி, ராமு கிரியட் நெறிப்படுத்திய படம் செம்மீன். சத்யன், மது, ஷீலா போன்றோர் நடிக்கும் இப்படம் 60களின் பிற்பகுதியில், இங்கு காட்டப்பட்டது. கருத்தம்மா ஓர் இந்து. பாரிக்குட்டி ஓர் முஸ்லிம். இருவரும் காதலர்கள். ஆனால் சமுதாயம் அவர்களின் காதலுக்கு இடங்கொடுக்கவில்லை. கருத்தம்மா பழநியைக் கலியாணம் செய்து தனது பழைய காதலை மறந்து வாழ்கிறாள். கணவன் அவளை நம்புகிறான். ஆனால், ஒருநாள் கணவன் கடலில் மீன் பிடிக்கையில், காதலன் அவளைச் சந்திக்கிறான். இருவரும் தம்மை மறக்கின்றனர். கற்புக்குச் சவால் விடுக்கப்படுகிறது. கடலம்மா என்ற கடற்தெய்வம் அவர்களைப் பலிகொள்வதாகக் கதை முடிகின்றது. 60களில் இது புதுமையான வாழ்க்கை விளக்கப் படம் எனக்கருதப்பட்டது.

M. T. வாசுதேவன் நாயர் கதைவசனம் எழுதிய படம் ஒலவும் தீரவும், அலைகளும் கரையும். இது சோகத்தில் முடியும் ஒரு காதற்கதை. மது, உஷா நந்தினி ஆகியோர் நடித்துள்ளனர். இதன் நெறியாளர் P. N. மேனன்.

அனுபவங்கள் பளிச்சக்கால் தகர்ந்த அனுபவம், தகழி சிவகங்கரம்பிள்ளை எழுதிய நாவலொன்றைத் தழுவியது. நெறிப்படுத்தியவர் கே. எஸ். சேதுராமன் சத்யன், பிரேம் நஸீர், ஷீலா போன்றோர் நடித்து வெளிவந்த படம். 70களில் முக்கியமானதோர் படமாகக் கருதப்பட்டது. இங்கும் கணவன்-மனைவி உறவு புதிய கோணத்தில் காணப்படுகிறது.

தலைசிறந்த மலையாள நெறியாளர்களில் ஒருவராகிய மறைந்த எஸ். அரவிந்தன் நெறிப்படுத்திய படம் எஸ்தப்பன். 80 களில் இது வெளியாகியது. ஒரு பாத்திரத்தைப் பல்வேறு கோணங்களில் இருந்து ஆராயும் படம் இது. எலிப்பொறி என்ற பொருள்படும் எலிப்பத்தாயத்தை நெறிப்படுத்தியவர் உலகப் புகழ்பெற்ற அடூர் கோபாலகிருஷ்ணன். இதுவும் 1981ல் வெளியாகியது. மாறிவரும் சமுதாய மாற்றத்தில் தன்னை மாற்றிக்கொள்ள முடியாத நிலப்பிரபுத்துவ பேர்வழி ஒருவரின் கதை இது.

சாஜி என். கருண் நெறிப்படுத்திய பிறவி என்ற படம் 1988ல் தயாரிக்கப்பட்டபோதும், அண்மையில் இலங்கையிலே காட்டப்பட்டது. இந்த மகத்தான படம் கூறும் கதை நமக்கெல்லாம் பரிச்சயமான நம்நாட்டு இளைஞர்களின் கதைதான். அர்ச்சனா இந்தப் படத்தில் நடிக்கிறார்.


இஸ்லாமிய வாழ்க்கைக் கோலங்களைக் காட்டும் மக்ரிப் என்ற படம் 1993ல் வெளியாகியது. P. T. குன்றி முகம்மட் நெறுப்படுத்திய இப் படத்தில் முரளி, சரண்யா ஆகியோர் நடிக்கின்றனர்.

அர்ச்சனா நடிக்கும் சம்மோரணம் 1994ல் வெளியாகியது. C. P. பத்மகுமார் நெறிப்படுத்தியுள்ளார். இது நாட்டாரியல் கதையம்சத்தை உள்ளடக்கியது. ஒரு பெண்ணை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது.

மம்முட்டி, கௌதமி ஆகியோர் நடிக்கும் படம் சுக்ருதம் ஹரிகுமார் நெறியாள்கை. இறக்க இருந்தவன் உயிர் பிழைப்பதால், இறந்து விடுவான் என்ற எண்ணத்தில் திட்டங்கள் வகுத்தவர்களின் எண்ணம் தவிடுபொடியாவதை இப்படம் காட்டுகிறது. இப்படம் 1995ல் வெளியாகியது.

ரகுவரன், ஸ்ரீவித்யாவின் நடிப்பினால் சிறப்புற்ற தெய்வத்தின்ர விக்ருதிகள் 1995ல் வெளியாகியது. லெனின் ராஜேந்திரன் நெறிப்படுத்தியுள்ளார். இது பொருள் வசதிகளுக்குத் தன்னை உட்படுத்தவிரும்பாத கலைஞனின் கதை.

இவ்வாறு பற்பல விசயங்களைத் தொட்டு ஆராயும் மலையாளப் படங்கள் தரத்திலும் கலையம்சத்திலும் சிறப்புற்று விளங்குகின்றன.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழவனின் பாடல்

விருத்தாப்பிய சுருக்கத்துள்ளிருந்து
என் சிந்தனை விருட்ஷம்
முளைக்கிறது.

கிடுகிடு பயம் இதயம் முழுக்க
விரவிக் கொண்டேயிருக்கிறது.
மேலும் கீழும்
அசுர ராட்சசர்களாய்
நெருக்கம்.

குருதி தெறிக்க உதிரும்
கணப் பொழுதுகள் வரவும் வேண்டுமா?
சிறையிறுக்கம் காணும் எனது
குச்சு வீடு.

கண்ணிடுக்கிய வரண்ட எனது
பார்வையிருட்டு.
எந்தத் தேசத்தில் வாழ்கிறோம்.
எனது என்பதெல்லாம்
இல்லை......
எல்லாம் அந்நியம்.

தலை நிறைய புழுக்களைச்
சுமந்த தின அரித்தல்கள்.

ஏதாவதொரு சுற்றிவளைப்பில்
அடையாளம் காட்டாமல் போனதனால்
என் தசைகளில்
பிய்பட்ட தழும்புகளில் வேதனை
ஆறாதது.

பழைய காக்கி உடுப்பும்
பயம் காட்டும்படியான பூமியில்
அவதரித்தழிந்தேன்.

மூர்க்கமாய் வாழமுடியாத
காலங்களில் இருந்துகொண்டிருக்கிறேன்.

முரசுகளால் சிரித்து
முண்டி விழுங்கி உயிர் உதறும்போதும்
முக்காலில் நடந்து போக
கட்டளை.

தனிக்கட்டையானாலும் கேள்வி.
தடுமாறினாலும் பதில் சொல்லவேண்டுமே.

பயணத்தைப் பொதி செய்துவிட்டு
முடங்கலாம்.
வாய்க்கரிசிக்குப் பிச்சையாவது வேண்டுமே.

கணச் சுமைகளை அள்ளிக் காத்து
ஆயுள் சேட்டைகளை எந்த முடக்குகளில்
கொட்டுவது.

ஒண்டிக்கட்டை. உபத்திரவம்
ஆருக்கும் சுமைதான்.

விருத்தாப்பிய சுருக்கத்துள்ளிருந்து
என் சிந்தனை விருட்ஷம்
முளைக்கிறது.
ஒரு நாளிலாவது கருகியழியும். ஊழியும் தீண்டும்.

*அக்குறணை இளைய அப்துல்லாஹ்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூத்தரங்கின் புத்துருவாக்கம் ஒரு சுதேசிய நவீன வாதத்தின் திறவுகோல்

-சி. ஜெயசங்கர்-

தமிழ் பிரதேசங்களில் இன்றும் பாரம்பரியக் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. இவை பெரும்பாலும் பழைய தலை முறையினருக்கான பக்தி சார்ந்த கலையாக இயங்குவதையே அவதானிக்க முடிகிறது. மேற்குமயமாதல் அல்லது நவீனமயமாதல் எமது பாரம்பரியச் சங்கத்தின் மீது மாற்றத்தை தனித்துவிட நாம் புதியதான ஒரு சமூகச் சூழ்நிலையுள் இழுத்துவிடப்பட்டோம். இது காலனித்துவ நாடுகள் அனைத்துக்குமே பொதுவான ஒரு நிலைமை. பழையதைச் சுழற்றிவிடவும் முடியாத, புதியதை பற்றாது விட்டு விடவும் முடியாத நிலைமை. இந்த இரண்டு நிலைமைகளதும் தேவையானவற்றின் இணைவினூடாக புதியதொன்றினை நோக்கியதாகவே எமது தேடல் அமையும். அமைய வேண்டும்.

இது ஒரு தளத்தில் சுதேசியத் தன்மை யுடையதாகவும், இன்னொரு தளத்தில் சர்வ தேசத் தன்மையுடையதாகவும் விளங்குவதாக இருக்கும். காலனித்துவ நாடுகளுக்குரிய, மூன்றாம் உலக நாடுகள் என்று பொருளாதார அர்த்தத்தில் கொள்ளப்படுகின்ற நாடுகளது பொதுவான நோக்குநிலை இது. இந்த நாடுகளது அரங்குகள் தம் அகத்திருந்தும் புறத்திருந்தும் வரும் அடக்குமுறைகளுக்கு எதிராக இயங்க வேண்டியதாக உள்ளது.

இந்தப் பொதுவான நிலைமைகளில் இருந்து எங்களுக்குரிய குறிப்பான நிலைமைகளைக் கருத்துக்கெடுத்துக் கொள்ள விரும்புகிறேன். அதனையும், யாழ்ப்பாணத்து நிலைமைகளையும், அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டே எனது கருத்துக்களை முன்வைக்க விளைகின்றேன்.

யாழ்ப்பாணத்தின் கரையோரக் கிராமங்கள் இன்று சூனியப்பிரதேசங்களாகவும் இராணுவக் கிராமங்களாகவும் காணக்கிடக்கின்றன. முன்பு உடுக்கொலியும், மத்தள அடியும், காற்சலங்கை ஒலியும் கேட்ட அக்கிராமங்களில் இருந்து வேட்டொலிகளே இன்று வருகின்றன. உரத்து குரலெடுத்துப் பாடும் அண்ணாவி புலம்பெயர் கிராமமொன்றின் அகதிமுகாமில் வெறுங்கை தாளம்போட கூத்துப் பாடல்களை முணுமுணுத்த படியிருந்த காலமுமிருந்தது.

ஆனால் நாரந்தனையிலும், மெலிஞ்சி முனையிலும் படிக்கப்பட்ட கத்தோலிக்கக் கூத்துக்கள் இன்று யாழ்ப்பாண நகரில் படிக்கப் படுகிறது. கட்டுவனிலும், வீமன் காமத்திலும் அடிக்கப்பட்ட வீரபத்திர வசந்தன் உரும்பராயினும், மல்லாகத்திலும் மற்றும் பிற இடங்களிலும் அடிக்கப்படுகிறது. முன்பொரு காலம் பெரும் கூத்தர்கள் வாழ்ந்ததாக அறியக்கிடக்கும் இணுவில் கிராமத்தில் புலம்பெயர்ந்து வந்திருப்பவர்களால் உடுக்கடித்து காத்தான் கதை படிக்கப்படுவதை விளக்கற்ற இரவுகளில் இன்று கேட்கமுடிகிறது. இவ்வாறாக குடாநாட்டின் கிராமங்கள் இன்று புதிய சமூகவியற் பரிமாணங் கொண்டுள்ளன. இப்பொழுது ஊர்கள் புதியதாய் பிறந்திருக்கின்றன.

முன்பு கூத்துக்களில், புதிய சமகாலக் கதைகளை பாடியாடுவது பற்றிப் பேசுவதையே அபசாரமாக நினைத்த கூத்தரின் நம்பிக்கையில் இன்று பெரும் மாற்றம். யதார்த்தம் அவர்களை அவ்வாறு மாற்றிவிட்டது. தாறுகட்டி, முடிதரித்து, வாளேந்தி தருமபுத்திரனுக்கு ஆடும் கூத்தனே சீருடை அணிந்து, துப்பாக்கி ஏந்தி வீரமைந்தனுக்கும் ஆடுகின்றான். ஆனால் வாழ்த்தும், மங்களமும் அம்மனுக்குப் பாடுவதை அவனால் கைவிடவும் முடியவில்லை. இன்றைய யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய அரங்கின் புதிதான மாற்றம் இவ்வாறாக உள்ளது.

நாரந்தனையில் கத்தோலிக்கக் கூத்துக்களைப் பாடும் அருளப்பு அண்ணாவியார் "தம்பி! விட்டிட்டு வந்த வீடுவளவை நினைச்சு....., விட்டிட்டு வந்த பொருள் பண்டத்தை நினைச்சு....., அவிட்டும் விடாமல் ஓடிவந்த மாடுகளை நினைச்சு நினைச்சு எங்களைச் சாகடிக்காமல் வச்சிருக்கிறது இந்தக் கூத்துதான்" என்று கூறுவதிலிருந்தும், புலம்பெயர்ந்து வாழும் முகாமில், இரவு வேளைகளில் புதிதாய் அவர்கள் வாங்கிய தாளத்தைத் தட்டிக் கூத்துப் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பதிலிருந்தும் கூத்து அவர்களுக்கு வழங்கும் ஆன்ம வலுவை ஆழமாக உணரமுடிகிறது. இந்த ஆன்மவலுவே கூத்தையும் அச் சமூகத்தையும் இணைத்து வைத்திருக்கிறது. இந்தச் சக்திதான் இன்று அவர்களது தன்னம்பிக்கையின் ஆயுதமாகத் திகழ்கின்றது. தாளம் தட்டி கூத்தைப் படிக்கும் கணங்களில் தங்களது சொந்த இடங்களை நினைத்துக் கொள்கிறார்கள். சொந்த இடங்களுக்குத் திரும்பிவிடும் ஓர்மமுடையவராய் ஆகிவிடுவதை உணர்ந்து கொள்கிறார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுவனில் வீரபத்திரசாமிக்கு அடிக்கப்படும் வசந்தன், உரும்பிராய் வைரவர் கோயிலில் அடிக்கப்பட்டது. தமது சொந்தக் கிராமத்தில் இருந்து இரவோடிரவாகச் சிதறியோடிய பல்வேறு கிராமங்களிலும் தொங்கு சீவியம் நடத்தும் கட்டுவன் கிராம மக்கள் உரும்பிராய் வைரவர் கோயில் முன்றலில் ஒன்றுகூடினார்கள். கட்டுவன் வீரபத்திர கோவில் ஐயரே வைரவர் கோயிலிலும் பூசை வைத்து, பூசையில் வைத்த வசந்தன் அடிக்கும் கம்புகளை எடுத்துக் கொடுத்து வசந்தன் அடியைத் தொடக்கி வைக்கின்றார்.

"வசந்தன் அடிச்சா பன்னைக் கம்பால அடிக்க வேணும், வெங்கலச் சத்தமாய்க் கேட்கும். கட்டுவனிலையென்டா பன்னை நிறைஞ்சிருக்கும், இஞ்ச நாங்கள் பண்ணைக்கு எங்க போறது? வசந்தன் அடிக்க கொய்யாக் கம்பு பாவிக்கலாம். இஞ்ச நாங்கள் கொய்யாக் கம்புதான் பாவிக்கிறம். என்று கூறும் குருசாமியார், "இப்ப சின்னப் பெடியளை வலைபோட்டு பிடிச்சுத்தான் வசந்தன் அடிக்கிறம். முந்தியென்டா இளந்தாரிப் பெடியள் அடிப்பாங்கள். பார்க்க விறுவிறுப்பாய் இருக்கும்" என்றார். இப்பொழுது அவர்கள போய்விட்டார்கள்..........புலம் பெயர்ந்து அந்நிய தேசங்களுக்கு...... போர் முனைகளுக்கு..........போர்முனைகளில்.........அவர்கள் போய்விட்டார்கள்.

"இப்ப வசந்தன் அடிக்கிற பெடியள் படிக்கிறவங்கள். ரியூசன், படிப்பெண்டு நேரமில்லாம் ஆத்துப்பறந்து ஓடுறவங்கள், மிச்ச நேரத்திலையும் உவங்களை வலைவிரிச்சிப் பிடிச்சுத்தான் இப்ப வசந்தன் அடிக்கிறம்" என்று குருசாமியார் கூறுவது கூத்தில் இளைய தலைமுறையினரை ஈடுபடுத்துவதன் சிரமங்களையும், அதன் காரணங்களையும் விளங்கிக் கொள்ள வைக்கிறது.

உரும்பிராய் வைரவர் ஆலய முன்றலில் ஒலித்த வசந்தன் அடி ஒவ்வொரு மனங்களிலும் நம்பிக்கையாய் எதிரொலித்தபடி......."இதுகளைப் பார்க்க ஆசையா இருக்கு, சின்னப் பெடியள் ஈடுபாட்டுடன் ஆடுவதைப் பாக்க நம்பிக்கை வருது, எங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு" இது உரும்பிராயில் வசந்தன் ஆட்டம் நிறைவு பெற்ற பின்பு பார்த்தவர்களிடையே இடம்பெற்ற உரையாடல்களுள் ஒன்று. ஒவ்வொருவரது மனங்களிலும் பூரிப்பு. உரும்பிராய் கிராமமும் புதிதாய் ஒன்றைப் பார்த்து புளகாங்கிதம் அடைந்திருந்தது. கட்டுவன் வீரபத்திர வசந்தன் உரும்பிராயில், புதிய சூழ்நிலையில் புதிய பரிமாணத்துடன் வாழவும், வாழ்விக்கவும் தலைப்பட்டுள்ளது.

கட்டுவன் கிராம மக்களது தீராத துயரங்களில் உடைந்து போயிருக்கும் வீடொன்றில், அழிந்து போயிருக்கக்கூடிய வீரபத்திர வசந்தன் ஏட்டுச் சுவடியும் ஒன்றாய்ப் போயிற்று. குடாநாட்டின் பல கிராமங்களுக்கும் சிதறிப்போன மக்கள் ஒன்றுகூடும் இக்களத்தில் புலம்பெயர் சீவியத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அடுத்த வருடமாவது வீரபத்திரர் முன்றலில் ஒன்று கூடுவோமா? என்ற கனத்த எதிர்பார்ப்புடன் வைரவர் முன்றலில் வீரபத்திரரை உரத்து வேண்டி விடைபெற்றுக் கொள்கிறார்கள்.

புலம்பெயர்ந்த கிராமங்களது இயக்கம் இவ்வாறாக இருக்க, இதுவரை இடம்பெயராக் கிராமங்களில் கூத்து தனது வாழ்வுக்கான போராட்டத்துடன் தொடர்ந்தும் இயங்கி வருகிறது.

பொதுவாகவே கூத்தை ஆடுபவர்கள், "நாங்கள் சமய நம்பிக்கையின் காரணமாகவும், பொழுது போக்கிற்காகவும், சமூகத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனும் கூத்தை ஆடி வருகிறோம்" என்று சொல்லுகிறார்கள். கூத்து, அவர்களுக்கு இம்மூன்றையும் வழங்குகின்றது. மேலும் கூத்தாடுவது என்பது கடவுளுக்குக் காணிக்கை செலுத்தும் கைங்கரியமாகவும் காணப்படுகிறது. "எமக்கேற்பட்ட துன்பங்கள் தீரவேண்டுமென்று நேர்ந்து, எமது நேர்த்தியை சுவாமிக்கு தலையாகப் படைக்கிறோம்" என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறாக, பல்வேறு தளங்களில் இயங்கும் கூத்துக்கும், அதைப் பாரம்பரியமாக ஆடிவருபவர்களுக்குமான உறவு எத்தகையது என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

"எங்கட ஆக்கள் மட்டுந்தான் எங்கட கூத்தில ஆடுறது. வேறு ஆக்களைச் சேக்கவும் மாட்டம், அவை கேட்டாலும் சொல்லிக் குடுக்கவும் மாட்டம், இது எங்கட சொத்து, கூத்தை வேறே ஆக்களுக்குப் பழக்கிவிட்டால், அவை தங்கட என்று உரிமை கோரவும் முற்படுவினம். கூத்து எங்கட ரத்தத்தில ஊறினது. அப்பா, அம்மா எண்டு சொல்லத் தெரியாத பிள்ளையளுக்குக்கூட ஆட்டந்தானா வரும். தலைமுறை தலைமுறையா ஆடிவந்த கூத்தை நாங்களும் சிறப்பாய் ஆடி அடுத்த சந்ததிக்குக் குடுத்துப் போடவேணும். கூத்தை நாங்கள் எப்பவும் வருமான நோக்கோட செய்யிறேல்லை, பக்தி நோக்கத்தோடதான் செய்யிறனாங்கள்" என்கிறார் வட்டுக்கோட்டைக் கூத்தாடும் க. நாகப்பு.

கூத்தைப் பாரம்பரியமாக ஆடி வருபவர்களது நம்பிக்கையும், மனப்பாங்கும் இவ்வாறாக அமைய, புதியதும் அந்நியமானதுமான சமூகத்திலும் கூத்து அறிமுகமாகியுள்ளது.

அந்நிய தேசங்களுக்கு புலம்பெயர்ந்து போனவர்கள் அந்தந்தத் தேசங்களில் இப்பொழுது கூத்துக்களை ஆடி வருகின்றனர். அது தங்களுக்கு ஊரிலிருப்பதான உணர்வைத் தருவதாக பெற்றோர்களுக்கும் வீட்டிலிருப்பவர்களுக்கும் கடிதங்களில் எழுதிக் கொள்கிறார்கள். மேலும், நிறங்களுக்குப் பழக்கப்பட்டுப்போன சாதி வித்தியாசம் புரியாத மேலைத்தேசக் கண்களுக்கு புராதனமான அல்லது புதினமான ஒன்றைப் பார்க்கும் புளகாங்கிதம் வந்திருக்கும். மேலும் கூத்தாடுவது அவர்களது அடையாளத்தை வெளிப்படுத்துவதுடன் ஆதாயம் தரும் ஒன்றாகவும் இருக்கிறது. இவற்றையெல்லாம் பிறநாடுகளில் இருந்து அவர்கள் எழுதும் கடிதங்களில் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஊரில் ஆடப்படும் கூத்தை காசனுப்பி வீடியோ பண்ணுவித்து எடுத்துப் போட்டும் பார்க்கிறார்கள். மற்றவர்களுக்கு போட்டும் காட்டுகிறார்கள். கூத்தை ஆடக் கூடியவர்களுடன், வீடியோவைப் பார்த்து கூத்துப் பழகியவர்களும் சேர்ந்து ஆடுகிறார்கள். அதனை வீடியோவில் பதிப்பித்து ஊருக்கும் அனுப்பியுள்ளார்கள். கூத்துப் பாடல்களை அண்ணாவி தாளம் தட்டி மத்தள அடிக்கு பின்பாட்டுடன் பாட அதனை ஒலிப்பதிவு நாடாவைப் போட்டு அதற்கும் ஆடுகிறார்கள்.

இவ்வாறாக பாரம்பரியக் கூத்துகளது இருப்பும், அதனைப் பாரம்பரியமாக ஆடி வருபவர்களது நம்பிக்கைக்கும் தேவைக்கேற்ப அவற்றின் பரவுகையும், பேணுகையும் புதியதான நிலைமைகளில் இயங்குவதையும் தெளிவாகவே அவதானிக்க முடிகிறது.

நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்புடன் அறிமுகமாகிய கூத்துக்கலை, அச்சமூக அமைப்பு, அதன் சிந்தனை முறை நிலைத்திருக்கும்வரை உயர்ப்புடையதாக இருக்கும். அர்த்தமுடையதாக இயங்கும். பழைய சமூக அமைப்பு நிலையிழந்து புதியதன் வருகையுடன் புதிய கலைகளும் அறிமுகமாகும். அவற்றின் பொருள் புதிதாகும், சுவையும் புதிதாகும். இப்புதியதன் வருகை பழையதுடனான இளைய தலைமுறையினரின் ஈடுபாட்டைக் குறைத்துவிடும்.

எனவே, கூத்துத் தொடர்பாக நவீன அரங்கவியலாளரது பணி என்பது, கூத்தைப் பேணுவது அல்லது பராமரிப்பது என்பதாக இருப்பது எந்தளவிற்கு அர்த்தமுடையதாகிறது என்று கேட்டுக் கொள்வது அவசியமாய்ப் படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழரது பாரம்பரியக் கூத்தினுடைய இயக்கம் சமூகக் குழுமம் சார்ந்தது. எனவே கூத்தை ஆடும் சமூகக் குழுமத்தில் ஏற்படும் சிந்தனை மாற்றமே கூத்தினை பொருள் புதிது சுவை புதிது கொண்டதாய் ஆக்கும். இடத்தின் பெயரால், சாதியின் பெயரால், சமயத்தின் பெயரால் வழங்கப்படுகிற பாரம்பரியக் கூத்துக்களை, இவையெல்லாவற்றையும் கடந்த முழுச் சமூகத்திற்குரியதாக இயங்க வைப்பது பற்றிய சிந்தனையும், செயற்பாடுமே இன்றெமக்குத் தேவையாயுள்ளது. எனவே பாரம்பரிய அரங்கு பற்றிச் சிந்திக்கும் நாடக அரங்கவியலாளரது கவனம் அதனைப் புத்துருவாக்கம் செய்வதில் செல்ல வேண்டுமென்றே நான கருதுகிறேன்.

ஏனெனில், பாரம்பரியக் கூத்தைப் புனரமைப்பதும், மக்களது மூட நம்பிக்கைகளையும், பிற்போக்குத்தனமான கண்ணோட்டங்களையும் புனரமைப்பதன் மூலம் மக்களது முற்போக்கான சிந்தனை யோட்டத்திற்கு எதிராக, விழிப்புணர்வை மழுங்கடிக்கச் செய்து விடுகின்ற நடவடிக்கையாக அமைந்து விடுகின்றது.

நூற்றாண்டு காலமாக மக்கள் தமது நம்பிக்கைகளை வெளிப்படுத்திவந்த கூத்தின் மூலம் செயல்படுவது அவசியந்தான். ஆனால் பிரச்சினை என்னவென்றால் மரபார்ந்த கலை வடிவங்களுக்கு இணைந்துள்ள மூட நம்பிக்கைகளும் பிற்போக்கான கருத்துக்களும் இதற்கு இடையூறாக நிற்கின்றன.

தேசிய நாடகம் என்பது வடிவம் சார்ந்தது மட்டுமல்ல, படைப்பாக்கத்தின் நோக்கத்தையும், படைப்பாக்கத்தின் மதிப்பீட்டையும் சார்ந்தது. இதற்கு தேசத்தின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் வரலாற்று ரீதியாக ஆழமாக விளங்கிக் கொள்வதோடு, எதிர்காலம் பற்றிய தீர்க்கமான பார்வையும் இருக்க வேண்டும். எமது அரங்கு எப்பொழுது மக்களது வாழ்வை ஆழமாகப் பார்க்கத் தொடங்குகிறதோ, எப்பொழுது மக்களுக்காக தன்னை அர்ப்பணிக்கிறதோ அப்போது தேசியத் தன்மை என்பது எய்தப்பெறும்.

எமது பாரம்பரிய நாடகங்கள் மேலைத்தேச நாடகங்களிலிருந்து வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால், நிகழ்கால அனுபவங்களுக்கு, எதிர்பார்ப்புகளுக்கு எந்தளவிற்குத் துணைபுரிகின்றன என்ற கேள்வியை எழுப்புதல் இங்கு அவசியமாகிறது. ஏனெனில், பாரம்பரிய அரங்கு தர்மத்திற்கும் அதர்மத்திற்குமாக போரில் தர்மம் வெற்றி கொள்வதாக எளிமையாக சித்தரிக்கிறது. அது ஒவ்வொரு பாத்திரமும் தனித்த ஒரு பண்புடையதாக மட்டுமே சித்தரிக்கப் பட்டிருக்கும். இராமன் தர்மத்தின் பாத்திரம். இராவணன் அதர்மத்தின் பாத்திரம். இராமன் இராவணனை வெற்றி கொள்கிறான். ஒழுக்கப் பண்பை வலியுறுத்துவதாக பாரம்பரிய அரங்கு விளங்குகிறது.

ஆனால், தற்கால அனுபவமோ சிக்கலானது. தனித்த ஒரு மனிதப் பண்பென்பது இருப்பதில்லை. தனித்த மனிதனே உள்ளான். அவன் வேறு நபர்களுடன் தொடர்பு கொள்கிறான். ஒருவன் பல்வேறு மனிதர்களிடமும் தொடர்பு கொள்ளும்போது பல்வேறு தன்மையுடையவனாக இருக்கிறான். அவனுக்கு வீட்டு முகம், தெரு முகம், அலுவலக முகம் எனப் பல முகங்கள் இருப்பதை தெளிவாகவே காணமுடியும்.



எனவே, இத்தையதொரு சிக்கலான அனுபவத்தை எளிமையான அமைப்புடைய பாரம்பரியக் கூத்தினூடாக எவ்வாறு கொண்டு வருவது என்ற கேள்வி எழுகின்றது. மேலும், கூத்தினுடைய அளிக்கை அனுபவம், சமயம் சார்ந்த நம்பிக்கையுடன் இணைந்ததாக இருப்பதையும் நாங்கள் மனங்கொள்ள வேண்டும். எனவே, நிகழ்கால அனுபவத்தை வெளிப்படுத்த அமைப்பு ரீதியாகவும் ஆத்ம ரீதியாகவும் பொருத்தமற்ற பாரம்பரிய அரங்கை எவ்வாறு பொருத்தமுடையதாகப் பயன்படுத்திக்கொள்வது என்ற சிந்தனை எழுவது தவிர்க்க முடியாதது.

இங்கு, கூத்தரங்கினை புத்துருவாக்கம் செய்வது பற்றிய கருத்தை முன்பு கூறினேன். அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் வழி முறைகளை, என்னளவிலான சிந்தனைகளை அடிப்படையாகக்கொண்டு முன்வைக்க விரும்புகின்றேன்.

பாரம்பரிய அரங்கினைப் புத்துருவாக்கம் செய்வதென்பது அதனைத் தலைமுறை தலை முறையாக ஆடிவரும் சமூகக் குழுமத்தின் சிந்தனை மாற்றத்தினூடேயே முழுமையான தாகிறது. கூத்தரங்கின் புத்துருவாக்கம் பற்றிய சிந்தனை, அதனைப் பேணிவரும் சமூகக் குழுமத்தின் சிந்தனை மாற்றம் சமூக மாற்றம் பற்றியதாகவே இருக்க முடியுமென நம்புகிறேன்.

எனவே, கூத்தரங்குடன் தொடர்புடைய அரங்கவியலாளரது பணி, கூத்தைச் சுருக்கி எடுத்து நகரத்துக்குக் கொண்டுவருவதுடனோ அல்லது புதிய வியாக்கியானங்களுடன் கூத்து மாதிரிகளை அறிமுகப்படுத்தி விடுவதுடனோ முடிந்து விடுவதில்லை. அவர்களது பணி அதற்கும் அப்பாலானது.

பாரம்பரியச் சிந்தனைப் போக்குடன் போராடுவதும், புதிய நிலைமைகளைப் புரிந்து கொள்ள முனைவதும், உணர வைப்பதும். அவைகளைக் காவும் அமைப்பை, ஆற்றலை பாரம்பரிய அரங்கு கொண்டிருக்கிறதா என்பதை, அரங்கியல் ரீதியாக விளங்கிக் கொள்ள வைப்பதும், நிகழ்கால அனுபவங்களை முழுமையாக வெளிப்படுத்தும் சாத்தியப் பாடுகளைப் பற்றிச் சிந்திப்பதும், செயன்முறை அனுபவங்களுக்கு வருவதுமான ஒரு தொடரான நடைமுறையை மேற்கொள்ளுவதே அவசியமாகிறது.

இதற்கான வழிமுறையும் வித்தியா சமானதாகிறது. கூத்தை ஆடும் சமூகக் குழுமத்தினருடன் எங்களைப் பரிச்சயப்படுத்திக் கொள்வது, நட்புடன் அவர்களை விளங்கிக் கொள்ள முனைவது. எங்களது நோக்கங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வது, இதன்போதான எதிர்வினைகளை ஆராய்ந்து இருசாராருமாக அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து கொள்வது என்பதாக இதன் படிமுறை வளர்ச்சி தொடரும்.

இந்தச் செயன்முறை பாரம்பரியக் கூத்தாடும் களங்களில் நிகழ்த்தப்பட்டு மெல்ல மெல்ல வெளிநோக்கிக் கொண்டுவருவதாக இருக்கும்.

இந்த அனுபவம் நவீன நாடகங்களுக்கும் புதிய பரிமாணங்களைக் கொடுக்கும்.

இவை எங்களுக்கேயான கடந்த காலத்தில் வேர்கொண்டு, எதிர்காலத்தை நோக்காக வைத்து சமகால அனுபவங்களுடன் தொடர்பு கொண்டு சுதேசிய நவீனவாதத்தை விருத்தி செய்வதற்கு வழிவகுக்கும். இந்தச் செயற்பாடு அரங்குடன் மட்டும் தொடர்புடைய விடயமல்ல, சமகால உலகச் சூழ்நிலையின் பின்னணியில் முழுச் சமூகம் சார்ந்த விடயமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மலர்

மரம் வளர்ப்பீர் இன்னும் மலர்ச்செடிகள் பல நடுவீர்!
மலர்களுக்கு நல்ல
மவுசுளது நம்மண்ணில்.
அழகோடு, புனிதம், அர்ச்சனைகள் சாத்துப்படி
கலியாணம்,
சாந்திக் கட்டிலுக்கும் மட்டுமன்றி
மலர்வளையத்தின் தேவை மலிந்துளது நம்மண்ணில்
மரம் நடுவீர்!
ஆதலினால் மலர் வளங்கள் பலவளர்ப்பீர்!

## கை

என்கைகள்! ஷெல்லாம்
இடிவிழுந்து இற்றதனால்
சந்தோசம் என்றான் தளராமல்!
"என்னப்பா"!?
என்றேன்
இனியார்க்கும் கைகட்டத் தேவலையே
என்றான் தொழுதேன் எழுந்து!

## நீளாது இந்த நெருப்பு வெயில்

நாகப் படத்துக்குள் நிழலுக்கு இடம்தேடி
தேரையை ஒதுங்கவைக்கும்
தீவிபர்க்கும் பேய் வெய்யில்.
தீசிதித்தாற் போல் திரிகின்ற கால்; சிவந்து
போய்க்கருக......
நித்தம் பொசுங்கிய மெய் மென்மேலும்
நீறாக......
வாழ்வின் நிஜம் வரண்டு இளைத்தோய
மண்ணைக் கொழுத்துதிப்போ
மருளவைக்கும் போர் வெய்யில்!
எங்கள் பனைகளுக்கு நிழலில்லை ஷெல் தறிக்க
இங்கிருந்த ஆல். அரசும் இன்றில்லை
நிழல் தேடிச்
சென்றவர்க்குச் சீமைச்சிறை
நிழலாய் ஆனது காண்!
இங்கு வெயில் தாங்கி எழ எமக்கேன்! தில்! இல்லை?
கஷ்டம் சுமந்துமெல்லக் கால் ı ;தித்தால் அதைத்திட்டி
எட்டி உதைக்கின்ற
எவரெவர்க்கும் பூச்சூட்டி
பயிற்சி எடுத்தபயப் பரம்பரைகள்..... வழமைபோல்
வயிற்றுப் பிழைப்புக்காய் வரமிருக்கே......!
நாம் தெளிவோம்.!
பனைக்கு நிழலிலைதான் போகட்டும்! நாம்நாமே
எமக்கு நிழலாவோம்!
இளவேனில் வரும்தானே!

## எங்கிருந்தாலும் வாழ்க

நாம் உருண்ட முற்றம், நடைபாதை
ஒழுங்கையெல்லாம்
காய்ந்துலர்ந்த நாற்றாய் களையிழந்து மௌனிக்கும்.
பட்டப் பகல் முகத்தில் பயம் கவியும்.
ஓர்விரக்தி குடியிருக்கும்;
சோகம் குடி கெடுக்க எம் வயலில்
வெடி விளையும்!
மண்ணில் விளையாடும்"கால்" பிரியும்.
பள்ளிச் சீருடையைச் சாக்குப்பைப் பொதிகளுக்குள்
வெள்ளிக் கடல்முதுகு சுமந்துவர...........!
கோயிலுக்கு
செல்கையிலே உடையிழந்த! மலர்! மானம்போகாமல்
மண்மறைத்து வைக்க.......!
வரம், வசந்தம் தொலைந்தோடி
புன்னகையெம் வீட்டில் ı ;திராகும்!
கண்ணீரின்
நதிதிரண்டு மண்ணில் நதியில்லாக் குறையகற்றி.
சடலநிரை குவிந்து மலையில்லாத் தவிப்பாற்றி.
நாமுண்ட முற்றம்
நடைபாதை ஒழுங்கையெல்லாம்
தீக்குளிக்கும்!
இந்தத்! திருமண்ணில்! முளைத்துவிட்டு
இங்கெம் துயர்பகிர எண்ணாமல்......வேரைவெட்டி
எங்கோ செழிக்குமெம் "இனமாங்காள்".
உம்நாற்றை
இங்கிலீசில் வளர்த்தீர்.
இங்கிலீசில் படிப்பித்தீர்.
இங்கிலீசுக் காரன்போல்! எயிட்ஸ்! உழைத்து.....தமிழென்று
இங்கிலீசிலும் சொல்லல் இழிவென்றீர்.
எமை நினையீர்!
'ஊர்த்துயரைச் சாட்டி! உரம்பெற்று எங்கெங்கோ
வேர்பரப்பும் எங்கள் விதையுறவே!
இங்கேயெம்
தாயழுவாள்; நோய்க்கு மருந்தின்றி தாயிறப்பாள்;
நீர் தமிழை விற்றெம்
நிஜவாழ்வு பேர் மறந்து
வாழ்ந்துயர்க!
எம்மன் வாழும் நீர் செழித்திடுக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலடி

சண்முகம் சிவலிங்கம்

நான் உறங்கிப் போனது எனக்குத் தெரியும். நான் உறங்கப் போனதும் எனக்குத் தெரியும். உறக்கம் என்னை எங்கெல்லாமோ கொண்டு சென்றது. உறக்கத்தை நான் எங்கெல்லாமோ கொண்டு சென்றேன். புதிர்களை நான் அவிழ்த்துப் பார்த்தேன். புதிர்கள் என்னை அவிழ்த்துப் பார்த்தன.

தாத்மாவை நான் கண்டேன். துஷ்றிகியையும் நான் கண்டேன். தொலைந்து போன கிரகவாசியை கண்டேன். பாதாள மனிதர்களையும் பார்த்தேன். வியூகங்களை நான் அமைத்தேன். வியூகங்களை நான் உடைத்தேன். அண்டவெளி மனிதர்களையும் நான் அணுகினேன்.

உறக்கத்தில் எனக்கு நம்பிக்கை. உறக்கத்தின் உள்ளாழங்களிலும் எனக்கு நம்பிக்கை. உறக்கத்தின் உள்ளாழத்தில் உண்மைகள் வெளிப்படுகின்றன. உண்மையின் உள்ளாழத்தில் நினைவுகள் கனவுகளாகின்றன. கனவுகள் நினைவுகளாகின்றன.

நிவேதன் உடன் இருக்கும் வரையில் எந்த நினைவும் இந்த நிவேதைக்குப் பொருட்டல்ல. நினைவுகள் உடன் இருக்கும் வரையில் நிவேதன் உடன் இருக்க வேண்டும் என்பதுமில்லை, இந்த நிவேதைக்கு.

நிவேதை நான் உறங்கிய பின்புதான் உறங்க வருவார் நிவேதன் நான் உறங்கும் போதும் அவர் உறங்குவதும், உறங்காதிருப்பதும் எனக்குத் தெரியும் அவரோடுதான் நான் உறங்கினேன் அவர்தான் என்னை உறங்க வைத்துக் கொண்டிருந்தார்

என் விசாரணைகள் முடிந்து நான் வீடு திரும்பிய போது இரவு எட்டு மணியாயிற்று. 'அவர் கோபிப்பாரே' என்ற நினைவில் வானம் பொத்து மின்னல்கள் தெறித்தன. மின்விளக்கு ஒளிர்ந்த இரும்புக் கேற்றில் தலை முட்ட நின்று கண்களைத் துடைத்த பின்புதான் உள்ளே போக முடிந்தது.

என் கை நிறையச் சாமான்கள். தாத்மா தந்த MWG கருவிகளும் டிஸ்க்குகளும் மற்றும் துஷ்றிகியின் அல்பங்களும். சோபாக்களுக்கு நடுவில் உறங்கிக் கிடந்த என் பிள்ளைகளையோ அவர்களை அணைத்தபடி கிடந்த என் ஆச்சியையோ பரிவு கொள்ளும் நினைவற்று, இரண்டு எட்டில் பாய்ந்து போய் நான் அவரையே பார்த்தேன். கதவுத் திரைச்சீலையூடு கசியும் மின் வெளிச்சத்தில் அவர் தெரிந்தார், பேனாவும் கையுமாய், குனிந்த தலை சற்று நிமிர்ந்த புன்சிரிப்புடன்.

நான் சேலையை மாற்றினேனோ இல்லையோ, உடனடியாக தாத்மா சொன்னபடி, அவள் தந்த MWG கருவியில் டிஸ்க்கை இணைத்து டெக்குடன் தொடுத்தேன். என் தேடலின் கண்டுபிடிப்பை இதோ காணப்போகிறேன்.

அதற்கு முன்னதாக என் கைப்பையிலிந்த புகைப்படத்தை அவசரமாக எடுத்து மற்றுமொரு முறை பார்த்துக் கொண்டேன். தினமும் நூறு முறை பார்ப்பது வழக்கமாகிப் போய் விட்ட படம் அது. இதன் பின்பு அதைப் பார்க்கத் தேவையற்றுப் போகும் எனவும் நினைத்தேன்.

அந்தப் புகைப்படத்தில் பதித்திருந்த காலடி என்மனதிலும் பதிந்திருந்தது. அல்லது என் மனதில் பதிந்திருந்த காலடி தான் அந்த புகைப்படத்திலும் பதிந்திருந்தது என்பதும் உண்மையே. உண்மையில் அந்தக் காலடி முதன்முதலில் என் வீட்டு முற்றத்தில் பதிந்திருந்தது. அது வெறுமனே என் முற்றத்து மண்ணை அழுத்திய காலடி மட்டுமல்ல. என் நெஞ்சத்தை மிதித்த காலடி மாத்திரமல்ல. என் உயிர்ப் பொருளையே நசுக்கி, சாறாக்கி தூசாக்கிய காலடி. எந்த மர்ம மனிதனின் காலடி அது?



எந்த அகன்ற வெளி ஜெந்துவின் காலடி அது? இதை அறிவதில்தான் என் ஆர்வமும் தேடலும். யாருடைய காலடி அது?

தொலைந்து போன கிரகவாசிகளினுடையதா? தொலையாத பாதாளவாசிகளினுடையதா? யாரும் சந்தேகம் கொள்ள முடியாத அண்டவெளி மனிதர்களினுடையதா? அல்லது இவர்கள் யாருமற்ற அப்பாலான இன்னொரு பிரபஞ்சவாசியினுடையதா?

இந்த அப்பாலான மனிதர்களைப் பற்றிய தகவல்களை பெறுவதற்கான ஐஎஸ்ஐசிக்கு - (I S I C) போனபோதுதான் தாத்மா (MWG) கருவிகளையும் டிஸ்க்குகளையும் தந்தாள். I S I C என்பது, INTER STAR INFORMATION CENTRE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாத்மா ஓர் அழகிய பெண். ஒல்லியான தேகம் என்றாலும் மிக உறுதியானது. மின்வெட்டு போன்ற உதடுகள். என்னுடைய சாயல்தான் அவளுக்கும் என்று நினைத்தேன். என்னையே நான் பார்ப்பதைப் போலுமிருந்தது. என்னுடைய சேலையை அவளுக்குக் கொடுத்து, அவளுடைய நீண்ட அங்கியை நான் அணிந்து கொள்ள வேண்டும் போலிருந்தது.

துஷ்றிகியும் நீண்ட அங்கிதான் அணிந்திருந்தான். துஷ்றிகியின் முகத் தோற்றம் எனக்கு முன்பே பரீட்சையமானதுதான் எனினும், நிவேதனின் முகச்சாயலிலேயே துஷ்றிகியும் தெரிந்தான். அதே குறுந்தாடி மீசையும் ஒளி பொருந்திய முகமும்! துஷ்றிகியின் பாதங்களுக்கு தைலம் தடவியபடி, மின்வெட்டு உதடுகளில் நளினம் சுழியோட, உறுதியாக தாத்மா சொன்னாள்.

"நிவேதா, இந்த MWG டிஸ்க்குகள் என் நினைவுப் பதிவுகள். நீ அறிய விரும்புகிற எல்லா மனிதர்களும் இதில் வருகிறார்கள். நீ நினைத்த மாத்திரத்தில் அவர்களின் புகைப்படங்களை ஸ்ற்ரில்களாக இதிலிருந்து நீ பெற்றுக் கொள்ளலாம். அவர்களுடைய காலடித் தடயங்களைக் கூட புகைப் படங்களாகப் பெற்றுக் கொள்ளக் கூடும்."

தாத்மா சொன்னது போல சிவப்பு பொத்தானை அழுத்தினேன். டிஸ்க் பிளே ஆனது. ரீ. வீ. இன் திரையில் சலனங்கள் தோன்றின.

வட்ட நிலா வானம்.
நிலவைப் பார்த்து விட்டுத் திரும்பும் தாத்மாவின் வட்டமான முகம்.

கடல் வரையும் நீளும் கல்லறைகள்.
கல்லறைகளின் பின்னணியில்
துஷ்றிகியின் இளம் குறுந்தாடியும், நீண்ட கூந்தலும்
நேரிய மூக்குமான பளிச் சென்ற முகம்.

நெற்றியிலும்
காதோரக் கன்னங்களிலும்
ரத்தக் கறை.

கைகளிலும் பாதங்களிலும்
உள்ளும் புறமும் ஊடுருவிய காயங்கள்.

இடது விலாப் பக்க அங்கியில் இரத்தக் கறை.

நிலவில் பளிச்சிடும் ஈட்டி முனைகள்.

தாத்மாவையும் துஷ்றிகியையும் சுற்றி வட்டமாக நெருங்கும் ஈட்டி வீரர்கள்.

"கல்லறையை பிளந்து தப்பிய கலகக்காரன் துஷ்றிகி நீதானே,"
"நீயே சொல்கிறாய்."

நிலவின் புகாருக்குள் திடீரென எழும் புழுதி.

எ.்.றிப் பாயும் ஈட்டி முனைகள்.

புழுதியினூடு விட்டு விட்டு தெரியும் வீரனின் ஈட்டி ஓட்டங்கள்.

விட்டு விட்டு தெரியும் துஷ்றிகியின் முகம்.

பாதங்கள், பாதங்கள், பாதங்கள்.....

உயரும் பாதங்கள், ஊன்றும் பாதங்கள்......
கல்லில் இடறும் பாதங்கள், முள்ளில் துடிக்கும் பாதங்கள்.

இறங்கி வரும் மேடுகள், உயர்ந்து செல்லும் பள்ளங்கள்.

ஓடி வரும் காடுகள், ஓங்கி வரும் ஓடைகள்

வெளி, ......வெளி .... வெளி .... எல்லையில்லாத வெளி.
பூமியை எல்லாப் புறமும் மூடுகின்ற வானம்.


மீண்டும் கால்கள், மீண்டும் மீண்டும் கால்கள்.
ஓடும் கால்கள், ஓடி ஓடி ஓயாக் கால்கள்.

திரும்பிப் பார்க்கும் துஷ்றிகியின் முகம்
திரும்பிப் பார்க்கும் தாத்மாவின் முகம்.

அண்ணார்ந்து பார்க்கும் தாத்மாவின் முகம்
அண்ணார்ந்து பார்க்கும் துஷ்றிகியின் முகம்

மேலே ஆகாயத்தில், இன்னும் பின்னணியில்
துரத்துவது போல் ஒரு ஹெலிகொப்டர் நிழல்

நீண்ட அங்கிகளினிடத்தில் நெடிய காற்சட்டையும் ஷேர்ட்டும். நீண்ட கூந்தல்களினிடத்தில் தோளில் துள்ளும் ஹிப்பித் தலைமுடிகள். ஹிப்பித் தலைமுடிகளினிடத்தில் குறுணியாய் போன நீக்ரோ சுருள் சிவப்புத் தோலினிடத்தில் கறுப்புத் தோல். இடைக்கிடை இந்தியத் தோற்றம்,





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைக்கிடை சீனத் தோற்றம்... பட்பட்டென்று மாறும் பருவ காலங்கள்..... வெண்பனி வெளிகள்.... வானுயர்ந்த காடுகள்... சகாராப் பாலை வனங்கள்... பொன்மணல் சரிவுகள்.... ஒட்டகை தொடர்கள்... செம்மறி மேய்ச்சல்கள், ஸ்த்தெப்பிகள், கரைந்து வார்ந்தோடும் துருவப் பாளங்கள்....

இன்னும் கால்கள், இன்னும் கால்கள், ஆள் மாறி, அடையாளம் மாறி, தேசம் மாறி, இனம் மாறி, இன்னும் கால்கள், இன்னும் கால்கள், இன்னும் பாதங்கள், இன்னும் பாதங்கள்.........


இன்னும் அவர்களைத் துரத்தும் அந்த ஹெலிக்கொப்டர் நிழல்......

ஓடிக் களைத்து இனியும் ஓட முடியாத நிலையில் நின்று, குனிந்து, தவழ்ந்து, அண்ணார்ந்து பார்க்கும் தாத்மாவும் துஷ்றிகியும்.

"அவன்தான் தொலைந்து போன கிரகவாசி இலஸ்தாயு. கிளைடர். விமானத்தில் பறக்கிறான். விமானம் இயங்க மறுக்கும் போது அல்லது அவன் இறக்க முற்படும் போது மிதக்கும் பலூன்களை பரசூட் மாதிரிப் பாவிக்கிறான்"

"இறங்கப் போகிறானா?"

"ஏதோ ஒரு ஆபத்துக்குள் நம்மை இறக்கப்போகிறான்"



திரை முழுதும் இருள்.
இருளின் மெதுவான விடியல்.
இன்னும் கருக்கல்.
கருக்கலில் இருளோடு இருளாகத்
தெரியும் படிக்கட்டுகள்.
கீழிறங்கிச் செல்லும் படிக்கட்டுகள்.
இருளோடு இருளாக கிணற்றுக்குள்
இறங்குவது போன்று இறங்கும்
இரண்டு உருவங்கள்.
கிணற்றின் அடிவட்டத்தினூடு கசியும்
மங்கல் ஒளி.
கிணற்றின் அடிவட்டத்திலிருந்து
அகல விரியும் அகவுலகு.
மங்கல் ஒளியில் வழிதேடும்
தாத்மாவும் துஷ்றிகியும்
வெள்ளைப் புற்களும் மெலிந்து
நீண்ட வெளிறிய மரங்களும்.
காளான் வயல்கள்.
சுண்ணாம்பு நீர்ச் சுனைகள்.
மின்மினி பூச்சிகள். மின்மினி மரவட்டைகள். இராட்சதப் பாம்புகள் போன்று ஊர்ந்து செல்லும் பாம்பு முகத்து மனிதப் பரிணமிப்புகள்.

"எங்கு வந்திருக்கிறோம்?"

"ஒரு பாதாளக் கிராமம்"

வெள்ளைப் புற்கள் மிதிபட மிதிபட நடக்கும் தாத்மாவும் துஷ்றிகியும்
சுண்ணாம்பு நீர்ச்சுனைகள்!
சுண்ணாம்பு நீர்ச் சுனைகளைச் சுற்றி ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்பு முகத்து மனிதர்கள்.

நீச்சல் குளங்கள்.
நீச்சலடிப்பது போன்றும்..... குஸ்த்தி
பிடிப்பது போன்றும்.....
பாம்பு முகத்து மனிதர்களுடன் வேற்று முகத்து மனிதர்களும்
வேற்று முகத்து மனிதர்கள் பாம்பு முகத்து மனிதர்களினால்
மேலும் மேலும் நீருக்குள் அமிழ்த்தப் படுவது போன்று....

வெள்ளைப் புற்களை மிதிக்கின்ற வேகமான பாதங்கள்.
ஓடிச் செல்லும் சுண்ணாம்பு நீர்ச்சுனைகள்.
கரை ஒதுங்கி வரும் அழுகிய சடலங்கள்.
ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்புகள் முகத்து மனிதர்கள்.
ஒவ்வொரு முதுகிலும் சவங்கள்.
நீண்ட முதுகுகள்.
இடுப்பில் வளைந்து முன்னோக்கி நீண்ட முதுகுகள்.

நீண்ட முதுகுகளை தோள் மூட்டில் தாங்குவதான சிறிய முன்னவயங்கள்.
உயர்த்திய கழுத்தில் முட்டும் பிணத்தின் தலை.
சவங்களின் உருளை ஊர்வலம்.
நீண்டு மெலிந்து வெளிறிய மரங்கள் கரையிட்ட சாலைகள்.
இடையிடையே நீண்டுயர்ந்த குடைக்காளான்கள்.
குடைக்காளான்களின் இடையிடையே தரிக்கும்
ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்பு முகத்து மனிதரின்
நடைவண்டிப் பிண ஊர்திகள்
பிணவூர்திகள், பிணவூர்திகள்.

வெள்ளைப் புற்களை மிதித்து
நகரும் பிணவூர்திகள்.
ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்பு
முகத்து மனிதர்களின்
நீண்ட முதுகுப் பிணவூர்திகள்.

வெள்ளைப் புற்களைக் கடந்து
வரும் காளான் வயல்கள்.
காளான் வயல்களின் கருகிய
கோலங்கள்.
காளான் வயலில் சுண்ணக்
களிமண் சவப் புதையல்கள்.

"எவ்வளவு தூரமோ இந்த
இடுகாடு?"

"இது இடுகாடல்ல,
எலும்புகளின் பண்ணை."
வெள்ளைப் புற்களுக்கு பதில்
பொன்னிறப் புற்கள்.

பொன்னிற மண், பொன்னிற வெளி.
பொன்னிறப் புதர்கள், பொன்னிறக் கிடங்குகள்.

பொன்னிறக் கிடங்குகளில் தோண்டிய எலும்புப் புதையல்கள்.
எலும்புக் குவியல்கள், எலும்புக் குவியல்கள்,
மலை போன்ற எலும்புக் குவியல்கள்.
சுரங்கம் சுரங்கமாக எலும்பு வயல்கள்.
எலும்புச் சுரங்கங்கள், எலும்புச் சுரங்கங்கள்
சுரங்கப் பாதையிலிருந்து இரும்புத் தண்டவாளங்கள்.
இரும்புத் தண்டவாளங்களில் எலும்புகளை ஏற்றிச் செல்லும்
இயந்திர வாகனங்கள்.
"இந்த தண்டவாளத்தின் வழியே நாம் தப்பிப் போகலாமோ?"

"அந்த எலும்பு ட்ரக்கில் கூட நாம் ஏறிக் கொள்ளலாம்"

மெல்ல மெல்ல ஊர்ந்து செல்லும் ரயில் ட்ரக் பெட்டிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாம்பல் பொழுதை ஊடறுத்து, இமைப் புருவ மேட்டில் கை வைத்து, நீண்ட ரயில் ட்ரக் பெட்டித் தொடரின் ஓரமாய் கண்நோக்கும் துஷ்றிகியும் தாத்மாவும்.

தூர மெல்லிய, மங்கலான, வெண்புகை விட்டுச் செல்லும் வெண்ணிற எஞ்சின்.

கடைசி ட்ரக் பெட்டியில் கால் வைத்துக் தொற்றிக் கொள்ளும் துஷ்றிகியும் தாத்மாவும்.

ஊர்ந்து செல்லும் சாம்பல் நிறப் பொழுதும்
ஊர்ந்து செல்லும் ரயில் ட்ரக் பெட்டிகளும்.
மெல்லக் கடந்தோடும் மெலிந்து வெளிறிய நீண்ட மரங்கள்
வெள்ளை இலைகளுடன் அல்லது பொன்னிற இலைகளுடன்.
தூரத் தூர ஓடிவரும் மின்விளக்குக் கம்பங்கள்.
ஊதா நிற ஒளிர்வுகள்.
மெல்லக் கழிந்து, விட்டு விட்டு, இடையிடையே மெல்ல தோன்றி
மெல்ல மறையும் ஊதா நிற ஒளிர்வுகள்.

அடிக்கடி தோன்றும் ஊதாநிற ஒளிர்வு மின்விளக்குக் கம்பங்கள்.
நெருங்கி நெருங்கித் தோன்றும் ஊதா நிற மின் ஒளிர்வுக் கம்பங்கள்.
கொத்துக் கொத்தாய் தோன்றும் ஊதா நிற மின் ஒளிர்வுகள்.
கொத்துக் கொத்தாய் ஊர்ந்து வரும் ஊதா நிற மின் ஒளிர்வுகள்.

கொத்துக் கொத்தாய் சுழன்று வரும் ஊதாநிற மின் ஒளிர்வுகள்.
கூடிக் கூடி வலம் வரும் ஊதாநிற மின் ஒளிர்வுகள்.
கூடிக் கூடி ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்பு முகத்து மனிதர்கள்.
நெருங்கி நெருங்கி ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்பு முகத்து மனிதர்கள்.
பச்சை ஒளி சிந்தும் வாகனங்கள்.
குபு குபு என புகை கக்கி வரும் வாகனங்கள்.
வாகனங்களிடையே ஊர்ந்தூர்ந்து நெருங்கும் பாம்பு முகத்து மனிதர்.

"என்ன இது, இவ்வளவு திமுதிமுவும் ஒளிர்வுகளும்?"

"இது பாதாளத்தின் பட்டினப் பாக்கம். மெல்ல இறங்கி கொள்வோம்"

கடைசி ட்ரக் பெட்டியின் கையளவு சிவப்பொளி.

கையளவு சிவப்பொளி தூரித்துத் தூரித்து கண் அளவு ஆகி, கடுகளவு ஆகும் வரை கருக்கலிடை கருங்கோடாக நின்று விட்டு, நகர்ந்து, தூரத்து ஒளிச் சிதறலில் முகம் திருப்பும் தாத்மாவும் துஷ்றிகியும்.

திடிரென ஒளி வெள்ளம். திரை முழுதும் ஒளி வெள்ளம். ஒளி வெள்ளத்தில் கண்கள் கூசி, கால்கள் தடுமாறி, முகத்தை கைகளால் பொத்தும் தாத்மாவும் துஷ்றிகியும்.

குரல் : இந்த கணத்திலேயே நான் உன்னை சுட்டுப் பொசுக்கியிருப்பேன்,
நான் இந்த கிரகத்து வாசியாய் இருந்திருந்தால். எனினும்
இவ்வளவு தூரம் உன்னை கொண்டு வர முடிந்த எனக்கு
உன் இறுதியையும் காணமுடியாமலிருக்க முடியாது."

ஒளிக்கு முதுகு காட்டி ஓடும் தாத்மாவும் துஷ்றிகியும். பக்கவாட்டு மேற்கோணத்திலிருந்து நகரும் ஒளி வட்டம், விரையும் ஒளி வட்டம், துரத்தும் ஒளி வட்டம். நீரில் நீந்தி முகம் திருப்புவது போல், ஒளியில் நீந்தி, இடைக்கிடை, கண்ணிமைக்கும் கணப்பின்னத்தில் மின்னல் வீச்சில் முகம் காட்டி, முகம் திருப்பி, ஒளியுள் மூழ்கும் தாத்மாவும் துஷ்றிகியும்.

ஒளியின் பக்கவாட்டு வீச்சுக்கள்.
ஒளியின் தளம்பல்கள்.
ஒளியின் தடுமாறல்கள்.
ஒளியின் தேடல்கள்.
ஒளியின் தவிப்புகள்.

ஓடி ஓடி செல்லும் ஒளி. தூர தூரச் செல்லும் ஒளி. ஒளியின் மறைவிலிருந்து தலை நீட்டும் சாம்பல் நிறப் பொழுது. ஒளியின் கடைசிக் கண் சுருங்கலையும் நிமிர்த்தி நிரப்பும் சாம்பல் பொழுது. சாம்பல் பொழுதின் மங்கலில் தலைகாட்டும் கிடங்குச் சல்லடைகள். கிடங்குச் சல்லடைகளிலிருந்து கிளம்பும தாதமாவின் முகம், துஷ்றிகியின் முகம்.

கிடங்குச் சல்லடைகள், கிடங்குச் சல்லடைகள்.
மடங்கி வளைந்து, வளைந்து மடங்கி, மடங்கி வளையும் சல்லடைகள்
மடங்கி, மடங்கி, வளைந்து வளைந்து தாழ்ந்து தாழ்ந்து,
இறங்கி இறங்கி செல்லும் கிடங்குச் சல்லடைகள்.
இறங்க இறங்க கவியும் இருள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாம் இருள், திரை முழுதும் இருள்.
வெறும் மூச்சுகள் மட்டும். - இருளின் மூச்சுகள்.

இருளின் மூச்சுகளிடையே பாதாளத்து உதயம்.
மீண்டும் கொத்துக் கொத்தான ஊதா ஒளிர்வுகள்.
கொத்துக் கொத்தான ஊதா ஒளிர்வுகளிடையில்
முண்டியடிக்கும் ஊர்ந்தூர்ந்து செல்லும் பாம்பு முகத்து மாந்தர்.
முண்டியடிக்கும் மாந்தர்களை முறைப்படுத்தும் இயந்திர மனிதர்.
இயந்திர மனிதரில் முகமுள்ள சிலரும், முகமற்ற சிலரும்.
முகத்தை தலையில் கொளுவியோரும், கையில் கொளுவியோரும்

முகமற்ற மனிதரும், முகமற்ற முகமூடி மனிதரும்.
இயங்காத முகமற்ற மனிதரும் இயங்குகிற முகமற்ற முகமூடி மனிதரும்.

இயங்குகிற முகமூடியை கழற்றி இயங்காததாகச் செய்யும்
இன்னொரு இயங்கும் முகமூடி.

திடீரென மீண்டும் ஒளிவெள்ளம்.
திரை முழுதும் ஒளிவெள்ளம். சைறன் ஒலி.
ஒளி வெள்ளத்தில் கண்கள் கூசி, கால்கள் தடுமாறும்
தாத்மாவும் துஷ்றிகியும்
ஒளி வெள்ளம் நீங்க, சைறன் ஒலி தீர,
ஊதா ஒளிர்வில்,
சுற்றி வளைத்த முகமற்ற முகமூடி மனிதர்களுக்கிடையில்,
நிமிர்ந்து நிற்கும் ஆளுயரக் கழுகுக்கு நேருக்கு நேர்
துஷ்றிகியும் தாத்மாவும்.

ஆள் உயரக் கழுகு நேருக்கு நேர்.
செங்காவி நிற இறகுகளால் போர்த்த உடல்.
வெள்ளை பூஞ்சிறகுகளால் வேய்ந்த தலை.
மினுங்கும் பெரிய வட்டக் கண்கள்.
நீண்டு வளைந்த, வாய் அளவு அகன்ற பெரிய அலகு.
பாரிய செங்காவி நிற செட்டைகளின் மேல் இழுத்துப் போட்ட
பரசூட் பலூன்கள்.
விலகிச் செல்லும் முகமற்ற முகமூடி மனிதர்.
அலகு திறவா கழுகின் மனிதக் குரல்.

"என் பெயர் சடாயூ"
"அல்ல, இஸ்த்தாயூ"
"எதுவானால் என்ன?"
"நீ தொலைந்து போன கிரகவாசி."

"நான் ஏன் தொலைந்து போனேன்? எந்த நிலைமைகள் உன்னைப் போன்ற அண்டவெளி மனிதர்களை உருவாக்கியதோ, அதே நிலைமைகள்தான் என்னைப் போன்ற தொலைந்து போன கிரகவாசிகளையும் உருவாக்கியது."

"நான் அண்டவெளி மனிதன் அல்ல."
"நீ அண்டவெளியின் அண்டவெளி. நீ கலகக் காரர்களின் கலகக்காரன்.

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை நீ மீட்பாய் என நான் நம்பினேன். உன்னையே நீ மீட்க முடியாமல் மாட்டிக் கொண்டு அவஸ்த்தைப் பட்டாய்.
உன் அவஸ்த்தைகளே பெரும் அவஸ்த்தைகளாயிற்று.
உன் பாடுகளே பெரும் பாடுகளாயிற்று.
உன் பாடுகள் உன்னை மீட்பராக்கியது.
உன் பாடுகள் உன்னை விடுதலையோடு இணைத்தது
உன் பாடுகள் விடுதலையின் சங்கேதமாயிற்று
உன் பாடுகள் விடுதலையின் சங்கீதமாயிற்று.
உன் பாடுகள் விடுதலைப் போராளியின் பாடுகளுக்கு உயர்ந்தது.
நீ விடுதலையின் சின்னம் ஆனாய்.
அந்தச் சின்னத்தை அழிக்கவே நான் சிறகு கட்டினேன்.
வாக்கு பண்ணப்பட்ட தேசத்தை மீட்காது மாட்டிக் கொண்ட நீ எப்படி விடுதலையின் சின்னம் ஆகலாம்?"

செங்காவி இறகுச் செதில் போர்த்திய ஆளுயரக் கழுகின் கால்கள் நகர்ந்தன. முக்காலிப் பாதத்தின் குறுடுகள் தெரிந்தன.

பாரிய செங்காவி இறகுச் செட்டைகள் சற்று உயர்ந்து லேசாய் விரிந்தன. செட்டையின் ஓரம் உள்ள ஐவிரல் நீட்டங்கள் அசைந்தன.
பக்கத்தில் இருந்த முகமற்ற மனிதனைப் பற்றி இழுத்தன.
முகமற்ற மனிதனின் கையில் கொளுவியிருந்த முகமூடி தலைக்கு மாறியது.
தொலைந்து போன கிரகவாசியின் செட்டையின் ஓரத்து ஐவிரல் நீட்டங்கள் முகமற்ற மனிதனின் சில பொத்தான்களை அழுத்தின.

முகமற்ற மனிதன், முகமற்ற முகமூடி மனிதன் ஆகி உயிருறல் தெரிந்தது. தாத்மா கழுகின் செட்டையைப் பற்றினாள்.

" என்ன செய்யப் போகிறாய்? "

" நாற்பது வெள்ளிக் காசுக்காக நான் இதைச் செய்யவில்லை.
நாற்பது கோடி ரூபாவுக்காகவும் நான் இதைச் செய்யவில்லை.
எதிரும் புதிருமான இயங்கியலில் துஷ்றிகின் வேலையை துஷ்றிகி செய்தால் என் வேலையை நான் செய்கிறேன்...... "

உயிர் பெற்ற முகமற்ற முகமூடி மனிதனின் கண்களிலிருந்து பச்சை ஒளிக்கதிர். அவனுடைய கைவிரல் பொட்டுகளும் ஒளிர்ந்தன. கால் விரல் பொட்டுகளும் ஒளிர்ந்தன. முகமூடியில் கணனியின் திரை தெரிந்தது. திரையின் சதுரத் தீர்வில் துஷ்றிகியும் தாத்மாவும் தெரிய, அந்த இலக்கை நோக்கி அடி எடுத்து வைக்கும் முகமற்ற முகமூடி மனிதன்.

தாக்குதலுக்குத் தயாராகும் துஷ்றிகி.

முகமற்ற முகமூடி மனிதனின் பின்னால் பாயும் தாத்மா.

முகமூடி தளர நிலை தளம்பும் முகமற்ற முகமூடி மனிதன்.

துஷ்றிகியை இழுத்துக் கொண்டோடும் தாத்மா.

இடையில் பாயும் ஆளுயரக் கழுகு.

ஆளுயரக் கழுகின் நெஞ்சில் உதைக்கும் துஷ்றிகி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவிழ்ந்து விழும் ஆளுயரக் கழுகு. விழுந்த நிலையில், மின்னல் வேகத்தில் துஷ்றிகியின் பாதங்களைப் பின்னும் கழுகின் பாதங்கள்.

நிலை தளர்ந்து விழும் துஷ்றிகி.
துஷ்றிகியின் பாதங்களை மேலும் இறுக்கும் கழுகின் பாதங்கள்.

கழுகின் பாதங்களை அகட்டிப் பெயர்க்கும் தாத்மாவின் கைகள்.

கழுகின் பாதங்களை அகட்டி அகட்டி மேலும் அகட்டி இழுக்கும் தாத்மா. தாத்மாவின் கையோடு வந்து விடும் கழுகின் காலணிகள்.

நான் உஷாரானேன். கழுகின் காலணியை, தொலைந்து போன கிரகவாசியின் காலணியை, இதோ கண்முன் காண்கிறேன். சற்று மங்கலாக இருக்கிறதே என நினைக்கையில், மீண்டும் இயங்கத் தொடங்கிய முகமற்ற முகமூடி மனிதனின் கட்புள்ளி ஒளிர்க்கதிர்கள் காலணியில் தெறித்தன.

உடனே நான் MWG இன் கறுத்த நில பொத்தான்களை அழுத்த MWG இன் வெளியீடு வழியாக காலணியின் புகைப்படம் விழுந்ததை என்னால் நம்பவே முடியவில்லை.

துள்ளிக் குதித்தேன்.

உடனே அவரிடம் ஓடிப் போனேன்.

இரண்டு புகைப்படங்களையும் அவர் முன் வைத்தேன். " எப்படியும் கண்டு பிடித்தே தீருவேன் " என்று சூளுரைத்தவாறு வெளியில் வந்தேன்.

❑❑❑

வெளியில் நிலவு. பால் நிலவு. பகல் போன்ற நிலவு. பயங்கரிக்கும் நிலவு. கனவுகளில் காண்பது போன்ற நிலவு.

பயமாகவே இருந்தது. பயத்தை மீறும் கவர்ச்சியும் இருந்தது.

கிணற்றுக்கும் மாமரத்துக்குடையில் நடந்து, பின் மதிலின் மேலாகத் தெரியும் கோயில் வெளியைப் பார்த்தேன்.

வெள்ளை மணலுக்கும், கண்கூசும் நிலவுக்குமிடையே கலக்கும் மெல்லிய பனிப்புகார் ஊடே ஆவிகள் திரிவது போன்ற ஒரு பிரமை என்னை துணுக்குற வைத்தது. எனினும் வெறும் பிரமைதானே என சிலிர்க்கும் பயத்தை அடக்கிக் கொண்டு, கோயில் ஆலமரங்களின் இருட்கூடாரத்தைப் பார்த்தேன்.

கோயில் ஆல மரங்களின் இருட் கூடாரத்துள் புக முடியாமல், நிலவுக் கதிர்கள் முறிந்து தெறிந்தன. திடீரென ஆலமரங்களின் கீழே அடர்ந்திருந்த நிழலினுள்ளிருந்து அந்த கல் எறியும் சத்தம் -

" சலார்...... ச-லா-ர்..."

மரங்களுக்கு மேலே, வானில் கரும் புள்ளிகள் உயர்ந்தன. உயர்ந்த கரும்புள்ளிகள் ஒரு கணம் வானில் உறைந்தன. உறைந்தவை உறைந்த நிலையில். - எனக்கு திக் என்றது. உறைந்தவை மீண்டும் சலனமுற்று ஆலமரத்து மேற்பரப்புகளின் இருளுக்குள் இறங்கிப் புதைந்தன. மீண்டும் அந்தக்கல் எறி.

"சலார்....... ச-லா-ர் ... "

"அத்தான்! " . - என் ஆவி துடித்தது.

மீண்டும் ஆலமரத்திலிருந்து, ஆலமரத்துக்கு மேலே, வானில் கரும்புள்ளிகள் உயர்ந்தன. எனினும் இந்த முறை உயர்ந்த கரும் புள்ளிகள் உறையவில்லை. உயர்ந்த கரும் புள்ளிகள் வான மெங்கும பரந்தன. ஒவ்வொரு கரும் புள்ளியிலிருந்தும் ஒவ்வொரு வெளவால் வடிவம் விரிந்தது. மூஞ்சூறு வெளவால் அளவிலிருந்து காக்கை வெளவால் அளவுகள் தோன்றின. என் கண்கள் விரிந்த அளவுக்கு வெளவால்களின் அளவுகளும் விரிந்தன. விரிந்த பெரிய குரங்கு வெளவால்கள். வானமெங்கும் குரங்கு வெளவால்கள்.

எனக்கு ஏற்பட்ட திகிலில் நான் ஓடினேன். மாமரத்துக்கும் கிணற்றுக்குமிடையில் ஓடி, மண்டபத்தினுள் பாய்ந்து, அவருடைய அறைக்குள் எட்டிப்பார்த்தேன். அவர் இன்னும் எழுதிய படியே.......

"அத்தான்.... ஏன் அத்தான் உறங்குகிற அந்த வெளவால்களுக்கு உங்களவர்கள் கல் எறிய வேணும்?."

" வெளவால்கள் உறங்கத்தான் வேணும், ஆனால் கோயில் ஆலைகளில் அல்ல. கோயில் ஆலைகளில் வெளவால்கள் உறங்கக் கூடாது என்பது மட்டுமல்ல. அவை அங்கு தொங்கவும் கூடாது. வெளவால்கள் உறங்குவது பகலில்தான், இரவில் அல்லவே! "

அந்த குரலின் வன்மத்திலும், உறுமலிலும் கதவுத் திரைச் சீலை அதிர்ந்து நெளிவது போலிருந்தது. பூச்சூடிய படத்திற்குக் கீழிருந்த சிவப்பொளிர் விளக்கில் நெளிந்த சுடர்உரு, இன்னும் சற்று அதிகமாக நடுங்கித் துடிப்பது போலுமிருந்தது. அந்தக் குரல் என் செவிக்குள் இருந்ததா, என் மிடறுக்குள் இருந்ததா, புரியவில்லை என்னுள் புகுந்த ஆவியின் குரலா, என்னுள் வாழும் ஆவியின் குரலா என்பதும் தெரியவில்லை. நிலவின் பனிப்புகாருக்குள் உலவிய ஆவிகளின் நினைவில் உடல் சிலிர்த்தது.

❑❑❑

இரண்டாவது டிஸ்க் ஓடிக் கொண்டிருந்தது.

பரந்த நிலப் பரப்பின் வெளி எங்கும் குண்டுகள் வெடித்தன. வெடிக்கும் குண்டுகளிடையே தாத்மாவும் துஷ்றிகியும் புகுந்து புகுந்து போகப் போகக் குண்டுகள் வெடித்தன. தூரத் தூரத் தொடர்ந்து, குண்டுகள் வெடித்துக் கிளம்பிய குமுறல்கள் ஒவ்வொரு வெடிப்பிலும் வானுயர மண்ணும் கல்லும், ஒவ்வொரு வெடிப்பிலும் ஒவ்வொரு கிணறு.

ஏவுகணைகள் நெருப்பை கக்கின. வானம் தீப்பிடித்தது. விமானங்கள் தீப்பிடித்தன. கப்பல்கள் தீப்பிடித்தன. கடல்கள் தீப்பிடித்தன. பாட்டம் பாட்டமாய் விட்டில் பூச்சிகள் விளக்கில் வீழ்ந்தன. பாட்டம் பாட்டமாய்

அகதிப் பூச்சிகள் சிறகு முளைத்து தெருவில் அலைந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R U W A N D A எழுத்துக்கள்... அழுக்குப் படிந்த வெள்ளைக் கொங்கிறீற் பாளம். பாளத்தை ஏந்தும் கொங்கிறீற் தூண்களின் ஓரம் நீண்டுயர்ந்த புற்களின் மஞ்சள் நிறப்பூக்கள்.

அலைமோதும் நீக்கிரோ அகதிகள்.
பூஞ்சணம் பிடித்த முகங்கள்.
கூட்டம் கூட்டமாய் உயிர் தப்பி ஓடும் மான்களின் கூட்டம்
கூட்டம் கூட்டமாய் உயிர் தப்பி ஓடும் மனிதரின் கூட்டம்
கூடாரம் கூடாரமாய் அடைத்த ஆடு மாடுகள்.
கூடாரம் கூடாரமாய் அடைந்த மனிதர்களின் கூட்டம்.
கூடாரங்களில் மனிதர்களை ஆற்றுப் படுத்தும் தாத்மா துஷ்றிகி.

ஜோஜ் புஷ்ஷின் நீண்ட உருவப் படம்.
கல் எறியும் கைகள்.
பொத்தல் பொத்தலாய் ஜோஜ் புஷ் பொந்துபோகும் நிலை.
நீண்ட பதாகைகளும் கருந்தலைச் சமுத்திரமும்.

"HANDS OFF IRAQUE" பதாகையை தாங்கியபடி தாத்மாவும் துஷ்றிகியும்.

புரண்டு கிடக்கும் ரயில் பெட்டிகள்.
பழுப்பு நிற ரயில் பெட்டிகளில் மங்கலாய் போன வெண்ணிற எழுத்துக்கள்
Y U G O S L A V I A ......... Y U G O S L A V I A

Y U G O S L A V I Aஐ வெட்டிய கரிக்கோடுகள்.
பக்கத்தில் அதே கரியால் எழுதிய LONG LIVING SERBIA கோஷம்.
ரயில் பெட்டிகளைக் கடந்து வரும் படையினர்.
படையினரின் மார்பில் நேரே UNO PEACE KEEPING FORCE என்ற பட்டி.

U N O P E A C E K E E P I N G FORCE எழுதப்பட்ட வாகனங்கள்
UNO PEACE KEEPING FORCE வாகனங்களைச் செலுத்தி வரும் தாத்மாவும் துஷ்றிகியும்.

உடைக்கப்பட்ட லெனினின் சிலை.
கரிக்கோடு வெட்டிய ரஷ்ய எழுத்துப் பெயர்ப்பலகை.
குப்பைத் தொட்டியில் கிடக்கும் கோபச்சேர்வின் உருவப் படம்.
நியோன் விளக்கில் மினுங்கும் போரிஸ் யெல்ட்ஸ்யினின் இருவிரல் புன்னகை.
இருளில் முன்னேறிச் செல்லும் கவச வாகனங்கள்.
இருளிலேயே தகரும் கவச வாகனங்கள்.
புதர் மறைவில், நிலவொளிக் கீற்றுக்களில் வயர்களைப் புதைக்கும் துஷ்றிகி.
வாக்கி ரோக்கியுடன் உதடுகளும் கண்ணும் நெற்றியும் மாத்திரம்
நிலவுக் கீற்றுக்களில் நிழலாடும் தாத்மா -
"ஹலோ, ஹலோ, கோளிங் செர்ச்சினியா மௌண்ரன்............."
வாக்கியோடு பதிந்த தாத்மாவின் உதடுகள்.

சீக்கிய தாடியும் தலைப்பாகையும்.
இந்திய யுத்தத் தாங்கிகள்.
உறைபனி படர்ந்த வயல் வெளி.
இந்தியப் படைகளின் பங்கர் நிலைகள்.
எல்லைப்புற முட்கம்பி வேலிகள்.

துப்பாக்கிச் சூடு பட்டவனைத் தூக்கி ஓடும் கும்பல்
தூரத்தில் கோஷம் " KASHMIR FOR KASHMIRIS "
கும்பலில் மறைந்து துண்டு துணியாக தாத்மாவினதும் துஷ்றிகியினதும் முகங்கள்.

எரியும் கடல் - விரையும் படகுகள். - சுழலும் விமானங்கள்.
நெருப்புக்குள் நெருப்பாக தெரியும் துஷ்றிகின் முகம்
எரியும் கப்பலின் இறுதித் தளம்.
"கப்பலுடன் உட்ஸ்கி, கடலில் பாய்வோம், படகு காத்திருக்கிறது"
"இந்த கப்பலோடு சாம்பலாவேன். கடலில் குதிப்தற்கு ஆணை இல்லை."

" The boy on the burnig deck "
" yes அதற்கும் இந்தக் கழுகுகள் என்னை விடப்போவதில்லை. ஆனால் என்னை உயிருடன் அவர்கள் நெருங்க நான் விடப் போவதுமில்லை

"மாவீரன் உட்ஸ்கி!"

"அது என் மரணத்தின் பின் பேசப்பட வேண்டியது. நீங்கள் புறப்படுங்கள். நெருப்பு இன்னும் சூழ முதல வெளிப்புறமாகவே ஓட்டி இறங்கிப் பாயுங்கள்."

இருள். திரை முழுதும் இருள்.
கலங்கல். கலங்கலில் தெரியும் கடல்.
கடல், கடல், திரை முழுதும் கடல்.
கடலினுள் நீர்மூழ்கி. நீர்மூழ்கியினுள் மின்மினிகள்.
குகைப் பயணம். கொம்பியூட்டர் கருவிகள்.
தூரத்து ஒலி விம்பல்கள்.
அலை மேற்பரப்புக்கள். அலைகளின் மேற்பரப்பு சந்திரோதயம்
சந்திரோதயச் சிதறலில் படகுப் பரிமாற்றம்
அலைகளின் நடுவே படகுகள். கரை ஒதுங்கும் படகுகள்.
உதய சூரியனின் செவ்வொளிப் பந்து. உஷாவின் கிரணங்கள்.
கடலோரத் தென்னைகள். கடந்துசெல்லும் கரையோர மணல்வெளி
எழுத்தாணிப் பூண்டுகள், இராவணன் மீசைகள், அடம்பன் கொடிகள்
பின்னும் மணல் வெளி, பெரிய மணல் வெளி.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாழை மரங்கள், நிரையான தாழை மரங்கள், நீண்ட நிரைத்தாழை.
ஓடை, நீண்டு நெளியும் ஓடை, தாழை நிரைகளுக்கூடான ஓடை
ஓடையின் வழியே நடக்கும் இருசோடிக் கால்கள்.
ஓடை அகன்ற தடாகம். தடாகம் அகன்ற சிற்றேரி.
சிற்றேரி அகன்ற கடலேரி, கண்படுவரை நீள் கடலேரி.
கடலேரியின் இருகரையையும் இணைத்த கற்கட்டுச் சாலையின்
கற்றூண் நிரைகள்.

"அடே!" அதிசயத்துக்கு அளவில்லை. MWGஐ ஸ்டில் ஆக்கினேன்.

"அத்தான், இது நம்ம, . நம்ம.... கல்லிடையாற்றங்கரைதானே?"
வானம் பொத்து மின்னல்கள் தெறித்தன. மேசையில் முட்டினேன்.

"ங்காஆ, ஓம், ஓம், அப்படித்தான் தெரியுது"

தட்டித் தடவிக் கொண்டு ஆச்சி வந்து நின்றாள். மீண்டும் MWGஐ சலனமுறச் செய்தேன். அது கலிடையாற்றங்கரைதான். சிற்றேரித் தடாகத்தினுள், அதன் ஸ்படிக நீரை ஊடறுத்துக் கற்பாறைகள் தெரிந்தன. எங்கெல்லாமோ சென்ற தாத்மாவின் நினைவுப் பாதை எங்களது கல்லிடையாற்றங்கரையையும் ஊடறுத்திருப்பது பெரிய பாக்கியமாகவே பக்தி கொள்ளச் செய்தது. சந்தேகமில்லை. கல்லிடையாற்றங்கரைதான். பிரதான சாலையிலுள்ள வீடுகளைக்கூட அடையாளம் கண்டேன்.

மீண்டும் ஓடையும் தாழைமரங்களும்.
ஓடையினூடாக, தாழை மரங்களின் கீழாகச் செல்லும் பாதங்கள்.
பாதங்கள் முன்சென்ற திசைக்கு எதிர்த்திசை.
ஓடை முடியத் தோன்றும் பொட்டல் வெளி.
பற்றைகளும் பாடசாலைக் கூரைகளும்.
காட்டு வீதி வளைவு மூலையின் காஞ்சிரை மரம்.
மரமுந்திரிகைகளின் நிலம் சார்ந்த கந்துகள்.

காட்டு வீதியின் வளைவு நெளிவுகளுடே தெரியும் பிரதான வீதி.
இவைகளுக்கிடையேயுள்ள எத்தனையோ மரமுந்திரிகைக் கூடாரங்கள்.
எத்தனையோ மணல் மேடுகளும் மணல்மேடுகளுக்கிடையே
வளைந்து நெளியும் பள்ளப்பாடுகளும்.
பள்ளப்பாடுகளிலும் மணல் மேடுகளிலும் பரவித் தலையசைக்கும்
தவிட்டு நிறப் புற்களும் செங்களனி, வெண்களனிப் பூக்களும்.

"இது கல்லிடையாற்றங்கரை, இது கல்லிடையாற்றங்கரை"
ஆச்சியும் உரத்துக் கூறினாள்.

வானத்து நிலவு.
பார்த்துத் திரும்பும் தாத்மாவின் மங்கலான வட்டமான முகம்.
மீண்டும் நிலவைப் பார்க்கும் தாத்மா. நிலவோடு தெரியும் கடல்.
நிலவிலிருந்து திரும்பி இன்னொரு புறம் நோக்கும் தாத்மா.
நிலவில் மங்கலாகிப் போன மரமுந்திரிகைக் கிளைகள்.
நிலம் வழியக் கிடக்கும் மரமுந்திரிகைக் கிளைகளின் கூடாரம்.
மரமுந்திரிகைக் கூடாரத்தின் ஓரமாய் இன்னொரு கூடாரம்.
கூடாரத்துக்குச் சற்றுத் தள்ளி பல குடிசைகள் குடிசைகளின் ஒளிப்பொட்டுகள்.
குடிசைகளைக் கடந்து கூடாரத்தை நோக்கி நடக்கும் தாத்மா.
நிலவில், மணலில், கருந்தலைகள்.

கருந்தலைகளின் உள்ளிருந்து எழும் துஷ்றிகி.
துஷ்றிகியோடெழும் கருந்தலைகள். நிலவை நோக்கும் மங்கல் முகங்கள்.
கைகுலுக்கல்கள், கையசைப்புகள். பிரிந்து செல்லும் கருந்தலைகள்.
தனித்து வரும் துஷ்றிகியின் மங்கலான முகம்.

கூடாரத்தின் வாசலில், லந்தன் லாம்பு விளக்கொளியில் தாத்மா.
தாத்மாவைக் கடந்து உள்ளே செல்லும் துஷ்றிகி.
உள்ளே நடுவில் பெரிய மேசை. சுற்றிலும் கதிரைகள்.
பின்மூலைகளில் சிறிய மேசைகள். சமையல் பாத்திரங்கள். உணவு பாத்திரங்கள்.
லந்தன் விளக்கை எடுத்து, லந்தன் விளக்கில் முகம் சுடர
உள்ளே வரும் தாத்மா.

வெளியே வரும் துஷ்றிகி. துஷ்றிகியின் பக்கம் பார்த்தவாறே
உணவை பாத்திரங்களில் எடுக்கும் தாத்மா.
அண்ணார்ந்து பார்க்கும் துஷ்றிகி.
கூடாரத்தின் நெற்றியினூடு தெரியும் நிலவுப் பாளம்.
உணவை எடுத்து மேசையில் வைத்து கூடாரத்தின் முன் நடுக்கம்பத்தின் ஓரம்
துஷ்றிக்குப் பின்னால் நிற்கும் தாத்மா.

நிசப்தமாய்ப் போன நிலவும், மரமுந்திரிகைக் கூடாரங்களும்,
மணல் மேடுகளும், பள்ளப் பாடுகளும், இடுகாட்டுப் பூஞ்செடிகளும்.
மரமுந்திரிகைக் கூடாரங்கள்!
வெளியில் இலைகளில் மினுங்கும் நிலவு நெய்.

உள்ளே கொதுப்பும் இருட்குவியல்.
மணல் மேடுகளுக்கும் மரங்களுக்கும் அப்பால் நிலவு போர்த்திய இருட்குகை.

"என்ன துஷ்றிகி, இரவின் நிசப்தத்தை ரசிக்கிறாயா?"

"இரவின் பயங்கரத்தை அனுபவிக்கின்றேன். அந்த மணல் மேடுகளுக்கும் மரங்களுக்கும் கீழே, அடுத்த பக்கத்தில் ஓடும் பிரதான சாலையில் ஒரு சிவப்பு வெளிச்சம் தெரிந்தது."

"சாலையில் வாகனங்கள் சகஜம்"

"சகஜமான வேளையில் சகஜம். சகஜமல்லாத வேளையில் அபாயம்."

இருட்டு, மங்கலான இருட்டு. திரை முழுதும் மங்கலான இருட்டு.
கலங்கல். நிலவின் கலங்கல். திரை முழுதும் நிலவின் கலங்கல்.
கலங்கலிடையே ஒரு ஒளிப்பொட்டு. அடுத்தடுத்து இரு ஒளிப்பொட்டுகள்.
முன்பின்னாகத் தெரியும் ஒளிப்பொட்டுகள்...
மாறி மாறி பின்முன்னாகத் தெரியும் ஒளிப்பொட்டுக்கள்.
ஒரு ஒளிப் பொட்டுத் தெரிந்த இடத்தில் ஓர் அரைச் சுற்று ஒளிப்பொட்டுகள்
மறு ஒளிப்பொட்டின் இடத்திலும் அதே அரைச் சுற்று ஒளிப் பொட்டுகள்
கரிய உருவங்கள்.
இரண்டு அரைச்சுற்று ஒளிப் பொட்டுகளினதும் தாளயைத்தில் இடம் பெயரும்
கரிய உருவங்கள்.
கூடாரத்தை முன்னோக்கி நடந்து வரும் ஒற்றைக் கரிய உருவம்.
கரிய உருவத்தின் கால்பாதங்களின் விரல் பொட்டுகளில் மினுங்கும் ஒளிச்சரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்புள்ளிகளிலிருந்து பாயும் பச்சை ஒளியின் விரிகதிர்!
நிலவில் புலனாகும் பனிப்புகார் படலங்கள்.
படலத்துள் படலமாய் உருவற்றொலிக்கும் மெல்லிய காற்றோசை.
பட்டும் படாமலும் கேட்கும் கடலின் மெல்லிய அலையோசை.

ஓசையுள் ஓசையாய் உதிரும் சொற்கள்.

"மீண்டும் முகமற்ற முகமூடி மனிதர்கள்......"

"கல்லிடையாற்றங்கரையில் அவர்களைக் காணுகின்ற காலம்......."

மெல்லிய பனிப்புகாரிலிருந்து அடர்ந்த பனிப்புகார்.

மெல்லிய காற்றோசையிலிருந்து உறுமும் காற்றோசை
நிலவின் பனிப்புகாரினூடு மங்கலாய் தெரியும் கரிய உருவம்.
சடுதியாக உருவம் திரை முழுதும்.
உறுமும் காற்றூடே ஓங்கி விழும் கோடாரி.
இரும்புகளின் உச்சரிப்பு.
எ∴குகளின் இடிமுழக்கம்.
கூடாரத்தின் வாசலில் குறுக்காகக் கிடக்கும் முகமற்ற முகமூடிமனிதன்.
உயருகின்ற லந்தன். /கோடாரியுடன் லந்தனை உயர்த்தும் துஷ்றிகி.
முகமற்ற முகமூடி மனிதனின் முகமூடியை பிய்த்தெறியும் தாத்மா.
தலை வேறாய் உடல் வேறாய் கிடக்கும் கருநாகம்.
துடிக்கும் வால்.

கருநாகத்தின் துடிக்கும் வால்.
முகமற்றுப்போன முகமூடி மனிதனின் துடிக்கும் பாதங்கள்.
துடிக்கும் பாதங்களின் ஒளிரும் விரல் பொட்டுகள்.
ஒளிரும் விரல் பொட்டுகளில் உயிர்க்கும் பாதங்கள்.
உயிர்க்கும் வாலை உயர்த்தும் கருநாக முண்டம்.
உயிர்க்கும் பாதங்களை உயர்த்தும் முகமற்ற முகமூடி முண்டம்.
உயர்த்திய பாதங்கள் மீண்டும் மண்ணை உதைக்கும் பாதங்கள்.
சுற்றிச்சுற்றி மண்ணை தொட்டுச் சுழலும் பாதங்கள்.

கால் வட்டம், அரை வட்டம், முக்கால் வட்டம்...

முக்கால் வட்டத்தைத் தொட்டபடி கிடக்கும் முகமூடி...
முகமூடி காலில் முட்டியதும் முதுகை நிமிர்த்தும் கருந்தேள்.
இராட்சத நண்டின் இராட்சத இடுக்குங்கால்.

இரண்டு பாதங்களும் இணைந்த இடுக்குங்கால்.
இடுக்கங் கால்களால் இழுக்கப்படும் முகமூடி.
இடுக்கப்பட்ட முகமூடியுடன் உயிர்த்தெழுந்த கால்கள்.
உயிர்த்தெழுந்த கால்கள் வளைந்து தலையை தொடும் உயிர்ப்பாசனம்.

உயிர்ப்பாசனத்தில் திமிறிக் கொண்டு உயிரதெழும் முகமற்ற முகமூடி
உயிர்த்தெழுந்த முகமூடியின் விரல்கள் உமிழும் தீப்பொறி.
தூக்கிய கோடரியுடன்
துஷ்றிகியை இழுத்துக்கொண்டோடும் தாத்மா....

ஓடிவரும் மணல் மேடுகள்.
ஒதுங்கிக் கழியும் பள்ளப்பாடுகள்.

எழுந்து வரும் மரமுந்திரிகை இருட் கூடாரங்கள்
இருட் கூடாரத்தின் இருளோடு இருளான
தாத்மாவும் துஷ்றிகியும்

இருள். இருள். திரை முழுதும் இருள்.

சிறிது சிறிதாக கலங்கல்.
வட்டமான சிறிய ஒளிப் பொத்தல்கள்.
இலைகளின் வெள்ளிக் கோடுகளில் வெள்ளி மினுக்கம்.
கிளையில் குத்தும் நிலவுக் கோட்டில் தெரியும் கை விரல்கள்.
பெருமரத்தின் கறுத்தப் பட்டையில் விழும் நிலவுப் பொட்டில்
ஒரு குதிகால் ஓரம்.
அடுத்த கிளையில் விழும் நிலவுப் பொட்டில்
ஒரு கையின் மணிக்கட்டும் மணிக்கூடும்.
திரை முழுதும இலைகளுக்கிடையே நிலவுத் துளைகளின் சல்லடை

நிழல் உருவாய் தாத்மாவின் அசைவுகள்.
முகத்திலும் உடலிலும் நிழற்கோடுகள்.

நிலவு மங்கலில் மணல் மேடுகளும் பள்ளப் பாடுகளும்.
முகமற்ற முகமூடி மனிதர்களுக்கிடையே
ஆளுயரக் கழுகு. கெந்தி கெந்தி
செட்டை நீக்கி, திசைகாட்டும் ஆளுயரக் கழுகின் கை.

நிலவுப் பொட்டுகளிடையே உரசும் இலைகளின் ஓசை.

"துஷ்றிகி, கல்லிடையாற்றங்கரையில் முகமற்ற முகமூடி மனிதர்கள் தனியாக வரவில்லை. தொலைந்து போன கிரகவாசியின் துணையுடன்தான் வந்திருக்கிறார்கள்"

"கவனம், சுடப்போகிறார்கள். உன்னை நீ காப்பாற்றிக்கொள்"

நிலவில் நீளும் துப்பாக்கிகள்.
சடசடக்கும் ஒலிகள், தவிடுபொடியாகும் ஒலிகள்
திரை முழுதும் இலைப் பொத்தல்கள்.
பறந்து போகும் இலைகள். ஒடிந்து விழும் கிளைகள்.
மரத்தை இறுகப் பற்றிய உடும்பு
கைகளிலும் பொத்தல், கால்களிலும் பொத்தல்,
விலாவிலும் பொத்தல்
தலையில் சிராய்வுகள்
எனினும் பிடி தளரா உடும்பின் சிலுவையேற்றம்.

மரத்திற்குப் புறம் காட்டும் முகமற்ற முகமூடி மனிதர்கள்.
வேறு மரங்களைச் சுற்றிவரும் ஆளுயரக் கழுகு கெந்தி கெந்தி.

இருளுக்கும் நிலவுக்குமிடையில்,
மரங்களுக்கும் புதர்களுக்கு மிடையில்
துஷ்றிகியைச் சுமந்து செல்லும் தாத்மா.

மங்கல், மங்கல், திரை முழுதும் மங்கல்.

மங்கல் திரையை மறுபடியும் பிளக்கும் வேட்டொலிகள்.

மங்கலுக்குள் மங்கலாக வேலியூடே வழி எடுத்து
துஷ்றிகியை இன்னும் தூக்கிச் செல்லும் தாத்மா.

மங்கல், வெறும் மங்கல்.
தூர ஒலிக்கும் துப்பாக்கி வேட்டுகள்.
நிலவின் மர நிழல்களுக்கிடையில் தொங்கும் உருவமும



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூக்கிச் செல்லும் உருவமும்.
மங்கலாக உடைந்த ஒரு கட்டிடம்.
உடைந்த கட்டிடத்துள் தூக்கிய உடலுடன் புகுந்து புறப்படும் உருவம்.

கிணறும் வாழைகளும்.
கிணற்றுக்குப் பக்கத்தில் உடைந்த கட்டிடத்தின் நெற்றிமுட்டு.
நெற்றிமுட்டு சுவரோடு இணைந்து நிலத்துள் பதிந்த தொட்டிகள்.
கல்லறை போன்ற தொட்டிகள்.
தொங்கும் துஷ்றிகியுடன் கல்லறையுள் இறங்கும் தாத்மா.
நிலவு மங்கலில் நீட்டி நிமிர்ந்து கல்லறையினுள் துயிலும் துஷ்றிகி.
உடைந்து கிடக்கும் கதவை உருட்டிப் புரட்டும் தாத்மா.
கல்லறையை ஒருக்கணித்து கட்டிடத்தின் நெற்றிமுட்டில் சாயும் கதவு.
அடுத்த தொட்டி விளிம்பில் அமரும் தாத்மா.
எழுந்து நடக்கும் தாத்மா.
நிலவின் மங்கலில் மரங்களின் நிழல்களுக்கிடையில் ஓடிச் செல்லும் தாத்மா.
உடைந்த வேலி. உடைந்த வேலியின் ஓரம் தெரியும் கோடாரி மினுக்கல்.
கோடாரியை எடுத்து, புதர்களைக் கடந்து.......
கல்லறையில் காவல் இருக்கும் தாத்மா.
கோடாரி, கோடாரி, கதவில் சார்த்தியிருக்கும் கோடாரி.
சட்டென ஒளிரும் கைவிரல்கள். தாத்மாவின் கைவிரல்கள்.
விட்டு விட்டு ஒளிரும் நகப் பொட்டுக்கள்.
கீச் கீச் ஒலிகள்.
மோதிர விரலின் வளையத்தில் சிவப்பு ஒளிர்வு.

"நாத்மா....தாத்மா.....ஜஎஸ்ஜசீ....ஸ்பேஸ்மேன் 1046
கோளிங்.....கோளிங்....."

"யெஸ்..யெஸ்..தாத்மா. ஹியர், தாத்மா ஹியர் 014 கேஸி....
கல்லிடையாற்றங்கரை, உடைந்த ரைஸ் மில்....ரைஸ்மில்

ரைஸ்மில்லின் தொட்டி ஒன்றை துஷ்றிகியின் கல்லறையாக்கி இருக்கிறேன்....
இரண்டு கைகளிலும் சூடு, இரண்டு பாதங்களிலும் சூடு.

நெற்றியிலும் பிடரியிலும், மேல் மண்டையோட்டுக் கன்னங்களிலும்
குண்டுகள் சிராய்த்து ரத்தம் கசிகிறது......
இடது புற விலாவில் ஒரு குண்டு பாய்ந்திருக்கிறது......."

"சரி, சரி, கல்லறையை நாங்கள் கவனிக்கிறோம்.
நீ தொலைந்து போன கிரகவாசியை தொடர்ந்து போக வேண்டியிருக்கிறது"

தாத்மாவின் கைவிரல் நகப்பொட்டொளிர்வுகள் அணைகின்றன.
மோதிர விரல் வளையத்தின் சிவப்பு ஒளிர்வும் அணைகிறது.
கோடாரியைப் பிடித்து ஊன்றி எழும் தாத்மா.

இருட்கலங்கல்.
அண்ணார்ந்து பார்க்கும் தாத்மாவின் புறவரிக்கோடு.
நிலவை அப்புகிற மேகம்.
இன்னும் இருட்கலங்கல்.
தூரத்து பச்சை ஒளிக் கற்றைகள்.
பச்சை ஒளிக் கற்றைகளை வீசும் கட்பொட்டுகளின் உருவம்.
ஒரு பிசாசின் கறுத்த நிழல்.
கோடாரியுடன் மறைந்து கொள்ளும் தாத்மா.

இன்னும் இருட்கலங்கல்.
இருட்கலங்கலுக்குள் தடார் என மோதும் ஒலி.
காலணி ஒளிர்வுகளுடன் தரையில் புரளும் முகமற்ற முகமுடி மனிதன்.
முகமூடியைப் பிய்த்து எறியும் தாத்மா, மங்கலாக.
சுழன்றுவரும் முகமற்ற முகமூடி மனிதனின் ஒளிரும் பாதங்கள்.
ஒளிரும் பாதங்களை கோடாரியால் மோதும் தாத்மா, கலங்கலாக.
சிதறும் காலணிகள். சிதறும் காலணிகளைப் பொறுக்கும் தாத்மா.

நான் உஷாரானேன்.
பொறுக்கிய காலணியின் புறப்பக்கத்தையும் உட்பக்கத்தையும்
புரட்டிப் பார்க்கும் தாத்மா.
உட்பக்கம் தெரியக் காத்திருந்து பொத்தான்களை அழுத்தினேன்.

வெளியீடு வழியாக முகமற்ற முகமுடி மனிதனின் காலணிப் புகைப்படம்!
ஒரு பாதாள வாசியின் காலணிப் படம், என் கையில்! நம்ப முடியுமா?
மீண்டும் நான் துள்ளிக் குதித்தேன். என் கணவரிடம் ஓடிப்போனேன்.
பட்டென மின்சாரம் அறுந்தது. நான் வெளியில் இறங்கினேன்.

வெளியில் நிலவு உச்சிக்கு மேலிருந்தது. ஒரு நிழல் கூட இல்லை. எல்லா நிழல்களும் மரங்களுக்குள் அடங்கிவிட்டன. நிழல்கள் எல்லாம் பயந்து ஒளித்துக் கொண்டது போல் இருந்தது. நிலவின் ஆட்சி! நிலவின் மண்டையோட்டுப் பற்களின் அகோரம் தெரிந்தது. சாவின் பல்லிளிப்புத்தான் நிலவு என்பது போல் எனக்குத் தெரிந்தது. உலகம் முழுவதையும் உறக்கத்தில் ஆழ்த்திவிட்டு, மேய்ந்து திரியும் பிசாசுகளின் மூச்சுத்தான் இந்த நிலவு எனவும் எனக்குத் தோன்றியது. எனினும் சமுத்திரத்துள் இழுபட்டுப் போகும் ஜீவனைப் போல் அந்த நிலவுக்குள் நான் இழுபட்டுப் போய்க் கொண்டிருந்தேன்.

கிணற்றுக்கும் மாமரத்துக்குமிடையில் நடந்து, பின் மதிலை நெருங்கிப் போகத் தெரிந்தது, வானம் முழுதும் வௌவால்கள். விரித்துப் பறக்கும் சிறகுகளுடன். கோயில் வெளி முழுவதையும் ஆக்கிரமிக்க, உலகத்தி உள்ள குரங்கு வௌவால்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து விட்டதைப் போல் தோன்றியது. ஒவ்வொரு வௌவாலும் ஒவ்வொரு கப்பல் போல் பறந்தது. கோயில் வெளியின் வானம் முழுதும் பறந்து திரிந்தவை கடைசியில் எங்கள் வீட்டுப் பக்கம் நோக்கிப் பறந்து வந்தன. பறக்கின்றன, பறக்கின்றன, ஒரு நீண்ட தொடராகப் பறக்கின்றன. ஜென்மாந்திர ஜென்மாந்திர காலந்தொட்டுப் பறப்பன போல் பறக்கின்றன. ஒரு அணியில் பறந்து வந்தவை, இரண்டு, மூன்று, நான்கு அணிகளில் பறந்து வருகின்றன. இதோ, இதோ, எங்கள் பின் மதிலுக்கு மேலாகப் பறக்கின்றன. எங்கள் மாமரத்தின் மேலாகப் பறக்கின்றன. எங்கள் கிணற்றுக்கு மேலாகவும் பறக்கின்றன. இதோ, இதோ, என் தலைக்கு மேலாகவும் பறக்கின்றன, பறக்கின்றன, பறக்கின்றன, பறக்கின்றன..............

"அத்தான், அத்தான்,........."

நான் வீரிட்டுக் கத்தியபடி உள்ளுக்குள் ஓடினேன்.

மின்சாரம் வந்திருந்தது.
விளக்குகள் ஒளிர்ந்தன.
அவர் இன்னும் பேனாவும் கையுமாய்......

"எப்போது அத்தான் ஓயும் இந்த எழுத்துக்கள்? வௌவால்கள்
நம் வீட்டு வாசல்வரை அல்லவா வந்து விட்டன?"

"வரட்டும், வரட்டும்......" சற்று நிமிர்ந்து பார்த்த புன்னகை. அவருடைய
குரல் என்னுள் ஒலித்தது.

❑❑❑

மூன்றாவது டிஸ்க் ஓடிக் கொண்டிருந்தது.

கொழுந்து விட்டெரியும் நீண்ட பெரிய தீக்குழி.
கொழுந்து விட்டெரியும் தீக்குழிச் சுவாலையில்
கொழுந்துகள் கருகும் துவாரகா யுகத்து ஆலமரங்கள்.

தலைகள், தலைகள், ஜனசமுத்திரத்தின் கருந்தலைகள்.

வால் வெள்ளிகளின் வீச்சு.
வடக்குத் தெற்காய், கிழக்கு மேற்காய், குறுக்கு மறுக்காய்,
வால் வெள்ளிகளின் வீச்சு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நட்சத்திரங்கள் இறங்குகின்றன, நட்சத்திரங்கள் இறங்குகின்றன"
சமுத்திரத்தின் குரல்.

"அரோகரா, சாமிக்கு அரோகரா"

வானத்தில் புதைந்து கிடக்கும் மாலைச் சூரியனின் தேர்ச்சில்.
தேர்ச்சில்லைப் பிடித்தபடி கண்ணீர் சிந்தும் மேகக்கிழவி.

"பகவானே, பகவானே, என் மகனின் கிரகம் தொலைந்து போயிற்று. தொலைந்து போன கிரகவாசிகளை சுட்டுக் கொல்ல அண்டவெளி மனிதர்கள் கோயில் வெளியில் வந்திருக்கிறார்களாம். என் மகனைக் காப்பாற்று, பகவானே, என் மகனைக் காப்பாற்று"

சூரியனின் தோடம்பழச் சிவப்பு முகத்தில் ஈயாட்டம் இல்லை.
கலவரத்துடன் கீழே பார்க்கும் கிழவி.

சனசமுத்திரத்தின் மத்தியில் ஒரு கரகாட்ட மைதானம்.
உடல் முழுதும் மஞ்சள் பூசிய ஆண்களும் பெண்களும்.
ஆண்களுடைய இடையில் ஒரு துண்டு மாத்திரம்.
பெண்களுடைய இடையிலும், உடுகின் நடுவில் உள்ளது போல்,
ஒரு துண்டு மாத்திரம்.
ஆண்களையும் பெண்களையும் பிரித்தறியலாம்.


ஓவியம்: அருந்ததி

ஒரு பெண்ணை இன்னொரு பெண்ணிலிருந்து பிரித்தறிய முடியவில்லை.
உயரமும், உடுவின் நடுவிலிருந்துள்ள மேலும் கீழும் ஒரே அளவில்.
ஒரு ஆணை இன்னொரு ஆணிலிருந்தும் பிரித்தறிய முடியவில்லை.
உயரமும் புயங்களும் உடற்கட்டும் ஒரே அளவில்.

கரகாட்டத்தின் ஒய்யார அசைவுக் கோலங்கள்
கதகளியின் உருவம் பெறுகின்றன.
சுழன்று சுழன்றசையும் தொங்கினாக்கள்.
தெளிவாகத் தெரிந்த செம்புக் குடங்களின் நூல்கள்
இப்போது தெளிவற்றுப் போகின்றன.
பார்வைக்குத் தெரிந்த பத்திரக் கொத்தின் சிற்றிலைகள்
இப்போது கொத்துக்குள் பூசிய பச்சை வர்ணமாய் மாத்திரம்.

சுழற்சிகள் வேகத்தை மென்மேலும் தொடுகின்றன.

ஒரு ஆண் கரகாட்டக்காரனை, ஒரு பெண் கரகாட்டக்காரி
தொடர்ந்தும் தொடர்ந்தும் மறித்தும் நெருக்கியும் ஆடுகிறாள்.

"நீ ஏன் தொடர்ந்தும் தொடர்ந்தும் மறித்தும் என்னை நெருக்கியும் ஆடுகிறாய்?"

"நீ எங்களை தொடர்ந்தும் தொடர்ந்தும் மறித்தும் நெருக்கியும் கொண்டிருப்பதால்"

"யார் நீ?"

"நீ யாரென்பது எனக்குத் தெரியுமானால், நான் யாரென்பதும் உனக்குத் தெரியும்"

"நான் யாரென்பது உனக்குத் தெரியுமா?"

"தொலைந்து போன கிரகவாசி"

"தொலைந்து போன கிரகவாசியின் தோற்றம் வேறு....."

"உன் நிழலைக்கூட நான் அறிவேன். கெந்திக் கெந்தி ஆடுகிறாயே, நான் உன் பாதங்களை அகட்டித் திருகியபோது ஏற்பட்ட ஊனத்தினால் அது என்பது எனக்குத் தெரியாதா? இந்த மஞ்சள் பூச்சையும் மீறி, உன் புயத்திலும் முன்னங்கையிலும் உள்ள தழும்புகள் சொல்கின்றனவே, நீ சிறகு கட்டி கிளைடரில் பறந்த சேதியை"

"தாத்மா, நீ என்னை விட்டு விலகி ஆடு"

"உன்னை விட்டு விலக வேண்டிய நிமிடம் ஒன்று வரும் அதுவரையில் இல்லை"

மஞ்சள் பூசிய கரகாட்டக்காரனான தொலைந்து போன கிரகவாசி
ஆடிக் கொண்டே சுற்றிவரப் பார்க்கிறான்.

மஞ்சள் பூசிய கரகாட்டக்காரியான தாத்மாவும்
ஆடிக் கொண்டே சுற்றிவரப் பார்க்கிறாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆடுகளத்தின் எல்லைகளில் காவடியாட்டக்காரர்கள்.
கரகாட்டத்தின் எல்லையில் காவடியாட்டம்.
அண்ணார்ந்து பாரக்கும் காவடியாட்டக்காரி தாத்மா.
மாலைச்சூரியனிடம் இன்னமும் மன்றாடும் மேகக் கிழவி.
மாலைச்சூரியனுக்கு எதிரே,
ஆடுகளத்தின் கிழக்கு எல்லையின் ஒரு மூலையில் ஒரு காவடியாட்டக்காரன்.
ஆடுகளத்தின் கிழக்கு எல்லையின் மறு மூலையில் இன்னொரு காவடியாட்டம்
இரண்டு காவடியாட்டக் காரர்களின் நடுவிலும் இன்னொரு காவடியாட்டக்காரன்.

கிழக்கு நோக்கிய பின், இடது புறமாகத் திரும்பி
வடக்கு நோக்கும் கரகாட்டக்காரி தாத்மாவும்
கரகாட்டக்காரன் தொலைந்து போன கிரகவாசியும்.

வடக்கின் இரண்டு மூலைகளிலும் இரண்டு காவடியாட்டக்காரர்கள்.

வடக்கு நோக்கிய பின், மேலும் இடது புறமாகத் திரும்பி
மேற்கு நோக்கும் கரகாட்டக்காரனும் கரகாட்டக்காரியும்.
மேற்கு எல்லையின் முழு நீளத்திற்கும் கோயில் மடத்துக் கூரைகள்.
கூரையின் தாழ்வாரத்தில் குருத்தோலை சோடனைகள்.
பார்வையாளர்களை அந்தப் பக்கம் விடாது துரத்தும் பாக்குச் சாமியார்.
காவடியாட்டக்காரர்கள் கால் வைக்காத, கால்வைக்க முடியாத ஓடை.

மேற்கு நோக்கிய பின், மேலும் இடதுபுறம் திரும்பி தெற்கு நோக்கும்
கரகாட்டக்காரனும் கரகாட்டக்காரியும்.

தெற்கு எல்லையின் நடுவே ஒரே ஒரு காவடியாட்டக்காரன்.

இப்போது எல்லாப் புறமும் திரும்பித் திரும்பிப் பார்க்கும்
கரகாட்டக்காரனும் கரகாட்டக்காரியும்

முன்னும் பின்னும் திரும்பித் திரும்பி ஆடும் காவடியாட்டக்காரர்கள்.
முதுகுச் சதைகள் கிழிய,
முட்களினூடு இரத்தம் வழிய,
முண்டி முண்டி உருக்கொண்டு
மூர்க்கமாக ஆடும் காவடியாட்டக்காரர்கள்.

புன்னகைக்கும் தொலைந்து போன கிரகவாசியான கரகாட்டக்காரன்.
புன்னகையின் பொருள் தேடும் முகக்குறியில் கரகாட்டக்காரி தாத்மா.

“மேற்கு எல்லை திறந்தே கிடக்கிறது”

கரகாட்டக்காரனான தொலைந்து போன கிரகவாசியின் உரத்த சிந்தனை.
உதடுகளை மடித்து சிரிப்பை அடக்கவது போல் தோன்றும்
கரகாட்டக்காரி தாத்மா.

சூரியனின் சிவப்பு முகம்.
சிவப்பு முகத்தில் மஞ்சள் சோகை.
மேகக் கிழவியின் காதை முட்டும் சூரியனின் மையப் புள்ளி.
மையப் புள்ளியின் பொன்னிற மேனி அதிர்வுகள்.
கிழவியின் காதுச் சோணைகளின் துடிப்பு.
கண்களின் விரிவு.
முகச்சுருக்கங்களின் நிமிர்வு.
முகிலாகத் துகிலாக வானில் மிதந்திறங்கும் மேகக் கிழவி.

காவடிகளும் காவடியாட்டக்காரர்களும்.
காவடிகளினுள்ளிருந்து துப்பாக்கிகளை எடுக்கும் காவடியாட்டக்காரர்கள்.

“அண்டவெளி மனிதர்கள், அண்டவெளி மனிதர்கள்.....
நேர்த்திக் கடனுக்கு காவடி தூக்கிய அண்டவெளி மனிதர்கள்”

மெல்லத் தளம்பும் சனசமுத்திரத்தின் கருந்தலைகள்.
இப்போது,
மஞ்சள் பூசிய கரகாட்டக்காரியான தாத்மா
மஞ்சள் பூசிய கரகாட்டக்காரனான தொலைந்துபோன கிரகவாசியை
விட்டு விட்டு, விலகி, விலகி ஆடத் தொடங்குகிறாள்.

மஞ்சள் பூசிய கரகாட்டக்காரனான தொலைந்துபோன கிரகவாசி
மஞ்சள் பூசிய கரகாட்டக்காரியான தாத்மாவில் மறைந்து மறைந்து
அவளை நெருங்கி நெருங்கி, எப்பொழுதும் அவளுக்கு மேற்காக
அணைந்து அணைந்தே ஆடத் தொடங்குகிறான்.

பார்வையாளர்களின் கண்கள் மிரள்கின்றன.

முகங்களை முகங்கள் நோக்குகின்றன.
காவடியாட்டக்காரர்களை கண்கள் மொய்க்கின்றன.
குறி வைத்திருக்கும் துப்பாக்கிகளை முகச்சமிக்கைகள் குறிக்கின்றன.
மையம் நோக்கிய கரகாட்டக்காரர்களின் நகர்வு.
துப்பாக்கிகளை நோக்கிய கரகாட்டக்காரி தாத்மாவின் நகர்வு.

விடுபட்டுவிட்டது போல் பரிதவிக்கும் கரகாட்டக்காரன்
தொலைந்து போன கிரகவாசியின் தலையிலிருந்து இறங்கும் செப்புக்குடம்.
செப்புக் குடத்தின் பத்திரத்துக்குள் செருகியிருக்கும் துப்பாக்கி.

பத்திரத்தால் மூடியபடி கைக்குள் அடங்கும் துப்பாக்கி.

துப்பாக்கி வேட்டொலி.
காற்றில் பறக்கும் கரகாட்டம்.

தொலைந்துபோன கிரகவாசியின் புறங்காலில் பொங்கும் குருதி.

செப்புக்குடம் நழுவ,
பத்திரக்கொததுடன் மேற்கெல்லைக்குப் பாயும்

தொலைந்துபோன கிரகவாசி.

கோயில் மடத்துக் கூரைகளில் தொங்கும்
குருத்தோலைச் சோடனைக்குள் சிக்கி
பத்திரக் கொத்தும் நழுவ, தென்புறம் பாய்ந்து,
மடத்து மூலையில் மேற்குப்புறம் திரும்பி கெந்தி கெந்தி ஓடும்
மஞ்சள் பூசிய மேனியும் இடுப்புத் துண்டுமான
தொலைந்துபோன கிரகவாசியின் இரத்தச் சுவடுகள்.

எதிரே,
மேற்குத் தெருவிலும் இன்னொரு காவடியாட்டக்காரன்.

எதிரே ஓடி வரும் மேகக்கிழவி.

“என்ர மகனே, என்ர மகனே,
உன்னைத் தனிமைப்படுத்தியதே சத்துராதிகளின் வியூகம்”

உயரும் துப்பாக்கி.
மேற்குத் தெருவின் காவடியாட்டக்காரனின் துப்பாக்கி.

ஓடி, அவனுடைய காலைக் கட்டிப்பிடிக்கும் கிழவி.

“என்னைச் சுடு......என்னைச் சுடு.....என்ர மகனை உட்டிரு”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கால்களை உதறும் காவடியாட்டக்காரன்.
கால்களின் உதறலில் பெயர்ந்து விழும் காவடியாட்டக்காரனின் காலணிகள்.

மீண்டும் குறிவைக்கும் காவடியாட்டக்காரன்.
மீண்டும் அவன் காலகளைப் பற்றும் கிழவி.
வேட்டொலி.
குறி தவறியது போன்ற முகச்சுழிப்பு.
கால்களை விடாது கட்டிப்பிடிக்கும் கிழவி.

காவடியாட்டக்காரனை கடந்து ஓடும் கரகாட்டக்காரன் தொலைந்துபோன கிரகவாசி.
எதிரே, இரண்டு கைகளாலும் துப்பாக்கியை ஏந்தி நிற்கும் துஷ்றிகி.

வேட்டு.

நெஞ்சைப் பொத்திக்கொண்டு விழும் தொலைந்துபோன கிரகவாசி.

காலணிகளை உயர்த்திக்கொண்டே கதறும் கிழவி....

"கண்கெட்ட சூரியனே, என் கண்மணியை காப்பாற்றுவில்லையே நீ"

கிழவியின் கைகளிலிருந்து காலணிகளை எடுக்கும் தாத்மாவின் குரல்...

துஷ்றிகி நீ எப்போது உயிர்த்தெழுந்தாய்?"

"மூன்றாம் நாளில்"

காலணிகளின் கீழ்ப்பாகத்தை பார்க்கும் துஷ்றிகி

"ஒரு அண்டவெளி தன் காலணியை இழந்தது இதுதான் முதல் தடவை"

நான் மீண்டும் உஷாரானேன். காலணியின் கீழ்ப்பாகம் செவ்வையாக வந்தபோது பொத்தான்களை அழுத்தினேன். வெளியீட்டின் ஊடாகப் புகைப்படம் தலை நீட்டியது. அண்டவெளி மனிதனின் காலணிப் புகைப்படம் என் கைகளில் நினைத்த மாத்திரத்தில்.

நான்கு படங்களும் இப்போது என் கைகளில். என் வாசலில் வந்த நின்ற மர்மப் பேர்வழி யார் என்பது இன்னும் சில விநாடிகளில் எனக்குப் புரிந்துவிடும்.

❏❏❏

கைக்கு எட்டும் வரையில்தான் எல்லா ஆவலும். கைக்கு எட்டியபின் எல்லாம் அடங்கிப் போகின்றன. எனக்கு முதலில் உறங்க வேண்டும் போலிருந்தது.

நான் உறங்கப் போனது எனக்குத் தெரியும். நான் உறங்கிப் போனதும் எனக்குத் தெரியும். நான் உறங்கிய பின்புதான் அவர் உறங்குவதற்கு வருவார். நான் உறங்குகையில் அவர் உறங்குவதும் தெரியும், அவர் உறங்காதிருப்பதும் தெரியும்.

அவரோடுதான் நான் உறங்கனேன். அவர்தான் என்னை உறங்க வைத்துக்கொண்டிருந்தார். நான் உறக்கம் கலைந்து எழுவதற்கு முன்பே அவர் உறக்கம் கலைந்து எழுந்து விடுவார். நான் விடிந்து எழுவதற்கு முன்பே, அவர் எழுந்து, விடிய வைத்து விடுவார்.

விடிந்தும் விடியாத நிலை. நான் விழித்தும் விழிக்காத நிலை. நான் எழுந்தும் எழாத நிலை. நான் கதவைத் திறந்தும் திறக்காத நிலை. நான் நடந்தும் நடக்காத நிலை. நான் முற்றத்தில் இறங்கியும் இறங்காத நிலை.

கிணற்றின் துலாக்கால் அடியில் அவர் நின்றார். கிணற்றின் துலாக்காலாகவும் அவர் நின்றார். பற்றுக் கையும் அவரே. பற்றிய கையும் அவரே. இது என்ன ஷிசோ.'.பேனியாவா? எனக்கு என்ன ஹலுஷினேஷனா? ஓ, ஒன்றுமில்லை.

காலையில் அவருக்குச் சுடச்சுட கோப்பி வேணும். கேஸ் குக்கரின் சுவாலைகள் தங்கத் தகடுகளாகக் கட்டித்துப் போகின்றன. தேனீர் போச்சியினூடாக வெளிவரும் நீராவி தடித்த புகாராக சுவர்களில் படிகிறது. கொதிநீரை கோப்பையில் ஊற்றும்போதே கொதிநீர் உறைந்து கட்டியாகிப் போகிறது.

எங்கே இருக்கிறேன்? அண்டவெளியிலா? பாதாளத்திலா? அதற்கும் அப்பாலா? கல்லிடையாற்றங்கலையிலா? கோயில் வெளியிலா? நான் நிவேதையா? தாத்மாவா? அவர் நிவேதனா? துஷ்றிகியா?

"விடிந்தும் இவ்வளவு நேரத்திற்கு ஒரு கோப்பி போடல்லியா?"

அவருடைய கோபக் குரல் என் காதுக்குள்ளேயே உறைந்து கிடக்கிறது.

"இந்தா வந்திற்றன், இந்தா வந்திற்றன்"

நாக்கின் நுனியிலும் உதடுகளின் ஓரத்திலும் உறைந்துபோயா. அதற்கப்பால் பாவாத சொற்கள்.

கோப்பையில் உறைந்து போகிறது கோப்பி. அதனை உடைத்து உடைத்து கரைத்துக்கொண்டு வருகையில் நானே உறைந்துபோய் விட்டேன், கல்லாய்.

நின்றன வௌவால் இரண்டு நிமிர்ந்து. கால் இல்லாத அவைகளுக்கு கால் முளைத்திருந்தது. கை நீட்ட முடியாத அவை கை நீட்டிச் சுட்டன, அவரை நெற்றியிலும் கண்ணடியிலும் வழிந்தோடும் ரத்தம் விறாந்தையில் இரத்த வெள்ளத்தில் மிதந்தார் அவர்.

எனது புகைப்படங்கள் எல்லாம் கிழிக்கப்பட்டுக்கிடந்தன வாசலில்.

துடித்துப் பதைத்து எழுந்தேன், வெயர்த்தது. இருட்டுக்குள் தடவி சுவிட்சைப் போட்டேன். அவருடைய அறையைப் போய்ப் பார்த்தேன். அறையின் சுவிட்சைப் போட்டேன்.

சாமி படத்திற்குக் கீழே, மாலை போட்ட அவருடைய படத்தின் அடியிலும் சிவப்பு ஒளிரவு துடித்துக்கொண்டிருந்தது. அதே புன்சிரிப்பும், பேனாவும் கையுமாய்.


இப்போது ஏதோ விளங்குவது போலிருந்தது, அவருடைய கொலையாளிகள் யாரென்று.

**(முற்றும்)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாவது கட்டில்

வெளியில் நிலமை சரியில்லை
என்றார்கள்
வீடு செல்ல முடியவில்லை.
வேற்று மனிதர்கள் சிலருடன்தான்
கடைசி பஸ் போனது


ஒரு கட்டிடத்துள் வந்தேன்
குரல் மட்டும் கேட்டது
முகம் புலப்படவில்லை.
தன்முகம் தனக்குத் தெரிவதெவ்வாறு
என் முகந்தானோ அது.

அது ஒரு பழைய வைத்தியசாலை
கால்கள் நெளிந்து
இரு கட்டில்கள்
மனமின்றி இணைந்த மனிதர்கள் போல
சற்று அப்பால்
தனித்து மூன்றாவது கட்டில்.
அதில் நீட்டி நிமிர்ந்து
கிடத்தப்பட்டிருக்கிறது
எனது பிணம்

ஓட்ட மெடுக்கிறேன்
ஓட்ட மெடுக்கிறேன்
தாளிட்ட கதவுகளில்
ஒரு குருட்டு வெளவாலாக
மோதி விழுகிறேன்
மோதி வீழ்ந்து பார்க்கிறேன்
அவ்விரு கட்டில்களிலும்
கிடத்தப்பட்டிருப்பது
எனது பிணந்தானா
எப்படிப் புதிதாக?

கண் விழித்தேன்
கைகள் அசைந்தன
கால்கள் அசைந்தன
சுவாசம் தெரிந்தது
எனது பிணம்
உயிர்த்துச் சிலிர்க்கிறது நானாக -

~ கல்ஹாரன் ~





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓவியக் கற்கையில் பெண்களின் வாய்ப்புக்கள் பற்றி ஓர் நோக்கு

-அருந்ததி சபாநாதன்-

கலைத்திறன் இயல்பான கொடையென கருதிய நிலை மாற்றம் பெற்றுள்ளது. இயல்பான திறன்கூட வளர்ந்தெடுக்கும் பொழுதே நுட்பமும் புதுமையும் கலைகளில் இணைந்து; காலத்தின் தேவைக்கேற்பக் கலைகள் இயங்கக்கூடியதாக இருக்கும். ஓவியம் வரையும் ஆற்றலும் இயல்பாகப் பெறப்படும். ஒன்றாக இருந்தாலும், ஓவியப் பயிற்சியூடாகவே திறனை வளர்த்தெடுக்க முடிகின்றது.

ஓவியக்கலை வரலாற்றில் நீண்ட காலத்திற்கு முன்னரே ஓவியக்கலைக்கூடங்களின் தோற்றம் பற்றி அறிய முடிகின்றது. இருந்தாலும் ஓவியத்துறை; ஓவியக்கல்வியும் கண்காட்சிப் பங்குபற்றல்களும் ஆண்களுக்கு மாத்திரமே கிடைத்த வாய்ப்பாகவே இருந்து வந்திருக்கின்றது. 19ம் நூற்றாண்டின் இறுதிவரை முழுமையாக ஆண் ஆதிக்கம் கொண்ட துறையாகவே இத்துறை இருந்தது. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்துடனேயே இந்நிலையில் சிறு மாற்றங்கள் ஏற்படலாயிற்று.

ஓவியக் கல்லூரிகள் தோன்றிய காலங்களில் பெண்களுக்கு ஓவியக்கற்கை நிராகரிக்கப்பட்டதொன்றாகவே இருந்திருக்கின்றது. 20ம் நூற்றாண்டுக்கு முன்னர் மேலைத்தேயங்களிற்கூட இந்நிலையே காணப்பட்டிருந்திருக்கின்றது. ஓவியக் குழுக்களிலும் பெண்களைக்காண முடியவில்லை. ஆணோவியர்கள் சேர்ந்து இயக்கிய சங்கங்களில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப் படாமலே இருந்திருக்கிறார்கள். இந்நிலையில் திறனுள்ள பெண்கள் அடிப்படையானதும் அவசியமானதுமான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். குறிப்பாக உயிரோவியம் என்பது ஓவியப் பயிற்சியில் முக்கிய அம்சமாகும். 1893லேயே இங்கிலாந்தின் றோயல் அகடமி ஓவிய மாணவிகளை உயிரான ஆண் உருவத்தைப் பார்த்து வரைய அனுமதித்தனர். இருந்தாலும் பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுக் கெல்லாம் காரணம் ஓவியம் பெண்களுக்குப் பொருத்தமான கலையாகக் கருதப்படாமையேயாகும். அக்காலத்தில் பெண் நடனம், இசை போன்ற கலைகளில் ஈடுபடவே தகுதியானவர்கள் என்பது பொதுவான கருத்தாக இருந்தது. எனவே பெண்களின் ஓவியத்திறன் வளர்த்தெடுக்க முடியாத நிலையில் நீண்ட காலமாக இருந்து வந்திருக்கின்றது. இதுவே ஓவியக்கலை வரலாற்றின் தொடக்க காலங்களில் பெண்ணோவியர்கள் இடம்பெறாமற் போனமைக்கு காரணமாகும்.



ஓவியம்: அருந்ததி

இந்நிலை இன்றைய கால கட்டத்தில் பெருமளவு மாற்றம் கண்டுள்ளது. ஓவியக்கல்வி; திறனை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள் வதற்கான வாய்ப்புகள், கட்டுப் பாடுகள் எதுவுமின்றி பெண்களும் பெறும் சந்தர்ப்பங்கள் இருந்தாலும் மேலைத்தேயங்களில் பெண்ணோ வியர்கள் தோன்றி வளர்ந்த அளவு கீழைத்தேயங்களில் இல்லையென்றே கூறவேண்டும். இலங்கையைப் பொறுத்தமட்டில் சிங்களவர் மத்தியில் காலத்துக்குக்காலம் குறிப்பிடத்தக்க அளவு பெண்ணோவியர்கள் தோற்றம் பெறுவது போன்று தமிழர் மத்தியில் தோற்றம் பெறுவதில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியதாகும். இலங்கையில் ஒரேயொரு அரச நுண்கலைக் கல்லூரியே காணப்படுகின்றது. தமிழிலோ ஆங்கிலத்திலோ கற்கை நெறிகள் இல்லை. சிங்கள மொழி மூலம் கற்பதற்கே வாய்ப்புள்ளது. எனவே சிங்கள ஓவியர்கள் தோன்றுமளவு தமிழோவியர்கள் தோன்றாமலிருப்பதற்கு இதுவும் ஓர் காரணமாக இருக்கலாம். இது தவிர தனியாரிடம் ஓவியம் கற்கும் வாய்ப்புக்களும் சிங்களவருக்குக் கிடைக்குமளவு தமிழர் மத்தியில் இல்லை. இவற்றையெல்லாம்விட சமூகரீதியான சில விடயங்களும் இதனைத் தீர்மானிக்கின்றது.

ஒவ்வொரு சமூகமும் ஒவ்வொரு துறைக்கும் பெறுமதியை வித்தியாசப்படுத்திப் பார்ப்பதனால் சமகாலத்தில் மேலைத்தேய நாடுகளில் ஓவியக் கல்லூரிகள் அவற்றுள் பல துறைகளுடன் வளர்ந்திருக்கும். இநிலையிலும்கூட எம்மத்தியில் கற்கைக்கான பெறுமதி மிகக் குறைந்தளவாகவேயுள்ளது. அதுமட்டுமன்றி ஓவியம் கற்பதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படாமலே உள்ளது. மேலும் சமூகரீதியாக பொதுவாகவே கலைபற்றிய அபிப்பிராயம் எம்மத்தியில் குறைந்து மதிப்பிடப்படும். நிலையில் ஓவியக்கலையே ஓர் கற்கை நெறியாக எடுத்துக்கொள்வதென்பது அதிகம் எதிர்பார்க்க முடியாததாகும். இதிலும் பெண்களை இத்துறையில் ஈடுபடுத்துவதில் அக்கறை மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

ஓவியக்கல்வி, பயிற்சி என்பவற்றுடன் இத்துறையில் தொடர்ச்சியான வளர்ச்சியை எடுத்துக்காட்டுவது ஓவியக் கண்காட்சிகளாகும். காலத்தின் போக்கினை கண்காட்சியூடாகவே அறிய முடிகின்றது. ஓவியர்களின் அறிமுகமும் சமூகத் தொடர்பும் கண் காட்சிகள் ஊடாக ஏற்படுகின்றது. ஓவியங்கள் வெளிப்படுத்தும் உணர்வும் சமூகச் சிந்தனை வெளிப்பாடும் கண்காட்சியூடாகவே மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வாய்ப்புண்டு. மேலைத்தேயங்களில் இந்நூற்றாண்டில் ஆரோக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் எமக்குத் தெரிந்த உதாரணமாக இலங்கையை எடுத்து நோக்கும் போது இலங்கையில் நடைபெறும் சமகால ஓவியர்களின் கண் காட்சிகளிலும் ஏனைய கண் காட்சிகளிலும் குறிப்பிடத்தக்களவு தொகையினர் பெண்களாக இருந்தாலும் விகிதாசார ரீதியாக ஆண்களின் பங்களிப்புக்குச் சமனாக பெண்கள் இடம்பெறுவதில்லை. மேலும் முழுநேர ஓவியர்களாக இயங்கி கண்காட்சிகள் நடாத்தும் பெண்ணோவியர்கள் ஒருசிலரே.

தமிழரைப் பொறுத்தவரையில் ஓவிய ஆசிரியர்களாக இருக்கும் ஓவியத்திறன் கொண்ட பெண்களையே அதிகம் காண முடிகின்றது. கண் காட்சி மட்டத்திற்கு இவர்களின் வளர்ச்சி செல்வது மிகக் குறைந்த அளவினரிடமே அவதானிக்க முடிகின்றது. தொடர்ந்து கண் காட்சிகளில் பங்குபற்றி இத்துறையில் நிலைத்த ஓவியர்கள் என எடுத்து நோக்கும் போது ஆண்களின் பெயர்களை மட்டுமே அறிய முடிகின்றது. சமகால ஓவியர் களாகவே சில பெண்களை குறிப்பிடக்கூடியதாக உள்ளது.

இதேபோன்று ஓவியர் விமர்சகர் வரிசையிலும் ஆண்களின் ஆதிக்கமே அதிகமாக உள்ளது. கலைத்துறைக்கு விமர்சனத்துறை பக்க பலமானதாகும். விமர்சனமும் ஓர் துறையே. கலைப்படைப்புக்கள் விமர்சனத்திற் குள்ளாக்கப்படும் பொழுதுதான் அவை தமக்குரிய அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கின்றன. இந்நிலையில் விமர்சகர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். குறிப்பாக ஓவியத்தைப் பொறுத்தவரையில் கட்புலக் கலையாக அமைவதால் வர்ணம், வடிவம், ரேகை என்பவற்றில் மொழிவிமர்சனம் மூலம் மேலும் விளங்க வைக்கலாம். இச்சந்தர்ப்பத்தில் பெண் விமர்சகர்களின் தோற்றத்தை வலியுறுத்த வேண்டியது அவசியமாகும். பெண்ணோவியர்களின் படைப்புக்களில் பொதிந்திருக்கும் சிந்தனை வெளிப்பாடுகளை இலகுவில் விளங்கிக் கொண்டு அவற்றுக்கு மேலும் மெருகூட்டும் பொறுப்பை ஆண் விமர்சகர்களைவிட பெண்விமர்சகர்களிடம



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்பார்க்கலாம். ஆங்கில விமர்சகர்கள் மத்தியில் பெண்ணோவிய விமர்சகர்கள் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர். Linda Nacui மிக முக்கியமான ஓவிய வரலாற்று ஆசிரியரும் விமரசகருமாவார். இந்நிலை தமிழிலும் வரவேண்டும்.

மேலைத்தேயங்களில் பெண்களின் தனித்த இயக்கமும் ஒன்றிணைட்டும் வளர்ச்சி பெற்றுள்ளதை 19ம் நூற்றாண்டின் மத்தியிலே அவதானிக்க முடிகின்றது. இங்கிலாந்தில் 1855ல் பெண் ஓவியர் சங்கம் தோற்றம் பெற்றுள்ளது. இச் சங்கத்தினூடாகக் கண்காட்சி ஒழுங்கமைப்புக்களும் இடம் பெற்றுள்ளது.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டிலும் கூட மேற் குறிப்பிட்ட வாய்ப்புக்கள் உயர் குலத்தினருக்கும் மத்திய வகுப்பின் உயர் மட்டத்தினருக்குமே ஏற்புடையதாக இருந்திருக்கின்றது. 1905-1922ம் ஆண்டுகள் வரையில் இங்கிலாந்தில் இயங்கிய Fridge Club என்கின்ற பெண் ஓவியர் சங்கத்தை Vanessa Bell என்பவர் தொடங்கி நடாத்தி வந்துள்ளார். இவரது குடும்பச் சூழலும் சமூக மட்டமும் குறிப்பிடத்தக்கதாகும். தந்தை எழுத்தாளராக இருந்ததுடன் பெற்றோரின் ஊக்குவிப்பு இவருக்குக் கிடைத்தள்ளது. அது மட்டுமன்றி பண ரீதியாகவும் யாரையும் தங்கியிருக்கவேண்டிய தேவை இவருக்கு இருக்கவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே பெண்ணோ, ஆணோ ஓவியத்துறையில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. குறிப்பாக பெண்கள் பண ரீதியாகவும் யாரையும் தங்கி வாழ்பவர்களாக இருப்பதால் சுதந்திரமாகத் தமக்கென ஓர் துறையைத் தெரிவு செய்வதற்கோ அதில் முழுமையான அர்ப்பணத்துடன் ஈடுபடுவதற்கோ முடியாதவர்களாகிவிடுகின்றனர். மேலும் ஓவியத்துறை அதிக பணம் தேவைப்படும் துறையாக இருப்பதால் இதில் பங்குபற்றுவதற்கு அல்லது தொடர்ந்து நிலைப்பதற்கு பணமும் ஓர் காரணியாக அமைந்துவிடுகின்றது.

தனித்துவத்துடன் வளரும் ஓவியர்கள் கலைக்கூட (Studio) வசதிகளுடன் படைப்புக்களில் ஈடுபடும்போது அவர்களின் முழு அர்ப்பணிப்பையும் அங்கு காணக்கூடியதாக இருக்கும். இதுவும்கூட பெருமளவு பெண்களுக்கு ஒத்துவராத அல்லது வாய்ப்பற்ற ஓர் அம்சமாகவே உள்ளது. செல்வத்தைத் திறனால் பெற முடியாமற் போனாலும் நிச்சயமாகத் திறனை வளர்த்தெடுக்க செல்வத்தின் உதவி தேவையானதாக உள்ளது. ஆண் ஓவியர்களுக்கு அவர்கள் ஓவியததை முழுநேரமாக எடுத்துக் கொள்ளும் போதும் வீடும் குடும்பமும் குழப்பப்படாமல் பெண்ணால் பேணப்படுகின்றது. ஆனால் பெண்களுக்கு இது முழுநேரத் தொழிலாக வரும்போது அவள் சம்பளம் கொடுத்தே தனது ஏனைய தேவைகளைக் கவனிக்க வேண்டியவள் ஆகின்றாள். இந்நிலையில் பெண்ணுக்கு வீட்டுப் பொறுப்பு தவிர்க்கமுடியாததொன்றாகி இருப்பதனாலேயே அவள் தன் திறனை வளர்த்துக் கொள்ள தொடர்ந்து ஓவியத்துறையில் நிலைக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. நாம் அறிந்து கொள்ளும் மேலைத்தேய ஓவியர்கள்கூட குடும்ப உறவுகளை ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்புக்கள் மூலமே உலகுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர். அதிலும் தந்தை அல்லது கணவன் போன்ற ஆண்களுடான கலைத்துறைப் பிரவேசங்களே பெண்கள் இத்துறையில் நிலைக்க சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

மன உறுதி, விருப்பு, அதிர்ஸ்டம், பணவருமான நிலை, வகுப்பு, சமூக நிலவரம் என்பனவும் ஓவியர் அத்துறையில் ஈடுபட, நிலைக்க வழிவகுக்கும் காரணிகளாக அமைகின்றன. குறிப்பாகப் பெண் ஓவியர்களின் நிலைப்புக்கு மேற் குறிப்பிட்ட காரணிகள் முக்கிய பங்காற்றுகின்றன. குடும்பம் அல்லது வர்க்கத்தை அடித்தளமாகக் கொண்டு அழகியல் உருவாக்கம் நிகழ்ந்து வந்த காலம் அரச கலைக் கல்லூரிகளின் தோற்றத்துடன் சற்று மாற்றம் பெறத் தொடங்குகின்றது. சகல மட்டத்தினருக்கும் திறன், விருப்பு என்பவற்றின் அடிப்படையில் ஓவியக் கற்கையை மேற் கொள்ள இதுவோர் வாய்ப்பாகின்றது. இருந்தாலும் பெண்களைப் பொறுத்தவரையில் தமது தாய்மார்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் தையல், பின்னல் வேலை, நெய்தல், வனைதல், அலங்காரப் பொருட்கள் செய்தல் போன்ற திறன்களையே பயன்படுத்த வாயப்பளிக்கின்றனர். இவ்வாறான கைவினைப் பொருட்களுக்கு சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்து கிடைப்பது அரிதாகவேயுள்ளது. வீட்டில் நாளாந்தத் தேவைகளைத் தனது திறனால் பூர்த்தி செய்பவளாக மட்டுமே இவள் இருக்கிறாள்.

பெண்கள் சமூக ரீதியாக, கலாச்சார ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்களாகவே உள்ளனர். இந்நிலையில் முன்னேற்றங்கள், மாற்றங்கள் ஏற்படாமலும் புதிய பிரச்சினைகளை முகங் கொடுக்கவேண்டியவளாக இருக்கிறாள். இவ்வாறான பெண்ணின் பிரச்சினைகள் அவள் உணர்வு பூர்வமாக உணர்ந்து வெளிப்படுத்துவது போல் ஓர் ஆண் படைப்பாளியிடம் எதிர்பார்க்க முடியாது. அனுபவ வெளிப்பாட்டுடனான படைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். எனவே பெண் ஓவியர்களின் பொறுப்பு இச் சமூகத்திற்கு அதிகம் வேண்டப்படுவதாகவுள்ளது. 1930களிலேயே Lucy Werthein எனும் மேலைத்தேய பெண் ஓவியர் பெண்களின் பிரதிமைகளை ஓவியமாக்கியுள்ளார். " Mrs. and Miss 1993 " என்ற தலைப்பில் அவரின் கண்காட்சி நடைபெற்றது.




கலைக்கூடச் சொந்தக்காரராகவும், கண்காட்சி ஒழுங்கமைப்பாளராகவும் பெண்கள் உருவானதும் பெண் ஓவியர்களுக்கு ஆதரவும், ஊக்குவிப்பும் ஏற்படலாயிற்று. குறிப்பாக அவர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதும் அவர்களின் படைப்பகள் சமூகத்தில் வெளிக்கொணரப்பட்டதும் மிக முக்கிய விடயமாகும். பெண்கள் தம்மை சமூகத்திற்கு அடையாளம் காட்ட இந்நிகழ்வு வாய்ப்பளித்தது எனலாம். இங்குகூடப் பொருளாதாரத்தில் உயர் நிலையிலுள்ள பெண்களாலேயே இவ்வாறான செயல்பாடுகளில் இறங்க சந்தர்ப்பம் உண்டு. இவையெல்லாவற்றையும்விட பெண் இவளது குடும்பத்தினரால் ஊக்குவிக்கப்பட வேண்டியவளாகின்றாள். அவளின் திறன் தட்டிக்கொடுத்து வளர்க்கப்படும் பொழுதே அவளின் சேவை சமூகத்திற்கெட்ட வாய்ப்பேற்படும். எமது சமூகம் இந்த அளவிற்கு பெண்களை அவர்களின் திறமைகள் அடிப்படையில் வளர்த்தெடுக்கப்படுகிறது என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவராகின்றோம்.

19ம் நூற்றாண்டில் பெண்களுக்கு ஓவியக் கல்வி நிராகரிக்கப்பட்டிருந்த நிலை பின்னர் உடைபட்டு ஆணாதிக்கத் துறையான இத்துறையில் பெண்களின் காலூன்றல் குறிப்பிடத்தக்களவு இடம்பெற்றுள்ளது. விவரணச் சித்திரங்கள், சுவரொட்டிகள் (Illustration, Poster Painting) என்பனவற்றிலும் அவள் கைகள் பதியத் தொடங்கிவிட்டது. எனவே அவளின் கருத்துக்களும் ஓவியங்களுடாகப் பரவலாக்கப்பட்டுள்ளது.

கலையில் பெண்ணுக்கென ஒரு தனிப்பாணி, பெண்பால் சார்ந்த கற்பனை, என ஏதாவது உண்டா எனக் கேள்வி எழுப்பப்படும் பொழுது, பிரபல ஓவிய விமர்சகர் Linda Nachui இவை இரண்டையுமே மறுத்துக்கூறுகின்றார்.

வரலாற்று ரீதியான மாற்றங்களும் சமூக நிகழ்வுகளும் பெண்ணைப் பாதிக்கும் விடயங்களாக உள்ளன. அவள் மனிதப் பிறப்பாக இருப்பதால் இவற்றால் தாக்கப்பட்டு அவற்றை தன் படைப்பில் கொண்டுவருவதற்கான தூண்டுதலையும் பெறுபவளாக பெண்படைப்பாளி இருக்கின்றாள். சமூக அரசியல் நிகழ்வுகள் அவள் படைப்பில் இடம்பெறாது எனக் கருத இடமில்லை. பெண்ணின் மென்மைக் குணங்கள் வலியுறுத்தப்படுவதுடன் அவள் அழகான பூக்களை வரையவே விருப்பம் கொணடிருப்பாள் என்பது பொதுவான அபிப்பிராயமாகும். ஆனால் உலகப் புகழ்பெற்ற ஆண் ஓவியர்கள் பலரும் பூக்களை வரைந்துள்ளனர். 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்ஸில் களம் அமைத்த வான்கோ, செசான், மனட், மற்றீஸ் போன்ற ஓவியர்கள்; வர்ணம், வடிவம் என்பவற்றில் பரீட்சார்த்த முயற்சிகளில் ஈடுபடுவதற்கு பூக்களையே பிரதான விடயமாகக் கொண்டிருந்தனர். மக்களின் விருப்பு பூக்கள், நிலைப்பொருட்கூடங்களிலேயே அதிகம் இருந்திருக்கின்றது. வான்கோ வரைந்த Irises எனும் மலரோவியமே உலகில் மிக விலையுயர்ந்த ஓவியம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மலர்கள் என்றும் அவற்றின் வர்ணச் செறிவு, அழகு காரணமாக மக்களால் விரும்பப்படும் ஒன்றாகவே உள்ளது.

ஆரம்பத்தில் பெண்கள் ஓவியத்துறையில் முழுமையாக ஈடுபடத் தொடங்கியபொழுது அவர்களின் எல்லை மிகக் குறுகியதாகவே இருந்தது. தற்போது எந்த விடயத்தையும் ஓவியத்தினூடாகக் கொண்டுவரும் சுதந்திரமிக்க பெண் ஓவியர்களை நாம் அறிகிறோம். இவர்களின் தொகை குறிப்பாக எம்மத்தியில் குறைவாக இருப்பதே துரதிஸ்டமாக உள்ளது. அதுமட்டுமன்றி பெண் இத்துறையில் நிலைக்காமல் தொலைந்து போய்விடுவதும் வரலாற்று ரீதியாகக் கண்ட உண்மை. சமூக, பொருளாதார மாற்றங்கள் பெண்ணுக்குச் சாதகமாக ஏற்படும்போது அவள் இத்துறைகளில் மேலும் ஈடுபட வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் அரசினதும், நிறுவனங்களினதும் ஆதரவு, ஊக்குவிப்பு, ஒத்துழைப்பு என்பன பெண்ணுக்கு இத்துறையில் சிறப்பானதும் நிலையானதுமான ஓரிடத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காற்றில் மிதந்த நினைவுகள்

— சு. வில்வரத்தினம் —

பிறகும்
புதைகுழிகள் மேலாய்
நகர்ந்தது காற்று.

நின்று நின்று மோந்தது; நகர்ந்தது
ஈற்றிலோர்
புதைகுழியின் காலடியில்
முனகியவாறே உறங்கியும் போயிற்று
ஒரு வளர்ப்பு நாயைப்போல

அகாலத்தில் முழிப்புத்தாவ
முழுநிலவில் நனைகிற புதைகுழிகளை நோக்கி
ஊளையிட்டழுதது
ஓல இரவுகளின் ஞாபகக் கிளர்வாய்.

ஏதோ நினைத்ததாய்
எல்லை தாண்டிக் கால்பாய்ச்சி
ஓசைப்படுத்தாமல் ஊரைக்கிளப்பி
தீவட்டிகளோடு திரும்பியது.

புதைகுழிக்கீழ்
பெருமுனைப்போடு பிறாண்டிக் காட்டியது
நெம்பு கோல்களை எடுத்தன கைகள்
நிமிண்டுகிற ஒலிகள்
காலத்தின் ஓசைபோல்
கேட்டுக் கொண்டேயிருந்தது.

கைகோத்துப் போயின பள்ளித் தோழமைகள்
குதூகலச் சிரிப்புக்களை ஏந்தியபடி
கூடவே போனது காற்று.

மதியம் ஆயிற்று
மைம்மலும் வந்தது
தொலை திருப்பத்திலேயே கேட்கும்
துள்ளல் சிரிப்பொலிகள்
இன்னமும் இல்லை.

காற்று மட்டும் திரும்பி வந்தது
வெறுமையாக
தோழமை இன்றி.

காற்றின் கனத்த மௌன இரங்கல்
விம்மி வெடிக்க
விழிகள் உடைத்துப் பாய்ந்தன துயரருவி.

புதல்வர் போன வழிச் சுவடெல்லாம்
தாய்மை புரண்டு கழுவியழ
தாமும் ஒத்தழுதபடி இருக்குமோ
தந்தைமை?

மைந்தரைத் தேடி நடந்தது
தள்ளாமை துணையாக.

ராணுவ ஊர்திகளின் தடம் பார்த்து
தானும் ஊர்ந்தூர்ந்து எங்கோ
தடமழிந்த இருண்மையில் சிக்கித்
தவித்தது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தொட்டில் விழுந்த தோழிகள்



பூமியில் தரிக்காச் சிறகுகள்
எந்த வேடுவன் கையிலோ?
புன்னகை மரிக்காப் பூக்கள்
எந்தப் புதை குழியிலோ?
தந்தைமை தவித்தது.

தாரத்தே
மண்ணில் தலை மோதிமோதி
மலையருவி கதறுமொலி
கேட்டபடி.

காற்றிறக்கும் தத்தளிப்புத்தான்
எனினும் தரிக்கவில்லை
திக்கெல்லாம் மேய்ந்தது
மூசிமூசி மோப்பம் பிடித்தது.

புதரிடை எங்கோ
கறையான்களுக்கும் இலவசமாய்
தின்னக் கிடைத்த புத்தகங்களின்
கறைபடிந்த பக்கங்களைப்
புரட்டிப் புரட்டி

கணக்கிட்டவாறே கைகாட்டி நகர்ந்தது.
புதைகுழியடியில் பிரண்டத் தொடங்கவும்
மீட்கப்பட்டவை எலும்புக் கூடுகள்
இறப்பிலும் கைகோத்து விடாமல்
பின்னிழுத்துக் கட்டப்பட்ட கைகளோடு.

இவையெல்லாம்
மண்சரிவினுட் புதைவுகள் அல்ல
மலைமுகடுகளையே கூனவைத்த
நாகரீகப் பெருஞ்சரிவுள்
நைந்து பட்ட மனிதங்கள்.

பி.பி.சி நிருபரிடம் நோகிறார் தந்தை
"மைந்தனின் புதைகுழியில் நின்றபடிதான்
பேசுகிறேன்"

மட்டுமல்ல தந்தையே
மனித உரிமைகளும்,
மகத்தான பௌத்த தர்மத்தினதும்
புதைகுழிமேல் நின்ற படியுந்தான்.

எல்லாம்தான்
வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை வாசகங்களாய்
போயினவே.

கவனம் தந்தையே
கல்லறை வாசகங்கள் ஏமாற்றும்
அரசியல் அங்காடித்தனம்
மலிந்து விட்ட தேசமிது
கண்டெடுக்கப்பட்ட எலும்புகள்
சிங்கள புராதனத்துச் சின்னங்களாய்
விலை கூவப்படும் நாளும் வரும்.

ஆதலால்
கண்விழித்திருப்போம்
மயான பூமியிலும் உண்மையை
விற்றுவிடச் சம்மதியாத
அரிச்சந்திரனைப் போல.

(எம்பிலிப்பிட்டியாவில் புதைகுழிவாய்ப்பட்ட பள்ளி மாணவர் நினைவாக)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு எழுத்தாளனும் சில ஏடுகளும்

## சி.சிவசேகரம்.

மிகுந்த தயக்கத்துடன் எழுதத் தொடங்கியவன் நான். திருகோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக் கல்லூரியின் மாணவர்கள் நடத்திய ஒரு கையெழுத்துப் பத்திரிகைக்காக, 1956 மட்டில் "அடிமையின் கனவு" என்ற ஆங்கிலக் கவிதையை தமிழாக்கியதைப் பாடசாலை நண்பர் சித்தி அமரசிங்கம் சென்ற ஆண்டு நினைவூட்டினார். கொழும்பில் றோயல் கல்லூரியில் படித்த இரண்டாண்டுகளில் கல்லூரிச் சஞ்சிகையிலும், பாரதிவிழா மலரிலும் என் கவிதைகள் இரண்டு பிரசுரமான நினைவு. கொழும்பில் எந்திரவியற் பீடத்திற் படித்த நான்கு ஆண்டுகளில் எந்திரவியற் பீட சஞ்சிகையின் ஒரு இதழுக்கு எழுதிய நினைவு. அப்போதெல்லாம் என் இலக்கியப் பார்வை அதிகம் வளர்ந்திருக்கவில்லை. என் அரசியல், தமிழரசுக் கட்சியினதும் திராவிட இயக்கத்தினதும் பாதிப்புகட்கு மிகவும் உடபட்டிருந்தது. அது எனது வாசிப்பையும் பாதித்ததென நினைக்கிறேன். 1965ல் தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசில் இணைந்த பின்பு பூரணமாகவே அதனின்று ஒதுங்கி விட்டேன். நான் இடதுசாரிகளை எதிர்த்து "தமிழ் தேசிய" அரசியல் பேசி வந்த போதும், ஐக்கிய தேசிய கட்சி மீதும் அது சார்ந்திருந்த ஏகாதிபத்திய சார்பு அரசியல் மீதும் ஏனோ எப்போதுமே வெறுப்பிருந்தது. பாராளுமன்ற இடதுசாரிகளின் தவறுகள், முக்கியமாகத் தேசிய சிறுபான்மை இனப் பிரச்சினை தொடர்பானவை, அவர்கள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை. அவர்கள் மத்தியில் ஏற்பட்ட பிளவுகள் பற்றி ஆழமாக ஆராயும் அக்கறையும் இருக்கவில்லை.

1965க்குப் பின், முக்கியமாக, மேற்படிப்புக்காக இலண்டனில் வாழ்ந்த 1966, 70கால கட்டத்தில், சமூகம், அரசியல், மொழிப்பற்று என்பன போன்ற விஷயங்களிற் கூடிய தெளிவு ஏற்பட்டது. இதன் விளைவாக மாக்சிய லெனினிஸ சிந்தனை மீது அக்கறை ஏற்பட்டது. 1970ல் இலங்கை திரும்பிய பின்பு கண்டியில் மாக்சிய-லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலருடன் தொடர்பேற்பட்டது. இதன் விளைவாக சில மலையகத் தமிழ் இளைஞர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இக்காலம் ஜனதா விமுக்தி பெரமுனே (ஜே.வி.பி) மிகவும் தீவிரமாகச் செயற்பட்ட காலமாகும். மா. லெ. கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் சில நெருக்கடிகள் இக்காலத்திற் தோன்றிவிட்டன. இவற்றில் நான் சம்பந்தப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுமுன்னே கட்சியின் பிளவும் சண்முகதாசனின் "வெளியேற்றலும்" நிகழ்ந்து விட்டன. சண்முகதானுடன் தொடர்பை துண்டித்தவர்களுடனேயே எனது பரிச்சயம் அதிகமாகவிருந்தது. அவர்களது சார்பில் இந்தக் கால கட்டத்தில் யுகசக்தி, செங்கொடி, களனி போன்ற ஏடுகள் வெளி வந்தன. "தொழிலாளி" சண்முகதாசனின் தலைமையில் இயங்கிய கட்சிப் பிரிவின் கையில் இருந்தது. 1979இல் அதற்கு இரண்டு பாடல்கள் புனைப்பெயரில்

1977 வரையில் நான் எழுதியவற்றைத் தொகுத்துப் பார்த்தால் கண்டியிலிருந்த நண்பர்கள் கேட்டதற்கிசைந்து தமிழாக்கம் செய்த மாக்சிய கட்டுரைகளே மிகப் பெரும்பாலானவை. இவற்றுள் எவையுமே அகசேறவில்லை. அவ்வாறான நோக்கமும் அப்போதிருக்கவில்லை.

எழுத்துத் துறைக்குள் என்னை இழுத்தது, கண்டி கலாசாரக் குழுவின் உருவாக்கம் எனலாம். கண்டியில் அறிமுகமான இடதுசாரி மலையகத் தமிழ் இளைஞர்களது அரசியல் உணர்வின் விளைவாக உருவான அந்த அமைப்பில், நானும் காலஞ்சென்ற விசுவானந்த தேவனும் மலையகத்தைச் சாராதவர்கள். நதி என்ற பேரில் ஒரு பத்திரிகை வெளியிடுவதாக முடிவு செய்யப்பப்பட்டது. முதல் மூன்று இதழ்கள் றோணியோ தாளில் தட்டெடுத்துச் செய்யப்பட்டு பிரதிசெய்யபப்பட்டன. அடுத்த இரண்டு இதழ்கள் கண்டியில் அச்சிடப்பட்டன. அச்சுக் கோர்க்கும் வேலையை க.க.கு. உறுப்பினர் தங்கவேல் பொறுப்பேற்றார். அவர் அச்சகத் தொழிலாளி. அச்சிடும் செலவு அதனாற் சிறிது குறைந்தது. ஆயினும் பத்திரிகை விற்று வந்த பணம் பத்திரிகைச் செலவின் சிறு பகுதியைக் கூட ஈடு செய்யவில்லை. எனினும் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுடன் இருந்த போது கொழும்பில் இயங்கி வந்த ஒரு இலக்கியக் குழுவைச் சேர்ந்தவர்களுடன் க.க.கு. அதற்கு உடன்பட்டது. அடுத்த இதழுக்கு ஆயத்தமாக வைத்திருந்த சகல விசயங்களையும் அவர்கள் கையில் ஒப்படைத்தார்கள். அடுத்த இதழ் வெளிவந்த போது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் தமிழாக்கிய ஹோ சி மின் கவிதைகள் மூன்றும் சர்வதேசத் தொழிலாளர் கீதமாகிய இன்ற்ற

நேஷனல் என்ற பாடலின் மெட்டுக்கே செய்த தமிழாக்கமும் வெளிவரவில்லை மாறாக, அவர்கள் தெரிந்தெடுத்த விசயங்கள் வந்திருந்தன. சில கட்டுரைகளும் கைவிடப்பட்டதாக நினைவு. பிரசுரமாகாத விசயங்கட்குப் பிரதிகள் கைவசமிருக்கவில்லை. அவர்கள் அவை தொலைந்து விட்டதாகச் சொன்னார்கள். அதனுடன் நதியும் நின்றது. 1976ல் (முன்பு ஆங்கிலத்தில் வந்திராத) மாஓ சேதுங் கவிதைகள் இரண்டு வந்தன. அவற்றை நான் தமிழ்படுத்தினேன். அதே ஆண்டு மாஓ இறந்தவுடன் கண்டி கலாசாரக் குழுவினர் வருட முடிவிற்குள் அவரது கவிதைத் தொகுதி ஒன்றைப் பிரசுரிக்க வேண்டும் என விரும்பினார்கள். சண்முகம் சிவலிங்கம் செய்ய இருப்பதாக முதலிற் கதை அடிபட்டது. நு்.மான், சில கவிதைகளை நன்றாகத் தமிழாக்கியிருந்தார். ஆயினும் முழுவதையும் செய்யும் முயற்சியை யாரும் மேற்கொள்ளவில்லை. ஒருவேளை கே. கணேஷைக் கேட்டிருக்கலாம். அவரை எனக்கு அப்போது தெரியாது. எனவே நான் செய்வதாக முடிவானது. பல குறை பாடுகளுடன் அதைச் செய்து முடித்தேன். அட்டைப்படம் அவ்வளவு நன்றாக அமையவில்லை. மாலை நேரங்களில் க.க.கு. நண்பர்கள் ஹற்றனுக்குப் போய் செங்கொடிச் சங்க அச்சகத்தில் ஒவ்வொரு பக்கமாக

அச்சுக் கோர்த்து அடித்து வந்தார்கள். அவர்களது சிரத்தையையும் சிரமத்தையும் நினைக்கும் போது என்னுடைய பங்களிப்பு எவ்வளவு அற்பமானது என்றுதான் தோன்றுகின்றது. 1976ன் முடிவில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் 1977 தேர்தலில் என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்பது பற்றிய முரண்பாடுகளும் மா.லெ. கம்யூனிஸ்ட் பிரிவினரிடையில் மேலும் பிளவுகட்கு வசதி செய்தன. இதன் துணைவிளைவாகக் கண்டி கலாசாரக் குழுவும் ஸ்தம்பிதம் எய்தியது. 1977 தேர்தலின் பின்பு ஒரு வகையான சோர்வு பல இடதுசாரி இயக்கங்களையும், கட்சிகளையும் கவ்வியது. ஆயினும் இதற்கு நடுவிலும் தளராது செயற்பட்டவர்கள் இருந்தார்கள்.

ஒரு இலக்கிய அமைப்பினுள் அதன் உறுப்பினர்கள் சமத்துவமாகவும் ஒற்றுமையாகவும் செயர்படுவதற்கு ஒரு நல்ல உதாரணமாகவே கண்டி கலாசாரக் குழு இருந்தது. அங்கு ஒவ்வொருவரும் அவரது பங்களிப்புக்காக மதிக்கப்பட்டார்கள். கல்வி, தொழிற் தகுதிகளை விட அக்கறையும் ஈடுபாடும் முக்கியமானவையாக இருந்தன. தொடர்ந்தும நதியை றோணியோ பிரதிகளாகவே அச்சிட்டு வந்திருந்தால் சிறிது கூடிய காலத்துக்கு அதை நடத்தியிருப்போமோ தெரியாது. "அயலார் வருகை" பற்றிய ஒரு அரிய பாடம் என்றே நதியின் முடிவைக் காணுகிறேன்.

களனியுடன் எனக்கு நெருக்கம் குறைவு. ஒரு சில கவிதைகள் களனிக்காக எழுதினேன். களனி, நதியைவிட இலக்கியத்தரமான பத்திரிகை என்பேன். ஆயினும், அதற்குள் இருந்த சில அரசியல் முனைப்புக்களின் விளைவாக, அது வேகமாகவே தன் முடிவைக் கண்டது. செ. கணேசலிங்கன் 70களில் நடத்திய "குமரன்" ஒரு "தீவிர" இடதுசாரி ஏடு. மாதாமாதம் தவறாமல் வந்தமை அதன் சிறப்பு. ஆயினும் அதில் ஒருவிதமான போலித்தனம் இருந்தது. புனை பேரில் எப்போதோ ஒருமுறை அனுப்பிய ஒரு கவிதை போக அதனுடன் எதுவித தொடர்பும் இருக்கவில்லை.

அன்றைய அரசியற் சூழ்நிலையாலும் சோவியத் ஒன்றியத்தின் போக்குப் பற்றிய எனது உணர்வுகளாலும் மல்லிகைக்கு எழுதும் எண்ணமோ அன்று எழவில்லை. டொமினிக் ஜீவா சோவியத் ஒன்றியத்திற்கு எதிரான எழுத்துக்களைத் தணிக்கைக்கு உட்படுத்தி வந்துள்ளதாகவும் பின்பு பலராலும் பேசப்பட்டது. எனவே எழுதாமல் விட்டது நல்லது என்றே நினைக்கிறேன். தாயகம், சமரன் போன்ற ஏடுகள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தன. அவர்கள் என்னை அணுகுமளவுக்கு நான் எழுதி வந்தவனல்ல. நான் எழுதும் தேவையும் அங்கு அப்போது இருந்திராது என்றே நினைக்கிறேன்.

"அலை" மறுபடியும் வெளியாகத் தொடங்கிய காரணமும் அதன் பின்னணியும் எனக்குத் தெரியாது. அதற்கும் வெகுகாலம் முன்பிருந்தே முற்போக்கு இலக்கிய அணியினர் என்று கூறப்பட்டவர்கட்கும் அதற்கு மாறானவர்கட்குமிடையிலான மோதல் இருந்து வந்ததை அறிவேன். ஆயினும், நான் இடதுசாரிச்சிந்தனையால் ஈர்க்கப்பட்ட காலமும் சூழலும் என்னை இந்தப் பிரச்சினைக்கு வெளியிலேயே வைத்திருந்தன. விஷயச் சார்பாகவே பத்திரிகைகளையும் படைப்புக்களையும் பார்த்து வந்தேனாயினும், இலக்கியப் பத்திரிகை அரசியலில் தனிமனித, குழு மோதல்கள் பற்றிய அக்கறை இருக்கவில்லை. 1963ல் கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவை அடுத்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலும் பிரச்சினைகள் எழுந்தன. கைலாசபதி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.மு.போ.எ. சங்கத்தில் ஒதுங்கிச் செயற்பட்டனர். மாக்ஸிய - லெனினிஸச் சிந்தனையால் ஈர்க்கப்பட்டவர்களிடையே பரவலான அளவில் இருந்த கருத்து உடன்பாடு ஒரு வலிய கலை இலக்கிய அமைப்பாக உருவாகும் நிலை ஏற்படுமுன்னமே நாட்டின் அரசியல் நிலவரங்கள் சீரழியத் தொடங்கிவிட்டன. ஆயினும், முற்போக்கு இலக்கியம் என்ற கோட்பாடு, வலிய ஒன்றாகவே தன்னை நிறுவிக் கொண்டது.

டொமினிக் ஜீவா, எஸ் பொன்னுத்துரை, யேசுராசா போன்றோர் காட்ட முனைந்தது போலன்றிக் கைலாசபதிக்கும் சிவத்தம்பிக்கும் இருந்த முக்கியத்துவம் அவர்கள் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் என்பதால் ஏற்பட்டதல்ல. சமுதாயத்துக்கும் இலக்கியத்துக்கும் உள்ள உறவையும் இலக்கியத்தின் அரசியற் தன்மையையும் அவர்களே மிகவும் தெளிவு படுத்தியதால் அவர்களது இலக்கியப் பார்வை சமூகப் பிரஞ்ஞையுடைய எழுத்தாளர்கள் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது. பாராளுமன்ற அரசியலில் அற்பச் செல்வாக்குடைய தமிழ் இடதுசாரிக் குழுவினரே இலக்கியத்துறையில் ஆதிக்கம் செலுத்தியதாகக் கருதப்படுகிறதென்றால் அது தனிமனிதர்களதோ கட்சிகளதோ ஆதிக்கமல்ல. அது ஒரு சிந்தனைப் போக்கில் ஆழமான தாக்கத்தின் விளைவு என்றே நினைக்கிறேன்.

எந்த வெற்றிகரமான சமுதாய, அரசியல் இயக்கமும் சந்தர்ப்பவாதிகளையும் தன்பால் ஈர்க்கிறது. முற்போக்கு இலக்கிய இயக்கத்தின் வெற்றிகளுள் முக்கியமான ஒன்று, ஈழத்துத் தமிழ் எழுத்துக்களும் மொழிவழக்குக்கும் உரிய மதிப்பைப் பெறுவதில் அவர்களது பங்களிப்பு. இதன் விளைவாகத் தங்களை முற்போக்கு இலக்கியவாதிகளாகக் காட்டிக் கொள்ள முந்தியவர்கள் பலர். முற்போக்கு இலக்கிய அணியின் ஆதரவில் தம்மை மேம்படுத்தும் ஆவல் சிலரிடம் மிகுதியாக இருந்தது. மறுபுறம், இடதுசாரிக் கட்சிகளைப் பலவேறு காரணங்கட்காக நிராகரித்த எழுத்தாளர்கள் இருந்தனர். இவர்களுள் எல்லாருமே வலது சாரிகளோ குறுகிய, தேசியவாதிகளோ அல்லர். முதலில் எதிர்க்கப்பட்ட வேண்டியவை தவறான சிந்தனைகளே என்ற தெளிவுடன் முற்போக்கு இலக்கிய இயக்கம் செயற்படத் தவறியதன் விளைவாகச் சில நல்ல சக்திகள் ஒதுங்கும் நிலை ஏற்பட்டது என்பது என் மதிப்பீடு. ஆயினும், சிந்தனைத் தளத்திலே முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டுடன் முரண்பட்ட வலிய அரசியற் போக்குகள் இருந்தன. அன்றைய தமிழ்த் தேசியவாத அரசியலுடன் தம்மை இனங்கண்டோர். அதில் ஒரு பகுதியினர் "கலை கலைக்காகவே" என்ற வறான கோஷங்களை முன்னிறுத்தி இலக்கியத்தின் சமுதாயத்தன்மையை நிராகரித்தோர் இன்னொரு பகுதியினர்.

அலையில் ஏதோ ஒருவகையான இடதுசாரிப் போக்குக் காணப்பட்டாலும் இடது சாரிக கட்சிகள் மீதும் முற்போக்கு இலக்கிய அணியெனக் கருதப்பட்டோர் மீதும் பகைமை கொண்டவர்களின் செல்வாக்கு அங்கு படிப்படியாக அதிகரித்தே வந்தது. அலையில் எழுதத் தொடங்கிய போது மாறுபட்ட சிந்தனைகட்கான ஒரு களமாகவே அதைக் கருதினேன். யேசுராசா கண்டியில் இருந்த போது கண்டி கலாசாரக் குழு நண்பர்கள் மூலம் எனக்கு அறிமுகமானவர். அவரது கவிதை ஒன்றும் நதியில் பிரசுரமானதோ என நிச்சயமில்லை. 1974ல் தொடங்கிய அலை, சில இதழ்கள் வந்து நின்று, 1979 அளவில் மீளத் தொடங்கிய போது என நினைவு.












யேசுராசாவைக் கொழும்பில் கே. எஸ் சிவகுமாரன் வீட்டிற் சந்தித்ததையடுத்து, எழுதி வைத்திருந்த இரண்டு கவிதைகளை அலைக்கு அனுப்பினேன். பின்பு புதுக்கவிதை என்ற பேரில் வரும் அபத்தங்களை கேலி செய்து ஒரு கட்டுரை அனுப்பினேன். அதன் பின்பு தொடர்ந்து எழுதி வந்தேன்.

1980 அளவில் சமுத்திரன் என்று அறியப்பட்ட சண்முகரத்தினம் என்பவர் லங்கா காடியன் (Lanka Guardian) ஏட்டில் எழுதிய ஒரு கட்டுரையில் முற்போக்கு இலக்கிய வட்டத்திற்கு வெளியே உருப்படியாக எதுவுமே வரவில்லை என்ற தொனியில் எழுதியதற்குச் சுருக்கமானதொரு மறுப்பை அதற்கு எழுதினேன். அத்துடன் பாலேந்திராவின் நாடகப் பங்களிப்பை வேண்டுமென்றே மறுக்கும் முயற்சியாகவே இந்தக் கருத்துக்கள் சமுத்திரன் மற்றும் நா. சுந்தரலிங்கம் போன்றோரால் பரப்பப்படுவதாக எனக்குத் தெரிந்தது. முற்போக்கு முகாம் என்ற திரையின் பின்னிருந்து கலலெறியும் முயற்சிகள் முற்போக்கு இலக்கியத்திற்கு நல்லதல்ல என்றுதான் அன்றும் இன்றும் கருதி வந்திருக்கின்றேன். எனவே சமுத்திரனை மறுத்து அலையில் விரிவாக ஒரு கட்டுரை எழுதினேன். அதில், எனது தாக்குதல் கொஞ்சம் கடுமையாகவே இருந்தது. என்கருத்தை மறுத்து நு∴மான் எழுதியதும் எனது பதிலும் பலரும் அறிந்தவை. இதே கால கட்டத்தில் சண்முகதாசனிடமிருந்து விலகி யாழ்ப்பாணத்திற் செயற்பட்ட மாக்சிய லெனினிஸ்ய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான காலம் சென்ற கே. ஏ. சுப்பிரமணியத்தின் தொடர்பு ஏற்பட்டது. இதன் விளைவாக செம்பதாகையில் புனை பெயரில் ஒரு சில கட்டுரைகள் எழுதினேன். டானியலில் "கோவிந்தன்" நாவலை விமர்சித்து அவரை மிகவும் சினக்கச் செய்த கட்டுரையும் அதில் வெளியானது. பாரதி பற்றிய வரட்டுத்தனமான தீவிர இடதுசாரிக் கருத்துக்களை மறுத்து நான் செம்பதாகையில் எழுதிய ஒரு கட்டுரை அலையில் மறுபிரசுரமானது.

அலை ஆசிரியர் குழுவும் பல இடது சாரிகளும் என்னைப் பற்றி அன்று வைத்திருந்த மதிப்பீடுகள் அலையில் சமுத்திரனை மறுத்து எழுதிய கட்டுரையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. ஆயினும், இடதுசாரிக் கட்சிகள் பற்றிய எனது நிலைப்பாடு யேசுராசாவின் நிலைப்பாட்டினின்று மிகவும் வேறுபட்டது. தனிமனிதர்கள் மீது, முக்கியமாக கைலாசபதி மீது, தாக்குதல் தொடுக்கும் ஆயுதமாக அலை பயன்படுத்தப்பட்டதையிட்டு அவரிடம் என் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறேன். ஆயினும் இவ்வாறான போக்குகள் அலையிற் தொடர்ந்தன. என்னளவில் எனது எழுத்து எதுவிதமான குறுக்கீடும் இல்லாது பிரசுரிக்கப்பட்டு வந்தளவில், நியாயமான முறையில் விவாதிக்கக்கூடிய ஒரு களமாகவே அலை இருந்தது. இடதுசாரிக் கட்சிகட்கு எதிரான அலையின் நிலைப்பாடும் அதன் தமிழ்த் தேசியவாதமும் தொடர்ந்தும் அத்தகைய ஒரு களத்தை நீடிக்க இயலாது செய்துவிட்டன, என்பது என் ஊகம். இதற்கான சில சாட்சியங்கள் மெல்ல மெல்லத் தென்பட்டன.

வீரசூரிய (1976ல் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட பேராதனை வளாக மாணவர்) நினைவாக 1982ல் எழுதிய கவிதை, யேசுராசா தனக்குப் பிடித்திருந்தது என்று கூறியும் அலையிற் பிரசுரமாகவில்லை. இதற்கு அரசியல் கருத்தைவிட வேறு நியாயம் இருக்கவில்லை. இக்கவிதை பின்னர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செம்பதாகையில் வெளியானது. அடுத்து அலை வெளியீடான இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'ஒரு கோடை விடுமுறை' என்ற நாவலையும் செ. யோகநாதனின் 'இரவல் தாய் நாடு' என்ற நாவலையும் விமர்சிக்குமாறு இ. பத்மநாபஐயர் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இரண்டும் ஒரே விஷயம் தொடர்பானவை என்பதால் ஒரே கட்டுரையில் இரண்டையும் விமர்சித்து எழுதினேன். அது விரிவாக எழுதப்படவில்லை என்ற விதமாக ஏதோ காரணத்தால் பிரசுரமாகவில்லை. அது பற்றி எனக்கு மனவருத்தமில்லை. ஆயினும், இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்திடம் நான் கடுமையாக விமர்சித்த பகுதிகள் தெரிவிக்கப்பட்டிருந்தமை மிகவும் மோசமான பத்திரிகை நடத்தை என்றே கருதினேன். 1984ல் இது தெரிய வந்தபோது நான் இலங்கையிலிருந்து புறப்பட்டு இலண்டனில் இருந்தேன். ஜே.ஜே. சில குறிப்புகள் என்ற நாவல் பற்றிய விமர்சனமும், எஸ்.வி. ராஜதுரையின் 'எக்ஸிஸ் டென்ஷியலிஷம்' நூல் பற்றிய விமர்சனமும் 1983 - 84ல் அலையில் வந்தன. பின்னையதற்கு எஸ். வி. ராஜதுரை எழுதிய பதிலில் நூலின் குறைபாடுகளாக நான் அடையாளங் காட்டியுள்ளவற்றை மறுப்பதற்கு அவர் எனது அரசியல் நிலைப்பாடு பற்றிய தனது ஊகங்களின் அடிப்படையில் வாதங்களை முன்வைத்து எழுதினார். நான் சுருக்கமாக எழுதிய எதிர்வினை, காரணம் தராமலே, பிரசுரம் மறுக்கப்பட்டது. இதுவே அலையுடனான தொடர்பின் துண்டிப்பிற்குக் காரணம் ஆயிற்று. இதன் பின்பு வந்த அலை இதழ்கள் எனக்கு ஒழுங்காகக் கிடைக்கவுமில்லை. கிடைத்திருந்தாலும் அலையில் எதற்கும் பதில் எழுதியிருக்கமாட்டேன். என்றே நினைக்கிறேன். 1985ல் ஜே.ஜே. சில குறிப்புக்கள் நாவல் பற்றிய மு. பொன்னம்பலத்தின் மிக நீண்ட விமர்சனத்தில், மிகவும் கீழ்த்தரமான மொழியில் என் விமர்சனம் பற்றிய ஒரு தாக்குதலும் இருந்தது. அது பற்றி 1986-87 மட்டில் தெரியவந்தது. கைலாசபதியைத் தாக்க அவர்கள் பாவித்த மொழியைவிட அது மோசமில்லை என்ற ஆறுதலுடன் அது பற்றி அக்கறை காட்டவில்லை. "நதிக்கரை மூங்கிலின்" முன்னுரையில் "வீரசூரிய" கவிதையை அலை பிரசுரிக்க மறுத்தது பற்றி எழுதியதை யேசுராசா விரும்பாமல் அக்கூற்றை அகற்ற விரும்பியதாகப் பத்மநாப ஐயர் குறிப்பிட்ட நினைவு, ஆயினும் நான் எழுதியபடியே முன்னுரை பிரசுரமானது; (காவியா வெளியீட்டுப் பொறுப்பாளர் சண்முக சுந்தரம் அதற்கு வழங்கிய பதிப்புரைக்குச் சண்முக சுந்தரமே அல்லாது எவரும் பொறுப்பல்ல. அது பற்றி தமிழவன் மன்னிப்புக் கோரி எழுதினார்). பத்மநாப ஐயர் மூலமே அலையுடனான தொடர்பு 1979 முதல் பேணப்பட்டது. அவர் கேட்டு நான் தமிழாக்கி, எனக்குத் திருப்தி அற்றது என்று குறிப்பிட்டு எழுதிய 'முன்னோக்கிய படை நடப்பு' என்ற கவிதை எனது விருப்பத்துக்கு மாறாக அலையிற் பிரசுரமானது. இதை ஓரளவு சீராகத் தழுவி எழுதிய "புதிய பூமி" என்ற கவிதை எனது இரண்டாவது கவிதைத் தொகுதியான 'செப்பனிட்ட படிமங்களில்' வந்தபோது, அது முதலில் வெளியான சூழல் பற்றி முன்னுரையில் எழுதினேன். நான் பொய் சொல்கிறேன் என்ற விதமாக யேசுராசா அலையிற் தனது பத்தியிற் குற்றஞ்சாட்டினார். அதற்கான ஒரு சுருக்கமான பதிலை நான் தாயகத்தில் எழுதிய பிறகு, யேசுராசா அந்த விவாதத்தைத் தொடர விரும்பவில்லை என்று தன்னிடம் சொன்னதாக கே.ஏ. சுப்பிரமணியம் எழுதினார். இதன் பின்பு அலையும் மெல்ல ஓய்ந்து விட்டது. யேசுராசா 'கவிதை' என்ற ஏட்டை ஆரம்பித்தார். சில தமிழகத்து விமர்சகர்கள் சிறந்த படைப்பாளிகளாகக் காணும் எழுத்தாளர்களின் பட்டியலை அடிக்கடி மாற்றுவது போல யேசுராசாவின் தரமான கவிஞர்களின் பட்டியலிலிருந்து





கழன்ற பேர்களுள் என்னுடையதும் ஒன்று. என்னுடையதை விட முக்கியமான சில பேர்களும் விடுபட்ட அளவில் மகிழ்ச்சி, அதைவிட முக்கிமாக ஆண்டபரம்பரைக் கவிராயர்களுக்கு அருகில் வைக்கப்படாதது பற்றித் திருப்தியென்றே சொல்ல வேண்டும்.

அலை அனுபவத்திலிருந்து நான் கற்றிருக்க வேண்டிய பாடங்கள் பல. ஆயினும் அதை ஒத்த அனுபவங்கள் புலம் பெயர்ந்த சூழலில் மீண்டும் ஏற்பட்டன. அலையுடன் எனது உறவும், முரண்பாடும் வரையறைக்குட்பட்ட ஒரு பரஸ்பர புரிதலையாவது அடிப்படையாகக் கொண்டது. அந்த உறவின் முறிவு கீழ்த்தரமான தனிப்பட்ட தாக்குதல்களுக்கு வழிகோலாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

பத்மநாப ஐயர் மூலமே எனக்குத் தமிழகத்துச் சிறு சஞ்சிகைகள் கிடைத்து வந்தன. 1982ல் வானம்பாடியில் எனது கவிதைகள் சில வெளிவந்ததிலும் அவருக்குப் பங்கு உண்டு என்றே நினைக்கிறேன். அவரது தொடர்புகள் முக்கியமாக க்ரியா ராமகிருஷ்ணன், சுந்தர ராமசாமி, எஸ்.வி. ராஜதுரை தமிழவன், சிவராமகிருஷ்ணன் போன்றோருடனே இருந்ததாக நினைக்கிறேன். அவருடைய தேசியவாத அரசியலுக்கும் என்னுடைய இடதுசாரி அரசியலுக்கும் ஒத்து வராது. ஆயினும் அவருக்கு ஈழத்துத் தமிழ் நூல்களை வெளியிடுவதில் இருந்து வந்துள்ள பெரும் ஆர்வம் இந்த வேறுபாட்டைவிட முக்கியமானதாக இருந்தது. இதுவரை எமக்குள் உள்ள நட்புக்கு வேறு அடிப்படை இல்லை எனலாம். இன்றுங் கூட, என்னுடைய எழுத்துக்கள் அச்சேறுவதில் மிகுந்த அக்கறை காட்டும் ஒருவராகவே அவர் இருந்து வருகிறார். அவரது அறிமுகம் காரணமாகப் படிகளில் எனது கவிதைகளைத் தமிழவன் கேட்டு வாங்கிப் பிரசுரித்தார். சில கட்டுரைகளும் பிரசுரமாயின. 1980ல், பெங்களூரிற் தமிழவனையும் சிவராமகிருஷ்ணனையும் சந்தித்தபோது, தேசிய இனப்பிரச்சினை பற்றிய எனது மதிப்பீட்டைச் சொன்னேன். அதைக் கட்டுரையாக எழுதித் தருமாறு கேட்டார்கள். அக்கட்டுரை 1981 நடுவில் வெளியான நினைவு. முதலில் கௌரி காந்தன் என்பவர் பதில் எழுதினார். என் எதிர்வினையை அடுத்து வரதராஜப் பெருமாள் எழுதிய கட்டுரையுடன் விவாதம் நிறுத்தப்பட்டு விட்டது. அடுத்தடுத்த இதழ்களுடன் படிகள் நின்று விட்டது. சிறு சஞ்சிகை வட்டாரங்களில் முக்கியமாக இடதுசாரி சஞ்சிகைகளுள் ஈழத்து இடதுசாரி விளக்கம் பற்றிய அறிவு குறைவு. தமிழகத்துக் கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டையும் பற்றிய அறிவை வைத்தே அவர்களுட் பலர் தமது அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொண்டவர். இந்த அரைகுறை அறிவின் பின்னணியில் கைலாசபதி மீதான அலையின் தாக்குதலைப் படிகளிற் தமிழவன் கொண்டாடி மகிழ்ந்தார்.

சிந்தனைக்கும், தமிழ்நாட்டுச் சிறு சஞ்சிகைகளின் நோக்கங்களுள் ஒன்றான தனிப்பட்ட முறையிலான தாக்குதல்கள் படிகளிற் கொஞ்சம் குறைவு எனலாம். அன்றைய தமிழகப் பத்திரிகைச் சூழலில் இறங்கி ஈடுபடுமளவிற்கு எனக்கு அக்கறை அதிகமில்லாததால் வேறெங்குமே எழுத முயலவில்லை. (1980 மட்டில் கணையாழியில் என் கவிதைகள் மூன்று வந்தன. பின்னர் அனுப்பிய 'சித்திரையில் மாவலி' வரவில்லை. அதன் பின்பு நான் எதையும் அனுப்பவுமில்லை. இதுவே தமிழகத்தில் எனது முதலாவது பத்திரிகை அனுபவம் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்).

வியாபார சஞ்சிகைக்காக எழுதும் பழக்கம் என்னிடம் இருக்கவில்லை. 'ஊற்று' விஞ்ஞான சஞ்சிகைக்கு 1970களில் ஒழுங்காக எழுதினேன். ஏனோ தேசிய தினசரிகளிலும் வார ஏடுகளிலும் எழுதும் அக்கறை எனக்கு இருக்கவில்லை. வற்புறுத்தலின்பேரில் எழுதியவை ஒன்றிரண்டு இருக்கலாம். சில கட்டுரைகள் மறுபிரசுரமாகியிருக்கின்றன. மற்றப்படி, சிறு சஞ்சிகைகள் எனக் கருதக்கூடிய ஏடுகளுக்கே பெரிதும் எழுதி வந்திருக்கிறேன். சில பத்திரிகைக்கு எழுதியவை பிரசுரமாகுவதற்கு முன்னமே பத்திரிகை நின்றுபோயும் உள்ளது. உதாரணமாக 1980களில் மட்டக்களப்பில் வெளிவந்த 'கீற்று'.

இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடான தாயகத்தில் நான் எழுதத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடங்கியது. அது 1970களில் வந்து நின்று 80களில் மீளவும் வரத்தொடங்கிய பின்னராகும். அதை வெளிவரச் செய்வதற்கு ஊக்குவித்த கைலாசபதியின் மறைவின் விளைவாக, நான் எண்ணியதைவிட அதிகமாகவே எழுத வேண்டிய தேவை ஏற்பட்டது. 1984இன் தொடக்கத்தில் நடந்த கைலாசபதி நினைவுக் கூட்டத்திற்பேச யாழ்ப்பாணம் போயிருந்தபோதே, தேசிய கலை இலக்கியப் பேரவை நண்பர்களிற் பெரும்பாலானோரை முதன்முதலாகச் சந்திக்கக் கிடைத்தது. கூட்டத்திற்கு முன்பும் கூட்ட இறுதியிலும் முகம் கொடுத்த இரண்டு பிரட்டற் சம்பவங்கள் யாழ்ப்பாணம் எவ்வளவு தூரம் மாறிவிட்டது என அறிவுறுத்தின. இன்னும் பல நெருக்குவாரங்கட்கு ஈடுகொடுத்தே அவர்களால் அங்கு தொடர்ந்தும் செயற்பட வேண்டியேற்பட்டது. 1989 வரை வந்த இருபதுக்கும் அதிகமான இதழ்களில் விடாது எழுதி வந்தேன். ஒரு சில கட்டுரைகள் பிரச்சினைக் குரியனவாயின. மு. தளயசிங்கம் பற்றிய விமர்சனங்கள் அவரது அபிமானிகள் மத்தியில் எப்போதுமே கடுங் கோபத்தைக் கிளறுவது நான் அறிந்ததே. கைலாசபதி தளயசிங்கத்தை, முன்பு விமர்சித்து எழுதியதும் அதன் விளைவாகக் கடுந் தாக்குதல்கட்கு உட்பட்டதும் நான் அறியாததல்ல. ஆயினும் கைலாசபதியின் விமர்சனம் தவறவிட்ட சில விஷயங்களை உள்ளடக்கி ஒரு கட்டுரை எழுதினேன். மு. பொன்னம்பலம் அதற்கு ஒரு நீண்ட பதிலை எழுதி தாயகத்திலேயே அதைப் பிரசுரிக்குமாறு கேட்டார். அந்தப் பதிலின் நீளம் சஞ்சிகையின் பக்கங்களில் அரைவாசிக்கு மேல் எடுக்கும் என்பதாலும் விமர்சனத்துடன் சம்பந்தமில்லாத பல விஷயங்கள் தாயகத்தில் வழமையான உள்ளடக்கத்துக்குப் பொருந்தாமல் இருந்ததாலும் கட்டுரையைச் சிறிது சுருக்கி எழுதுமாறு கேட்கப்பட்டது. அதை ஏற்காத மு.பொ. அதைத் தனது செல்வாக்குக்கு உட்பட்ட ஒரு செய்தி ஏட்டில் வெளியிட்டார். அந்தக் கட்டுரையை நான் காணக் கிடைக்கவில்லை. கண்டிருந்தாலும் பதில் எழுதியிருப்பேனோ என்பது ஐமிச்சம்.

தமிழ் பற்றி நான் எழுதிய கட்டுரைகள் எப்போதுமே சர்ச்சைக்குரியனவாகவே இருந்து வந்துள்ளன. அயற் சொற்களைத் தமிழில் எழுதுவது பற்றி ஊற்று சஞ்சிகையில் 1975 மட்டில் எழுதினேன். நவீனத்துவம் பேசும் பலருள் மறைந்திருக்கும் பழமை பேணலை வெளிக்கிளப்பியது.

தமிழின் சிறப்பியல்புகள் கெடாமல் சமகாலத் தேவைகட்கு ஈடுகொடுக்கும் விதமாக எவ்வாறு தமிழில் மாற்றங்களைப் புகுத்தலாம் என்ற கேள்விக்குத் தனியொருவரால் முடிவுகளை வழங்க முடியாது. ஆயினும் தட்டிக்கழிக்க முடியாதபடி கடந்த சில தசாப்தங்களாக நம் முன்னிற்கும் கேள்விகளை பகிரங்கமாக எழுப்புவது இயலுமான தீர்வுகட்கான ஆலோசனைகளை முன்வைப்பதும் நம் எல்லோருடையதும் உரிமை. இந்த நோக்கிற் தாயகத்தில் எழுதிய கட்டுரைகள் தமிழகத்திலுள்ள பெ.சு. மணி போன்ற சிலரது வரவேற்பைப் பெற்றதாக கே.ஏ. சுப்பிரமணியம் தெரிவித்தார். அதேவேளை ஈழத்தின் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் ஒருவர் நான் தந்த சில தகவல்கள் தவறானவை என்று ஒரு பொதுக்கூட்டத்தில் மறுத்துப் பேசினார். இன்னொரு கூட்டத்தில் அவர் முன்பு கூறியதற்கு மாறான விதமாக தகவல்களைத் தந்தபோது, தேசிய கலை இலக்கியப் பேரவை நண்பர்கள், அவர் இம்முறை நான் எழுதியது சரியென்று ஒப்புக் கொள்கிறாரா? என்று கேட்டார்கள். அவர் மழுப்பிவிட்டு நழுவினாரென்றும் தகவல் கிடைத்தது. தமிழர் மத்தியிலுள்ள ஒரு முக்கியமான குறைபாடு நிபுணத்துவம் தொடர்பானது. தம்மைச் சில துறைகளில் நிபுணர்களாகக் கருதுகிறவர்கள் பிறர் அத்துறைகள் பற்றிப் பேசுவதை வெறுக்கிறார்கள். கேள்விகள்கூட அவர்களிடமிருந்து தெளிவு படுத்தலை எதிர்பார்க்குமாறு அமைதலையே ஏற்கத் தயாராகவுள்ளனர். மாற்றுக் கருத்துக்கள் பகைமையுடனேயே நோக்கப்படுவது வழமை எனலாம். எவருக்கும் எதையும் கேள்விக்குட்படுத்தும் உரிமை இருக்க வேண்டும் என்பது சுதந்திரமான சமுதாயத்திற்கு ஒரு அடையாளம். நிபுணத்துவ எதேச்சாதிகாரம் ராணுவ எதேச்சாதிகாரத்திற்கு சளைத்ததல்ல.

'அமைதிகாத்தல்' என்ற கவிதை இந்தியப் படைகள் யாழ் மண்ணில் நிலைகொண்ட காலத்தில் எழுதப்பட்டது. அதன் இறுதி வரிகள்,

“இருளாய் விடிந்த பொழுதில் விழித்தோம்.
கனவு கலைந்தோம் போரில் எழுந்தோம்
எங்கள் வாழ்வில் எமக்கென மீட்க
எத்தனை ஆண்டும் போரிடத் துணிந்தோம்”

என்று அமைந்தன. அவை பத்திரிகைக்குத் தொல்லைகளைத் தருமென்று கருதிய அச்சகத்து நண்பர் அவ்வரிகளை நீக்கிவிட்டு கவிதையை அச்சிட்டுவிட்டார். கே.ஏ. சுப்பிரமணியம் அதுபற்றி மனவருத்தம் தெரிவித்ததோடு கவிதையை மீண்டும் முழுமையாக அச்சிட ஏற்பாடு செய்தார்.

1990 முதல் தாயகத்தை வெளியிடுவதிற் பலவேறு நடைமுறைச் சிரமங்கள் இருந்தன. வருடத்துக்கு ஒன்றல்ல இரண்டு வருவதை இயலுமாயின் சில இதழ்கள் அப்பியாசப் புத்தகத்தாளில் அச்சிடப்பட்டன. இச்சூழலில் என் எழுத்துக்கள் முன்னைவிடக் குறைவான அளவிலேயே தாயகத்தில் பிரசுரமாயின. தாயகம் கடைசி இதழ் வந்து இப்போது ஏறத்தாழ இரண்டு வருடங்களாகின்றன. தொடர்ந்து வரும் என்பது என் எதிர்பார்ப்பு.

செம்பதாகை என்ற மா. லெ. கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்கட்கான பத்திரிகை 1977 அளவில் பரந்துபட்ட வாசிப்புக்குரிய ஒரு பத்திரிகையாக, புதிய பூமி ஆரம்பிக்கப்பட்டது. 1990க்குப் பின் அதை யாழ்ப்பாணத்தில் வெளியிடுவதிற் பல பிரச்சினைகள் இருந்தன. நான்கு வருடங்கள் முன்பிருந்து கொழும்பிலிருந்து அதை வெளியிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து வெளியிடுவதில் பலவேறு சிரமங்களால் விட்டுவிட்டு வெளிவரும் நிலையிலுள்ளது. அதன் இலக்கியப் பகுதிக்கு எழுதிய ஒரு கட்டுரை தமிழகத்தில் 'இலக்கு' என்ற ஏட்டில் மறுபிரசுரமானது. எவ்வாறாயினும் தாயகத்தின் இடத்தைப் புதியபூமியின் இலக்கியப் பகுதியால் நிரப்ப முடியாது.

சில சஞ்சிகைகள் என கருதக்கூடியவற்றுக்கு நான் எழுதி வருகிறபோதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நாளேடுகளிலும் அவற்றின் வாரப் பதிப்புகளிலும் எனது கட்டுரைகள் வெளியாகியுள்ளன. நூல் விமர்சனங்கள் சிலவும் இலக்கியம் தொடர்பான கட்டுரைகளின் மறுபிரசுரங்களும் இவற்றுள் அடங்குவன. இவற்றுள் ஒரு விமர்சனம் மிகவும் கடுமையான விவாதத்தின் மையமாயிற்று. 1985ல் தமிழியல் வெளியீடாக வந்த 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைத் தொகுதி பற்றி எனது விமர்சனம் தேசிய கலை இலக்கிய பேரவையிலிருந்த ஒரு நண்பரால் 'ஈழமுரசு' பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டது. சேரன் அதற்கு எழுதிய பதிலும் எதிர்விளையாக நானும் க. தணிகாசலம் அதில் எழுதியவற்றை அடுத்து சேரன் எழுதிய அதே ஏட்டில் வந்தது. விவாதம் கவிதைத் தொகுதிக்கு சம்பந்தப்படாத திசையில் போவதை நான் விரும்பவில்லை. எனவே அதற்குமேல் விவாதத்தை நான் தொடரவில்லை. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சேரனின் நிலைப்பாட்டில் அண்மையிற் பாரிய மாற்றங்கள் தெரிந்தன. இன விடுதலைப் போராட்டத்தின் யதார்த்தங்கள் நம் ஒவ்வொருவரது பார்வையையும் ஒவ்வொரு விதமாகப் பாதித்துள்ளன.

எனது விமர்சனத்தில் நான் வலியுறுத்திய ஒரு முக்கியமான கருத்து, கவிதைகளின் தெரிவு தேசிய இனப்பிரச்சினை தொடர்பான ஒரு குறிப்பிட்ட பார்வைக் கோணத்தை வலியுறுத்தும் விதமாகவே அமைந்திருந்தது என்பதாகும். இது சேரனால் அன்று மறுக்கப்பட்டது. 1994ல் லண்டனில் நடந்த இலக்கிய சந்திப்பில் உரையாற்றிய நு:மான் தனது கவிதையிலிருந்து 'நாங்கள் கேட்பது பிரிவினை அல்ல' என்றவாறான ஒரு வரி அகற்றப்பட்டு அத்தொகுதியில் பிரசுரமானது பற்றிக் குறிப்பிட்டார். இதை அவர் 1986ல் வந்த விமர்சனம் பற்றிய விவாதம் நடந்தபோது சொல்லியிருந்தால் பல விஷயங்களை அது அப்போதே தெளிவுபடுத்தியிருக்கும்.

ஈழத்து எழுத்துலகத்தின் முக்கியமான கருத்துப் போராட்ங்கள் நிகழ்ந்த காலத்தில் நான் மிகவும் எட்டத்திலேயே அதிகபட்சம் ஒரு வாசகனாக மட்டுமே. இருந்தாலும் எழுதத் தொடங்கிய காலத்தில் எந்த அணிக்குள்ளும் சேர்த்துக் கருதப்படாததாலும் இலக்கிய உசை நண்பர்கள் என்று அனேகர் இருக்கவில்லை. இதன் நன்மை தீமைகளை இங்கே அளவிடுவது சிரமம். ஆயினும் பின்னோக்கிய பார்வையில் அக்கால கட்டத்தில் நான் விட்ட தவறுகள் குறைவாக இருந்தமைக்கு நான் அதிகம் செயற்படாததே காரணம் என்று நினைக்கிறேன்.

என்னைக் கொஞ்சம் பரவலாக அறியப்படுத்திய கட்டுரைகளில் அலையில் வந்த முற்போக்கு இலக்கியம் பற்றிய விவாதக் கட்டுரைகள் முக்கியமானவை. ஆயினும் அந்த எழுத்துநடை கனதியானதொரு இலக்கிய ஆய்வுக்குப் பொருந்தாது. விவாதத்திற்குக் காரணமாயிருந்த சமுத்திரனின் எழுத்தின் தோரணை அதை நியாயப்படுத்தலாம். ஆயினும், எனது கட்டுரையை மிகவும் வரவேற்ற சிலர்போல, மிகவும் கண்டித்த சிலரும் என்னுடைய நிலைப்பாட்டைச் சரியாக விளங்கிக் கொண்டார்களோ என்பதுபற்றிய ஐயங்கள் எனக்கு உள்ளன. தாயகத்தில் தருமுசிவராமு (பிரேமிள்) பற்றி எனது விமர்சனத்தைப் பார்த்தபின்னரே முருகையனுக்கு எனது அரசியல் நிலைப்பாடு பற்றி விளங்கியது என்று கே. ஏ. சுப்பிரமணியம் எழுதினார். அலைக்கட்டுரை காரணமாக மனத்தாங்கல் அடைந்த பலர் இன்று மிகவும் நெருக்கமான நண்பர்களாக இருக்கின்றார்கள். தவறான காரணங்களுக்காக என்னைப் பாராட்டிய சிலர் என்னை இன்று ஒரு வேளை வெறுக்கக் கூடும். சரியான காரணங்களுக்காக வெறுக்கப்படுவது பிழையானவற்றுக்காக விரும்பப்படுவதைவிட நல்லதுதான்.

பி.கு:

மேற்கூறப்பட்டவை 1970 களினின்று 1984ல் இலங்கையிலிருந்து புறப்படும் வரையில் ஏற்பட்ட பத்திரிகை அனுபவங்களின் ஒரு பதிவு. இதைவிட விரிவான அனுபவம் புலம்பெயர்ந்தோர் ஏடுகளில் எழுதியபோது ஏற்பட்டது. அவைபற்றி வேறொரு சமயம் எழுதலாம் என நினைக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தியாகு கொழும்புக்கு வந்ததிலிருந்து தனது வலது கால் சுளுக்கிக் கொண்ட உணர்வுக்குட்பட்டுக் கொண்டிருந்தான். உண்மையாகவே கால் சுளுக்கிக் கொண்டவன் போல் காலை உதறிக் கொண்டான். ஆனால், சுளுக்கு இருந்தாற்தானே அதிலிருந்து விடுபடுவதற்கு? அப்படி ஒரு உணர்வு - வெறும் உணர்வு - ஒருக்கால் முழங்காலுக்குள் நிற்பது போல், பின் கணுக்காலுக்கு விரைவது போல், பிறகு தொடைக்கு மேல் சென்று அரையை இறுக்கிக் கொள்வது போல்! தியாகுக்கு தெரியும் தனக்கு அப்படி ஒரு சுளுக்கும் இல்லை என்று. இருந்தாலும் அந்த உணர்வினால் பீடிக்கப்பட்டிருந்தான். அதிலிருந்து அவனால் விடுபட முடியாத ஓர் அந்தரம். அந்த உணர்வு கூடிக்கொள்ளும் போதெல்லாம் அவன் தன்னை அறியாமலே தன் சட்டைப் பையில் இருந்த அடையாள அட்டையைத் தொட்டுப் பார்த்துக் கொள்வான். றோட்டில் நடக்கும் போது இந்த உணர்வு ஏற்பட்டு விட்டால் அடிக்கொரு தரம் அவன் கை அடையாள அட்டையைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளும். அறையில் இருக்கும் போது இந்த உணர்வு ஏற்படும் சந்தர்ப்பங்களில், ஏனோ அவனால் மேசையில் கிடக்கும் தன் அடையாள அட்டையை பார்க்காமல் இருக்க முடிவதில்லை.

சக மாணவர்கள் வகுப்பையே புரட்டி எடுத்துக் கொண்டிருக்கும் போது, இவன் பேசாது ஒதுங்கியிருந்து பார்த்துக் கொண்டிருப்பான். அந்தப் பார்வையில் ஒவ்வொருவரது குணக்கோளாறுகள் வெளியே துருத்திக் கொண்டு நிற்பது இவனுக்குப் பட்டெனத் தெரிவது போல்...... சிரிப்பு மேலிடும் போது, வாயைக் கையால் பொத்தி சிரிப்பை அடக்கிக் கொள்வான். ஏதாவது சிறிது விபரீதமாகப் போய்விட்டால் இவன் பயந்து போவான். இவனுக்கு வேர்த்துக் கொட்டும். இவனைப் பயமுறுத்தி வேடிக்கை காட்டுவதற்காகவே சிலர் அட்டகாசம் செய்வதும் உண்டு. அப்பொழுதெல்லாம் இவனுக்கு "ஒண்டு"க்கு போகவேண்டும் போல் இருக்கும் அல்லது வயிற்றைக் கலக்குவது போல் வந்து விடும். இவன் உடனே மேசையில் முகத்தை குப்புறப் போட்டு படுத்துக் கொள்வான். அதைக்கண்டு மாணவர்கள் அட்டகாசம் இன்னும் பெரிதாக வெடிக்கும். வகுப்புக்கு யாராவது ஆசிரியர் வந்து பாடத்தை ஆரம்பிக்கும் மட்டும் இவன் தலையை நிமிர்த்த மாட்டான்.

ஒருமுறை பாடசாலைக்குப் புதிதாக வந்த ஆசிரியர் ஒருவர் கணக்குப் படிப்பித்துக் கொண்டிருந்தார். அவர்களும் பலகையில் கணக்கை எழுதிக் கொண்டிருந்த போது சுட்டித்தனத்துக்குப்

எழுந்து, காலை இழுத்து இழுத்து அவர் அருகே போக முயன்றான். கொஞ்சத்தூரம் போயிருக்கமாட்டான். திடீரென என்ன நினைத்துக் கொண்டானோ, வகுப்பைவிட்டு வெளியே தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான்! பின்னர் அவனது சகமாணவர்கள் எல்லாரும் சேர்ந்து அவனை வளைத்துப் பிடித்து ஆசிரியர் முன்கொண்டுபோய் நிறுத்தியபோது, அவன் காற்சட்டை நனைந்திருந்தது. அவன் கண்கள் பயத்தினால் படபடத்த விதத்தையும் முகம்போன போக்கையும் பார்த்தபோது ஆசிரியருக்கே பெரும் பரிதாபமாகப் போய்விட்டது.

அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டு. தியாகுவுக்கு அந்தநினைவு அடிக்கடி மேலெழும். அவன் மட்டுமேன் அப்படி தொட்டதுக்கும் பயந்து நடுங்க வேண்டும் அவன் இவற்றிலிருந்தெல்லாம் விடுபட வேண்டும் என்று எவ்வளவோ முயன்றிருக்கின்றான். ஆனால் நெருக்கடிகள் நேரும்போது அவன் பழையவனாகவே குவிந்து போகிறான். அவனால் மற்றவர்கள் மாதிரி நிமிர்ந்து கொள்ள முடிவதில்லை.

1983 ஜுலையில், கொழும்பில் அவனது சொந்தக்காரர்கள் பலர் செத்துப் போனதுபற்றி அவன் சும்மா சொல்லக



இதுபற்றிய பூரண விசாரணை அவனுக்கு இல்லை. இருந்தபோதும் அவனுக்கு அவன் சுபாவம் பற்றிய ஓர் உள்ளுணர்வோட்டம் உண்டு. சிறுவனாய் இருந்த காலத்திலிருந்தே அவனிடம் இந்தக் கோணங்கிக் குணாம்சங்கள் தொற்றிக் கொண்டு தொடர்ந்து வருவது அவனுக்குத் தெரியும். இந்தப் பித்தலாட்டங்களை சில வேளைகளில் அவன் அம்மா கண்டுவிட்டு "என்னடா கோணங்கிக் கூத்தாடிற?" என்று எரிந்து விழுந்தது அவனுக்குத் தெரியும்.


பாடசாலையில் அவன் எல்லாருக்கும் பயந்தவன். வம்பு தும்புக்குப் போகாதவன். ஆசிரியர் வகுப்பில் இல்லாதபோது அவன் பேர் போன, இவன் பக்கத்தில் இருந்த காந்தன் என்பவன் அவர் எழுதுவதை அபிநயித்தான். எல்லோரும் "கொல்" என்று சிரித்தபோது, ஆசிரியர் கோபத்தோடு திரும்பினார். அப்போது எல்லோர் சிரித்த முகங்களும் காந்தனை நோக்கி திரும்பியபோது, அவன் பக்கத்தே இருந்து 'திருதிரு'வென 'முழி'த்துக் கொண்டிருந்த தியாகுதான் ஆசிரியரின் பார்வைக்கு வித்தியாசமாகப்பட்டான். அவர் உடனே கோபம் கொப்பளிக்க தியாகுவை எழுந்துவரும்படி கட்டளையிட்டார். தியாகுவுக்கு வேர்த்தது. எழுந்து செல்ல முடியாது கால் மரத்துப் போனது போல் தெரிந்தது. இருந்தாலும் அவன் ஒருவாறு

கேள்விப்பட்டிருக்கிறான். அவள் அவர்கள் செத்தவீடுகளுக்குப் போய்வந்த போது, அவர்கள் எப்படி காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர், நெருப்புக்குள் தூக்கிப் போடப்பட்டனர், வெட்டிப் புதைக்கப்பட்டனர், அடித்து நொருக்கப்பட்டனர் என்பதுபற்றி எல்லாம் கதைகதையாகச் சொன்னாள். இவனுக்கு ஏனோ அடிவயிறு அளைவது போலபட்டது. எப்படி ஒருவன் இன்னொருவனை அடித்துக் கொல்ல முடிகிறது? நெருப்புக்குள தூக்கிப்போட முடிகிறது என்பது பற்றி அவனுக்குப் புதிராகவே இருந்தது. அப்படியெல்லாம் எப்படி கொல்ல முடிகிறது என்று அவன் அம்மாவிடம் கேட்டிருக்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அப்பொழுதெல்லாம் "அப்பிடி கொல்லிற வங்களெல்லாம் அரக்கச்சாதிகள்" என்று அவள் சொல்லியிருக்கிறாள். நல்ல காலம் அவன் அப்பா கொழும்பில் வேலை பார்க்கவில்லை என்பதில் அவனுக்கு சந்தோசம். அவன் அப்பா அக்கராயான் குளத்தில் கமம். அவர் காடு வெட்ட வென்று கத்தியோடு போய் மரக் கிளைகளைத் தறிக்கும் போது, "ஆ" என்று அவன் தனக்குள் முனகிக் கொண்டு தன் கழுத்தை தடவித் தடவிப் பார்த்துக் கொள்வான்.

இன்னொரு முறை அவன் யாழ்ப்பாணம் வெலிங்கடன் சந்தியில் கவச வாகனங்கள் சகிதமாக ஆமிக்காரர்களை முதன்முதலாக கண்ட போது, நெஞ்சு பதற அவன் அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டான். "அம்மா அம்மா" என்று அவன் எதையோ கேட்க முற்பட்ட போது, "சத்தம் போடாம வாடா, ஆமிக்காறங்கள் நிக்கிறாங்கள்" என்று அவன் அம்மா அடக்க, அவன் கண்கள் அகல விரிய ஆமிக்காரர்களைப் பார்த்தது." அம்மாடி இவர்கள்தானா ஆக்களை கொல்லிறவங்கள்! அதென்ன அந்தப் பெரிய கறுத்தவானுக்கு என்னவோ சுத்தி சுத்தி வருகுது! விசுவிக்கெண்டா எல்லாம் தெரியும் நாளைக்கு பள்ளிக்கூடத்தில் அவனட்டை கேக்க வேணும்...."

பிறகு அவன் விசுவுவை பள்ளிக்கூடத்தில் சந்தித்த போதும் அதுபற்றி அவனோடு கதைக்க முடியாமல் போய்விட்டது. அவனது இயல்பான குணம் அந்தளவுக்கு விசுவுவோடு சரளமாக கதைக்க விடவில்லை. கதைக்கலாம், கதைக்கலாம் என்று அவன் ஒத்திப் போட்டுக் கொண்டிருப்பதற்குள் விசுவு பள்ளிக்கூடம் வராமலே விட்டுவிட்டான். விசுவு எங்கே போய்விட்டான்? கொஞ்ச நாட்களுக்குப் பிறகு தியாகுவுக்கு எல்லாம் தெரிய வந்தது. அவனது கிராமத்துப் பெரிய பையன்கள் சிலரோடு சேர்ந்து, விசுவும் இயக்கத்துக்குப் போய் விட்டானாம்! அவனுக்கும் தியாகுவின் வயதுதானே? அவனுக்கு என்ன துணிச்சல்! இந்தப் பெரிய ஆமிக்காரர்களை அவனால் எப்படிக் கொல்ல முடியும்? தியாகுவுக்கு அதை நினைத்தபோதே 'ஒண்டு'க்கு வருமாப்போல் இருந்தது. சில நாட்களுக்குப் பின்னர் விசுவும் இயக்க நண்பர்களோடு ஊர்ப்பக்கம் வந்து கூட்டம் ஒன்று போட்டான். அப்போது இவனும் அவனைப் போய்ப் பார்த்தான். விசுவின் கையிலிருந்த ஏ. கே. தான் இவனைப் பயமுறுத்தியது. ஆனால் விசுவு அதை வெகு அனாயசமாக கையில வைத்திருந்த பாணி இவனுக்கு பிரமிப்பூட்டுவதாய், இவன் கைகளை விறைக்கவைப்பதாய் இருந்தது.

வேறொருமுறை இவன் பட்டணம் போனபோது. யாழ் பஸ் நிலையத்திற்கு முன்னால் இருந்த மின் கம்பத்தைச் சுற்றி, ஒரு கூட்டம் கூடி எதையோ மொய்த்துப் பார்த்துக் கொண்டிருந்தது. இவன் அப்பா கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போனார். அவரின் கையைப் பிடித்துக்கொண்டே உள் நுழைந்து பார்த்தபோது இவனுக்குக் காலும் கையும் நடுங்கத் தொடங்கின. அங்கே மின் கம்பத்தோடு யாரோ ஒருவன் தலைதொங்கக் கட்டப்பட்டுக் கிடந்தான். அவன் நெஞ்சிலிருந்து கட்டிகட்டியாக இரத்தம் வழிந்து நிலத்தில் சிந்தி இருந்தது. கழுத்தில் ஒரு மட்டை கட்டப்பட்டுத் தொங்கியது. அதில் அவன் செய்த குற்றங்கள் எழுதப்பட்டிருந்தன. அவன் அப்பாவின் வாய் அதை ஒவ்வொன்றாய்ப் படிப்பதுபோல் பட்டது. இவனுக்கோ அவ்வெழுத்துக்கள் வெள்ளெழுத்து க்களாகிக் கொண்டிருந்தன. அவன் கண்முன்னே, பாடசாலையிலுள்ள அதிபரின் அறையில் தொங்கிய, சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாதரின் படம் பெரிதாகத் தெரிந்தது.

அங்கே நிற்க முடியாது அவன் அப்பாவின் கையைப் பிடித்து இழுத்தான். ஒருவாறு அவன் அவரை இழுத்துக்கொண்டு றோட்டில் நடந்தபோது, அவனுக்கு என்னவோ அந்தரமாக இருந்தது. அவனுக்குள் பல கேள்விகள் எழுந்தவண்ணம் இருந்தன.

சாகிறது என்றால் என்ன? செத்துப்போய்க் கிடந்தவன் இப்படியே இனி இல்லாமல் போய்விடுவானா? அவனுக்கு உயிர்கொடுக்க முடியாதா?

தியாகுவுக்கு ஏதோ செய்யவேண்டும் போலிருந்தது. அவனது அப்பா சட்டைப்பையில் இருந்த தனது அடையாள அட்டையை வெளியே எடுத்துப் பார்த்தார். அவனது அண்ணா சுவிஸ்ஸில் இருந்து அனுப்பிய காசை மாற்றுவதற்கு யாழ் கொமேர்ஷல் வங்கியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

மின் கம்பத்தில் கட்டப்பட்டுக் கிடந்தவனுக்கு அடையாள அட்டை இருக்குமா? அவன்ர அடையாள அட்டையை இனி என்ன செய்வார்கள்?

"அப்பா" என்று தியாகு ஆரம்பித்தான்.

"என்னடா?" என்றார் தகப்பன்.

"இனி அவன் உயிர்க்க மாட்டானாப்பா?"

"எவன்டா?"

"அவன்தான் அந்தக் கம்பத்தில் கட்டியிருக்கிறவன்"

"உனக்கென்ன விசராடா? செத்தவை ஆரும் உயிர்ப்பினமே?"

"அப்ப அந்த யேசுநாதர் உயிர்த்தவர் எண்டு எனக்கு சூசை சொன்னானே?"

"அது யேசுநாதர்! இவன் சாதாரண ஆள். நாங்கள் செத்தா செத்ததுதான்!"

அப்பா சொல்லி முடிப்பதற்குள் அவனுக்குள் ஓர் அந்தரம்.

"அப்ப செத்துப்போனா அதற்குப் பிறகு எங்களுக்கு ஒன்றும் தெரியாமல் போயிருமாப்பா?" தியாகு தட்டுத்தடுமாறிக் கேட்டான்.

"என்னடா விசர்க் கதை கதைக்கிற, சும்மா அலட்டாமல் வா!"

தியாகு அதன் பின்னர் ஒன்றும் கதைக்கவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அவனுககு சாகிறதென்றால் என்ன என்று பார்க்கவேண்டும் போல் ஓர் ஆசை எழுந்தது. செத்தால் என்ன நடக்கும்? திடீரென அவனுக்குப் பயமாக இருந்தது. செத்தபின் உயிர்க்க முடியாதென்ற நினைவு வந்ததும் அவனுக்குள் ஓர் அந்தரம். ஏதோ பெரிதாக எழுந்து திரண்டு அவன் தொண்டையை அடைப்பது போல் ஒரு உணர்வு. அப்பொழுதெல்லாம் அடிக்கொருதரம் அவன் வெறும் எச்சிலை விழுங்கி விழுங்கி தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

இப்படியெல்லாம் யாருக்கும் எழாத அசாதாரண நினைவுகள் ஏற்பட்டு விட்டால் அவனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. இந்த மாதிரி நினைவுகள் அவனுக்குள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். அதனால் அவனுக்குள் ஏதோ ஒரு மூலையில் இருந்து ஒருவித பயம், நீர்க்குமிழிகள் மாதிரி எழுந்தெழுந்து உடைந்த வண்ணம் இருந்து கொண்டுதான் இருக்கும். அதனால் அவனுக்குள் சதா நடுக்கம். இந்த நடுக்கத்தால் அவனது வகுப்பு மாணவர்கள் அவனை எதிலும் சேர்த்துக் கொள்வதில்லை. அவர்கள் பாஷையில் அவன் ஒரு சோணகிரி! இப்படி அவன் ஒதுக்கப்படும் போதெல்லாம் அவனுக்குத் துக்கம் ஏற்படுவதற்குப் பதில தன் தலையில் எந்தவித பொறுப்பும் சுமத்தப்படவில்லை என்ற ஆறுதலும் திருப்தியும்தான் ஏற்படும். கூடவே தனக்குள்தானே ஒதுங்கிக் கொள்ளும் ஒதுக்கத்தின் சுய அணைப்பு. அந்த ஒதுக்கத்துள் இருந்து கொண்டு தனக்குள் விசாரணைகளையும் கேள்வி களையும் எழுப்பி பதில்காண்பதில் அவனுக்கு ஒரு தனி வேட்கை.

அண்ணா வெளிநாட்டுக்குப் போன பின்னர் இவன் பள்ளிக்கூடமும் அக்கராயன் குளக்கட்டுமாகத் திரிந்தான். பயந்தவனாக இருந்தாலும் படிப்பில் கெட்டிக்காரனாய் இருந்தான். எதையாவது படிப்பதென்றால் அவனுக்கு எப்பவுமே ஆர்வம். கிழிந்துபோன பத்திரிகைத் துண்டையும் எடுத்துப் படித்துக் கொண்டிருப்பான். அவற்றைப் படித்து விட்டுத் தனக்குள்ளேயே எதையாவது யோசித்து மென்றுகொண்டிருப்பான். ஒரு நாள் அவன் பத்திரிகையொன்றில் நடு கார்ட்டூனைப் பார்த்தான். அதில் ஜே. ஆர். ஜயவர்த்னா இலங்கையைத் துண்டாக்கிய படத்தோடு 1957ல் கண்டி யாத்திரை சென்ற படம் சித்தரிக் கப்பட்டிருந்தது. அதுபற்றி அப்போது அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பின்னர் அதுபற்றி அவன் தெரிந்து கொண்டபோது அதை அவன் வேறு கோணத்தில் பார்த்துச் சிந்தித்தான். இலங்கையை முதன்முதலில் துண்டாடிப் பார்த்தவர் ஜே. ஆர். தான். அப்படிச் சிந்திக்கும்போது அவன் தனக்குள்ளேயே சிரித்துக் கொள்வான்.

தியாகுவுக்கு இந்த விசயங்கள் விளங்கிய காலத்தில்தான் இந்திய இராணுவம் தமிழ்ப் பகுதியெல்லாம் தனது ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தது. தமிழ்த் தேசிய ராணுவத்திற்கான ஆட்சேர்ப்பும் நடந்துகொண்டிருந்த காலம். இவன் அக்கராயன் போவதற்காக யாழ் பஸ் நிலையத்திற்கு அருகே வந்து கொண்டிருந்தான். அப்போ எங்கிருந்தோ திடீரெனத் தோன்றிய ஒரு வான் பஸ் நிலையத்திற்குள் நுழைந்தது. அதிலிருந்து இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் வெளியே குதித்தார்களோ இல்லையோ பஸ் நிலையத்தில் நின்ற இளவட்டங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர். தியாகுவிற்கு விசயம் விளங்கியதுதான் தாமதம் கால் போன திக்கில் ஓட வெளிக்கிட்டான். "அண்ண என்னைப் பிடிக்காதீங்க, அண்ண என்னைப் பிடிக்காதீங்க" என்று தனக்குள்ளேயே பெரிதாய்க் கத்தியவனாய் ஓடினான். வெகுதூரம் ஓடிவிட்டுத் திரும்பிப் பார்த்தபோது இவனை யாரும் துரத்தி வருவதாய் இல்லை. ஒருவாறு மனப்பயம் தெளிந்தவன் அன்று தன் பயணத்தைத் தொடராது வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

ஒருவாறு அவன் கண்ணயர்ந்த போது ஒரு கனவு கண்டான். கொந்தளிக்கும் கடலுக்குள் அவன் அமிழ்வதும் மேலெழுவதுமாய் உயிருக்காகப் போராடிக் கொண்டி ருக்கின்றான். அப்போது ஒரு படகு மிதந்து வருகிறது. தத்தளித்துக் கொண்டிருக்கும் இவன் தன்னருகே வந்த அந்த தலைப்பக்கத்தை தாவிப் பிடிக்கிறான். தாவிப்பிடித்து அதில் ஏற முற்படும் போது திடீரென அது இலங்கையின் உருவம் போல் மாறுகிறது. இவன் கைப்பிடித்திருந்த பகுதியில் ஒருவன் தோன்றுகிறான். அது ஜயவர்த்தனாபோல் தெரிகிறது. அவன் கையில் ஒரு கத்தியை எடுத்து இவன் பிடித்திருந்த பகுதியை வெட்டித் தள்ளுகின்றான். இலங்கையின் கால்வாசிப்பகுதி கையோடுவர அவன் மீண்டும் தண்ணீருக்குள் தத்தளிக்கின்றான். அவனுக்குத் தாங்க முடியாத நிலை வந்த போது பெரிதாக அலறிக் கொண்டு கண் விழிக்கின்றான். அப்பாடா! அது கனவு, அவன் இவ்வளவு நேரமும் கனவா கண்டு கொண்டிருந்தான்.

அவன் ஆறுதல் மேலிட எழுந்து உட்கார்ந்தான். எப்போதும் அவன் நெருக்கடியால் பாதிக்கப்படும் போது அவனுக்கு தண்ணீருக்குள் அமிழ்வது போல கனவு வருவதுண்டு. அதன் காரணமும் அவனுக்குத் தெரியும். அவன் சிறுவனாக இருந்த போது அவன் ஊர்க்குளத்தில் குளிக்கப்போய் தண்ணீருக்குள் "தாண்ட" போது காப்பாற்றப்பட்ட அனுபவத்தின் ஆழமான பதிவு, இப்படி நெருக்கடி ஏதும் ஏற்படும் போது கனவாகத் தலைகாட்டுவதுண்டு. இப்போ அவன் அண்மையில் பத்திரிகை யொன்றில் பார்த்த கார்ட்டூன் படமும் சேர்ந்து கொண்டு, அவனுக்கு எட்டியிருந்த அரசியல் அறிவையும் சேர்த்துக் குழைத்து அவனுக்கு கனவாக வெளிக்காட்டிற்று! தியாகு இதை மிக எளிதாகவே விளங்கிக் கொண்டான்.

அவன் உதட்டில் ஒரு மெல்லிய சிரிப்பு!

இந்திய ராணுவம் வந்ததிலிருந்து அக்கிரயானில் அப்பரின் கமத்தோடு அதிகமாக நேரத்தைக் கழித்தவன். அது போனதற்குப் பிறகு, ஊரில் அடிக்கடி தலை காட்டினான். இக்காலங்களில் அவன் எத்தனையோ மாற்றங்களைக் கண்டு விட்டான். இருந்தாலும் அவன் பழைய பயந்தவனாகவே இருந்தான். தாமரை இலைத் தண்ணீர் மாதிரி உருண்டு கொண்டு. ஆனால் எல்லாவற்றறையும் அவதானித்துக் கொண்டு திரிந்தான். இக்காலத்தில் சுவிஸ்ஸுக்குப் போயிருந்த அவன் அண்ணா, தம்பி தியாகுவையும் அங்கு கேட்டுக் கடிதம் எழுதியிருந்தான்.

இந்தக் கடிதத்தைப் படிக்கும் போது அவனுக்கு திடீர் என மூத்திரம் முடுக்குவது போலிருந்தது. அதன் பின்னர் அவன் அப்பா அவனைக் கொழும்புக்குப் போய் இது பற்றி அவன் அண்ணனோடு "போனில்" கதைத்து ஒழுங்குபடுத்துமாறு கூறிய போது அவனுக்கு அடிவயிற்றைக் கலக்குவது போலிருந்தது. அன்றிரவு அவன் வெகு நேரம் நித்திரை கொள்ள முடியாது புரண்டு புரண்டு படுத்தான். பின் அவன் கண்ணயர்ந்த போது, அவனை யாரோ தண்ணீருக்குள் அமிழ்த்தி மேலெழ முடியாது செய்வது போல்...... செய்வது போல்...... அவன் பெரிதாகக் கீச்சிட்டலறி விழித்துக் கொண்டான். அப்போது, அவனைத் தண்ணீருக்குள் அமிழ்த்திய அந்தக் கை, அவன் தாவிப் பிடித்தேறிய படகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாக வெட்டிய கை எல்லாம் ஒன்று போல் தோன்றி விகார ரூபம் எடுத்துப் பயமுறுத்தின. ஒரு சாத்தானின் கை மாதிரி........ அவன் எழுந்து "ஓண்டுக்கு" போனான்....

இக்காலத்தில்தான் கொழும்பில் உள்ள கொலன்னாவை எண்ணெய்க் குதங்கள் தகர்க்கப்பட்டன. ஊடரங்குச் சட்டம் போடப்பட்டது.

இது தியாகுவுக்கு நல்லதாகவே முடிந்தது. அவனது கொழும்புப் பயணம் ஒத்திப் போடப்பட்டது. கொழும்புக்குப் போக வேண்டுமென்பதால் ஏற்பட்ட மனக் கொந்தளிப்பு அடங்குகிறது. அவன் மனம் ஆறுதல் அடைகிறது.

இப்படி ஒத்திப் போடப்பட்ட அவனது பயணம், ஆறேழு மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் தொடக்கப்பட்டு வெகு அண்மையில்தான் அவனை கொழும்புக்கு கொண்டு வந்து சேர்த்திருந்தது.

தியாகு மேசையில் கிடந்த தன் அடையாள அட்டையையே பார்த்துக் கொண்டு நின்றான். பின்னர் அவனது மாமா போனில் கூறியது ஞாபகத்திற்கு வரவே, கொள்ளுப்பிட்டிக்குப் போக ஆயத்தமானான். கொழும்பிலுள்ள ஒரு நண்பருடைய வீட்டில் அவனது பாஸ்போட் எடுக்கும் விஷயமாகப் போய்க் கதைக்கும்படி கூறியிருந்தார்.

அடையாள அட்டையை எடுத்துப் பத்திரமாக தனது சட்டைப்பையில் வைத்துக்கொண்டு வெள்ளவத்தையில்தான் தங்கியிருந்த லொட்ஜை விட்டு வந்து கொள்ளுப்பிட்டிக்கு பஸ் எடுத்தான். "சீமாவத்தை" ஒழுங்கை அருகில் பஸ்ஸை விட்டு இறங்கியவன், சற்றுத் தள்ளியிருந்த 15 லேனை நோக்கி நடந்தான். அப்படியும் இப்படியும் ஒரு வித வெருட்சி தெறிக்கப் பார்த்தவனாய், அசாதாரணமாக நிமிர்ந்த நடையோடு போய்க் கொண்டிருந்தான். ராணுவ ட்றக்குகள் இரண்டொன்று அவனுக்கு எதிர்ப் புறமாக விரைந்து கொண்டிருந்தன. அதில் நிறைந்திருந்த ராணுவக் காரர்களைப் பார்த்தபோது அவனுக்கு ஏனொ அச்சம்மேல் எழுந்தது. ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் அவன் ஊரில் பாாத்த தமிழ் தேசிய ராணுவம் நினைவுக்கு வந்தது. அவனுக்கு ஏனோ கால் சுளுக்குவது போல் இருந்தது.

ஆனால் அதைப்பற்றிக் கவலைப் படாமல்முன்னே நடந்தான். முன்னால் பத்து யாருக்கு ஒருவராய் ராணுவக் காரர்கள் துவக்கோடு நின்று கொண்டிருந்தனர். இன்னுஞ் சிலர் போவோர் வருவோர் சிலரை இடைமறித்துச் சோதித்துக் கொண்டிருந்தனர். இவனுக்கு அடிவயிறு வற்றிக் கொண்டு வருவது போல் இருந்தது. இவன் அவர்களைப் பார்த்ததும் பார்க்காததுமாய் இன்னும் அதிகரித்த அசாதாரண நிமிர்வோடு பேவ்மென்டோரமாக நடந்ததை மாற்றி சிறிது அகல நடந்தான். வாகனங்கள் போக்குவரத்துக் குறைந்தால் ஆமிக்காரர்கள் இல்லாத அடுத்த பக்கம் போய்விட வேண்டும் என்ற குறியோடு அவன் போனபோது, ஒரு ராணுவக் காரன் அவனைப் பார்த்து அருகே வரும்படி சைகை செய்தான். இவனுக்கு கால் ஒன்றோடொன்று இடறப்படப் போவது போல் தெரிந்தது. இருந்தாலும் இவன் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்க்காதவன் போல் நடந்தான். உடனே ராணுவக் காரன் சத்தம் போட்டுக் கூப்பிட்டான். இருவரது பார்வையும் ஒன்றாய்ச் சந்தித்தன. இவனால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை. திருதிருவென "முழி"த்துக் கொண்டு அவனருகே நடந்தான். ஒரு சில வினாடிகள் சென்றிருக்காது. ஆமிக் காரனை நோக்கி நடந்தவன், என்ன நினைத்துக் கொண்டானோ திடீரென அந்த ஆமிக் காரனைக் கடந்து ஓட வெளிக்கிட்டான். அவனுக்கு அப்படி ஓடக் கூடாதென்று நல்லாகவே தெரியும். இருந்தாலும் அவன் கால்களுக்கு அது தெரிவதாய் இல்லை. இவன் பத்துயார் தூரம் ஓடியிருக்கமாட்டான் அதற்குள் "ஓண்ண கொட்டியெக் ஓண்ண கொட்டியெக்" என்று கத்தியவாறு ஆமிக்காரன் பாய்ந்தான்! அவனது குரல் கேட்டு ரோட்டில் போய்க் கொண்டிருந்தவர்கள் உஷாரானார்கள். தியாகுவுக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் காரன் ஒருவன் அவன் முன்னேபோய் அவனை மோதுவதுமாதிரி வெட்டி மடக்கிப் பிடித்தான். மோட்டார் சைக்கிளை ஒரு புறமாக சாத்திவிட்டு தனது ஹெல்மெட்டை எடுத்து தியாகுவின் தலையிலும் மூஞ்சியிமாக விளாசினான். தியாகு குனிந்து தலைக்கு மேலே சைக்கிளைத் தூக்கியவாறு அடிகளை வாங்கினான். இதற்குள் அவனைச் சமீபித்த ஆமிக்காரன் துவக்குச் "சோங்கி"னால் அவன் நெஞ்சிலும் மூஞ்சியிலும் அடிவயிற்றிலுமாகக் குத்தினான். அவன் முதன் முதலாக நோவென்றால் என்ன என்பதை உணர்ந்து கொண்டிருந்தான். முகத்திலிருந்து இரத்தம் வழிந்தது. சொண்டு பிளந்து வருத்துவது போலிருந்தது. இதற்கிடையில் "ஓண்ணக் கொட்டியெக், ஓண்ணக் கொட்டியெக்" என்று கூக்குரல் இட்டவாறு ரோட்டால் சென்றவர்களெல்லாம் அவனைச் சூழ்ந்து காலாலும் கையாலும் உதைத்தனர், அடித்தனர். கையில் அகப்பட்டவற்றாலும் எடுத்து மொத்தினர். இதைத்தான் "ஆட்களை ஆட்கள் அடித்து கொல்லுறது" என்று அம்மா சொன்னாவா? 83ல் இப்படித்தான் தழிழர்கள் எல்லாரும் அடித்துக் கொல்லப்பட்டனரா? அந்த நேரத்திலும் தியாகுவுக்கு இவை மின்னல் கீற்றுக்களாய் மின்னி மின்னி ஓய்ந்தன. தொடர்ந்து உதையும் அடியும் விழுந்து கொண்டே இருந்தன. அவனால் தலை உயர்த்த முடியவில்லை. இந்நேரத்தில் ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்க பெண்மணி கூட்டத்தை விலக்கிக் கெண்டு வந்தாள். அவன் அம்மாவின் சாயலுடைய அவள் ஏதோ ஆதரவு காட்ட வருகிறாளோ என்ற சூழலுக்கு மாறான ஒரு நப்பாசை அவனுக்குள் கசிந்த போது வந்தவள், "கொட்டி திரஸ்தவாதயா, மறணடோன!" என்று கத்தியவளாய் கையில் இருந்த குடையால் அவன் மூஞ்சியில் குத்தினாள். அது அவனது இடது கண் புருவத்தின் மேலால் சறுக்கிக் கொண்டு போனது. அவளின் குடையின் முனை உடைந்து சிதறியது. அவன் இன்னும் தலை உயர்த்தவில்லை. அவனது அடையாள அட்டை நிலத்தில் கிடந்தது. அதை எடுக்கலாமா என்ற வெற்றுணர்வு ஓடிய போதும் அது முடியாதென்பது அவனுக்குத் தெரியும். அவன் அடையாள அட்டை மேல் பலர் ஏறி உரசிக் கொண்டு வருவது போல் இருந்தது. அது மயக்கமா? அல்லது அவன் சாகப் போகிறானா? அதைப்பற்றி அறிய அவன் கனகாலமாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தது இப்படி எதிர்பாராத விதமாக வந்து சம்பவித்திருக்கின்றதா? இப்படித்தான் சாகிறதா? அவனுக்கு எல்லாமே கைகடந்து போய்க் கொண்டிருப்பது போல் தெரிந்தது. அவன் ஒரு சிறு துவாரத்திற்குள் போக முனைவதும் பின்னர் ஏதோ ஓடிச் சென்று பொறுக்க பின்னடைவதுமான நிலையை அனுபவித்துக் கொண்டிருந்தான். அவன் வேகமாக, முழுமன ஒப்புதலோடு அந்தத் துவாரத்திற்குள் புக முற்படும் போது அந்த முடிச்சு வந்து பொறுத்தது. அந்த முடிச்சுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுக்கும் போதுதான் அவனுக்கு அந்தரம் ஏற்பட்டது. தண்ணீருக்குள் அமிழ்ந்து போகும் அந்தரம். கையைக் காலை அடிக்கும் அந்தரம். அவனை அந்த துவாரத்திற்குள் நுழைய விடாமல் தடுக்கும் முடிச்சு என்ன? அவனுக்கு அந்த நிலையிலும் அது மங்கலாக மிதந்து வந்தது. அவனது அம்மாவும் அப்பாவும் அவர்கள் ஊடாட்டத்தால் சோபை பெற்றுத் தெரியும் அவன் வாழ்ந்த வீடும், களைத்துப் போய் முற்றத்து வேம்பின் கீழ்க்கிடக்க காற்றள்ளி வரும் அந்தச் செம்மண் வாசனையுமாக அந்த முடிச்சு திரண்டு வந்து வந்து அவனை அந்தத் துவாரத்தினுள் நுழைய விடாமல் தடுத்தது........அம்மா........

தியாகுவை, இப்போது அடித்துக் கொண்டும் உதைத்துக் கொண்டும் ஆமி ட்றக் அருகே இழுத்துக் கொண்டு போகிறார்கள். அவன் நடக்க முடியாமல் இழுவுண்டு போகிறான். அவனுக்கு நினைவு தப்பி எல்லாமே இருண்டு போகிறது. ஒரே வீச்சாக அவன் அந்தத் துவாரத்தை நோக்கி விரைகிறான். ஆனால் அந்த முடிச்சு அவனை விடவில்லை. அந்த முடிச்சு அங்காலும் இல்லாமல் இங்காலும் இல்லாமல் இடையில் பொறுத்துக் கொண்டிருக்கிறது போல.......

அவன் தண்ணீருக்குள் அமிழ்கிறான். மூச்சடங்கும் அந்தரங்க நிலை. கையையும் காலையும் போட்டு உதறுகிறான். எதையாவது எட்டிப்பிடிக்க வேண்டும் போன்ற அந்தர நிலை. அவன் கண்ணுக்கு ஏதோ ஒன்று படுகிறது. அதை அவன் பாய்ந்து ஒரே அலக்காகப் பற்றிக் கொள்கிறான். அதை அவன் பற்றிக் கொண்டதுதான் தாமதம், அவன் முன்னே நின்ற அத்தனை சனங்களும் "ஒண்ண கொட்டியா, ஒண்ண கொட்டியெக்" என்று சத்தமிட்டவாறு அவன் பற்றிப் பிடித்ததை கத்தி கொண்டு வெட்டுகின்றனர். வெட்டி வெட்டி ஒரேயடியாக தம்மிலிருந்து அவனையும் அவன் பற்றியதையும் தள்ளி விடுகின்றனர்.

அவன் வெட்டப்பட்ட பகுதியோடு அள்ளுப்பட்டுச் செல்கிறான். தன்னையறியாத நிம்மதியோடு அவன் மிதந்து கொண்டிருந்த போது அவன் தான் பற்றிப் பிடித்திருப்பதை பார்க்கிறான். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிகின்றன. அது அவனை அந்தத் துவாரத்திற்குள் நுழைய விடாது தடுத்த முடிச்சுப் போல் தெரிகிறது..........

**படைப்புக்கள், கடிதங்கள்,**
**நன்கொடைகள் அனுப்புவோர்**
**தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**களம்,**
**கமலகம்,**
**அக்கரைப்பற்று.**

# நுளம்புக் கொக்கு

உருகிவழியும்
இரவுகளுள் கனவு கண்டதுதான் மிச்சம்
தங்கக் கமிபிப் பின்னலில் கூடு
உள்ளே சிறகடித்து சிறகடித்து
சில முகங்கள்
எனக்குத் தெரிந்த ஒரு தடியன்
தன் பெயருக்குள்ளே விலங்கிட்டுப் போனான்.

பலதட்வை வாசலில் பூத்து நின்ட ரோசாச் செடியை
தடவியும் பார்த்துவிட்டேன்
கனவுக்குள் மனம் பெருமூச்சுவிட்டு
ரகசியமாய் சொல்லிற்று
இருந்துமென் அவா குறைந்தபாடில்லை
தவறோ சரியோ
என் எதிரிகளெல்லாம் நெஞ்சுக்குள்
ஒவ்வொருத்தராய் வந்தும் போய்விட்டனர்
முகம் தெரியாத சிலரின் பெயரையும்
மனம் உச்சரித்துக் காட்டிற்று

அவர்களை உயர்ந்த மிருகமாய்
மனம் சுட்டிக்காட்டியும்
ஒரு துப்பாக்கியை விட
பெறுமதி குறைந்தவர்களாய்த்தான்
என்னால் நினைக்க முடிகிறதென்பது
என் துக்கத்துக்குறிய சந்தோசம்.

இவர்களைப் பற்றிய
கனவின் தேடலில்
என் வீட்டு நுளம்பே உசத்தி
ஓ.... எவ்வளவு பெரிய நுளம்பு
இன்னும் சொல்வதானால்
நுளம்புப் புறா
நுளம்பு அடசமான்
நுளம்புக் கொக்கு
அழகான பெரிய நுளம்புகள்
என்றும் என்னுடனே வாழ விரும்புவது போன்ற
தவிப்பு ஏக்கம் அதன் குரலிலும்
உருகி வழியும்
இரவுகளுள் கனவு கண்டதுதான் மிச்சம்.

~ மஜீத் ~



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சார்பு நிலை வாதம்
## சமூக உளவியல் நோக்கு

- கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன் -

கலை இலக்கிய செயற்பாடுகள் என்பது சமூக நிகழ்வுகள் படைப்பாளியின் உளவியல் அமைவிற்கூடாக (PHYSYCHOLOGICAL FRAME WORK) முறிவடைந்து கற்பனையில் மெருகேறி பரிணமிக்கும் அவதரிப்புக்கள். அவை வெற்றுத் தெரிப்புகள் (REFLEXION) அல்ல.

அவை படைப்பாளியின் சமூகப் பின்புலம் அவனுக்கு அமைத்துக் கொடுக்கும் சார்புநிலைகளுக்கூடாக சமூக நிகழ்வுகள் மீதான இவனது விமர்சனம்.

ஒரு படைப்பாளியின் உருவாக்கத்திற்கு மூன்று காரணிகள் உறுதுணை புரிவதாக உளவியலாளர் கருதுவர். ஒன்று அவனது இயற்கையான திறனும் நாட்டமும். மற்றையது அவனது குடும்பம் அவனுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் சூழல். மூன்றாவது அவனது சமூகம். சில துறைகள்மீதான திறமையும் நாட்டமும் சிலரிடம் இயல்பாகவே அமைந்திருக்கும்.

இத்தகைய இயல்பான ஆற்றல் பரம்பரை ஆளுகையால் (GENETIC MATERIAL) கடத்தப்படுகிறது. இப்படிக் கூறுவதால் 'கருவிலே திருவுடையவர்கள்' தான் படைப்பாளிகளாக உருவாகலாம் என அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது. இந்தப் பரம்பரை அலகுக் காரணியும் படைப்பாளியின் உருவாக்கத்திற்கு உதவும் ஒரு காரணியாகக் கருதப்படுகிறது.


இந்த மூன்று காரணிகளிலும் ஒருவனது குடும்பமும் சமூகமும் அவனது உருவாக்கத்தில் மிக முக்கிய பங்கெடுக்கின்றன. இவை இரண்டையும் இணைத்து நாம் சமூகக் காரணி என அழைக்கலாம்.

மனிதன் பற்றிய எண்ணக்கரு அவனது தனித்துவம் பற்றிய பிரமைகள் காலத்துக்குக் காலம் புதிய புதிய சிந்தனைகளின் அறிமுகத்துடன் ஈடாட்டம் கண்டு வருகிறது.

நிக்கலஸ் கொபர்ணிகளின் தூண் மண்டலம் பற்றிய கருதுகோள் பூமியைத் தனித்துவமான கோளாகக் கருதிய மனிதனுக்கு பேரதிர்ச்சியாய் அமைந்தது.

அதேபோல மனிதனை ஒரு தன்னிகரற்ற தனித்துவ படைப்பாகக் கருதியவர்களுக்கு டார்வினின் கூர்ப்புக் கொள்கை (THEORY OF EVOLUTION) பேரதிர்ச்சியாய் அமைந்தது.

இவற்றுக்கெல்லாம் சிகரமாய் பிராய்டின் உளவியற் கோட்பாடு அமைந்துள்ளது. இதுவரை காலமும் தன்னையும் தன்னைச்சூழ நடப்பனவற்றையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கருதிய மனிதனுக்குத் தனது நடத்தையே சூழலால் நிர்ணயிக்கப்படுவதாக கூறுகிறது பிராய்டின் கோட்பாடு.



இப்படியாக புதிய புதிய சிந்தனைகளின் வருகையுடன் மனிதனது தனித்துவம் சிதைவடைந்து சமூகச் சூழலின் முக்கியத்துவம் படிப்படியாக வலுப்பெற்று வருகிறது.

பரம்பரை அலகுக் காரணி சமூகக் காரணி இந்த இரண்டில் எது முக்கியமானது என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயம். படைப்பாற்றல் மனித குணாதிசயங்களில் ஒன்று மனித குணாதிசயங்களின் உருவாக்கத்தில் பிறப்புவாசியான காரணிகளினதும் வளரப்புவாசியான காரணிகளினதும் முக்கியத்துவம் பற்றிய வாதம் மிகவும் சிக்கலானது.

ஆயினும், 20ம் நூற்றாண்டின் சிந்தனைப் பரப்பின் விரிவுடனும் புதிய சிந்தனைகளின் வருகையுடனும் மனிதனது தனித்துவமான குணாதிசயங்களின் செல்வாக்கும் குறைந்து சமூகசார்பு நிலைப்பட்ட காரணிகளே முக்கியத்துவம் பெற்றுள்ளன.

படைப்பாளியின் உருவாக்கத்திற்குச் சில காரணிகள் அடிப்படையாக அமைவதைப்போல படைப்பாக்கச் செயற்பாட்டிலும் சில காரணிகள் செல்வாக்குச் செலுத்த வல்லன.

படைப்பாக்கச் செயற்பாட்டில் இரண்டு காரணிகள் செல்வாக்குச் செலுத்த வல்லன. ஒன்று படைப்பாளியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுகம்சார்ந்த புறக்காரணிகள். மற்றையது அவனது உளநிலை சார்ந்த அகக் காரணிகள்.

சமுகத்தின் சிக்கற்தன்மை அதிகரிக்கையில் படைப்பாளியின் சிந்தனையும் அவனது படைப்பின் தன்மையும் சிக்கலடைகிறது. உதாரணமாக ஓவியக்கலையின் வளர்ச்சியிலே தத்ரூப ஓவியக் கலையிலிருந்து நவீன ஓவியம் வளர்ந்ததற்கு சமுகத்திலேற்பட்ட மாற்றங்களே காரணமாக அமைந்தன.

எப்பொழுது சமுகத்தில் அறிவியல், பொருளாதார, அரசியல், விஞ்ஞான வளர்ச்சிகள் மாற்றங்கள் ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் கலை இலக்கியப் படைப்பாக்கச் செல்நெறியும் பாதிப்படையவே செய்கிறது. சமுகம் சிக்கற் தன்மையடைய அடைய மனிதனின் வெளிப்பாட்டு வடிவங்களும் அனுபவத்தினை உள்வாங்கும் தன்மைகளும் சிக்கலடைகின்றன.

ஒரு காட்சியினையோ வேறு எந்த அனுபவத்தையோ உள்வாங்கும் செயற்பாட்டையும் நாம் "கலைத்துவப் புறத்தூண்டல்" எனக் கூறலாம். எந்தவொரு படைப்பாக்கச் செயற்பாட்டிற்கும் இவ்வகையான ஒரு "கலைத்துவப் புறத்தூண்டல்" அடிப்படையாக அமைகிறது. இது பொதுவாக ஒரு புல அனுபவமாக (SENSORY EXPERIENCE) அமைகிறது.

இத்தகைய ஒரு புறத்தூண்டல் வழியாகவே கலைஞன் தனது படைப்பின் கருவைப் பெறுகிறான். இந்தக் கலைத்துவக் கரு அவனது மனத்திடை வளர்கிறது. இந்தக் கலைத்துவக் கரு வளர்ச்சியடைந்து தக்க முதிர் நிலையில் கலை வெளிப்பாடாகப் பரிணமிக்கிறது.

கலைத்துவப் புறத்தூண்டல் கலை வெளிப்பாடாக பரிணமிப்பதற்கு இடைப்பட்ட காலத்தில் கலைஞன் பெற்ற இந்த அனுபவம் அவனது உளவியல் அமைவு அவனது கற்பனை ஆகியவற்றால் மெருகேற்றப்படுகிறது. ஒரு எளிமையான புறத்தூண்டல் கலைஞனின் சிக்கற் தன்மையான அகக் காரணிகளால் சிக்கலான ஒரு வெளிப்பாட்டு வடிவாக மாறலாம்.

மொன்றியனது (PIET MONDRIAN) ஓவியங்களை எடுத்துக் கொண்டால் அவரது ஆரம்பகால ஓவியங்கள் பகுதி அருபத் தன்மையானதாக (SEMI ABSTRACT) அமைந்தன. காலஞ்செல்லச்செல்ல அவரது கலைத்துவ முதிர்ச்சியுடன் அவரது அகக் காரணிகளும் சிந்தனைப் போக்கும் சிக்கற் தன்மை அடைந்தன. இதனால் அவரது பிற்கால ஓவியங்கள் வெறுமனே சதுரங்களைக் கொண்ட வடிவமாகவே அமைந்தது. இந்த வடிவம் அவரது சிந்தனைப் போக்கினதும் உளப்பாங்கினதும் சிக்கற் தன்மையினையே எடுத்துக் காட்டுகின்றன. அவர் தான் காணும் காட்சிகளைச் சிக்கலான தனது அகக் காரணிகளுக்கூடாகச் செலுத்தி ஒரு புதிய வெளிப்பாட்டு வடிவமாகத் தருகிறார். இவை பலருக்கு ஒரு புரியாத புதிராகவே அமைகிறது. ஜூலியன் மிரோ (JULIAN MIRO)வின் ஓவியங்களும் இவ்வகையினதே.

இந்தவகை ஓவியங்கள் அவர்களது சிக்கலான சிந்தனை வளப்பினையே எடுத்துக் காட்டுகின்றன. இவ்விதச் சிந்தனை வளர்ச்சியினையே அவர்களது கலைமீதான அனுபவத்தையும் ஆளுமையினையும் வலுப்படுத்தி நிற்கிறது. இவர்களது ஓவியங்கள் தத்துவார்த்த அடித்தளத்தினின்று எழுபவை.

இவர்கள் தங்கள் சிந்தனையையும் கற்பனையையும் ஓவிய மொழியில் எளிதாகப் பரிமாறுகிறார்கள். இப்படியான வெளிப்பாட்டுத்தளம் தன்னகத்தே ஒரு குறையையும் கொண்டுள்ளது. அதாவது அதிக அனுபவமும் ஆளுமையும் அற்றவர்கள்கூட இவர்களது ஓவியங்களைப்போல போலித்தன்மையான ஓவியங்களை வரையலாம். இருப்பினும் இந்தப் போலிகளுக்கு தக்க அகசார்பு நிலைகளோ சமுகசார்பு நிலைகளோ இல்லாதிருப்பதை ஓர் பண்பட்ட பார்வையாளன் அறிந்து கொள்வான்.

ஆக ஓர் படைப்பின் சிக்கற் தன்மைக்கு சமுகத்தின் சிக்கற் தன்மையும் படைப்பாளியின் உளப்பாங்கின் சிக்கற் தன்மையும் காரணமாய் அமைகின்றன. இந்த இரண்டு அகப் புறக் காரணிகளைச் சார்ந்துதான் படைப்புகள் உருவாகின்றன.

படைப்பின் சிக்கற் தன்மைக்கு சமுக சிக்கற் தன்மை காரணமாய் அமைகையில் அப்படைப்பு பொதுவாக சமுகத்தால் விளங்கிக்கொள்ளப்படுகிறது, ஏற்றுக்கொள்ளவும் படுகிறது. மேலும் ஒரு சமுகத்தினது சிக்கற் தன்மை அதிகரிக்கையில் அச்சமுகமானது சிக்கலான வெளிப்பாட்டு வடிவங்களைக் கோரி நிற்கிறது எனலாம். இந்தத் தேவையினை தரமான படைப்பாளி புரிந்து கொள்கிறான்.

சமுகத்தினது சிக்கற் தன்மை அதிகரிக்கையில் உருவாகும் சிக்கலான வெளிப்பாடுகள் அச்சமுகத்திற்காக இசைவாக்கம் அடைந்த வடிவமாகவே அமைகிறது. ஆனால், கலைஞனின் அகக் காரணிகளில் சிக்கற் தன்மையினால் உருவாகும் வெளிப்பாட்டு வடிவங்கள் பொதுவாக சமுக மட்டத்தில் விளங்கிக் கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ படுவதில்லை. இப்படியான சந்தர்ப்பங்களை நாம் கலை வரலாற்றில் பல இடங்களில் சந்திக்கிறோம்.

ஒரு கலைஞனது உருவாக்கமும் படைப்பின் உருவாக்கமும் கலைஞனையும் அவனது சமுகத்தையும் சார்ந்த நிகழும் செயற்பாடுகள், வெளிப்பாடுகள் எதேச்சையான சம்பவிப்புகள் அல்ல. அவை சமுக சார்பான பிரசவங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழி பெயர்ப்புக் கவிதை

# கண்ணீரைத் துடைத்துக்கொள்!

பேனாட்டாடை

*தமிழ்வடிவம்* : **என். சண்முகலிங்கன்.**

கண்ணீரைத் துடைத்துக்கொள்
ஆபிரிக்கா!
கடுமழை, புயல் சூழ் பயணங்கள் முடிந்துன்
குழந்தைகள் உன்னிடம் மீண்டு விட்டார்.

அலைகளின் முடிவுகளை,
இளங்காற்றின் சலசலப்புக்களை,
கிழக்கின் பொற்கதிர்களை,
அஸ்தமன ஊதா அழகுகளை
பெருமையாய் நிமிர்ந்து நிற்கும்
மலைகளின் உச்சிகளை,
படர்செறி புல் வெளிப்
பரப்புக்களை எல்லாம்.

கடுமழை, புயல்சூழ் பயணங்களுடே - உன்
குழந்தைகள் தாண்டி மீண்டு விட்டார்கள்
கண்ணீரைத் துடைத்துக்கொள், ஆபிரிக்கா
துர் அதிஷ்டங்களை மட்டுமன்றி
மகோன்னத வசந்தங்கள் அனைத்தையும் நாம்
முழுமையாய்ப் பருகியே வந்தோம்.

உன் புகழ் ஒளி அழகை,
உன் வன நறுமணத்தை,
உன் வானத் தெளிவை,
உன் சூரிய வருடங்களை,
உன் இலைத்திரள் பனிமுத்துக்களை
உணரும் நிலை பெற்று விட்டோம்.

கண்ணீரைத் துடைத்துக்கொள் ஆபிரிக்கா - உன்
குழந்தைகள் உன்னிடம் மீண்டு விட்டார்
அவர்கரம் நிறைய விளையாட்டுப் பொருட்கள்
அவர்கள் இதயமெலாம் அன்புக் குவியல்கள்.

நம் இதயக் கனவுகளில்.....
நம்பிக்கை கீற்றுக்களில்......
உன்னைப் போர்த்திடவே
அவர்கள் மீண்டுள்ளார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*மலையாளத்தில்:*

**கவிஞர் க. சச்சிதானந்தம்**

இனிமேலும் என்னால் ஏற முடியாது
கால்கள் வலிக்கின்றன; கண்களில் இரவு கூடுகட்டுகிறது
பனி, கூரிய நகங்கொண்ட தன்கரங்களை விரித்தபடி
இருட்குகையுள்ளிருந்து இரைதேடி வெளியேறுகிறான்
குளிர்ந்து, என் புருவச்சூரியன் மரணித்துப் போகிறது
குளிர்ந்து, என் இதயநந்தவனம் வெளிறிப் போகிறது
காற்று மரணத்தை நிறைத்துக் கொள்கின்ற போது
என் நரம்புகளின் குதிரைகள் நடுவழியில் மரித்துப் போகின்றன.

அன்பே, முன்பொருபொழுது நீயும் நானும்
பசுமையான பள்ளத்தாக்குகளின் மார்புகளில்
வெட்டுக்கிளிகளைப்போல் துள்ளித் திரிந்தோம்
எமது சிறகுகளில் நாங்கள் சுமந்த பனித்துளிகள்
சொர்க்கத்தின் மரகதங்களாகின
நாங்கள் மழையில் குளித்தோம்
காளானெதுவும் மறைப்புக்கில்லை
நாங்கள் வெயிலில் குளித்தோம்
மென்சிலையெதுவும் நிழலுக்கில்லை
நீ கனியானாய், சுவையானேன் நான்
நீயொரு வெள்ளியோடை, உன் வானவில் மீன் நான்
நீ கண்ணாடியானால், சூரிய ஒளியானேன் நான்
நீயொரு காற்று, காய்ந்த சருகொன்று நான்
நீயொரு மானானாய், தோலின் புள்ளியானேன் நான்
இவ்வாறு நாம் பரிணாமக் கூத்தை ஆடியபொழுதின்
அந்த நாட்கள் எவ்வளவு லேசானவை
ஓ, அவை லேசானவை
சந்திரனின் இறக்கைகள்போல் லேசானவை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*ஆங்கில வழியாக தமிழில் :*
**சி. ஜெயசங்கர்**



பின்பு வந்தான் கரடி; வெளியில் அவன் உறுமினான்
நாங்கள் நினைத்தோம் மழையென்று
போர்வையுள் நாங்கள் முடங்கிக் கொண்டோம்
பின்பு வந்தான் கரடி; எங்களின் கதவில் தட்டினான்
"அது காற்று", ஜன்னல்களை நாங்கள் மூடிக்கொண்டோம்
இப்பொழுது அவன் எங்கள் கொல்லையில்

"இரவாகிவிட்டது", நாங்கள் படுக்கைக்குச் சென்றோம்.
ஆனால் நடுஇரவில் நாங்கள் விழித்தோம்
எங்கள் படுக்கையின் கீழிருந்து அவனுறுமினான்
இருளில் தடவிய எங்களின் விரல்களில்
அவனது சிலிர் உறுத்தியது
கடவுளே, எங்கள் இருவருக்குமிடையில் படுத்துக்கொள்ள
எங்களின் கட்டிலுக்கு எப்பொழுது அவன் வந்தான்?

என் விகாரத்தைக் கண்டு திடுக்குற
அதிகாலையில் நிலைக்கண்ணாடியில் பார்த்தேன்
நீண்ட சிலிர்களை மறைத்துக் கொள்ள
அவசர அவசரமாக நீளக்கைச் சட்டையை
- இழுத்து விட்டுக் கொண்டு
உறுமினேன் "தேனீர், சீக்கிரம்"
தேனீர் பருக உதடுகளை விரித்தபொழுது
இரத்தக்கறை படிந்த நச்சுப் பற்களைக் கவனித்தாயா?
என்ன, எங்களின் முதலிரவில் உன்னை வரவேற்று
- முத்தம் தந்தபொழுதில்
அவற்றை நீ கண்டிருந்தாயா?
நாளும்பொழுதும் உன்மென் தசைகள்பட்டு
அவை நீண்டு கூராகி வளர்கின்றன.

வாய்திறந்து கிடக்கும் கவனமேயில்லாது
நீதந்த தூயதேனுக்கு பேரவாக்கொண்டு உறுமியபடி
தெருக்களில் திரிந்தேன்
போவோர் வருவோர் ஒவ்வொருவரிலும்
நச்சுப்பற்களை கண்டேன்
குறைந்தது ஒரு நச்சுப்பல்லாவது
- ஆண்மகனொருவனுக்கு இருக்க வேண்டாமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பன் கேட்டான்,
"எங்களின் சிலிர்களைப் போல, எங்களின் நகங்களைப் போல
எங்களின் உறுமல்களைப் போல
இதுவும் ஆண்மையின் அடையாளம் இல்லையா?

இரவில் உன் தேம்பல்களைக் கேட்டேன்
நித்திரையில் நீ குசுகுசுத்தாய்
"அந்தக் காலம் திரும்பவும் வராதா?
மிருதுவான மொட்டுப்போன்ற முன்னைய உன்குரலில்
ஒருதரம்
ஒரேயொரு தரம் என்னைக் கூப்பிடு
குருதி நெடியற்ற
சந்திர ஒளிவீசும் உன் உதடுகளால்
என்னைத் திரும்பவும் முத்தமிடு

எதுகைமோனையுடன் என்னழகைப் புகழ ஏனிந்த அவதி?
வியர்வையில் தோய்ந்த உன் குசினிக்கரியில் விழும்பொழுது
உன் ஒரு விரலாலாவது எனக்கு ஆதாரங்கொடு
என் சிறைக்கம்பிகளின் பக்கம் நில்
விரல்களால் என் மேனியை வருடு
மழைபோல் அழு, கொத்து மல்லிகைபோல் சிரி
சிறுபராயத்தின் ஓணம் பண்டிகையின் வர்ணங்களையும் நறுமணங்களையும்
மீண்டும் எங்களில் நிறையவிடு"
உன்னை நான் துயிலெழுப்ப, நீ சொல்கிறாய்
"என் கனவில் மலையொன்றைக் கண்டேன்
வா, அங்கே போகலாம்
அங்கே தொல்லைதர உன் நண்பர்கள் ஒருபொழுதும் இருக்கமாட்டார்
அச்சங்களுக்கு இடமிருக்காது
பலிபீடங்களில் இருந்து எந்தக் குழந்தைகளும் கதறாது
தங்களுடைய நச்சுணவை உனக்குத்தந்த வஞ்சகர்
உன்னை அங்கு அண்ட முடியாது
எப்பொழுதும் அங்கு பூரணைதான்,
ஒருபொழுதும் அது அஸ்தமிப்பதில்லை
இலைகளெதுவும் வாடுவதில்லை,
பூக்களெதுவும் உதிருவதில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் ஓடைகளில் தங்கமே பாய்கிறது
வைரங்களே அதன் பாறைகள்
ஆட்டுக்குட்டிகள் சிங்கத்திற்கு சிக்கிரி மூட்டுகின்றன
கீரியும் பாம்பும் அரவணைத்துக் கொண்டிருக்கின்றன
அந்த உயரங்களின் முத்துச் சிகரங்களின் கீழ்
மூதாதையர்களின் மூச்சில் உருகும்
ஒரு நீல, நீல வர்ண ஏரி
அதில் நீ மூழ்கு, கல்லொன்றை எடுத்துக்கொள்
கையில் ஏந்திப் பிடித்தபடி வேண்டிக்கொள்
உன் வேண்டுதல் எதுவாயினும் பலித்தே தீரும்
வா, வேண்டிக் கொள்வோம்
பசியற்ற, பிணியற்ற, சாவற்ற பூமியை

இனிமேலும் என்னால் ஏற இயலாது, காற்று ஐதாகிறது
குளிர்காற்று என் எலும்புக்குருத்தை உறைய வைக்கிறது
இங்கேயே சாவு, அது என் தலையோட்டிலிருந்து வருகிறது
காற்றிலிருந்து என் உயிரைக் கரைக்கிறது
அன்பே, அந்தச் சிகரத்தை நான் அடையமாட்டேன்
சிதையின் புகையாகிவிட்டது என் மூச்சு
உன்மடியில் தலையைச் சரிக்க விடு
இங்கே, பறவையின் பாடலில், நிழலில்
இந்தப் புல்வெளியின் நீர்சொட்டும் மார்புகளில்,
அன்பே, வருகிறேன்
என்னை எரித்த இடத்தில்
அரச மரக்கன்றை நாட்டிவிடு
அன்பே நீயேறு, தனியாகவே செல்
அங்குள்ள நீலஓடையில்
என் அஸ்திப் பளிங்குகளைத் தூவிவிடு
கண்களை மூடி வேண்டிக்கொள்,
பெண்ணுடைய நாதமாய் ஆண் மாறாத உலகத்தை
இனிவரும் தலைமுறைக்காக
தூய காற்றை, தூய நீரை, சுதந்திர ஆத்மாக்களை
பின்பு, வானத்தில் பறவைக் கூட்டமொன்றைக் காண்பாய்
அதில் நானிருப்பேன் ஒரு பறவையாய்
பின்பு புதியதொரு விண்மீன்களின் கூட்டம்
வானத்தைப் பிரகாசிக்கச் செய்யும்
அதில் நீயிருப்பாய் ஒரு நட்சத்திரமாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பயணப் பதிவு

பாலசுகுமார்.



கட்டுரையாளருடன் தமிழக எழுத்தாளர் திரு. வெங்கட் சுவாமிநாதன்.

தமிழகத்தில் புதிய அரசியல் சூழ்நிலை ஏற்பட்ட பின்பு முதன்முறையாக எனது பயணம் பல புதிய அனுபவங்களையே தந்தது. 1995ம் ஆண்டு ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் இரண்டு தடவைகள் தமிழகம் சென்று வந்தாலும் அன்று ஒரு அசாதாரணமான சூழ்நிலையே நிலவியது. இலங்கைத் தமிழன் என்றால் சந்தேகக் கண்கொண்டே அன்று பார்த்தனர். ஆனால் இன்று நிலைமை சற்று மாறுபட்ட தோற்றத்தையே தந்தது.

வானுயர்ந்து நம்மைப் பயமுறுத்துகின்ற பிரமாண்டமான கட்அவுட்களை இம்முறை காணமுடியவில்லை. சென்ற தடவை நான் சென்ற பொழுது ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் திருமணம் நடைபெற்ற நேரம். எல்லோரும் ஜெயலலிதா என்ற சர்வாதிகாரப் பெண்மணிக்கு அஞ்சி நடுங்கிய நேரத்தில்தான் அந்தப் பயணம் அமைந்தது. சுதந்திரமாக நடமாட முடியாத ஒரு நிலைமையை அன்று என்னால் அவதானிக்க முடிந்தது. இன்று அப்படியான ஒரு சூழ்நிலை இல்லை என்றே சொல்லலாம்.

ஜெயலலிதா வெறுப்பு மக்களிடம் குறிப்பாக மத்தியதர வர்க்கத்தினரிடையே மிக அதிகமாகக் காணப்படுகிறது. இன்றுவரை ஜெயலலிதாவின் சுகபோக வாழ்க்கை பற்றி எழுதப்படுகின்றன. அண்மையில் அவர் பயன்படுத்த வாங்கிய சொகுசுப் பேருந்து வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதன் உள் அமைப்பு நம்மை வாய்பிளக்க வைக்கின்றது. ஒரு பிரதேசத்தின் முதலமைச்சர் எப்படியெல்லாம் இருக்கக்கூடாது என்பதற்கான எல்லா முன்னுதாரணங்களையும் ஜெயலலிதா பெற்றுள்ளார்.

இலக்கியக்காரர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் இப்பொழுது தங்களைச் சுதாகரித்துக் கொண்டு எழுத்துத் துறையில் ஈடுபடுவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இலக்கிய உலகில் இன்று பெரிதாகப் பேசப்படுகின்ற நூலாக 'பெரியார் பகுத்தறிவு சமதர்மம்' என்ற நூல் வெளிவந்துள்ளது. இதனை எஸ்.வி. ராஜதுரையும், வ. கீதாவும் இணைந்து எழுதியுள்ளனர். மாக்சியக் கோட்பாட்டாளர்களால் முதன்முதலாகப் பெரியார் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்த நூல் பெரியார் பற்றிய புதிய சிந்தனைத் தளங்களை தட்டிச் செல்கிறது. இத்தனை காலமும் நாம் பெரியாரைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லையே என்ற வருத்தமும், ஈழத்தமிழர் மத்தியில் பெரியாரைப் போன்ற ஒரு சிந்தனைவாதி உருவாகவில்லையே என்ற ஏக்கமும் என்னுள் எழுந்தது.

பெரியார் இன்று தமிழ்நாட்டில் திராவிடர்களின் அதுவும் தாழ்த்தப்பட்டவர்களின் குறியீடாகப் பேசப்படுகிறார். தலித்தியம் இன்று இலக்கியத்திலும், அரசியலிலும், கலைகளிலும் முக்கியமாகப் பேசப்படுகின்ற ஒன்றாக உள்ளது. தலித் எழுத்தாளர்கள் இதுவரை காலமும் தாம் அடக்கப்பட்டு வந்துள்ளதை தமது எழுத்துகளின்மூலம் புரிய வைக்கின்றனர். 'கோடாங்கி' என்ற தலித் சஞ்சிகை வெளிவந்துள்ளது. இதனோடு ஜனரஞ்சகத் தன்மையுடன் 'தலித் ஓசை' என்ற சஞ்சிகையும் வெளிவருகின்றது. முக்கியமான இலக்கியப் பத்திரிகைகள் தலித்தியத்தில் மிகுந்த கவனம் செலுத்துகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலித்தியம் பற்றி பல நூல்கள் வரவுள்ளது. இதைப்போல மாக்சின் பின் நவீனத்துவம் பற்றிய நூலும் முக்கியம் பெறுகிறது. இவற்றைவிட சினிமா, நாடகம் பற்றியும் பல நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன.

எழுத்தாளர் கோணங்கியுடன் பல நாட்கள் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவருடைய எழுத்துக்களைப்போல அவரும் எனக்குப் புதிதாகத் தென்பட்டார். அவருடனான உரையாடல் ஒரு புதிய உலகத்திற்கே கொண்டு செல்கின்றது. நம்மையும் அந்த உலகத்திற்கு அவர் அழைக்கிறார். ஆனால் அந்த உலகம் நமக்கு உடனபாடில்லாததாகவே தெரிகிறது.

'நீங்கள் யாருக்காக எழுதுகிறீர்கள்? உங்களுடைய எழுத்துக்கள் மற்றவர்களுக்குப் புரிவதில்லை. என்ற குற்றச்சாட்டுகள் எழுகின்றன' என்று குறிப்பிட்டபோது அவருடைய பதில் 'நீங்கள் வாசகப் பார்வையிலிருந்து பேசுகின்றீர்கள். எழுத்தாளன் என்பவன் எதையும் எழுத முடியும். அவனுக்கு எழுத்துச் சுதந்திரம் அவசியம். அவனை யாரும் கட்டுப்படுத்த முடியாது' என அமைந்தது. இந்தக் கூற்று என்னுள் பல கேள்விகளை எழுப்பியது. எழுத்து இலக்கியம் யாருக்காக? படைப்பாளிக்காகவா? வாசகருக்காகவா? இருவருக்குமா? அல்லது யாருக்குமாக இல்லையா? இன்றைய தமிழ் எழுத்துக்கள் பற்றி நாம் இந்தக் கேள்விகளை எழுப்பவேண்டியவர்களாகிறோம். உங்கள் தத்துவார்த்த தளம் என்ன? என்ற வினா நீண்ட பொழுது மாக்சிய அணுகுமுறையே தலையெழுத்து என்று குறிப்பிட்டார். கோணங்கியினுடைய எழுத்துக்களையும் மாக்சியத்தையும் இணைத்துப் பாருங்கள் இதற்கு விடைகிடைக்கும். தற்பொழுது வெளிவரயிலுக்கின்ற சிறுகதைத் தொகுதியின் தலைப்பு 'உப்புக் கத்தியில் மறையும் சிறுத்தை'. அண்மையில் காலமான நம் மண்ணில் பிறந்த எழுத்தாளர் தருமு சிவராமின் மறைவையிட்டு தமிழ்நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் மிகுந்த கவலை கொண்டுள்ளனர் என்பது அவர்களோடு உரையாடியபோது தெரியவந்தது. பல சிற்றிதழ்கள் தருமு சிவராம் பற்றிய குறிப்புக்களை வெளியிட்டுள்ளன. தமிழ்நாட்டின் பல இடங்களிலும் அவரது நினைவை வெளிப்படுத்த பல கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர். 'வெளி' நாடக சஞ்சிகை அவரது படத்தை அட்டையில் பிரசுரித்து அவரது தொலைக்காட்சி நாடகப் பிரதி ஒன்றைப் பிரசுரித்துள்ளது. 'தினமணி' போன்ற தேசியப் பத்திரிகைகள் 'தருமு சிவராமின்' மறைவை நினைவு கூர்ந்துள்ளன. அமெரிக்காவில் இயங்கிவரும் 'விசாக்கு' என்ற அமைப்பு சென்ற ஆண்டிற்கான இலக்கியப்பரிசை தருமு சிவராமிற்கு வழங்கியுள்ளது. இறப்பதற்குமுன் அவருக்கு இது தெரியும். ஈழத்து இலக்கியவாதிகள் 'தருமுவை' சரியான முறையில் இனங்காணவில்லையென்பது தமிழக எழுத்தாளர்கள் பலரது குற்றச்சாட்டு. தருமு சிவராமின் கடைசிக்காலத்தில் 'வெளிரங்கராஜன்' அவருக்கு மிகுந்த உதவியாக இருந்து தொழிற்பட்டுள்ளார். நம் நாட்டு இலக்கியவாதிகள் அனைவரும் வெளிரங்கராஜனுக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

சி.சு. செல்லப்பா இந்திய தேசிய விடுதலைப் போராட்ட காலத்தை மையமாக வைத்து இரண்டாயிரம் பக்கங்களுக்கு மேற்பட்ட நாவல் ஒன்றை எழுதியுள்ளார். அது விரைவில் வெளிவரவுள்ளது. 'சுதந்திர தாகம்' என்ற பெயரில் வெளியிடப்பட உள்ளது. இது தமிழில் முக்கிய சாதனையாக கருதப்படவேண்டிய ஒன்று என என் சிந்தனை செல்கிறது.

சினிமா உலகில் 'இருவர்' படத்தின் தோல்வி பெரும் பட முதலாளிகளை ஒரு உலுக்கு உலுக்கியுள்ளது. கிட்டத்தட்ட நாற்பது கோடிரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இருவர் படத்தை சென்னையின் மிகப்பெரிய திரையரங்குகளில் ஒன்றான 'ஊட்லண்ட்ஸ்' தியட்டரில் பார்க்கச் சென்றபொழுது கூட்டமே இல்லை. மிகக் குறைவானவர்களே வந்திருந்தனர். வந்தவர்கள் அனைவரும் உயர்வகுப்பு 'டிக்கற்' பெற்றவர்களாகவே காணப்பட்டனர். கலரி தூங்கி வழிந்தது. திராவிட பாரம்பரியத்தை மணிரத்தினம் கொச்சைப்படுத்திவிட்டார் என்ற அபிப்பிராயமே பெரும்பாலானவர்களிடம் காணப்படுகிறது. குறிப்பாக இளவயதினரை இப்படத்திற்குக் காணவில்லை. அதேவேளை இரண்டு இந்திப் படங்கள் ஜுடா, அவுஜார் கூட்டம் அலைமோதுகிறது. இளவட்டங்கள் புற்றீசல்போல இப்படம் திரையிடப்பட்ட படமாளிகைகளை மொய்த்துள்ளனர். மணிரத்தினத்துக்கு தமிழ்நாட்டு மக்கள் சரியான பாடம் புகட்டியுள்ளார்கள் என்று சொல்லலாம். பொன்விழா ஆண்டில் ஏ.வி.எம். பட நிறுவனம் 'மின்சாரக்கனவு' என்ற படத்தைத் தந்துள்ளது. இது திரையரங்குகளில் சுமாராக ஓடுகிறது. ஆனால் இந்தப் படம் தமிழ் அடையாளங்களற்ற ஒரு தமிழ்ப் படமாக பவனி வருகிறது. இந்தச் சந்தடிக்கிடையே எழுத்தாளர் தேசிய திரைப்பட நிறுவனத்துடன் இணைந்து 'கருவேலம்பூக்கள்' என்ற திரைப்படத்தை எடுத்து முடித்துள்ளார். இது தமிழில் பேசப்படத்தக்க படமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக இலக்கிய கலை ஆர்வலர்களிடையே காணப்படுகிறது. இதன் சினிமா எழுத்துப் பிரதியினை 'தமிழ் புத்தகாலயத்தினர்' புத்தகமாக வெளியிட்டுள்ளனர். கூடத்துப்பட்டறை நடிகைகளான கலைராணி (இவர் இலங்கையைச் சேர்ந்தவர்) சந்திரா (என்னுடன் 'செம்பவளக் காளி' நாடகத்தில் நடித்தவர்) ஆகிய இருவரும் நாசர், ராதிகா ஆகியோருடன் இணைந்து நடித்துள்ளனர். நாசர் தனது சொந்தத் தயாரிப்பாக தேவதை என்ற படத்தை உருவாக்கி வருகிறார். இதில் தஞ்சைதமிழ் பல்கலைக்கழக நாடகத்துறைத் தலைவர் மு. இராமசாமியும் பாண்டிச்சேரி நாடகத்துறை விரிவுரையாளர் ராஜிவும் நடிக்கின்றனர். இத்தகைய சில முயற்சிகள் நடைபெற்றாலும் இன்றைய தமிழ்த் திரைப்பட உலகம் ஆரோக்கியமானதாக இல்லை. (எப்பொழுது ஆரோக்கயமானதாக இருந்தது?).

நிறையவே பத்திரிகைகள் சஞ்சிகைகள் வெளியாகின்றன. புத்தகக் கடைகளில் வர்ணத்தை அள்ளித் தெளித்தாற்போல் பத்திரிகைகளின் தோற்றம். கணையாழி தன்னை 'இன்ரநெட்டில்' இணைந்துள்ளது. தினமணி போன்ற தினசரிகளும் இதனுள் நுழைந்துள்ளன. 'சுபமங்களா' நிறுத்தப்பட்டதுடன் 'புதிய பார்வை' அந்த இடத்தை நிரப்பப் பாடுபடுகிறது. நவீன உலகுக்கு ஏற்ற வகையில் பல புதிய பத்திரிகைகளின் தோற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய கணணி யுகத்தில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பெருமளவில் தங்களை இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**இடம்:**

உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற மேற்கு நாட்டின் தலை நகரமொன்றின் வீதி காதலுக்கும், மனிதனின் நுண்ணிய உணர்வுகளின் பரிமாணத்தை விளக்கவும் மிகவும் சிறந்ததென்ற ஒரு மொழியைத் தனதாக்கிக் கொண்டதுமான நகரமது. உலகிலுள்ள எந்தப் பக்கத்திலுள்ள கலைஞர்கள் என்றாலும் தன் வாழ்க்கையின் ஒரு தடவையாவது தரிசிக்க வேண்டும் என்று தவிக்கும் அழகிய பட்டணம் அது. கட்டிடக் கலையில் பெயர் பெற்றது. இரண்டாம் நூற்றாண்டில் ஹிட்லரால் அழிவு நேரப்படும் என்பதற்காக மறைத்து வைக்கப்பட்ட அதியற்புத ஓவியங்களை, சிலைகளை, கலைப்படைப்புக்களை இன்று உலகத்தின் கலா ரசிகர்கள் ரசிப்பதற்காகக் கண் காட்சிக்கு வைத்துப் பெருமைப் படும் நாடது. நாகரீகத்தின் உச்சியில் நடமாடும் பெண்களின் நவீன வெளிப்பாட்டை புதுமைவிரும்பிகளுக்குக் காட்சி வைக்கும் நவ நாகரீகப் பட்டணமது.

**நேரம்:**

வசந்த காலத்தில் ஒரு பின்நேரம் மலர்கள் பூத்துக் குலுங்க மங்கையர் சிரித்தாட, ஆடவர் அந்த அழகில் திளைத்திருக்க, குழந்தையர் இளம் சூட்டில் அம்மணமாய் விளையாட முதியோர் தம் எஞ்சிய நாட்களை இதமாக அனுபவிக்கும் வசந்தகாலம்.

அந்த சந்தி நிறைந்த சனம், அடுத்தவன் எந்த உலகத்தின் மூலையிலிருந்து வந்திருக்கிறான் என்பதை, என்ன துயரை மறக்க இப்படிக் குடித்துக் கொண்டிருக்கின்றான் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பாத மேற்கத்தியர் சேர்ந்து குடிக்கும் ஒரு "பாதச்" (Bar) சுற்றிய மாலை நேரம்.

**மேடையலங்காரம்:**

நடுச் சந்தி என்பதால் அதைச் சுற்றிய எத்தனையோ "பார்கள்தான் மிகவும் அலங்காரமாக இருந்தது. ஏனென்றால் அந்த பார்கள் உலகில் உள்ள மக்கத்தின ஆடையலங்காரங்களை மாலை நேரத்தின் தங்க நிறத்தின் பிரதிபலிப்பில் வானவில் தொகுதிகளாக வர்ணம் படைத்தது.

உயர்ந்தெழுந்த கட்டிடங்கள், அந்தக் கட்டிடங்களின் நடுவே பாம்பாய் நெளிந்தோடும் நதி, இடைவிடாத நாகரீக மோட்டார் வண்டிகளின் பவனி, நடையில் சிலர், அவசரத்தில் சிலர், அமைதியாகப் பலர் என்று எத்தனையோ பேர் அந்தச் சந்தியை அலங்கரிக்கின்றார்கள்.

**ஒலியமைப்பு:**

குழந்தைகளின் சிரிப்பு, குமரிகளின் நகைப்பு, வாலிபர்களின் ரிப்பு, முதியோரின் முனகல், நதியின் நாதலயம், தென்றலின் இனிய கிசு கிசுப்பு.

மோட்டார் வாகனங்களின் மூர்க்கமான சத்தம், மேகத்தைக் கோடு போடும் விமானங்களின் உமுறல்.

**ஒளியமைப்பு:**

பூமித்தாயின் மடியில் முகம்புதைக்கும் சூரியக் குழந்தையின் தங்க நிறம். உயர்ந்த மாளிகைகளில் ஏற்றப்படும் மின்சார விளக்குகளின் கண்சிமிட்டு, மோட்டார்களின் கண்களைக் குருடாக்கும் வெளிச்சங்கள்.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



மக்களின் சிரிப்பில், துயரில், காதலில், கோபத்தில், சிருங்காரத்தில், சீரழிவில் எப்போதும் போல் தன் மெல்லலையை மிதமாகத் தவழ விடும் பிரசித்த பெற்ற நதியையண்டி நடந்து எத்தனையோ பேர் துயர் மறக்கும் நேரம்.

பின்னேர ஆதவனின் முகத்தில் அவன் பூமிக் காதலி தன் நெற்றியின் குங்குமத்தைத் தடவியோ என்னவோ அவன் சிவப்பாகத் தெரிகிறான். அவனைச் சுற்றிய மேகம் பருத்தி மூட்டைகளை அவிழ்த்து விட்டுப் பேரம் பேச அந்த மூட்டைகள் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டு நாலா பக்கமும் தெறித்தோடும் நேரமது.

**பாத்திரங்கள்: ?**

ஆஹா, எத்தனை பேர்?

முக்கிய பாத்திரம் என்று யாரைச் சொல்வது?
அதோ அந்தச் சந்தியில் நடுவில் நாலைந்து ஆண்களுக்கு நடுவில் துரியோதன சபையில் துகிலுரியப் பட அழைத்து வந்தவள் போல் பரிதாபமாக நிற்கிறாளே அந்தப் பெண்ணா முக்கிய பாத்திரம் அல்லது துச்சாதனன் மாதிரி அவளை அறைகிறானே அவனா முக்கிய பாத்திரம்? அல்லது........



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துரியோதனன் சபையில் அவன் போடும் சாப்பாட்டுக்காக வாய் திறவாமல் மௌன சாட்சிகளாக ஒரு பெண்ணின் அலறல்களைச் செவி மடுத்தபடி இருந்த முதியோர், படித்தோர், பண்புள்ளோர், அறிவாளர், உற்றோர், உறவினர் போல் அந்தச் சந்தியைச் சுற்றி நிற்கிறார்களே தமிழர்கள் அவர்களுமல்லவா முக்கிய பாத்திரங்கள். அதெப்படி மற்றவர்கள் அதாவது சந்தியைச் சுற்றியுள்ள 'கபேக்களில்' பார்களில் கோப்பிக் கடைகளில் அமர்ந்து இந்த நாட்டுக் கூத்தை அதிசயமாகப் பார்க்கிறார்களே அந்நியர்கள் அவர்களுமன்றோ இந்த நாடகத்தின் - அல்லது நாட்டுக் கூத்தின் உப பாத்திரங்கள்.

**நாடகம் :**

கண்ணீரும் கம்பலையுமாக நடுச் சந்தியில் நிற்கும் அந்தத் தமிழ்ப் பெண் (பொட்டு வைத்துக்கொண்டிருந்தாள். சேலை கட்டவில்லை ஆனால் கருப்புப் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் போட்டு ஒரு பழுப்பு நிறக் கோட்டும் அணிந்திருந்தாள்). கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்தபடி "என்ன தனியா வந்த என்னிட்ட சண்டித்தனம் காட்டுறியா?"

துச்சாதனன் மாதிரியிருந்தவன் "ஏனடி தனியா வாறதெண்டு மாய்மாலம் காட்டுறாய். உன்ர கள்ளப் புருஷனைத் துணைக்குக் கொண்டு வந்திருக்கலாமே? கட்டிய புருஷனை விட்டுட்டுக் கள்ளப் புருஷன் பார்க்கிறவளுக்கு தனியாப் போகேக்க மட்டுமில்ல நாலு பேரோட இருக்கேக்கையும் அடுத்தவன் வந்து சண்டித்தனம் காட்டத்தான் போகிறான். சண்டித்தனம் மட்டுமில்ல உன்ர சட்டை சேலையையும் தொட்டுப் பார்ப்பான். உன்மாதிரித் தமிழ்ப் பெண்களை உயிரோட எரிக்க வேணும்"

ஆ..., அவன் சொல்வதை ஆயிரக்கணக்கான வருடங்களாக எங்கள் ஆண்கள் செய்து வருகிறார்கள்தானே, ஏன் இவன் புதிதாக ஒரு ஸ்ரேட்மனட் விடுகிறான்?

வண்ணான் சொன்ன கதை கேட்டு ராமன் சீதையைத் தீயில் இறக்கவில்லையா? (HUMAN RIGHT VIOLATION என்று சத்தம் போட AMNESTY INTERNATIONAL அப்போது இருக்கவில்லையே).

அம்மாக்களும் பிள்ளைகளுமாய்ச் சேர்ந்துதான் ஒரு வருடத்தில் எத்தனையோ ஆயிரக்கணக்கான இளம் பெண்களைச் சீதனக் கொடுமைக்காக தீக்குப் பலி கொடுக்கிறார்கள் இந்தியாவில். இவன் என்ன புதிதாக ஏதோ சொல்கிறான்.

இவன் சொன்னதை ரசித்து ஓரமாய் நின்றிருந்த ஒரு மீசைக்காரன் ஆரவாரமாகச் சிரித்தான். அவன் ஒரு தீவிரமான இனவாதி. "கல்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ் இனம்" என்று அகப்பட்ட மேடைகளிலெல்லாம் ஏவி முட்டாள்தனமாகப் பேசுபவன்.

டேய் முட்டாள்களே, கல் தோன்றாக் காலத்தே எந்த உயிர் இந்த உலகத்தில் வாழ்ந்திருக்க முடியும்?

விஞ்ஞானம் செவ்வாய்க் கிரகத்தில் மசாலாத் தோசை செய்யுமளவிற்கு வளர்ந்த பின்னும் உங்கள் மரமண்டைகளில் ஒரு துளியாவது பொது அறிவு புகவில்லையா? டார்வின் என்றொரு மனிசன் உயிரியல் வளர்ச்சியை எழுதினானே அவனிடம் போய் நீங்கள் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த தமிழ் இனம் என்று புலம்பியிருந்தால் அவன் சிரித்திருக்க மாட்டானா?

இப்படி இந்தத் தமிழ் மனிதர்களை (ஆண்களிற் சிலரை) யார் பகிரங்கமாகக் கேட்கப் போகிறார்கள்?

எனவே அந்த மீசைக்காரனின் சிரிப்பை ஆமோதிப்பதுபோல் ஒரு சில பெண்கள் அவனை மரியாதையாகப் பார்க்கிறார்கள்.

அவர்கள் கல்லென்றாலும் புருஷன் புல்லென்றாலும் புருஷன் என்று யோசிப்பவர்களாக இருக்கலாம்.
இந்த முட்டாள் மனிசிகளுக்கு கல்லையும் புல்லையும் தவிர எவன் புருஷனாக வருவான்.

ஏனென்றால் இவர்கள் 'உண்மையான' பெண்களாக இருந்தால் அநாதையாக இந்தச் சந்தியில் இந்த வெறிபிடித்த நாலைந்து மனிதர்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்டு நிற்கும் அந்த அபலைப் பெண்ணுக்குக் குரல் கொடுக்க மாட்டார்களா?

எங்கேயோ தூரத்தில் நின்ற இளைஞன் இந்தக் கூத்தை வெறுப்புடன் பார்த்துக் கொண்டு அந்தரப்பட்டுக் கொண்டு நின்றான். அவன் அந்த அபலைப் பெண்ணின் சொந்தக்காரனாக இருக்கலாம் அல்லது அவர்கள் குற்றம் சாட்டும் அவளின் 'கள்ளப் புருஷனின்' (??) (அவள் பகிரங்கமாக ஒருத்தனுடன் வாழ்கிறாள் கணவனைப் பிரிந்தவுடன் அவன் எப்படிக் 'கள்ளப்' புருஷனாக முடியும்?)

அந்த இளம் பையன் அல்லது வாலிபன் ஒரு பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் மேற்கு நாடுகளுக்கு ஓடிவந்த அகதிச் சிறுவனாக இருக்கலாம். மேற்கு நாட்டுப் படிப்பையும் வாழ்க்கை முறையையும் ஓரளவு புரிந்தவனாக இருக்கலாம். இப்போது அவன் இந்தக் கூத்தை அருவருப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு சில நிமிடத்தில் பெரிய கூட்டம் குழுமி விட்டது.

சந்தியைச் சுற்றி நிறையத் தமிழ்க் கடைகள் இருப்பதால் பாகற்காயையும் புடலங்காயையும் (யாழ்ப்பாணத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை) காவிக் கொண்டு காசு கொடுக்காத நாடகம் பார்க்க அந்தக் கூட்டம் குழுமி விட்டது. யாழ்ப்பாணத்தில் கம்பத்தில் ஏற்றப்படும் நவீன ஏசுக்களைத் தரிசிக்க வந்த பழக்கமோ? தூரத்தில் நின்ற அந்தப் பையனுடன் இன்னும் ஒன்றிரண்டு இளம் வாலிபர்கள் வந்தார்கள். அவர்கள் பக்கத்திலுள்ள தமிழ்ப் புத்தகக் கடைக்குள்ளால் வந்தவர்கள்.

"என்னடா மச்சான் கூத்து" கோலாவை உறிஞ்சியபடி ஒருத்தன் கேட்டான்.

"அந்தப் பெட்டையை இந்த நாய்கள் அடிக்கிறான்கள்" இருபத்தைந்து வயது முற்போக்கு முணுமுணுத்தது.

"ஒரு தனிப் பொம்பளய ஏன் அடிக்கிறான்கள்" குரலில் பரிதாபம்.

"அந்தப் பெட்டை புருஷனை விட்டுட்டு இன்னொருத்தனோட இருக்குதாம்" (மேற்கு நாடுகளில் சர்வசாதாரணம்)

"அடிக்கிற பெரியவர் புருஷனோ"

"இல்ல. அவரின்ர சினேகிதன்" கேட்டவன் திடுக்கிடுகிறான். இந்த மறுமொழியால்.

"ஏன் புருஷனுக்கில்லாத கோபம் இவருக்கு" அனுபவமில்லாத இளமையின் கேள்வித் தொடுப்பு.

"இவளின்ர முகத்தில தான் முழிக்கமாட்டன் என்டு புருஷன் சொல்லிப் போட்டாராம்"

"அதுக்காக வாடகைக்கு ஆள் வைத்து அடிக்கிறாரோ"

"இல்ல.......வெளிநாடுகளில வாழ்ற தமிழ்ப் பெட்டைகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கக் கொஞ்சம் தமிழன்கள் வெளிக்கிட்டிருக்கினமாம், அவைதான் அடிக்கினமாம்"

"என்ன பாடம்? தனியாக ஒரு பொம்பளயக் கொண்டு வந்து நாலு சனம் பார்க்க நடுச்சந்தியில வைச்சு அடிக்கிறதோ"

"அப்பதானே மற்றப் பெண்டுகள் கவனமாக இருப்பினம், என்ன நடந்தாலும் எங்கட கலாச்சாரத்தை மறக்கக் கூடாது"

"எங்களைப் பத்தி அயல் நாட்டான் என்ன நினைப்பான்?"

என்ன நினைப்பான்? இவ்வளவு நாளும் காசு உழைக்க வந்த கருப்பன்கள், வியாதி பரப்புர வெளிநாட்டான், கள்ளம் பண்ணுற ஆசியன் எண்டெல்லாம் சொல்றவன்கள் இப்ப நடுச்சந்தியில வைச்சுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்பிள்ளய அடிக்கிறவன்கள் எண்டும் சொல்லுவினம்" தங்கள் இனத்தின் அடையாளத்தை அயலான் எப்படி மதிக்கிறான் என்ற அங்கலாய்ப்பு.

"எங்கட காப்பியங்களைப் படிச்ச வெள்ளைக்காரன்களுக்கு இதொண்டும் புதினமாகத் தெரியாது"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"ஐந்து புருஷனும் பேடிகளாப் பார்த்திருக்க அவன்களின்ர பெஞ்சாதி திரௌபதி சீலையுரிஞ்சது காப்பியமாகப் போட்டுது. இந்தக் காலத்தில் ஒரு ஊரே சேர்ந்து பூலான்தேவியைப் பலாத்காரமாக அழித்தது படமாக்கப்பட்டுவிட்டது. இந்தப் பொம்பளயின்ர விஷயமும் நாளைக்கு ஒரு வெள்ளைக்காரன்ர பேப்பரில ஒரு சின்ன விஷயமாகப் போகும்"

"உவன்களின்ர நடத்தையைப் பார்க்க நாக்கப் புடுங்கிக் கொண்டு சாகவேணும் போல இருக்கு மச்சான்"

"நாடகமே உலகம் நாங்கள் எல்லாம் சிறு நடிகர்கள்" சிரிப்பும் வேடிக்கையும் ஒருத்தனின் குரலில்.

"அதார்ரா மச்சான் இன்னொருத்தன் அந்தப் பொம்பளயின்ர முகத்தில காறித் துப்புறான்"

"அந்த நீலச் சேர்ட் போட்ட மெல்லிய ஆளே? ஓம் அவர் ஓர் பண்புவாதி. பெய்யெனப் பெய்யும் மழை என்று சொல்லத்தக்கதாகத் தன் பொஞ்சாதி கற்புள்ளவள் என்று புழுகிக் கொண்டிருப்பவன்"

"என்ன மச்சான் உன்ர குரலில கிண்டல் தெரியுது?"

"அவரின்ர பெஞ்சாதி பின்னேரம் பார்ட்ரைம் கிளினிக் செய்யுறா. ஒரு சினேகிதன்ர காரில் எட்டு மணி வேலைக்கு ஆறு மணிக்கே புறப்படுறாவாம். மணக்க மணக்க பூசிக் கொண்டு 6 மணிக்கு ஏன் போறாய் என்று கேட்க வக்கில்லாதவர் இண்டைக்குச் சந்தியில நின்று அடுத்தவன் பொம்பளயின்ர நடத்தையைப் பற்றிக் கொதிக்கிறார்"

"சும்மா இரு மச்சான், கிளினிக் போறதுக்கு ஆரும் துணை வந்தால் சும்மா நாங்கள் நரம்பில்லாத நாக்கால நாலையும் பேசக்கூடாது"

"தன்ர தலையில மலத்தை வைச்சிட்டு அடுத்தவன் நாறுகிறான் என்கிறது பிழையில்லையா?"

"மச்சான் மச்சான் அந்த ஆள் ஆர்? சிவப்புச் சேர்ட்டோட அவளைத் திட்டுகிறானே அந்த மெல்லிய மனிசன் ஆர்?"

"ஓ அவரே, அவருக்கு உலகத்துப் பெண்டுகள் எல்லாரிலயும் கோபம். அவரின்ர பொஞ்சாதி இவரின்ட அடி தாங்காம அண்ணன் விட்ட போயிருக்கு. அண்ணன்மார் சேர்ந்து இவருக்கு மாட்டடி குடுத்துப் போட்டினம். அவளும் விடாம பிள்ளைச் செலவு கேட்டு கோர்ட் ஏறி இவரைப் புடுங்கிப் போட்டாள். அவருக்கு உலகத்துத் தாய்க்குலத்திலேயே ஆத்திரம். இப்ப இன்னொருத்தன் பெஞ்சாதி அடிபடுறதை இனிக்க இனிக்க ரசிக்கிறார்"

"என்ன கேவலம் மச்சான்? நாட்டை விட்டோடி வந்து இப்படிக் கேவலமாக நடக்கிறம். எப்படா நாங்க திருந்துவோம்?"

"நாய்வாலைத் திருத்த முடியாது மச்சான். எங்கட தமிழன்ர குணத்தையும் மாற்றமுடியாது. ஆரை எண்டான அடிக்காட்டா எங்கட ஆட்களுக்குத் திருப்தி வராது"

"என்னடா மச்சான் பொம்பளக்கு அடிக்கிறது ஆண்மையோ?"

உண்மையான ஆண்மையுள்ளவன் பொம்பளக்கோ, ஆதரவற்ற மனிசனுக்கோ அடிக்க மாட்டான். மனநோய்க்காரனும் பேடிகளுந்தான் அந்த வேலை செய்வினம்"

"இவன்கள் இப்படி அடிக்கிறான்கள். ஒரு பொலிஸ்காரனையும் காணல்ல"

"நல்ல நாடகம், ஒவ்வொரு நாளும் வீட்டுல போடுற நாடகத்தை இப்ப ரோட்டில செய்யுனம்"

அடிபடும் பெண்ணின் அழுகை "பார்"களில் குடித்துக் கொண்டிருந்தோர் நெஞ்சங்களைக் குலுக்கியதா என்னவோ ஓரிருவர் தமிழர் கூட்டத்தை நோக்கி ஓடிவந்தார்கள். ஒரு வெள்ளைக்காரப் பெண் தன் மொழியில் "இந்தக் கேவலமான வேலையை நிறுத்துங்கள்" என்று கத்தினாள்.

"ஓம், ஓம் நீங்க தரவளி, ஒரு நாளைக்கு ஒருத்தனோட படுக்கிற வெள்ளைக்காரிகளுக்கு இந்த விஷயம் பிடிக்காமத்தானே இருக்கும்"

ஒரு தமிழன் அதிர்ந்தான். அவன் அடிக்கடி மேடைகளில் ஏறுபவன். பண்டைத் தமிழ் வாழ்வும் வழிபாடும் பற்றி மேடையேறிப் பேசுபவன். பெண்களின் கடமையை (ஆண்களுக்குத் தொண்டு செய்வது போன்றவை) ஆணித்தரமாக அடித்துப் பேசுபவன்.

அவனுக்கு இந்த வெள்ளைக்காரப் பெண் தங்கள் பிரச்சினையில் இடைபுகுந்தது ஆத்திரத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

அவன் போன்ற கலைஞர்கள் குடும்ப உறவின் வலிமையை, பெருமையை அடிக்கடி கூட்டம் போட்டுப் பேசுபவர்கள். "இது குடும்ப உறவு பற்றியது" அவன் வெள்ளைக்காரிக்கு உறுமினான்.

"குடும்ப உறவுகள் சரியாயிருந்தால் ஏன் மச்சான் உலகத்துல இவ்வளவு சண்டைகள், குடும்பம் ஒரு கோயில் என்பது எல்லாம் உண்மையா மச்சான்?"

"உலகத்துச் சண்டைகள் அரசியலானது"

"அரசியலைக் குழப்புறவன்களே மனிசன்கள்தானே. அவன்கள் எல்லாம் குடும்பத்திலயிருந்து வந்தவன்கள்தானே"

"எங்கட தமிழ்க் குடும்பத்தின் அன்பு வாழ்க்கையின் பிரதிபலிப்பு கம்பங்களில் கட்டித் தொங்கப்பட்டது மச்சான்"

"அப்படியானா அருவருப்பான குடும்பத்திலயிருந்து பிரிந்துபோன பொம்பளக்கு ஏன் அடிக்கிறான்கள்?"

"அவள் செய்தது சரியெண்டு ஒப்புக்கொண்டா தங்கட பெண்சாதிகளெல்லாம் இந்த முண்டங்களையும் மூட்டைகளையும் விட்டுவிட்டு ஓடிப் போயிரும் எண்ட பயம்தான்"

"இலங்கையில பொம்புளயெல்லாம் ஓடுறயேல்லையேதி மச்சான்?"

"இலங்கையில அரசாங்கம் காசு குடுத்தா எத்தனையோ பொம்புளகள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடித்தான் போவினம்"

பொலிஸ் வானின் சத்தம் கேட்டது.
நடுச்சந்தியில் "நியாயம்" வழங்கிய தமிழர்கள் மூலைக்கு ஒருத்தராய் ஓடிவிட்டார்கள்.

அவிழ்ந்த தலைமயிரையும் வழிந்த கண்ணீரையும் சரிசெய்துவிட்டு அந்தப் பெண் நின்றாள்.

ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் ஒரு ஆணும் அவளுக்குக் கைகொடுத்தார்கள். பொலிஸ்காரர்கள் வந்தார்கள்.

இன்னும் சில நாட்களில் இப்படி ஒரு நாடகம் இந்த அழகிய பட்டணத்தின் இன்னொரு சந்தியில் நடக்கலாம். இன்னொரு பெண்ணுக்கு 'நியாயம்' வழங்கப்படலாம். இலங்கையில் செய்ததை இப்போது [INTERNATIONAL] ஆகச் செய்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# என்னைப் பேச விடு

உபாசு தேவன்

என்னைப் பேச விடு
என்னைப் பேச விடு
பூத்திருக்கும் மரம் போல
எண்ணுவதைப் பேசி
என்னை அலங்கரிக்க
இடங் கொடு
என்னை விடு!

உன் முட்டாட் தனங்களுடன்
மோத முடியாமல்
எத்தனை தடவைகள்தான்
கருக்கலைந்தேன்
எத்தனை தடவை
எத்தனை தடவை

கொந்தளிக்கும் கடலை
நெஞ்சுள் வைத்தபடி
கனத்த மௌனச்சுவரெழுப்பி
களைத்து விட்டேன்

மது வெறியில்
வாகனங்கள் பறக்கும் சாலையில்
தாய் அனுப்புவாளோ
தன் குழந்தைகளை

துப்பாக்கியின் வீச்செல்லைக்குள்
சுழலுவதே
உன் உலகென்றானபின்
இந்த வேற்றுக்கிரக வாசியை
எங்கனம் உனக்கு மொழிபெயர்க்க!

கடல் தன்
ஒவ்வொரு அலையாய்
ஓங்கி ஓங்கி அடிப்பதும்
அவ்வப்போது
எரிமலைகள் வெடிப்பதும்
"அவனைப் பேச விடு" என்றுதான்
அறிவாயா?

ஒரு நிமிடம்
ஒரேயொரு நிமிடம்
வெறும் கையுடனும்
திறந்த மனதுடனும்
என்னைப் பார்
என்னைக் கேள்
போதும்!



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net













இருவர் திரைப்படத்தின் படுதோல்வி மணிரத்தினத்துக்கு மிகுந்த அதிர்ச்சியை அளித்திருக்கும். ரோஜாவின் வெற்றிக்குப் பின்னர் தன் திரைப்படங்களில் வரலாற்றைத் தவறாகப் பயன்படுத்தி, பரபரப்பு விளம்பரம் தேடிக் கொள்வது மணிரத்தினத்தின் பாணி. இருவர் படத்தின் கலை நுட்பங்கள் யாவும் விழலுக்கிறைத்த நீராகி விட்டது. உண்மை, பொய், கற்பனை, ஊகம் எனப் பல்வேறு தடங்களில் மாறி மாறி நகரும் இருவரின் பிரதான நோக்கம் இதுதான். சொல்லொன்றும் செயலொன்றுமாய் வாழ்ந்த வாழ்கின்ற திராவிட இயக்கத் தலைவர்களின் அந்தரங்க வாழ்க்கையை அம்பலப்படுத்துவது. சுருக்கமாகச் சொன்னால் பத்திரிகை கிசுகிசுக்களின் இன்னொரு முகம் இந்த இருவர்.

திரையுலகோடு நெருங்கிய தொடர்புள்ள நான்கு ஆட்சியாளர்களைத் தமிழ்நாடு இதுவரை பெற்றிருக்கிறது. இவர்களை அடக்கமான தொனியில் கிண்டல் பண்ணவும், அம்பலப்படுத்தவும் முயற்சிக்கும் இந்தத் திரைப்படம் மணிரத்தினத்தின் அரசியல் அபிலாஷையை ஓரளவு சுட்டிக்காட்டுகின்றது. சினிமாவும், திராவிட இயக்கமும் ஒன்றையொன்று சார்ந்து வளர்ந்த வரலாறு தமிழ் நாட்டுக்கு உரியது. அதன் உச்சக்கட்டம் எம்.ஜி.ஆர். சினிமா என்ற அதே ஆயுதம் மூலம் திராவிட இயக்கத்தைக் கிண்டல் பண்ணி மக்களின் பிரமையைக் கலைத்து விடலாம் என்பது மணிரத்தினத்தின் கணக்கு. மணிரத்தினம் இருவரில் அம்பலப்படுத்தும் "இரகசியங்கள்" ஏற்கனவே ஊறிந்த விஷயங்கள், தமிழ்நாட்டு மக்களால் பெரிது படுத்தப் படாதவை - சாதாரண சினிமா ரசிகனுக்குத் தேவையான சுவாரசியமான திருப்பங்களும், பரபரப்பூட்டும் உச்சக்கட்டக் காட்சிகளும் இருவரில் இல்லை. இந் நிலையில் எத்தகைய அதிர்வலைகளையும் ஏற்படுத்தாமல் இருபத்தைந்து கோடி ரூபா நஷ்டத்துடன் கிணற்றில் விழுந்த கல்லாக படப் பெட்டிக்குள் இருவர் மீண்டும் சுருண்டு கொண்டது. எனினும் இருவரில் மறக்க முடியாத இருவர் உள்ளனர். ஒருவர் மோகன்லால் - மற்றவர் ஐஸ்வர்யா ராய்.

ரஜனிகாந்தின் புதுப்படத்துக்காக ஏங்கிக் கிடந்த தமிழ் நாட்டு மக்களுக்கு வயிற்றில் பாலை வார்க்கும் சங்கதியாக அருணாச்சலம் அண்மையில் வெளியானது. ரஜனிகாந்த் எந்த வசனத்தை அடிக்கடி பேசுவார்? எந்தப் பொருளை அவ்வப்போது வீசி எறிந்து பிடிப்பார் என்பது குறித்த சந்தேகங்கள் தமிழ்மக்களை வெகுவாக ஆட்டிப்படைத்தன. ரஜனிகாந்த் ஒரு தெய்வத்துக்கு ஈடான முறையில், அருணாச்சல நம என்ற வேத முழக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றார். சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் ரஜனிகாந்தை சித்த சுவாதீனமற்ற ஒருவராக சித்தரித்துப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருந்தன. இருபது வருடங்களாகியும் அவர் அந்த நிலையிலிருந்து மீளவில்லை என்பதை இப்போது வந்திருக்கும் அருணாச்சலம் உணர்த்துகிறது. ஆனால் ஆறுதலான ஒரு சங்கதி, அருணாச்சலம் படம் எதிர்பார்த்தளவு வாரி வசூலிக்கவில்லை. தமிழ் நாட்டில் நிலவும் 102 டிகிரி வெயிலில் ரஜனிகாந்தைத் தவிர தமிழ்நாட்டு மக்களுக்கு முற்றாகப் புத்தி பேதலிக்கவில்லை.

ரஜனி சகாப்தத்தின் துயரமான முடிவுக்கு அருணாச்சலம் ஓர் உதாரணம். அபூர்வ ராகங்கள், மூன்று முடிச்சு, புவனா ஒரு கேள்விக் குறி, ஆறிலிருந்து அறுபது வரை, எங்கேயோ கேட்டகுரல், முள்ளும் மலரும் போன்ற படங்களில் தோன்றிய ரஜனியை மலரும் நினைவுளாக்கிப் பார்த்து ஆறுதல் படுவதைத்தவிர வேறு வழியில்லை.

அகில இந்திய சிறந்த நடிகருக்கான விருதை மூன்றாவது தடவையாக கமலஹாசன் பெற்றிருக்கின்றார். இந்தியாவின் இன்றைய சிறந்த நடிகர்களுள் கமலஹாசனும் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. எனினும் அவர் தன் நடிப்பாற்றலை விட விளம்பரம், ஒப்பனை என்ற இரு சங்கதிகள் மூலமே தன்னை நிலைநிறுத்த முயல்கிறார் எனத் தோன்றுகின்றது. குள்ளன், வயோதிபன், நடுத்தர வயது மாது என வினோத வேஷ சாகஸங்கள் தொடர்கின்றன. விளம்பரங்கள் மூலம் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்துவது அவரது வியாபாரத் தந்திரம். சுருக்கமாகச் சொன்னால் இன்றைக்கு அவர் ஏற்கும் பாத்திரங்கள் வியாபாரப் பொருள்கள். இதனால்தான் "அவ்வை ஷண்முகி" போன்ற









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டமான கற்பனைகளை எல்லாம் நடிப்பின் மைல்கற்களாக அவர் எண்ணிக் கொண்டிருக்கிறார். கமலஹாஸன் விருது பெற்றிருப்பது தமிழர்களுக்குச் சந்தோஷத்தைத் தரலாம். ஆனால் மம்மூட்டி, மோகன்லால், நானா படேகர், நாஸர், நஸ்ருத்தீன் ஷா, ஓம்பூரி போன்ற சிறந்த நடிகர்களுக்கு அகில இந்திய அளவில் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

வெறும் நட்சத்திர அந்தஸ்தை வைத்து சிறந்த நடிகருக்கான விருதைத் தீர்மானிப்பது முறையான செயலாகாது. தான் ஏற்கும் பாத்திரத்துக்கு உயிரூட்டும் ஒருவனே சிறந்த நடிகன். நாளை கமலஹாஸன் கூனனாக, தலையால் நடப்பவராக, நொண்டியாக, மூக்கில்லாதவராக, ஒற்றைக் கண்ணனாக திரையில் தோன்றக் கூடும். தோற்றமா, நடிப்பா முக்கியம் என எண்ணும்போது கமலஹாஸனின் முக்கிய பலவீனங்கள் தென்படத் தொடங்கும். ராஜபார்வை, பதினாறு வயதினிலே, சலங்கை ஒலி, தேவர்மகன், நாயகன், மகாநதி போன்ற படங்கள் மூலம் பெருமை தேடிக்கொண்ட கமலஹாஸன் வியாபார உத்திகளால் நாளை நாய் வேஷம் போட்டுக் குரைக்கவும் கூடும். ஜீ.வீ., சாருஹாஸன் போன்றோர் தயவால் நாய் வேஷத்துக்கு விருதும் கிடைக்கும்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியம், கே.ஜே. ஜேசுதாஸ் ஆகியோர் சர்ய்வு நாற்காலிகளைத் தேடிச் செல்லும் இந்நேரத்தில் இரண்டு இனிய குரல்கள் தமிழ்த்திரையுலகில் நுழைந்திருக்கின்றன. மிகவும் குழைவுடன், கர்நாடக இசைப் பரிச்சயத்தின் உதவியுடன், காதல் உணர்வுகளைக் குரல்வழியே நழுவ விடுகின்றார் உன்னிகிருஷ்ணன். மற்றவரான ஹரிகரனின் குரலே ஒரு விசித்திரமான இசைக்கருவி. நாகரீக உச்சரிப்பு, மேற்கத்தைய பாணியை, ஹிந்துஸ்தானியை, கஸலை அநாயசமாக சாதித்துக் காட்டும் திறமை.....இவை ஹரிகரன். இவ்விருவரும் தமிழ்ச் சினிமாவின் முரட்டுக்கரங்களில் சிக்கியிருக்கும் இரண்டு கரும்புகள். சாறு பிழிந்து சக்கையாக்கும் பணியில் தமிழ்ச் சினிமாவின் இசையுலகம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. 'உயிரே உயிரே', 'நிலாக் காய்கிறது' பாடிய ஹரிகரன் 'ரோமியோ ஆட்டம் போட்டால்' என்று பாடும்போதும், 'என்னவளே' பாடிய உன்னிகிருஷ்ணன் இன்று 'தாவணிக்குள் மீன்பிடிக்க தூண்டில் போட்டேன்' என்று பாடும்போதும் எனக்கு மாரடைப்பு வரப்பார்க்கிறது. எனினும் நிகழும் ஈசுர வருஷத்தில் இவர்களை விட்டால் எனக்கு வேறு புகலிடமில்லை.

மொஸ்கோ போன்று கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரமல்ல நாகர் கோயில். எனினும் திரு. டொமினிக் ஜீவாவினால் நாகர் கோயிலை அவ்வளவு எளிதில் மறக்க முடிவதில்லை.


தாமரை இதழில் வெளியான அவருடைய கட்டுரையிலும், மூன்றாவது மனிதனில் வெளிவந்த பேட்டியிலும் நாகர் கோயில் தவறாமல் இடம் பெற்று விட்டது.


இப்போதெல்லாம் நு..மானின் நண்பர்கள் நாகர் கோயில் காரர்கள் என்பது டொமினிக் ஜீவாவின் குற்றச்சாட்டு. அந்த நாகர் கோயில் காரர்களுள் ஒருவரான சுந்தரராமசாமி ஓர் உயர்சாதி அகம்பாவி, நேர்மைப் போலி, சராசரித் தமிழன் என்பதெல்லாம் ஜீவாவின் குமுறல்.


நு..மான், சுந்தரராமசாமி போன்ற சிறந்த சிந்தனையாளர்கள், படைப்பாளிகள் மீதான தாக்குதல்கள் பாமரத் தமிழ்ச் சூழலில் புதிதான ஒன்றல்ல. நு..மான், சுந்தரராமசாமி போன்றவர்களிடமிருந்து இதற்குப் பதிலாக ஒரு புன்சிரிப்பே கிடைக்கும் என்றும் எனக்குத் தெரியும். சராசரி மனங்கள் மற்றவர்களைப் பற்றியே பேசியும் விமர்சித்தும் வரும். ஆற்ற வேண்டிய விஷயங்களைப்பற்றி உயர்ந்த உள்ளங்கள் சிந்திக்கின்றன. மிக உயர்ந்த உள்ளங்களோ அமைதியாகச் செயற்படும். இதில் ஜீவா முதலாவது ரகம். மூன்றாவது ரகம் யார் யாரென நான் வெளிப்படையாகச் செல்லத் தேவையில்லை.

மின்னாமல் முழங்காமல் நற்பிட்டிமுனை பழீலின் மெல்லச் சாகும் வாலிபம் சிறுகதைத் தொகுதி வெளியாகியுள்ளது. தொகுதியின் கதைகளை வரிசைப்படுத்திப் படிக்கும் போது அவரின் தேர்ச்சி, வளர்ச்சி, போதாமை பற்றிய அபிப்பிராயங்கள் உருவாகும்.

சரிநிகரில் வெளியான அவருடைய சிறுகதைகளை அந்தக் கால கட்டத்தில் படித்த போது "சாது மிரண்டால்" என்ற சொற்றொடர் அடிக்கடி என்மனதில் தோன்றியது. ஆனால் அவர் சாதுவல்ல என்பதை இத்தொகுதி தெளிவாக்குகிறது. விருப்பமில்லாத பாரங்களைச் சுமக்கும் அவர் தன் குமுறலை வெளிக்காட்டத் தேர்ந்தெடுத்த வடிவம் இந்த எழுத்து. கல்லெறிபவர்களுக்கும் பூச்செண்டு வழங்கும் நிலையில் அவன் புற உலகால் ஆக்கப்பட்டுள்ளான். ஆனால் அவனது அகவுலகோ புற உலகின் நெருக்குதல்களுக்கு நொறுங்கிப் போகாமல், அடிப்பணியாமல் ஆங்காரத்துடன் பதிலடி கொடுக்கத் துடிக்கிறது. உண்மையான படைப்பாளி ஒருவனிடமிருக்க வேண்டிய இந்த சுயமரியாதை அம்சத்தினால் பளீலின் கதைகளிலுள்ள ஏனைய பலவீன தன்மைகள் என் கண்களுக்குப் புலப்படவில்லை. மிகையான விபரணங்கள் நீங்கி, சற்று செழுமை கூடும் போது பளீலின் கதைகளுக்கு மேலும் பெருமை சேரும். பளீலின் கதைகள் இலக்குத் தவறாமல் முகத்தில் விழும் குத்துக்கள்.









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொற்றவையின் கவிதை

எல்லாமே பழகிப் போய் விடுகிறது
நீண்ட இடைவெளிகளுக்குப் பின் சந்திக்கின்ற
நண்பர்களுடன் கூட
மகிழ்ச்சியாய்
ஒன்றிரண்டு வார்த்தைகளைக் கொண்ட
உரையாடல்களைத் தானும்
தொடர முடியவில்லை.
நான் தினந்தோறும் கோயிலுக்குப் போவேன்.
ஆளரவம் குன்றிப் போன மாலை நேரங்களில்
உயர்ந்து தணிந்த சுவர்களினுள்
பூட்டப்பட்டிருக்கிற
கதவுகளின் முன் நின்று
மௌனமாய்ப் பிரார்த்திப்பேன்.
கசப்புற்ற இரத்தங்களுள்
அமிழ்ந்து கிடக்கிற
இதயங்களை நினைத்து ஏங்குவேன்.
மன்றாட்டமாய் அழுவேன்.
இரத்தம் சிவப்பு நிறமானது என்ற எண்ணம்
என்னைச் கிலி கொள்ள வைக்கிறது
குளிர்மையான வேறெந்த வர்ணங்களுமற்று
தனிந்த கறுப்பு நிறம் கொண்ட,
நாய்களை ஓயாமல் குரைக்க வைக்கின்ற
இரவு நேரங்கள்
சலிப்பைத் தருகின்றன.
அர்த்தமற்ற பயங்களுடன்
களைத்து போவதால்
இரவில் எதனையுமே செய்ய முடியவில்லை.
ஒரு புத்தகத்தை வாசிக்க
மறந்து போன தோத்திரப் பாடல்களில்
ஒன்றைத்தானும் நினைவு படுத்த,
இரத்தம் சிவப்பு நிறமானது என்ற எண்ணம்
எப்போதுமே என்னை
கிலியுள் ஆழ்த்துகிறது...
அதைவிட அதிகமாக
நாய்களின் குரைப்புகள் நிறைந்த
இரவுகள்.

# எச்சரிக்கை

எனது அழுகை, சிரிப்பு
எதுவுமே
நானாகப் பிரியப்பட்டுச் செய்தால்
நன்றாய் இருக்கும்
என்னை அழவைத்து
சிரித்துச் செல்பவர்கள்
சிரிக்கச் சொல்லி
பைத்தியப் பட்டம் கட்டுபவர்கள்
இங்கு ஏராளம்
அவர்கள் வரையில்
நான் ஓர்
ஆடுகளக் கோமாளி,
தமது சொந்த முகங்களை
(அப்படியொன்று இருந்தால்கூட)
காட்டப் பிரியப்படாதவர்கள் அவர்கள்
எச்சரிக்கை!
என் அழுகை.....சிரிப்பு....
எதுவுமே
என்னாழத்துள்ளிருந்து
எழுந்து வந்தால்
நன்றாய் இருக்கும்.

~ ஆகர்ஷியா ~

# முடிவு..

இப்போது விலக்காய்ப் போன
இனிய பழைய நாட்கள்.
நினைவலைகள் வந்து மறுபடியும்,
மறுபடியும்
வெவ்வேறு கதியில்
வித வித வடிவில்...........!

மிச்ச சொச்சமாய்
நினைவோரத்து இலையில்
அங்கிங்காய்
ஒட்டிக் கிடக்கும்
பருக்கைகளுக்குள்
கவள உருக் கொடுக்கிறேன்.
எங்கே முடிகிறது?

முக்கிய வினாத்தாள் கொடுக்க வேண்டும்
வாசித்த குறையில் நேற்றைய தினசரி
பதில் எழுத வேண்டும்
பாவம் அவர் காத்திருப்பார்.
நாளைச் சமையலுக்கு உள்ளி இல்லை,
வீட்டுச் சொந்தக்காரியின் புடவைக்கு
ரவிக்கைத் துணி வேறு தேட வேண்டும்.

தப்பித் தவறி
மனது விரியச் சிரித்தால்
சகாக்களின் விகாரப் பார்வைகள்
புகையிலைப் புழுக்களாய்......
எங்கே தான் முடிகிறது?

~ ஆழியாள் ~



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பரராஜஸ் வாரித்தம்பி**

ஒரு வருட பகீரதப் பிரயத்தனத்தில் மிகுந்த சிரமத்தையும், அதிகரித்த செலவினையும் உள்வாங்கி வெளிவரும் களம் 8வது இதழை உங்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

ஆரம்பத்தில் இருந்த நிலைமையில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்று கூறுவதற்கு இல்லாவிட்டாலும் கூட ஒரு மாற்றம், மங்கலான ஒரு ஒளிக் கீறு கண்சிமிட்டுமாப் போல தோற்றம் காட்டுகின்றது. அது ஊக்கம் தருகின்றது. ஒரு இலக்கை நிர்ணயிப்பது இன்றைய நிலையை மட்டும் வைத்துக்கொண்டு அல்ல, அது - நாளைய வளத்தினையும் கருத்திலும் கணக்கிலும் எடுத்துத்தான்.

அந்த வகையில்-

களத்திற்குப் பிரகாசமான ஒரு எதிர்காலம் உண்டு என்பதில் பூரண நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. களம் தனது பயணத்தில் ஒவ்வொரு அடியாக பதித்து முன்னோக்கிச் செல்கிறது, இலக்கினை நோக்கி. எதிர்ப்படும் இடர்களைக் களைவதற்கு நீங்கள் உதவுதல் வேண்டும்.

✻ ✻ ✻

மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்ட இடங்களை விடவும் சற்றேனும் எதிர்பாராத இடங்களிலிருந்து களத்திற்கு ஆதரவும் உற்சாகமூட்டலும் துளிர்க்கின்றன. கடல் கடந்த நாடுகளிலிருந்தும் நீளும் ஆதரவுக் கரங்களும் சிவக்கின்றன. களத்தினைத் துலங்க வைக்க வேண்டும் என்று பிடிவாதம் கொண்டுள்ள இந்த வாஞ்சைமிகு உள்ளங்களுக்கு எனது உளம் கனிந்து நனைந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

அதே சமயம்-

களம் இன்னமும் கைக்குழந்தை. அதிகரித்த பராமரிப்பு வேண்டும் அதற்கு. இதன் சந்துஷ்டியான வளர்ச்சிக்கு மேலும் மேலும் நிறையவும் உதவிகள் வேண்டும் என்ற தேவையையும் வெளிப்படுத்திக் கொள்கிறேன். இக்குழந்தை தவழ்ந்து-நடந்து வளர்ந்து ஜவ்வனமாகி சௌந்தர்ய தேவதையாக தோற்றம் கொள்ள வேண்டும். இதற்கு நீங்களும் உங்களை களத்தின் தாபரிப்பு பெற்றோர்களாக வரிந்து அதன் வனப்போடு கூடிய வளர்ச்சிக்கு உதவிடுதல் வேண்டும்.

✻ ✻ ✻

களத்திற்கு-

சந்தாதாரர்களின் சேருகை மிகவும் மந்த கெதியிலேயே தொடர்கிறது. இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் தொகை 40 இலட்சத்திற்கும் அதிகம் என்பது புள்ளிவிபரக் கூற்று. இந்த 40 இலட்சங்களில் ஆகக் குறைந்த பட்சம் ஒரு இரண்டாயிரம் வாசகர்களாவது இலங்கையில் வெளிவந்துகொண்டிருக்கும் தரமான இலக்கிய சஞ்சிகைகளை விசாரித்து கேட்டு பணம் கொடுத்து வாங்கும் மனோபாவம் ஏற்படும் பொழுது களத்தினதும் இருத்தல் உறுதிப்படும். எனது எதிர்பார்ப்பு ஒன்று உண்டு. அது களத்தின் சந்தாதாரர்களது எண்ணிக்கை 1000 லும் மேலாக அதிகரித்தல் வேண்டும் என்பது.

இன்னும் ஒன்று-

களம் ஒவ்வொரு இதழ் வெளிவரும்பொழுதும் ஐந்து பிரதிகளையாவது பெற்று உங்கள் நண்பர்களிடையே விநியோகித்து உதவுவது. இந்தச் சந்தர்ப்பத்தில் என்னையும் மீறி எனக்கு ஏனோ "எழுத்து" வின் ஞாபகம் வருகிறது. அறுபதுகளில் எழுத்து ஏட்டைத் தொடர்ச்சியாக வெளியிடுவதற்கு சி.சு. செல்லப்பா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் பட்ட சிரமங்களும் அனந்தம். அத்தனை பாடுபட்டும் அவராலுங்கூட எழுத்துவைத் தொடர்ந்து வெளியிட முடியாமல் போனது பெரும் சோகமே. ஆனாலும் வாழ்ந்த காலத்தில் எழுத்து சாதனை செய்துள்ளது. அது இன்றும் பலராலும் நினைவு கூரப்படுகின்றது. களம் சுதந்திரமான-காத்திரமான ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு தன்னாலான பங்களிப்பினை நல்குவதையே ஒரே நோக்கமாகக் கொண்டுள்ளது. களம் தனது நோக்கில் போக்கில் வெற்றி கண்டு சாதனை செய்யும்-வரலாறு படைக்கும்; உங்கள் அனைவரது பக்க பலத்துடன்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் உண்மையான பற்றும் அதன் வளர்ச்சியில் ஆத்மார்த்த ஆர்வமும் ஈழத்துத் தமிழ் இலக்கிய சஞ்சிகை வருகையிலும் அதன் நிலைத்தலிலும் இதய சுத்தியுடனான அக்கறையையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ள தாங்கள் களத்தின் மீள் வருகையையும் அதன் வாழ்தலையும் ஆதரிப்பீர்கள் என்னும் நம்பிக்கை மிகுந்த எதிர்பார்ப்புடன் களம் பிரதிகள் தபாலில் உங்கள் மகவரிக்கு அனுப்பி வருகின்றோம். களம் 8 இன் பிரதியையும் இப்போது அனுப்பி வைக்கின்றோம். களம் 6, 7, 8 மூன்று இதழ்களுக்குமான தொகை ரூபா 100/=ஐ வெளியீட்டாளர் வி. சிவயோகம் பெயரில் காசோலை / காசுக்கட்டளையை களம் முகவரிக்கு அனுப்பி வைப்பீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். களம் ஈழத்து இலக்கிய பரப்பில் கால் பதித்து தலை உயர்த்துவதற்கு இந்த உதவியைத் தாருங்கள்.

✻ ✻ ✻

களம் தனது முகவரிக்கு தபாலில் வந்து குவியும் ஆக்கங்களை வடி கட்டி எடுத்து பிரசுரிக்கும் ஸ்திர நிலையை இன்னமும் எய்தவில்லை. அதற்குப் புறம்பாக, தேடி அலைந்து இரந்து தவம்கிடந்து, நடவா வழி நடந்து தூக்கிப்போடும் ஆக்கங்களையே தாங்கி தாமதம் தாமதமாக வெளிவரும் நிலையிலேயே இன்னமும் உள்ளது. களத்தின் வருகைக்கு தாமதமாவதன் காரணம் இதுவே.

✻ ✻ ✻

களம் 9வது இதழ் அதிக பக்கங்களுடன், பல சிறப்பு அம்சங்களுடன் கருத்தைக் கவரும் பல்சுவை மலராக யூலை மாத மத்தியில் வெளிவரும்.

**சுபீட்சம்**

இனங்களிடையே ஒற்றுமை, ஐக்கியம், புரிந்துணர்வு, நம்பிக்கை - இவை எவ்வளவு மகத்தானவை.

✻ ✻ ✻

பரஸ்பர அவநம்பிக்கைகளாலும், சந்தேகங்களாலும் சிதைந்து நைந்துபோன ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் இனங்களிடையே மீண்டும் ஸ்தாபிதம் செய்யும் வரலாற்றுத் தேவையை நிறைவேற்றும் பாரிய பணியில் களமும் திடங்கொண்டு நிற்கின்றது.

இனங்களிடையே ஐக்கியம் இல்லையேல் சுபீட்சமும் இல்லை.

✻ ✻ ✻

களத்தின் வரவை அறிமுகம் செய்தும் விமர்சனம் செய்தும் எழுதிய விடிவானம், வீரகேசரி, தினகரன், நவமணி, நந்தலாலா, சரிநிகர் பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்கு உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

சென்ற இதழில் தவறுதலாக விடுபட்டுப்போன வீ. ஆனந்தன் கட்டுரையின் இறுதிப்பகுதி பற்றிச் சுட்டிக்காட்டிய விடிவானம் பத்திரிகைக்கு நன்றி.

✻ ✻ ✻

பிரான்சிலிருந்து தேவா எழுதியுள்ளார் -

"களத்தில் மிகப் பெரிய குறையாக இருப்பது பெண்களின் பங்களிப்புச் சிறிதளவேனும் இல்லாமலிருப்பதாகும். முடிந்தவரை ஒவ்வொரு இதழிலும் ஒரு பெண்ணிலைவாதக் கட்டுரையாவது வெளிவருவது நன்று. முடிந்தவரை பெண்களையே எழுத வைத்தால் இன்னும் சிறப்பாகும்-"

பெண் அபிவிருத்தி தொடர்பான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது களத்தின் நிலைப்பாடு. இது தொடர்பில் எமது ஆரம்ப முயற்சிகள் வெற்றிதரவில்லை. ஆயினும், களம் 7இன் முகப்போவியம் ஜெ. வாசுகியினுடையது. இந்த இதழின் முகப்போவியமும் அவவினுடையதே. பெண் கவிஞர்களின் கவிதைகள், ராஜேஸ்வரியின் சிறுகதை, அருந்ததியின் கட்டுரை என்று முன்னேற்றம் காணுகின்றீர்கள். இந்த முன்னேற்றம் வளர பெண் படைப்பாளிகள் உதவுதல் வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*சோதிடர்*

# சிவஸ்ரீ காசிமா பஞ்சாட்சரக்குருக்கள்



*சோதிட நேரங்கள்:*

**பூரணை, சனி, ஞாயிறு பகிரங்க விடுமுறைத்தினங்கள்:**
***காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை***

**திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி:**
***மாலை 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை***

***சோதிடர்:***

**சிவஸ்ரீ காசிமா பஞ்சாட்சரக்குருக்கள்**
40/38, எதிர்மன்னசிங்கம் வீதி,
புன்னைச்சோலை, அமிர்தகழி, மட்டக்களப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


களம் தொடர்ந்து
வெளிவர வாழ்த்துக்கள்

RANI GRINDING MILLS

219, Main Street,
Matale - Sri Lanka.
Phone : 066 - 2425

VIJAYA GENERAL STORES

85, Sri Ratnajothy, Sarawanamuthu Mawatha,
(Wolfendhal Street)
Colombo 13.
Phone : 327011, 331596


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்